# யோகநாதம்



## மணிவிழா மலர்

# Yoganatham



S. K. Yoganathan


வெளியீடு:
மணிவிழா அமைப்பு
தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.

2013 May

# யோகநாதம்

## மணிவிழா மலர்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய் - யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | "யோகநாதம்" |
| வெளியிடும் அமைப்பு | : | பீடாதிபதி உயர்திரு. S. K. யோகநாதன் அவர்களின் மணிவிழா அமைப்பு |
| முகவரி | : | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் யாழ்ப்பாணம். |
| மலர்க்குழு | : | திரு. மு. கௌரிகாந்தன் (மலராசிரியர்)<br>லயன் டாக்டர் V. தியாகராஜா<br>திரு. S. அமிர்தலிங்கம்<br>திரு. B. தனபாலன்<br>திரு. M. பிரபாகரன் |
| பதிப்பு | : | 2013 வைகாசி |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் (பிறைவேட்)லிமிட்டெட்<br>681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். |

| | | |
|---|---|---|
| Name of the Magazine | : | "Yoga Naatham" |
| Publishers | : | President Mr. S. K. Yoganathan<br>Felicitation Committee<br>Kopay, Jaffna. |
| Editors Committee | : | Mr. M.Gowrikanthan (Chief Editor)<br>Lion; Dr. V. Thiyagarajah<br>Mr. S. Amirthalingam<br>Mr. B. Thanabalan<br>Mr. M. Prabaharan. |
| 1st Edition | : | May 2013 |
| Printers | : | Harikanan (Pvt) Ltd.,<br>681, K.K.S. Road, Jaffna. |



Yoganaatham

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னைநாள் பீடாதிபதி

# உயர்திரு S.K. யோகநாதன்

# யோகநாதம்

மணிவிழா மலர்

2013



# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி
# உயர்திரு. S. K. யோகநாதன் அவர்களின்
# மணிவிழா அமைப்பு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | லயன் டாக்டர் V. தியாகராஜா |
| செயலாளர் | : | திரு. S. அமிர்தலிங்கம் |
| உப செயலாளர் | : | திரு. S. R. சத்தியேந்திரம்பிள்ளை |
| பொருளாளர் | : | திரு. பா. தனபாலன் |
| மலராசிரியர் | : | திரு. முருகேசு கௌரிகாந்தன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு. E. S. P. நாகரத்தினம்

திரு. K. பாஸ்கரன்

திரு. K.R. கமலநாதன்

திரு. M. பிரபாகரன்

திரு. S. முகுந்தன்

திரு. S. பத்மராசா

திரு. A. இரத்தினம்

திருமதி G. கணேசநாதன்

திருமதி V. நரேந்திரா

திருமதி பப்சி மரியதாசன்

## யோகநாதத்தின் உள்ளே....

இயல் - I

அருளாசியும் செய்திகள்

இயல் - II

அருளாசியும் செய்திகள்

இயல் - III

கல்வியியல் ஆய்வுக்கட்டுரைகள்

இயல் - IV

நினைவுப் பதிவுகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்



# மணிவிழா பாராட்டு

18.05.2013

# யோகநாதம்

## இயல் ஒன்று

# மணிவிழா அமைப்புக் குழு



**இருப்பவர்கள் (இ-வ) :** திரு. மு. கௌரிகாந்தன், திரு. பா. தனபாலன், திரு. எஸ். அமிர்தலிங்கம், டாக்டர் லயன் வை. தியாகராஜா, திரு. எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை, திரு. க. பாஸ்கரன்.

**நிற்பவர்கள் (இ-வ) :** திரு. எம். பிரபாகரன், திரு. கே. ஆர். கமலநாதன், திரு. ஏ. இரத்தினம், திரு. எஸ். முகுந்தன், திருமதி வி. நரேந்திரா, திருமதி ஞா. கணேசநாதன், திருமதி பப்சி மரியதாசன்.

## முன்னைநாள் பீடாதிபதி S.K. யோகநாதன் மணிவிழா ஒழுங்கமைப்பிற்கான பெற்றோர் குழு - 2013



**இருப்பவர்கள் (இ-வ):**
திரு. வே. கனகசபாபதி, திரு. சோ. கருணாகரன், திரு. மு. ரவிக்குமார், பீடாதிபதி திரு. ச. அமிர்தலிங்கம், திரு. வே. நவரத்தினராசா, கலாபூஷணம் மீரா எஸ். இஷ்ஹடீன், திரு. கிதுறு மொகமட்.




குடும்ப விருட்சம்



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பதிவுகள்

# யோகநாதம் - மலராசிரியர் கருத்துரை

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வரலாற்றிலே பீடாதிபதியாகத் தலைமைத்துவப் பொறுப்பையேற்று சிறப்பாகக் கல்லூரியினை வழிநடாத்தி ஒய்வு பெறுவோர்க்கு மலர் ஒன்றினை வெளியீடு செய்து மணி விழா எடுக்கும் மேலான கைங்கரியம் இக்கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாகிய முனைவர் தி. கமலநாதன் அவர்களிலிருந்து ஆரம்பமானது. 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளிவந்த "காலத்தை வென்ற கமலம்" என்பது. இந்தவகையில் எமக்கெல்லாம் அரிய திசைகாட்டியாகத் திகழ்ந்தது. இந்த மலருக்கான செயற்றிறன் மிக்க குழுவின் தலைவராக இருந்து அரும்பாடுபட்ட திரு. சங்கரப்பிள்ளை கதிரவேலு யோகநாதன் அவர்களுக்கு அவரது செயற்கரிய சேவையின் நிறைவுக் காலத்தின் போது "யோகநாதம்" என்ற மணிவிழா மலரினை அவரது மணிவிழாவின் போது வெளியீடு செய்வதானது மிகவும் அர்த்தம் நிறைந்தது. இதனால் இம் மலர் ஆக்கத்திற்கு அரிய ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கிய மணிவிழா அமைப்பின் தலைவர் டாக்டர் லயன் வை. தியாகராஜா அவர்களுக்கும் மலர்க்குழுவினருக்கும், ஆக்கங்களைத் தந்துதவியவர்களுக்கும், மலருக்கான நிதியுதவியினைப் பெருமனதோடு தந்துதவியவர்களுக்கும், மலரினை உரிய காலத்தில் முதல் மலரினைப் போலவே அழகாக அச்சிட்டுதவிய கரிகணன் அச்சக முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. சிவஞானசுந்தரம் ராஜ்குமார் அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும், சரவை பார்த்துதவியவர்களுக்கும் மலராசிரியர் என்ற முறையில் எனது மனங்கனிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மணிவிழா மலரின் பெயர்க்காரணத்தினையும் அதன் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும் கூறவேண்டிய தேவையுள்ளது. புத்தளம் பிரதேசத்திலே யான் பணியாற்றிய போது உயர்திரு எஸ்.கே. யோகநாதன் அவர்களைத் தெரிந்தவன் என்ற முறையிலும் பின்னர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நிறைவாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிலும் அவரின் கீழ் பணியாற்றியவன் என்ற முறையிலும் அவரை ஒரு தூங்கும் சமூகத்தின் பிரதிநிதியாக அன்றி மிகவும் மலர்ச்சியுடன் சதா இயங்கிக்கொண்டிருக்கும் இயங்கியல் தன்மைமிக்க சமூ

கத்தின் பிரதிநிதியாகவே காண்கின்றேன். "ஆசிரியத்துவத்துக்காக வாழ்க்கை பூராகவும் தன்னை அர்ப்பணிப்பவன் அர்த்தமுள்ளவன்" என்ற பிளேட்டோவின் அர்த்தம் நிறைந்த வரிகளுக்கு மிகவும் பொருத்தமானவர் எமது பீடாதிபதியவர்கள். அவர் மேற்கொண்ட கற்றல் மற்றும் கற்பித்தல், நிர்வாக செயற்பாடுகளை வைத்துப் பார்க்கும் போது இப்படித்தெரிகின்றது. 'யோகம்' என்பது செயன்முறை. இது ஆங்கிலச் சொல்லான 'yoke' என்பதுடனும் தொடர்புபட்டது. 'யோக்' என்றால் 'இணைப்பு', 'பந்தம்' என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றது. எமது கல்லூரியின் அனைத்து செயற்பாடுகளுடனும் தம்மை இணைத்து சுறுசுறுப்பாக வழிகாட்டிச் செயற்படுபவர் இவர். நாதம் என்பதும் இந்து தத்துவமான ஓங்காரத்தின் ஒரு முக்கியமான கூறாகும்.

யோகநாதத்தின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள், தமிழ் ஆங்கில மொழிமூலமான கட்டுரைகள், கவிதைகள், பீடாதிபதி அவர்கள் தொடர்பாக அவரிடம் பயின்ற முகிழ்நிலை ஆசிரியர்கள் கூறிய இரத்தினச் சுருக்கமான கருத்துக்கள் மற்றும் இவர் தொடர்பான நிழற் படங்கள் என்பன பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பீடாதிபதி உயர்திரு எஸ்.கே.யோகநாதன் அவர்களின் வினைத்திறன் மிக்க கல்வி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றியின் ஒரு கூறாக, முக்கியமானதொரு ஆவணமாக 'யோகநாதம்' மணிவிழா மலர் திகழப்போகின்றது. எமது நாட்டில் வினைத்திறனுடன் கூடிய மேலான கற்றல் கற்பித்தற்செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் பல கல்விமான்களுக்கு இது போன்ற மலர்கள் உரிய காலத்தில் தோன்ற 'யோகநாதம்' வழிகாட்டுவதாக.

திரு. முருகேசு கௌரிகாந்தன்
*மலராசிரியர்*



# அருளாசிச்செய்தி

**யாழ்ப்பாணக் கல்விப்பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் பீடாதிபதி**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியிய;ற கல்லூரிப் பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்கள் இன்று 60ஆவது அகவை அடைந்து மணிவிழாக்காண்பதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாணம் கல்விப்பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் வகையில் தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2ஆவது பீடாதிபதியாகக் கல்விப்பணி ஆற்றியது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஒழுக்கம், கல்வியில் நிறைவான சேவை, கட்டமைப்பான மாணவர் சமூகம் இலங்கையிலே தனித்துவமான கல்லூரியாக இந்தத் தேசிய கல்வியியற் கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டு வளர்ச்சி அடைந்து இருப்பதற்குக் காரண கர்த்தாவாக விளங்கியவர் திரு. S.K.யோகநாதன். இவருடைய எளிமையான தோற்றம்; இனிமையான பேச்சு; இறைநம்பிக்கை; எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றும் செயற்றிறன். அனைத்தையும் கொண்ட திரு.S.K. யோகநாதன் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

## ஆசிச்செய்தி



திருவாளர் S.K. யோகநாதன், தலைவர், கல்வியியற் கல்லூரி, கோப்பாய் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு "யோகநாதம்" எனும் மணிவிழா மலர் வெளியிடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய, பாராட்டுக்குரிய விடயம். திரு. யோகநாதன் ஐயா அவர்கள் நல்ல பண்பான, சமூக சிந்தனை கொண்ட, ஆன்மீக நோக்குடைய, அன்பான ஓர் ஆசான். பல ஆசான்களை உருவாக்கியவர். கல்வியியற் கல்லூரியின் நிர்வாகத்தைச் சிறப்பாக நடாத்திக் கொண்டிருப்பவர். அனைத்து நிகழ்வுகளையும் அழகாக நடாத்துபவர்.

எமது சமூகத்திற்குப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர். எமது சின்மயா மிஷனோடும் தொடர்புடையவர். அப்படிப்பட்ட பெருந்தகை பல்லோரும் போற்ற தீர்க்க ஆயுளோடும் சுகதேகத்தோடும் வாழ எல்லாம்வல்ல இறைவனையும் குருதேவர்சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றேன். "யோகநாதம்" மணி விழா மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றேன்; ஆசி வேண்டுகின்றேன்.

இறைபணியில்,

பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா,
*வதிவிட ஆச்சாரியார்,*
*சின்மயா மிஷன் - யாழ்ப்பாணம்.*

# "கர்மயோகி" கதிரவேலு யோகநாதன்

பற்பலரும் போற்றும் மீசாலைப்பதிவாழ் கதிரவேலு பொன்னம்மா தம்பதியரின் தவப்புதல்வன்- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட ஆசிரியச் செல்வங்களை உருவாக்கும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் "கர்மயோகி" யோகநாதன் அவர்கள் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற போதிலும்; மென்மேலும் பற்பல சமய, சமூக சேவைகள் புரிந்து நீடு வாழ எல்லாம்வல்ல வித்தக விநாயகரையும், முடிமன்னவ வைரவப் பெருமானையும் பிரார்த்தித்து அவரது சேவைநலன்களைப் பாராட்டி ஆசீர்வதித்து வாழ்த்துகிறேன்.

**அகோர சிவாச்சாரியார்,**<br>
*பிரதம குரு*<br>
*கல்லூரி வித்தக விநாயகர் ஆலயம்.*

## 60ஆவது அகவையை நினைவுகூரும் பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்கள்



காலத்தால் அழிவுறாதது கல்விச் செல்வம். அதனைத் தான் பெற்றதுடன் வருங்கால சந்ததிக்கும் கற்றுக்கொடுக்கும் பணியில் விருப்புடன் ஈடுபட்டவர். எதிர்கால ஆசிரிய சமூகத்தை உருவாக்கும் பணியில் முக்கிய பங்கை வகித்து அதனைப் பொறுப்புடன் நிறைவேற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்தவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக விளங்கும் இவரை நானும் நன்கு அறிவேன்.


தான்கொண்ட மதத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா மதங்களையும் மதித்து வாழும் நற்பண்புடையவர். இவர் கிறிஸ்தவ பாடநெறியினைத் தற்காலிகமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்வாங்கி, ஆசிரியப் பயிலுநர்கள் அப்பாடநெறியை நன்கு கற்றுத்தேறவும்; அங்குள்ள கிறிஸ்தவ ஆலயத்தை அழகுறக் கட்டி முடிக்கவும் என்னுடன் ஆலோசித்து எடுத்த முயற்சிகளையும் நான் நன்கு அறிவேன்.

இவ்வாறு சேவைநல நோக்கோடு எல்லோரையும் அணுகி, ஆசிரியப் பயிலுநர்களை நன்நெறியில் உருவாக்கிய திரு. S. K. யோகநாதன் அவர்கள் பாராட்டத்தக்கவர்.

இவர் தனது அறுபதாவது அகவையை நினைவுகூரும்வேளை; இவரை வாழ்த்துவதிற் பெரும் மகிழ்வடைகிறேன். வாழ்வு எனும் கொடையை இவருக்கு அளித்த இறைவன், தொடர்ந்தும் இவருக்கு நல் உடல், உள, ஆன்மிக நலன்களை வழங்கி இவரை ஆசீர்வதிக்க; இவருக்காக இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி நிற்கிறேன்.

பேரருட்திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
*யாழ். ஆயர்,*
*ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

## மிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்
## எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ்



வரலாறு என்பது ஒவ்வொரு சமுதாயத்தின் உயிர்நாடி. ஒரு சமுதாயம் உயர் நிலைக்கு வருவதும் புத்துணர்வு பெறுவதும் அது தமக்கு முன்னுள்ளோரின் வரலாற்று நிகழ்வுகளைப் படிப்பதன் மூலமும் அதனை நினைவுபடுத்திப் பார்ப்பதன் மூலமும்தான் சாத்தியமாகும். தம் வரலாற்று நிகழ்வுகளை மறந்த சமுதாயம் கீழ்நோக்கிப் பயணிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வரலாற்றில் தடம்பதித்த ஓர் ஆசிரியர்பீடத்தின் பீடாதிபதி ஓய்வு பெறுகின்ற நல்நிகழ்வுக்கு ஆசியுரை வழங்குகின்ற அரிய வாய்ப்பினைத் தந்தமைக்கு என் ஆசிகள். பீடாதிபதி யோகநாதன் ஒரு வரலாற்றுப் புருசர். இனமத பேதத்திற்கு அப்பால் அவர் ஒரு பூரண மனிதத்துவம் நிறைந்த ஒரு மாமனிதர். அவருடன் உரையாடிய போதுதான் அவருடன் மனிதம் நிறைந்த மானிடம் பொதிந்திருப்பதைக் கண்டேன்.

தமிழ் முஸ்லிம் என்று வேற்றுமை பாராது மாணவர்களிடம் பழகுகின்ற பண்பை அவரிடத்தில் கண்டேன். அவருடைய வழிகாட்டலில் கல்விகற்ற, கற்றுக் கொண்டு இருக்கின்ற மாணவ, ஆசிரிய ஆசிரியைகள் அனைவரும் அவரது வரலாற்றுக் காலத்தை மறந்துவிடாது கற்றுத்தந்த அனைத்து ஆசான்களுக்கு;ம நன்றி உடையவர்களாக ஆசானை மதிக்கின்ற மேலான பண்பு உள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டும்.

பீடாதிபதி அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவருக்கு ஆண்டவன் தேகசுகத்தையும் அவருடைய ஆயுளையும் நீடித்து அருள வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்

மௌலவி. எம்.ஜ. மஹ்மூத் (பலாஹி)
பேஷ் இமாம் (புதுப்பள்ளி)
முஹம்மதிய்யா ஜும்மா
பள்ளிவாசல்
யாழ்ப்பாணம்.

## Message from Hon. Governor, Northern province for the Diamond Jubilee of Mr. S. K. Yoganathan, Rector of National College of Education, Jaffna.



It is with pleasure that this message of blessing is made in connection with the celebrations of the Diamond Jubilee of Mr. S. K. Yoganathan, Rector of the National College of Education, Jaffna, who is now 60 Years of age.

The establishment of the National College of Education is a tremendous advancement in the system of education in the country. With advanced mode of training imparted and made available, the institution can take pride in producing quality teachers who are capable of moulding our children to be good citizens.

Mr. Yoganathan has contributed very much towards the raising of the standards education during the past two decades especially in the capacity of Deputy Rector of the National College of Education, Vavuniya and then as the Rector of the National College of Education, Jaffna.

Congratulations to the Organizing Committee of the Diamond Jubilee Celebrations.

May very special wishes and blessings for a Healthy Life and a Happy Retirement period!!

**GA Chandrasiri**
*Governor*
*Northern province*

# A Blessing Message from the Chief Commissioner



It is a great pleasure to give a blessing message on the eve of the Diamond Jubilee festival of Mr. S. K. Yokanathan who has been a President of Jaffna National College of Education since 2006, has been running the College activities with efficient and effective manner since he assumed his duty in Jaffna National College of Education which comes under our administrative division.

It is essential to mention that the period which he assumed his duty at the College had been very difficult in all dimensions. Specially, when the A9 road was closed, Mr.S.K.Yokanathan had assumed his duty without any hesitation as I approved him.

There are various mile stones in his period. One of them is conducting several courses within limited facilities of human resources and physical resources. He has been running the College with systematic manner during the closure of Vavuniya National College of Education because of unavoidable circumstances in our country.

I am very proud to indicate that Mr.S.K.Yokanathan's courage, as a President, he accepted to conduct Awarding Ceremony of National Diploma in Teaching as the first time and conduted it very successfully.

The environment which is one the reasons to adore the beauty of Jaffna National College of Education is well maintained with limited non academic staff.

Owing to his professional and administrative talent and skill, he has been creating a good relationship with educators. Various memorial Speeches have been conducted annually with the help of scholars available in Sri Lanka.

Finally, it is very important to appreciate his effort to take over a bus for the College for successful academic activities and appropriate parking place was made with the help of Prospective teachers of the time.

Thereby, I, as a Cheif Commissioner, could observe and visualize many positive sides and his dedication during his period. There is no complaint or trouble in his administration.

I hope that he is one the benchmark in the list of presidents of the National Colleges of Education and wish that may he be healthy and prolong his life with family joyfully.

Thanking you.

**W.P.R.Silva**
***Chief Commissioner(T.E)***
*Ministry of Education, Isurupaya-Battaramulla.*

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



யாழ் .தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு வளங்களும் அமையப்பெற்ற சாவகச்சேரிப் பிரதேசத்தில் பிறந்த திரு. S.K. யோகநாதன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை மீசாலை விக்கினேஸ்வராக் கல்லூரியிற் கற்று இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிற் பயின்று, உயர்கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தொடர்ந்து, புவியியற் சிறப்புப் பட்டதாரியானார். தான்பெற்ற கல்வியின் பயனாக அரச சேவையில் ஆசிரியராகப் பணியேற்று நன் மாணாக்கர்களை உருவாக்கி வருகையில் வவுனியா கல்வியியற் கல்லூரியிற் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், உப பீடாதிபதியாகவும் பதவியுயர்வு பெற்று அக் கல்லூரியின் அபிவிருத்திக்காகப் பெரிதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையால் இன்று யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையாற்றும் பேறு கிடைத்துள்ளது.

இவ்வாறு கல்வித் துறையின் மேம்பாட்டிற்கும், மாணவர்களின் வளர்ச்சிக்கும் பெரும்பணியாற்றிய மணிவிழா நாயகனின் சேவைகளைப் பாராட்டுவதுடன், தொடர்ந்தும் நல்லதொரு சமுதாயத் தோன்றலுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழவும் என்றும் எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு வாழவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
*அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்,*
*யாழ் . மாவட்டம்.*

# யாழ்.மேயரின் வாழ்த்துச்செய்தி

**பழகுதற்கினியபண்புடைப்பீடாதிபதி**



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக அற்பணிப்புடன் கடமையாற்றி மேற்படி கல்லூரியின் முகிழ் நிலை ஆசிரியர்களின் ஒழுக்கம், பண்பாடு, அபிவிருத்தி, ஆளுமை போன்ற இன்னோரன்ன அரும்பண்புகளை வளர்த்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற் கல்லூரியின் பெருமையை நிலை நாட்டிய திரு. எஸ்.கே. யோகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்கும் வாய்ப்பு கிடைத்தமை குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சாவசக்சேரி இந்துக்கல்லூரியில் கற்றுத்தேறி பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியல் பட்டம் பெற்று 1982இல் சிலாபம் பேர்னாட்டே கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்ற இவர் வவுனியா கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த நாளிலிருந்து அதன் பீடாதிபதியாகக் கடமையாற்றிய திரு.செ.அழகரத்தினம் அவர்களுடன் இணைந்து அக்கல்லூரியின் வளர்ச்சிக்குக் கருணையுடன் பாடுபட்டுழைத்து 2006ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகப் பதவியேற்றார்.

இவர் பதவியேற்ற அக்காலகட்டத்தில் A9 பாதை மூடப்பட்டிருந்த நிலையில் உணவு, எரிபொருள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தபோதிலும் அவற்றை எல்லாம் வெற்றிகொண்டு கல்லூரி வளர்ச்சிக்கு ஆணி வேராக விளங்கினார்.

ஆசிரியர் சேவைக்கு தன்னை அர்ப்பணித்து யாழ்.தேசிய கல்வியிற் கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடுபட்டுழைத்த இவர் பழகுதற்கினியவர். பண்பிலே உயர்ந்தவர் என கல்வி உலகம் இன்றும் அவர் பெருமையைப் பேசி வருகின்றது.

மணிவிழாக் காணும் திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்கள் பல்லாண்டு காலம் பல வளமும் பல நலனும் பெற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**திருமதி யோ.பற்குணராசா,**
*மாநகர முதல்வர்,*
*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*

# பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். 1970களின் பிற்பகுதியில் பீடாதிபதி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவனாக விளங்கினார். அவர் புவியியல் சிறப்புப் பட்டதாரி. பல்கலைக்கழகக் கல்வியின்பின், ஆசிரியப் பணிக்குள் பிரவேசித்து, பல உயர்வுகளை அடைந்தார். மேலும்/ கல்வியிற் பல மேற்படிப்புக்களையும் பட்டங்களையும் பெற்றார். பல உள்நாட்டு, வெளிநாட்டுக் கல்விக் கருத்தரங்குகளிற் பங்குபற்றித் தன் புலமையை விருத்தியாக்கி, எமது கல்விச் சமூகத்தின் மத்தியிற் பாடசாலைக் கல்வித்துறையில் ஒரு புலமையாளராக மிளிர்ந்தார்.

யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி 1997 இல் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு இடர்பாடுகளைக் கடந்து இன்று அது சிறப்புநிலையில் இருப்பதற்கும் பெரும்பங்கு வகித்தவர்களுள் முதலாவது பீடாதிபதி திரு. கமலநாதனும் இரண்டாவது பீடாதிபதி திரு. யோகநாதனும் ஆவார்கள். திரு. யோகநாதன் காலத்திற் கல்லூரியின் கட்டடவேலைகள் முழுமை பெற்றதுடன், மாணவர் எண்ணிக்கையிலும், கற்கைநெறி எண்ணிக்கையிலும், மற்றும் கல்விசார் செயற்பாடுகளிலும் கல்லூரி வளர்ச்சியும், மேம்பாடும் அடைந்ததெனலாம். ஆளுமைமிக்க பீடாதிபதியான அவர், ஆசிரிய மாணவர்களைச் சிறந்தமுறையில் வழிகாட்டி, பயிற்றுவித்தார். யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் முகிழ்ந்த அவர், கோப்பாய், பலாலி, நல்லூர், திருநெல்வேலி, கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் வழிவந்த ஆசிரிய விழுமியங்களை ஒரு பக்கமும்; இலங்கையின் நவீன கல்வியியற் கல்லூரிகள் வழிவந்த ஆசிரிய விழுமியங்களை மறுபக்கமும் கொண்டு, அவை இரண்டினையும் இணைத்துப் புதியதொரு ஆசிரிய பரம்பரையைத் தோற்றுவித்தார். மாறி வரும் கற்றல், கற்பித்தல் வகுப்புச் சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஆசிரியர்களை உருவாக்குவதிலும்; வசதி, வாய்ப்புக்கள் இல்லாத பின்தங்கிய, புறம்தள்ளப்பட்ட கிராமிய மாணவர்களின் சூழ்நிலைக்கு ஈடுகொடுத்துக் கற்பிக்கக்கூடிய, அர்ப்பணிப்புள்ள, கருணை நிறைந்த ஆசிரியர்களை என்றும் உருவாக்குவதிலும் அவர் வெற்றிகண்டவர். அவரது சாதனைகள் என்றும் கல்வி உலகில் நினைவு கூரப்படும்.

பீடாதிபதி திரு. யோகநாதன் அவர்கள் தற்போதைய பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர் தொடர்ந்தும் கல்விப் பணியும், சமூகப் பணியும் மேற்கொண்டு எமது சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக விளங்கவேண்டும் என வாழ்த்துகிறேன். அவரின் வாழ்வு மேலும் சிறக்க இறைவன் அருள் புரிவாராக.

பேராசிரியர்- பொ. பாலசுந்தரம்பிள்ளை.
வாழ்நாட் பேராசிரியர் / முன்னைநாள் துணை வேந்தர்.

# மணிவிழா அமைப்புத்தலைவர் கருமத்திருதி லயன் வை. தியாகராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முதன்மையான முன்மாதிரிக் கல்லூரியாகச் செயலாற்றி வருகின்றது. இதற்கு, பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்களின் சேவை முதன்மையாகவுள்ளது. முதலாவது பீடாதிபதி, கலாநிதி தி. கமலநாதன் அவர்களைத் தொடர்ந்து திரு. S. K. யோகநாதன் அவர்கள் கடந்த எட்டு வருடங்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைச் சிறப்பாக இயக்கி வந்துள்ளார். இன்று அவருக்கு மணிவிழா நடைபெறுவதையிட்டு வாழ்த்துச் செய்தியை வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சமகால, கல்விச்சவால்களை எதிர்கொண்டு; விடாமுயற்சியாலும், தலைமைத்துவ ஆற்றலாலும், மனிதநேய அணுகுமுறையாலும் வெற்றிகரமான பீடாதிபதியாகச் செயலாற்றியவர் திரு. S. K. யோகநாதன் அவர்கள். இவர் பதவியைப் பொறுப்பேற்ற காலம் பயங்கரமான யுத்தகாலம். பாதை பூட்டப்பட்டிருந்த காலம், உணவுகளுக்குத் தட்டுப்பாடான காலம். இப்பிரச்சினைகளை எல்லாம் சவாலாக ஏற்று அனைவரையும் அரவணைத்து தனது கல்விச்சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கியுள்ள இவர் எம்மண்ணின் கல்விச் சாதனையாளராகத் திகழ்கின்றார்.

அவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டியும், அறுபதாவது அகவையைப் பூர்த்தியாக்கியுள்ளமையை இட்டும் மணிவிழா ஒன்றை எமது அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர். அவருடைய அரிய கல்விப்பணிகள் எல்லாம் இவ்வேளை நினைவு கூறப்படுகின்றமை பொருத்தமாகவுள்ளது.

கல்வியே அபிவிருத்தியின் இயந்திரமாகக் கருதப்படும் இன்றைய காலத்தில் கடந்த எட்டு வருடங்களாகப் பல்வேறு போதாமைகள், பிரச்சினைகள், சவால்கள், இடையூறுகள் மத்தியில் எமது தமிழ்ப் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்குச் சிறந்த நல்லாசிரியர்களைப் பயிற்றுவித்து வழங்கவேண்டும் என்ற பேரவாவுடன் செயலாற்றியவர் திரு. S. K. யோகநாதன் அவர்கள். யுத்தத்தால் இழந்த அனைத்தையும் மீட்கும் சாதனம் கல்வியே என்பதில் கருத்தொருமித்துப் பயிற்சிபெறும் முகிழ்நிலை ஆசிரியர்களின் பன்முக ஆளுமைகளை வளர்க்க அரும்பாடுபட்டார். பல்வேறு புதிய கல்வியியற் செயற்றிட்டங்களை உருவாக்கினார். பாடசாலை வகுப்பறைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பல செயல் நிலை ஆய்வுகளை முகிழ்நிலை ஆசிரியர்கள் மேற்கொள்ள வழிகாட்டினார். மாற்றமடைந்துவரும் உலக ஆசிரியர் கல்வியியற்

செல்நெறிகளுக்கு அமைய எமது மண்ணில் உயிர்ப்பான புதிய ஆசிரியத்துவக் கல்விக் கலாசாரம் ஒன்றை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினூடாக ஏற்படுத்தினார்.

எனவே, பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்களுடைய கல்விப்பணி போற்றுதலுக்குரியது; பாராட்டத்தக்கது. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றவகையில் அவருடைய அர்த்தமுள்ள அர்ப்பணிப்பான கல்விச்சேவைக்கு மகுடம் வைத்தாற்போல் மணிவிழா நடைபெறுகின்றது. மனித மாண்பின் மகத்துவம் ஆசிரியம் என்பதற்கமைய அவர் தொடர்ந்து தனது கல்விப்பணியை ஆற்றவும், எம் மண்ணில் நல்வாழ்வு வாழவும் வித்தக விநாயகனின் அருளாசி கிடைப்பதாக.

**கருமத்திரு தி. வைத்திய கலாநிதி ( Dr.) . வை. தியாகராசா,**
*(மணிவிழா - தலைவர்), சிரேஷ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

## செயற்றிறன் மிக்க பீடாதிபதி



*28.04.2013* இல் மணிவிழாக் காணும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதி திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்களுக்கு நடைபெறவுள்ள மணி விழா மலருக்கு இந்தச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். திரு. யோகநாதன் அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதில் பெருமைப்படுகின்றேன். பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர், ஆசிரியராகக் கடமையாற்றி சிறந்த அனுபவத்தைப் பெற்ற ஒருவர். இவர் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் உப பீடாதிபதியாகவும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கடமையாற்றியவர். இவர் கல்வியியற் கல்லூரியில் பல புதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்ததுடன் கல்வியியற் கல்லூரியின் சுற்றாடலை அழகுபடுத்துவதிலும் அதிக கவனம்செலுத்தியவர். முதன் முறையாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சான்றிதழ் வழங்கும் வைபவத்தை நடாத்திய பெருமை இவரைச் சாரும். அது மட்டுமல்லாது மாணவர்களின் அறிவினை மேம்படுத்தப் பல பெரியார்களின் உதவியுடன் பேருரைகளை ஆற்றுவதற்கு ஒழுங்குகளைச் செய்தவர். இப்படிப் பல நல்ல விடயங்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் செய்த திரு.யோகநாதன் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்து கல்விச் சமூகத்திற்கும் பெரும் தொண்டு ஆற்ற வேண்டும் என வாழ்த்தி, நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்குமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்

# அனைவரையும் அணைத்துச் செல்லும் பண்பாளன்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக உன்னத சேவையாற்றிய திரு. கதிரவேலு யோகநாதன் அவர்கள் அனைவரையும் அணைத்துச் செல்லும் பண்பாளனாக விளங்குகின்றார். நகைச்சுவையாகப் பேசி அனைவர் மனங்களையும் கொள்ளைகொண்டவர். மிகச் சிறந்த மனிதப் பண்பாளன்; இன் சொல்லினன். ஆசிரியப் பணியிலும், தேசிய கல்வியியற் கல்லூரியில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பல தரத்திலான சேவையினையும் மனநிறைவுடன் ஆற்றியவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற் புவியியற் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி; பத்தாண்டுகளுக்கு மேலாகத் தீவின் பல பாகத்திலும் ஆசிரியப் பணியை மேற்கொண்ட திரு. யோகநாதன் 1993இல் வவுனியா கல்வியியற் கல்லூரியிற் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவி பெற்று 2006முதல் யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார். அவரது பீடாதிபதிக்காலத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பல துறைகளிலும் பெருவளர்ச்சி கண்டது. பௌதிக, பாடவிதான, புறப்பாடவிதான, சமூக இணைப்புச் செயற்பாடுகள் பலவற்றிலே அவரது பங்களிப்பினை நாம் காணலாம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிற் பல புதிய கற்கை நெறிகள் அவரால் தொடக்கி வைக்கப்பட்டன. ஏற்கெனவே இருந்து நிறுத்திவைக்கப்பட்ட கற்கை நெறிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டன. தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் B.Ed, M.Ed கற்கை நெறிகளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடாத்துவதற்கு இடமளித்து மேற்பார்வை செய்துவருபவர். தான் சார்ந்த சமூகத்தின் நலனில் அதிக அக்கறை கொண்டு இத்தகைய முயற்சிகளை முன்னின்று நடாத்தி வருபவர்.

முதன்முறையாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய கல்வியியற் கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தை ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாபோற் பெருமெடுப்பில் நடத்தி வெற்றிகண்டவர். இதே ஆண்டிற் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வித்தகர் விநாயகர், முடிமன்னர் ஆலய, புனருத்தாரண மகாகும்பாபிஷேகத்தை முன்னின்று தேசிய கல்வியியற் சமூகத்தின் ஆதரவுடன் நடாத்தியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்பியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்துடன் அன்னியோன்னியமான உறவை வளர்த்துக்கொண்டவர். எமது பீடத்தின் கல்வியியற் சபையின் அங்கத்தவராக ஐந்து வருடங்களுக்கு மேலாக இருந்து எமது உயர் கல்விசார் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி வருபவர். எமது M.Ed நேர்முகத் தேர்வுக் குழுவில் ஓர் அங்கத்தவராக இருந்து

அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். அவரது கல்விசார் நிர்வாக அனுபவம் எமக்குப் பல வழிகளிலும் துணையாக இருந்துள்ளது.

ஒரு நிர்வாகி சமூகத்தோடு எவ்வாறு நெருங்கிச் செயற்பட வேண்டுமென்பதற்கு உதாரணபுருஷராக இருந்து பல வெற்றிகளைக் கண்டவர். எங்களது அரசியற் சூழலைப் புரிந்து, அதற்கேற்ப இயங்கி, தான் தலைமை தாங்கிய நிறுவனத்திற்கும், தனது சமூகத்திற்கும் செய்ய வேண்டியவற்றைச் சிறப்புடன் செய்து வெற்றிகண்டவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களை மிக்க கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும், முன்மாதிரியான ஆசிரியராக உருவாக்கும் பணியினை மிகச் சிறப்புடன் மேற்கொண்டு வருபவர்.

நண்பர் யோகநாதனின் ஓய்வுகாலம் மிக்க மகிழ்வுடனும், நலத்துடனும் திகழவும், குடும்ப சமேதராக அமைதியான வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்க வளமுடன்,

**பேராசிரியர் கலாநிதி ச. சத்தியசீலன்**
*பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புக்கள் பீடம்,*
*மற்றும் வரலாற்றுப் பேராசிரியர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,*
*திருநெல்வேலி.*
*25-02-2013*

# கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர் திரு. S. K. யோகநாதன் அவர்களின் மணி விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வெளியிடுவதிற் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருவாளர் யோகநாதன் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து; பின்னர் உப பீடாதிபதியாகப் பதவி உயர்வு பெற்று 2004 ஆம் ஆண்டு கல்வியமைச்சின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் மலேசியா பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையிற் பயின்று யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் மேலதிக பீடாதிபதியாகக் கடமையாற்றினார். பின்பு கடந்த 8 ஆண்டுகளாகக் கடமையாற்றித் தனது சிறப்பான சேவையினூடாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்சென்றுள்ளார். இன்று பல புதிய கற்கை நெறிகளுடன் தனது கல்விச் சேவையை வியாபித்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. மிகவும் நெருக்கடியான காலகட்டத்திற் கல்லூரியைப் பொறுப்பேற்று, பல கஷ்டங்களின் மத்தியில் கல்வியியற் கல்லூரியைத் திறம்பட நடாத்தியமையை உள்ளத்திருத்தி வடமாகாண கல்விச்சமூகம் என்றும் நன்றியுடையதாக இருக்கும் என்பது எனது எண்ணம்.

இன்று 60வயதைப் பூர்த்திசெய்யும் வேளையில் அவரின் அபிமானிகளினால் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சிறப்பானதாகவும்; பாராட்டத்தக்கதாகவும் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இவர் ஆற்றிய கல்விப் பணிக்காக நன்றி கூறுவதோடு; இவரின் விழா சிறக்கவும் வாழ்த்தி நிற்கின்றேன்.


இ. இளங்கோவன்.
கௌரவ ஆளுநரின் செயலாளர்,
வடமாகாணம்,
யாழ்ப்பாணம்.

# வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

உயர் விழுமியங்கள் உள்ள சமூக சிற்பிகளை உருவாக்க அயராது உழைக்கும் பீடாதிபதி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு. S. K.யோகநாதன் அவர்களின் பணிநயப்பினை ஒட்டி மணிவிழா அமைப்பினரால் வெளியிடப்படும் "யோகநாதம்" என்னும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" - (குறள் 236)

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு அமைய இவர் தனது சேவைக்காலத்தில் கல்வித் துறைக்காக ஆற்றியுள்ள மகத்தான கல்விப்பணியினைச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூரும் என்பது பேருண்மையாகும். கல்வியும் ஒழுக்கமும் எமது இரண்டு கண்களைப்போன்றன. அவற்றினை வளர்த்தெடுத்து உயரிய சமூக விழுமியங்களும், நற்பண்புகளும் உடைய சமூகச் சிற்பிகளை உருவாக்குவதில் திரு.S.K.யோகநாதன் ஆற்றியுள்ள அளப்பரிய பணி பாராட்டத்தக்கதாகும். 1982ஆம் ஆண்டு ஆசிரியப்பணியில் இணைந்த இவர் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் 10 ஆண்டுகள் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், உப பீடாதிபதியாகவும் பின்னர் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் எட்டு ஆண்டுகள் பீடாதிபதியாகவும் இருந்து, அளப்பரிய சேவை புரிந்து, இன்று ஓய்வுநிலைக்குச் செல்கின்றார்.

முகிழ்நிலை ஆசிரியர்களைப் பயன்படுத்திச் சுற்றாடலை அழகாக வைத்திருப்பது என்பது இவருக்கு நிகர் யாரும் இல்லை என்றே கூறவேண்டும். அத்துடன் விரிவுரையாளர்களுடனும், கல்விசாரா பணியாளர்களுடனும் அந்நியோன்னியமான தொடர்பை வைத்து ; தனது சேவையை இணைந்த பணியில் விளைந்த வெற்றியாகக் கருதிச் சமூகத்தை நல்வழிக்கு இட்டுச்செல்லும் முகிழ்நிலை ஆசிரியர்களை உருவாக்கித் தனது சேவையைத் திறம்பட புரிந்தவர்.

நேரகாலம் பாராது 24 மணிநேரமும் விடுதியில் தங்கியிருந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். இவர் தனது நகைச்சுவைப் பேச்சினாலும், மற்றோரை மதிக்கும் உயர்நிலைப் பண்புடனும், துடுக்குடனும், மிடுக்குடனும் சேவைபுரிந்த ஓய்வுநிலைக்குச் செல்லும் இவரது சேவைக் காலத்தைப் பாராட்டுகின்றேன். இவரின் ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீண்டகாலம் வாழ்ந்து இன்னும் பல சமூகப்பணிகளை ஆற்ற வேண்டும் என எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சி. சத்தியசீலன்,**
*செயலாளர்,*
*கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,*
*வடமாகாணம்.*

# இயங்கியல் தன்மையுடைய பீடாதிபதி



பாடசாலை சமூகத்தினது சிறிய உருவமாக (miniature society) கல்வித் தத்துவவியலாளர்கள் காட்டுகிறார்கள். இத்தகைய பாடசாலைகளிற் பொறுப்புமிக்க கல்வியை வழங்குவதில் ஆசிரியர்கள் முதன்மை வாய்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இவ்வாறான ஆசிரியப் பணியும், அவர்களை உருவாக்கும் பணியும் சாதாரணமானதல்ல. இப்போது மணிவிழாக் காணும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் மதிப்பார்ந்த பீடாதிபதி திரு . கதிரவேலு -யோகநாதன் அவர்கள், தமது அரசபணியின் ஆரம்பத்திலே பன்னிரண்டு ஆண்டுகள் சிலாபம் நகரில் உள்ள புனித பெர்ணடேத் மற்றும் நஸ்ரியா மகா வித்தியாலயம் என்பவற்றில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் புவியியற் பாடத்தை பிரதான பாடமாகக் கற்பித்து அப்பிரதேசத்தைச் சேர்ந்த எண்ணற்ற தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று உயரக் காரணமானவர்.


சிலாபத்திலிருந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்குப் பதவி உயர்வுபெற்றுவந்து, அக்கல்லூரி ஆரம்பிக்கப்பெற்ற காலத்திலிருந்து பதினொரு ஆண்டுகள் கல்வி மற்றும் நிர்வாகப் பணியினைத் திறம்பட ஆற்றி அங்கே பயின்ற முகிழ்நிலை ஆசிரியர்களின் வினைத்திறன்மிக்க கற்பித்தலுக்குக் காரணமாகப் பலரதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

நிறைவாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிற் கடந்த எட்டாண்டுகளாகப் பீடாதிபதியாகப் பணியாற்றி; இலங்கையில் உள்ள ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு எந்த வகையிலும் குறைவுபடாத வகையிற் கல்லூரியை இயக்கி வாண்மைத்துவம் மிக்க ஆசிரியர்களை உருவாக்கி வழங்கிய இயங்கியல் (Dynamical) தன்மை வாய்ந்த முகமலர்ச்சியும், நேர்முகச் சிந்தனையும் மிக்க மேன்மையாளராக இவரை நான் காண்கின்றேன்.

கல்லூரியின் மேலான கல்வி, மற்றும் நிர்வாகப் பணிகளுக்கு இங்கு அளப்பெரும் பங்காற்றும் விரிவுரையாளர்களையும் மற்றும் கல்விசாராப் பணியாளர்களையும் சிறந்த முறையில் வழிநடாத்தி உயர்ந்த விளைவைக் காண்பித்துக் கொண்டமைக்கும் திரு. எஸ் .கே. யோகநாதன் அவர்களது உயர்ந்த சேவைதனைப் பாராட்டி இவர் குடும்ப சேமத்துடன் மேலும் பல்லாண்டு வாழ எனது இதமான நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தர்மலிங்கம் சித்தார்த்தன்**
*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்*

# இளைஞனுக்கு மணிமகுடம் சூடும் மணிவிழா



ஆற்றல்மிகு கல்வி நிறுவனங்களையும் ஆலயங்களையும் ஒன்றெனநோக்கிப் போற்றும் அடையாளத்தைக் கொண்ட யாழ்.மண்ணுக்கு நீண்ட தாமதத்துக்குப் பின்னே அறிமுகமாகியது கல்வியியற் கல்லூரி எனும் எண்ணக்கரு. என்றாலும் முன்தோன்றிய கல்வியியற் கல்லூரிகளின் அனுபவங்களை எல்லாம் பற்றிப்பிடித்து அகலப்பாய்ச்சலை மேற்கொண்டு இன்று இலங்கையின் தனித்துவ கல்வியியற் கல்லூரியாக யாழ். கல்வியியற் கல்லூரி திகழ்வதற்கு மூல காரணமாக கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் திகழ்ந்தாலும் அவரின் ஓய்வுக்குப்பின் புதிய கட்டடத் தொகுதியில் அமையப்பெற்ற வனப்பான கல்லூரியைப் பொறுப்பேற்ற திரு. எஸ்.கே. யோகநாதன் தனக்கேயுரியபாணியில் செயற்பட்டு அதன்அழகுக்கு அழகு சேர்த்தமையை யாரும் மறுக்கார்.

யானும் கல்வியியற் கல்லூரியொன்றில் விரிவுரையாளன் தொடக்கம் பீடத்தலைவன் வரைக்குமான பதவிகளில் இருந்தவன் என்றவகையில் ஒரு நாட்டின் கல்வித்துறையின் நீடுறுதியான பெருவளர்ச்சிக்கு கல்வியியற் கல்லூரிகளின் வகிபாகம் தொடர்பில் சற்றுஞானங் கொண்டவனாகவும் இலங்கையின் பதினேழு கல்வியியற் கல்லூரிகள் செயற்பாடுகள் குறித்து நுணுகி நோக்குபவனாகவும் உள்ளேன். அந்தவகையில் பீடத்தலைவர்களின் செயலாற்றல் குறித்தும் மனப்பதிவுகளை மேற்கொள்ளவேண்டியதாகவும் உள்ளது. தமிழ்மொழி மூல கல்வியியற் கல்லூரிகளில் யாழ். வவுனியா, மட்டக்களப்பு மற்றும் அட்டாளச்சேனை கல்லூரிகள் கல்வி அமைச்சிலிருந்து தொலைதூரத்தில் அமைந்துள்ளதோடு அமைச்சோடு ஊடாட்டம் மேற்கொள்வதில் பலமட்டங்களில் அவற்றுக்குத் தடைகளும் இருப்பதுயாவரும் அறிவர். என்றாலும். இக்கல்வியியற் கல்லூரிகளின் பீடத்தலைவர்களின் அர்ப்பணிப்புக் குறித்து திரு.யோகநாதனின் மணிவிழா கணப்பொழுதில் சிலாகிக்கவேண்டிய கடப்பாடு எனக்கு உண்டு.

திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்கள் குழுவாக இயங்கி பணியாளர்களிடம் இருந்து கல்லூரிக்கும் சமுகத்துக்கும் ஊட்டம் பெற்றுக் கொடுப்பதில் வல்லவராகவும் மற்றவர்களை ஆகர்சிப்பவராகவும் சீரிய காரியத்தைத் தேர்ந்தெடுத்து தடைகள். பொடிபட நேர்த்தியாக பூர்த்திசெய்பவராகவும் விளங்குகின்றமை எல்லோரின் கவனத்தை ஈர்த்தனவாகும். கல்வியியற் கல்லூரி சார்ந்த ஆசிரியகல்விநிர்வாகம் என்பது ஒரு குருகுல நிர்வாகத்தை ஒத்தது. அத்தகு நிர்வாகத்துக்கு சிறந்தது முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய ஆளுமையாக நம்முன்னே இருப்பவர் திரு.யோகநாதன் என்பதை கல்லூரிக்குள் நுழைந்து ஒரு சில கணங்களிலே யாவரும். உணர்ந்துகொள்வர்.

போருக்குப் பின் தென்பகுதிக் கல்விப் புலத்தினர் வடக்கோடு பரிவர்த்தனைகள் மேற்கொள்ள யாழ். கல்வியற்கல்லூரி ஒரு பாலமாகத் திகழ்கின்றது. அதற்குக் காரணம் திரு.யோகநாதன் கல்லூரிக்குள் சிறந்த விருந்தோம்பல் கலாசாரத்தைக் கட்டியெழுப்பியதாகும். இவ்வாறு பீடத்தலைவர் யோகநாதனை முன்னிறுத்தி அவரின் துடிப்பான செயலாற்றல் காரணமாக வவுனியா மற்றும் யாழ். கல்வியியற் கல்லூரிகளும் சமுகமும் பெற்றுக்கொண்ட பலாபலன்களை பெரும் பட்டியலுக்குள் அடக்கலாம். காலங்காலமாக தொடரவிருக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வரலாற்றில் இவரின் காலப்பகுதி ஓர் அலங்காரமாகத் திகழும் என்பது திண்ணம் என்பதை ஓர் இளைஞனுக்கு மணிவிழாச் செய்தி வழங்கும் இறுமாப்போடு சொல்கின்றேன்.

**எஸ். முரளிதரன்**
*கல்விபணிப்பாளர்,*
*தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை*
*கல்விஅமைச்சு*

# வாழ்த்துச்செய்தி



ஆளுமை, நிர்வாக ஆற்றல், முகாமைத்துவத்திறனுடைய பீடாதிபதி

"மணிவிழா நாள்" என்பது எமது வாழ்க்கைப் பாதையில் அறுபது ஆண்டுகளைக் கடந்து வெற்றிநடைபோடும்போது ஒவ்வொருவரையும் மகிழ்விக்கும் வாழ்க்கைச் செல்லொழுங்காகும்.

அந்த அறுபதைத் தாண்டியவர்களில் ஒருசிலருக்கே அந்த நாளில் விழாக்காணும் வாய்ப்புக் கிட்டுகின்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதி திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களுக்கு மணிவிழா நாளிலே விழாக்காண்பதும்; அதன் பதிவாக மலர் வெளியிடுவதும். மகிழ்ச்சி தருகின்றது. அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் அறிந்த மட்டில் மணிவிழாக் காணும் பேற்றினைப் பெறுபவர்களில், ஒப்பீட்டளவில் அதிகமானவர்கள்; ஆசிரியத்துவத்தைப் புனிதமாகப் பேணிக் கல்விப்பணியாற்றி வெற்றி கண்டவர்கள் என்றே தெரியவருகின்றது.

*"அர்ப்பணிப்புடனான ஆசிரியத்துவம் பெறும்*
*சிறப்பார்ந்த பயன் அது"*

இந்தவகையிற் பீடாதிபதி திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களுக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர் மணிவிழாக் காண்பது சாலப்பொருந்தும் காரியம் என்பேன்.

மிக இக்கட்டான காலகட்டத்திற் கல்லூரியை ஆரம்பித்து, கல்லூரிக்கென ஒரு துளி இடங்கூட இல்லாத நிலையிலே, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினரின் நல்மன ஆதரவுடனும், அன்றைய விரிவுரையாளர்களின், கல்விசாரா ஊழியர்களின் முழுமனதான சேவையுடனும், வைத்தியகலாநிதி, லயன், வி. தியாகராசா போன்ற நலன் விரும்பிகளின் அனுசரணையுடனும், எனது கடும் உழைப்பு;முதலாம், இரண்டாம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களின் சகிப்புத்தன்மை கொண்ட செயற்பாடுகள் ஆகியவற்றுடன் மிகக்குறுகிய காலத்தில். கல்லூரியை வெற்றிநடைபோட வைத்தமை ஒரு வரலாறு.

காலச்சக்கரம் சுழன்று மீண்டும் ஓர் இறுக்கமான காலகட்டத்திற் கல்லூரியை திரு.S.K.யோகநாதனிடம் ஒப்படைக்கவேண்டிய நிலையேற்பட்டது. ஒப்படைத்தேன். துணிவுடன் பொறுப்பேற்றுக் கொண்டார். மீண்டும் ஒரு வரலாறு ஆரம்பமாயிற்று, கடந்த ஆறு வருடங்களாகக் கல்லூரியைத் திறம்படச் செயற்பட வைத்தார்.

அந்த இறுக்கமான காலத்திலே பாடசாலைகள், அலுவலகங்கள் அனைத்தும் செயலிழந்த நிலை. பிரச்சினை உச்சக்கட்டம், போக்குவரத்து தடைப்பட்டது. கல்லூரியின் வெளிமாவட்ட

முகிழ்நிலை ஆசிரியர்கள் தமது வீடு செல்லமுடியாது கல்லூரி விடுதியிலே அவர்களுக்கு உணவு தேடி; ஆரம்பத்தில் என்னுடனும் பின்னர் தனித்தும் அலைந்து பெற்றமையை நன்கறிவேன். இதுபோன்று வேறுவகை இடர்களும் அவரை நாடின. யாவற்றையும் தன் திறன்கொண்டு வெற்றிகரமாகச் சமாளித்தார். அவரது ஆளுமை, நிர்வாக ஆற்றல், முகாமைத்துவத் திறன் கல்லூரியைப் பல்பரிமாண உயர்வுப் பாதையில் இட்டுச் சென்றது என்று கூறுவது மிகைப்படும் கூற்றல்ல. இந்நிலைகண்டு அவரை வாழ்த்துவதிற் பெருமை கொள்கின்றேன்.

கல்லூரியிற் சிறியேனாகிய என்னையும் கௌரவித்து அவர் ஏற்பாடு செய்த எனது மணிவிழாவும்; அதன் பதிவான மலர் வெளியீடும் இன்றும் என் மனதிருந்து அவரை வாழ்த்தி மகிழ்கின்றது.

நிர்வாகத்திறமையுடன் பழைமையை மறவாத அவர் உயர் பண்புகண்டும் அவரை வாழ்த்துகின்றேன். கல்லூரி வெளியீடான "கலாசுரபி" மலர் ஒவ்வொரு வெளியீட்டினையும் என்னிடம் சேர்ப்பிக்க அவர் தவறுவதில்லை. பல மைல் கடந்து நானிருந்தாலும் இன்றும் கல்லூரியில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளை எனக்கும் அறியத் தந்திடுவார். அவரது முன்மாதிரியான இந்தப்பண்பு கண்டும் அவரை இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

தமிழர் வாழ்விற் போற்றும் மணிவிழா நாளும், அரச பதவி வகிப்போர் சேவை ஓய்வு காணும் நாளும் ஒன்றாக அமைந்துள்ளது.

மணிவிழாக்காணும் பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்கள் தனது ஓய்வு நிலைக்காலத்தில் உடல், உள நலத்துடன் பல்லாண்டு வாழ்ந்து; தொடர்ந்தும் கல்விப்பணி ஆற்றிட வாழ்த்துவதுடன், அதுவேண்டி வித்தக விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

நன்றி

கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன். M.A.Dip, in Ed,
*தகைசார் ஓய்வுநிலைப் பீடாதிபதி, யாழ்ப்பாணம்,*
*தேசிய கல்வியியற் கல்லூரி.*

*19-02-2013*
*நாயன்மார்கட்டு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

# வாழ்த்துச் செய்தி

அர்ப்பணிப்புடனான செயற்பாடுடைய பீடாதிபதி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரிக்குச் சேவையாற்ற வந்ததிலிருந்து அவர் முகங்கொடுத்த சவால்கள், வெற்றிகள், வேதனைகள் கடினஉழைப்பு, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, உறுதியான செயலாற்றுகைகள் அவரைச் சிறந்த கல்விச் சேவையாளராக உருவாக்கியுள்ளது. கல்லூரியின் நீர்வடிகால் தொடக்கம் கட்டடங்கள், பூமரங்கள், பயன்தரு தென்னை, மா, வாழை போன்ற மரங்கள் ஒவ்வொன்றும் திரு.S.K. யோகநாதன் அவர்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகளை எடுத்தியம்புகின்றன.

திரு. S.K. யோகநாதன் அவர்கள் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், நண்பர்கள், உறவினர், அயலவர் என்று அனைவர் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும், நலனிலும் அக்கறை கொண்டவர், அனைத்து மதங்களையும் மதிக்கும், உயர் பண்பு கொண்டவர். சிறந்த வழிகாட்டி, அவரின் செயற்றிறன்மிக்க வழிகாட்டலில் இக்கல்லூரி தலை நிமிர்ந்து நிற்கின்றது. பெரியவரின் வாழ்வு மென்மேலும் சிறப்பாக அமைவதுடன்; மணிவிழா சிறப்புற நடைபெறவும், மணிவிழா மலர் புதுப்பொலிவுடன் வெளிவரவும் எல்லாம்வல்ல வித்தக விநாயகரும், முடிமன்னர் வைரவரும் அருள்பாலிப்பாராக. மேலும், கல்விச்சேவை தொடர்ந்து எமது சமூகத்திற்குக் கிடைக்கவும் அனைத்துச்செல்வங்களையும் பெற்று வாழவும் வாழ்த்துகின்றேன்.


**திரு. எஸ். அமிர்தலிங்கம்**

*பீடாதிபதி,*

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,*

# கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தினுடைய கல்வி வரலாற்றில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் பெரும் பங்காற்றியிருக்கின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆளுமைமிக்க ஆசிரியர்களை உருவாக்குவதில் யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரிச் சமூகம் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்ற அர்ப்பணிப்பு மிக்க சேவை பாராட்டுதற்குரியது. இக் கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியாக சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்கின்ற திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்களுக்கான மணிவிழா வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வளமான கல்விப் பாரம்பரியத்தினை நோக்கிய பயணத்தில் இளம் ஆசிரிய மாணவர்களை அவர்களுடைய வழியிலே நின்று நல்வழிப்படுத்தி நிற்கின்ற தன்மை திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்களுக்குரிய சிறப்பான பண்பாகும். விரிவுரையாளர்களுடன் விரிவுரையாளராகவும், பயிற்சி ஆசிரியர்களுடன் பயிற்சி ஆசிரியராகவும் நின்றுழைத்து யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியில் நல்லதொரு சூழலை உருவாக்கியுள்ளார்.

ஓய்வு பெறுகின்ற வயதினை அடைந்திருந்த போதிலும், இளமைத் துடிப்புள்ள இளைஞனாக நின்று; பயிற்சி ஆசிரியர் சமூகத்தினை நல்வழிப்படுத்தி நிற்கின்ற தன்மை பாராட்டுதற்குரியது. பல்வேறுபட்ட நிகழ்வுகளை நேர்த்தியாக ஒழுங்குபடுத்துவதிலும், சிறப்பாகச் செய்து முடிப்பதிலும் தனித்துவம் கொண்டவர் திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்கள்.

யாவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி; ஆளுமை மிக்க செயல்வீரனாகத் திகழும் மணிவிழா நாயகன் தன்னுடைய ஓய்வுக்காலத்தில் கல்விப்புலத்திற்குத் தொடர்சேவை ஆற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அவரது ஓய்வுக்காலத்தில் அவரது குடும்பத்துடன் சகல சிறப்புகளையும் பெற்றுவாழ எல்லாம்வல்ல இறையருளை வேண்டுகின்றேன்.


மருதலிங்கம் பிரதீபன்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
கோப்பாய்.

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியின் ஆசிச்செய்தி



மனிதன் தான் வாழ்ந்த காலத்தின் வாழ்வியல் தடயங்களைப் பதித்துச் செல்கின்றபோது அவனுடைய வாழ்வு அர்த்தம் பெறுகிறது. அவ்வாறே அரச உத்தியோகமும் அவனது சேவைக்காலத்தின் முற்போக்கான முயற்சிகளாற் பதிவு செய்யப்படுகின்றன. இந்தவகையில் மணிவிழாக் காணும் நண்பன் திரு. S.K. யோகநாதனும் தனது சேவைக்காலத்தின் பதிவுகளினூடே கடந்துவந்து மணிவிழாக் காணும் நிலையில் எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

நல்ல ஆசிரியராகச் சிலாபத்திலும், விரிவுரையாளராக, உப பீடாதிபதியாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் தடம்பதித்த பின்னர்; பீடாதிபதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் தனது சாதனைத் தடங்களைப் பதித்துக்கொண்டு, இன்று சேவை நயப்புடன் மணிவிழாக்காணும் நண்பன் திரு.S.K. யோகநாதனுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் ஆரம்பகாலம் முதல் அதாவது 1993ஆம் ஆண்டு முதல், 2005ஆம் ஆண்டுவரையிலும் விரிவுரையாளராக மாணவ ஆசிரியர்களின் மனங்களைக் கவர்ந்து நின்றதுடன்; பின் உபபீடாதிபதியாகக், கண்ணியத்துடனும், பொறுப்புடனும், கடமையாற்றி; நல்ல நிர்வாகியாகவும் எல்லாவற்றுக்கும் மேலாகச் சகலருக்கும் நல்ல நண்பனாகவும் இன்றுவரை பெயர்சொல்லி நினைவுகூறும் அளவுக்குத் தடங்களைப் பதித்திருந்தமை இவ்வேளையில் நினைவுகொள்ளத் தக்கதாகும்.

எத்தகைய சவால்களையும் புன்னகையுடன் எதிர்கொள்ளும் இவரது தலைமைத்துவப்பாணி என்னை என்றும் வியக்கவைத்த ஒன்றாகும். நகைச்சுவை உணர்வுடன் கடினமான விடயங்களைக்கூட எளிதாக அணுகும் இவரது ஆளுமை அனைவரையும் அன்பின் ஊடாகக் கட்டி இணைப்பதாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்து, அக்கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, கல்லூரியின் செயற்பாடுகளை, சாதனைகளைப் பல மட்டங்களிலும் அறியச்செய்து, தனது வாழ்வியல் தடங்களை மேலும் பதிவுசெய்துகொண்டிருக்கின்றமை மணிவிழாவுக்குப் பெருமைசேர்க்கும் விடயங்களாகும்.

தரமான ஆசிரியர்களைத் தமிழ் கல்விச் சமூகத்துக்கு உருவாக்கித் தரவேண்டும் என்பதில் இறுக்கமாகவும், அர்ப்பணிப்புடனும், செயற்பட்டதினூடாக இன்று பல நல்ல தரமான ஆசிரியர்களை உருவாக்கி; தனக்கே உரித்தான பாணியிற் பெயர்சொல்லிச் செயற்பட்டிருக்கின்றார்.

தமிழ் கல்வி உலகம் அவரின் நற்பண்புகளையும், செயற்பாடுகளையும், ஆளுமைமிக்க ஆற்றல்களையும் தொடர்ந்தும் பயன்படுத்தவேண்டும் என எதிர்பார்த்து நிற்கின்றேன்.

மணிவிழா வாழ்த்துக்களுடன்

க. பேர்ணாட்,
*பீடாதிபதி,*
*வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.*

# மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியும் எனது நண்பனுமாகிய திரு. யோகநாதன் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியர் கல்வித்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற இவர், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் தொழில்சார் சான்றிதழ்களைப் பெற்று வாண்மைத்துவம் உடைய பீடாதிபதியாக கடந்த பல ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார்.

வினைத்திறன் மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக அயராது உழைத்துள்ளார். ஆசிரியர் கல்வியில் தரத்தை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதை தெளிவுபட ,பல கல்விக் கருத்தரங்குகளில் குறிப்பிட்டு எம்மிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணலாம்" என்ற திருக்குறளுக்கு அமைய அவருடைய பிள்ளைகள் நன் மக்களாகச் சமூகத்தில் உள்ளனர். ஏழாண்டு கால பீடாதிபதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் ஆற்றிய சேவையை மேன்மை கூறும் இவ் வேளையில் நீண்ட காலம் இன்புற்று வாழ வாழ்த்துக்கள் வழங்கும்.

எஸ். பாக்கியராஜா
*பீடாதிபதி*
*மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி*
*மட்டக்களப்பு.*

# ஸ்ரீபாத தேசிய கல்விக்கல்லூரிப் பீடாதிபதியின் வாழ்த்துச்செய்தி



'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் உயர்திரு. S.K. யோகநாதன் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக மன மகிழ்வு கொள்கிறேன்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக ஆசிரிய கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்த இவர் உபபீடாதிபதி, பீடாதிபதி, எனப் பதவி உயர்வுகளைப் பெற்று, ஆசிரிய கல்விக்குத் தனது அர்ப்பணிப்புடனான பல்வேறு பங்களிப்புகளை வழங்கியமை பாராட்டுக்குரியதாகும்.

இவருடன் ஆசிரிய கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்த நான் இவரின் செயலாற்றல், ஆளுமை கண்டு வியந்ததுண்டு. பழகுவதற்கு மிக இனிமையானவர், இளகிய மனமுடையவர், என இவரின் குணாம்சங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்து அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவரது சேவையை கல்வியியற் கல்லூரிச் சமூகம் என்றும் நினைவில் வைத்திருக்கும் என நம்புகிறேன். திருவாளர் S.K. யோகநாதன் அவர்கள் யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியில் விட்டுச் செல்லும் சுவடுகள் என்றென்றும் அவரை கல்லூரிச் சமூகம் நினைவுகூர வழிவகுக்கும் எனலாம்.

இவரது சேவையைப் பாராட்டி மணிவிழா நிகழ்வினை ஒழுங்கு செய்த குழுவினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேவை செய்தவர்கள் வாழும்போதே பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அந்த வகையில் இம்மணிவிழா ஏற்பாட்டுக் குழுவின் முயற்சி மற்றவர்களுக்கு முன்மாதிரியானதும் போற்றத்தக்கதுமாகும்.

உயர்திரு. S.K. யோகநாதன் அவர்களின் எதிர்கால வாழ்வு வளம் பெறவும், நீண்ட ஆயுளைப் பெற்று ஆரோக்கியமாக வாழவும் மனதார வாழ்த்துகிறேன்.

ஆ. சுந்தரலிங்கம்
*பீடாதிபதி*
*ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி*
*பத்தனை.*

# நெஞ்சை நிறைக்கும் மணிமகுடம்

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து" - குறள் 398



என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. இதற்கிணங்க, ஒருவர் தாம் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையினை எய்த வழிகாட்டுவது கல்வியே. இந்த இலக்கணத்திற்கு ஏற்ப எம் மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்துவருகின்ற யா/ தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி உயர் திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துக்கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அறுபது ஆண்டுகள் நிரம்பிய போதும் எழில் குன்றா இளமையோடு அழகிலும் சிறந்து வாழ்ந்துவருபவர் அன்புக்கினிய பீடாதிபதி யோகநாதன் அவர்கள். எமது நெஞ்சை நிறைக்கும் மணிமகுடமாக ஒளிவீசி மிளிர்கின்ற பெருமையுடையவர். யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சியின் உயர்ச்சிக்குப் பக்கபலமாய் நின்று; கல்லூரிச் சமூகத்தினரோடு அந்நியோன்னியமாக அணுகி; கல்விப் பாரம்பரியத்தைப் பேணிக் காத்துப் பெருமை சேர்த்த பீடாதிபதி அவர்கள் இன்று மணிவிழாவைக் காணும் காலத்தில் அவர் சீரும் சிறப்பும் பெற்றுக் குடும்பத்தோடு நலமுடன் வாழ வாழ்த்துகின்றேன். ஓய்வுக்காலத்தில் இன்று ஏறுநடைபயிலும் கல்லூரியைத் தம் கண்ணெனக் காத்து உதவிகள், ஒத்தாசைகள் வழங்கவேண்டும் என வாழ்த்துக் கூறுவதிற் பெருமை அடைகின்றேன்.

**வே. கா. கணபதிப்பிள்ளை**
*அதிபர்*
*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,*
*கோப்பாய்*

## தூரநோக்குச் சிந்தனையும் ஆளுமையுங் கொண்ட பீடாதிபதி இதயத்தின் ஆழத்திலிருந்து ....

நான் இன்றுவரை என் வாழ்விற் சந்தித்த மனிதர்களில் அதிசயமானவர், ஆச்சரியத்திற்குரியவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி, மணிவிழா நாயகன் திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்கள்.

ஏனென்றால் பல விடயங்களிற் பல சந்தர்ப்பங்களில் அவரையும், அவருடைய நடத்தைப் பண்புகளையும், அவருடைய மிகத்திறன் ஆளுமைகளையும் தூரநோக்குடைய சிந்தனைகளையும் கேட்பதனைவிட; நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். சில சந்தர்ப்பங்களில் அருகே இருந்து அனுபவித்திருக்கின்றேன். அப்படி ஒரு வல்லவர், நல்லவர், வியக்கத்தக்கவர்.

கடந்த எட்டு வருடங்களும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை இலங்கையின் ஏனைய கல்லூரிகளுக்கு நிகராக, மேலாக எல்லா நல் விடயங்களிலும் நடப்பித்துச் செல்கின்றவர். இவருடைய சாதுரியமும், சமுதாய மேம்பாட்டிற் கொண்ட அக்கறையும், எப்போதும் நல்லதைச் செய்யவேண்டும் என்ற சிந்தனையும், தன் தேசத்தின்மீதும்; கொண்ட பற்றுதலும்; ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்மீது கொண்ட அன்பும், அக்கறையும் இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இலங்கையில் மட்டுமன்றி, சர்வதேச உலகிலும் என்றும் அழியாத ஒரு முத்திரையைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

தன்னலம் கருதாத நாயகனாக இருந்து; நேரிய, உயர்வுடைய, நிகரற்ற தூய சிந்தனைகள், செயற்பாடுகளுடன் செயற்பட்டு இக் கல்லூரிக்கும், தமிழ் மண்ணுக்கும், இலங்கை மணித்திருநாட்டிற்கும் பெருமைகள் பல சேர்த்தும், சேர்த்துக் கொண்டும் இருக்கின்ற, என்றும் எனது அன்பிற்கும், உயர் மதிப்பிற்கும், கௌரவத்திற்கும் உரியவராக இருந்து மணிவிழாக் காணும் திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களை என் இதயத்தின் ஆழத்தில் இருந்து மனதார வாழ்த்துவத்துடன், அவரும், அவருடைய மனைவி, பிள்ளைகளும், அவரோடு பணியாற்றும் அனைவரும் என்றும் நலன்கள், வளங்கள் பலபெற்றுச் சீரும், சிறப்புடனும் வாழ என்றும் வாழ்த்துகின்றேன்.

நன்றி,

**திரு. ம. இக்னேசியஸ்**
*அதிபர்,*
*பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.*

# ஆசிச்செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியும், எனது இனிய நண்பருமாகிய திருவாளர் S. K. யோகநாதன் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலை ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்துக் கல்வியில் வளர்ந்து பல்வேறு மட்டங்களில் கல்விக் கல்லூரிகளிற் கடமைபுரிந்து இன்று 5 வருடகாலமாகப் பீடாதிபதியாகப் பணியாற்றுவதுவரையுள்ள காலப்பகுதியில் அவர் ஆற்றியுள்ள பணிகள் அவரது அறிவுக்கும் ஆற்றலுக்கும், உழைப்புக்கும் சான்றாக விளங்குகின்றன.

ஏனைய நிறுவனங்களுடன் கல்விக் கல்லூரிகளை ஒப்பிடும்போது கல்வித்துறை மேம்பாட்டிற்குரிய ஆய்வுகள், ஆலோசனைகள், கருத்தரங்குகள், பயிற்சிகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் எனப் பல மட்டங்களிலும் திரு. யோகநாதன் பீடாதிபதி யாழ். கல்வியியற் கல்லூரிக்கு ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடத் தக்கவை. இதனைக் கல்விச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவிற் கொண்டிருப்பர் என்பதில் ஐயமில்லை.

எனது நண்பன் யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதிஅவர்கள் பழகுவதற்கு மிகவும் பண்பானவர், ஏனையோரையும் அனுசரித்து நடக்கின்ற குணமுடையவர். அதுமட்டுமன்றி நல்லதொரு குடும்பத்தையும் கொண்டவர். எனவே, அவரது எதிர்காலம் வளமானதாகவும்; நாட்டுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் என்றும் அவரது உதவிகளும், ஒத்தாசைகளும் கிடைக்க, வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவரது குடும்பம் சீரும் சிறப்புடனும் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

A.L.A. றசூல். M.Edu (Aus) SLTES - I
*முன்னாள் பீடாதிபதி,*
*இல. 210, நிந்தவூர் - 15.*

# Message from the Deputy Director of Education (Teacher Education)

Congratulations on your well – deserved retirement after several years of dedicated service to the education system.

You have set an example to be followed in the future and cherished by those of us that were fortunate enough to have experienced it for ourselves.

Your service as a teacher, teacher educator, education administrator is admirable. You showed commendable dedication to the college community as well as to your family. In sincere gratitude for the assistance, guidance, and outstanding leadership you have provided for the nation. Wish you all the best for the future.

**Harija**

*Deputy Director of Education,*

*Teacher Education,*

*Ministry of Education.*

# கல்வியியற் கல்லூரியின் பெருமைக்காக அல்லும் பகலும் பாடுபடும் பீடாதிபதி

பீடாதிபதி திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்களுக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் அவரின் நலன்விரும்பிகளும் இணைந்து மணி விழா எடுப்பது குறித்து பெரிதும் உளம் மகிழ்கின்றேன்.

"வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித் திட்டத்தின்

அனுசரணையாக செயற்பட்ட வடமாகாண கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பணிப்பாளர் என்ற வகையில் அவரோடு இணைந்து பணியாற்றும் சூழ்நிலை காரணமாக அவரோடு எனக்கு ஏற்பட்ட நெருக்கம் அவரை எனது அபிமானத்துக்குரிய சிநேகிதராக மாற்றிவிட்டது.

திரு. எஸ்.கே. யோகநாதன் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் துணைப்பீடாதிபதியாக மிக அர்ப்பணிப்போடு பணியாற்றியதன் காரணமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தலைமைத்துவப் பதவி அவரை நாடி வந்து அரவணைத்துக் கொண்டது. பீடாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின் கல்லூரியோடு இரண்டறக் கலந்து அதன் பெருமைக்காக அல்லும் பகலும் பாடுபடுவது, நான் சார்ந்த கல்வி அமைச்சில் அவர் குறித்து எப்போதும் சிலாகித்துப் பேசப்படும்போது அவர் எனது நண்பர் என்ற வகையில் நானும் பெருமகிழ்வுறுவேன்.

தனது கல்வியியற் கல்லூரியின் உட்கட்டமைப்பு விருத்தியில் அவர் எவ்வாறு பெரும் அக்கறையோடு செயற்பட்டிருந்தார் என்பதற்கு என்னோடு இணைந்து கல்லூரியின் விருந்தினர் விடுதியை மிகத் தரமுடையதாக மாற்றியமைக்கச் சிரத்தையுடன் செயற்பட்டதை அவரின் மணி விழாக் காலத்தோடு இணைத்து நினைத்துப் பார்க்கின்றேன்.

அயராது பணியாற்றிய அவரின் சேவைநலனை அனைத்துலகும் அறிய வேண்டியது அவசியமாகும். அவ்வாறாக இந்த மணி விழா அமையவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களுக்கு மணிவிழாக் கொண்டாட ஆர்வம் கொண்ட அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதும் எனது கடமையாகும்.

இன்னும் பல பெருவிழாக்கள் காண திரு. எஸ். கே. யோகநாதனுக்கு இறைஅருள் கிடைப்பதாக.

ஏ.எப்.எம்.றாபி
*செயற்றிட்டப் பணிப்பாளர்,*
*வடமாகாண கல்வி அபிவிருத்தி இணைப்பாக்கப் பிரிவு,*
*கல்வி அமைச்சு.*

# வாழ்த்துச் செய்தி

காலம், இடம், தேவை கருதி காரியமாற்றுபவர்; சான்றோர்க்கும் நன்மையையும், பெருமையையும் பெற்றுக்கொடுக்கின்றார். இதை வள்ளுவப் பெருந்தகை பின்வருமாறு கூறுகின்றார்.

"பொருள்கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்" (குறள் 675)

இக்குறட்பா யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மணி விழா நாயகன் திரு. எஸ். கே.யோகநாதன் அவர்கட்கு சாலவும் பொருந்தும்.

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியில் திரு. எஸ். யோகாநாதன் அவர்கள் பீடாதிபதியாகக் கடமையேற்ற காலத்திலிருந்து கல்லூரி பல சவால்களையும், தடைகளையும் சந்தித்த வரலாறு யாவரும் அறிந்ததே. இவற்றையெல்லாம் நிலைமைகளிற்கேற்ப வென்று, தடைகளையும் தாண்டி, இக் கல்லூரி இவ்வளவு தூரம் இன்று மிளிர்ந்து நிற்கிறது என்றால் அதற்குக்காரணம் இவரின் முகாமைத்துவ ஆற்றலும், ஆளுமைத் திறன்களுமேயாகும். ஜனநாயகம், மனித நேயம், பொறுமை, விட்டுக்கொடுப்பு என்பவற்றோடு, தனது பதவிசார் அதிகாரத்தைச் செவ்வையாகக் கையாண்ட ஒருவராக இவர் விளங்குகிறார். இவரை நான் 1993இல் முதல் முதலாகச் சந்தித்தபோது, எனது மனைவியுடன் இவரது வீட்டுக்குச் சென்றமை இன்றும் என் மனதில் அழியாத நினைவாகவுள்ளது. இவரது சாதனைகளிற்குப் பின்னணியாக இவரது மனைவி திகழ்ந்துள்ளமையையும் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டிய அம்சமாகும். இன்று மணிவிழாக்காணும் இந் நாயகனை, இவரின் பணிகளை நினைவு கூறுமுகமாக வாழ்த்துவது பெருமைக்குரியதாகும். அருமையும், பெருமையும் தூரநோக்கும் கொண்ட இவர் மேலும் புகழ் பெற்று, சிறப்புற்ற தனது குடும்பத்தவர்களையும் வளம்பெறச் செய்து வாழ, இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம். வாழி.

T.M. தெய்வேந்திரம்
*(ஓய்வுபெற்ற உப பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி)*
Sports Coordinator,
Lisium International School,
Wattala.

# Message

**For the Diamond Anniversary of Mr.S.K.Yoganathan**



It is with pleasure that I send this messag in appreciation of the service of Mr.S. K. Yoganathan,president, Jaffna National college of Education.

I have known Mr. Yoganathan since he came to NIE to participate in workshop. on curriculum development of Measurement and Evaluation.When he was the vice president at Vavuniya NCOE, was highly respected by the students for his kindness. Espcially the singala students treated him as their father . He proved his ardent art or teaching as a lecturer as well.

He is a good friend of mine having all human qualities and gave his fullest support in all educational programmes conducted by NIE for the successful implementation of education policies. His humanitarian administrative strategy as the president of Jaffna NCOE is highly appreciated by the lecturers and students.

He Was as my brother not reluctant to discuss about every matter related to Ministry even after my retirement. l feel the diamond Jubilee function is one of my colleagues.

He did family commitments and social obligations at his best and the God blessed him with a loving beautiful wife and affectionate thiree sons who show their excellence in the fields they are.

I wish him a peaceful and healthy retired life and encourage him to render his valuable service to education in some form in future too.


**Mrs.Lilani Amarasinghe**

*former Director*

*Department of nstitutional Develipment*

*NIE.*

# தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரியர் குழாத்தை உருவாக்குவதற்கு உந்து சக்தியாகத் திகழும் பீடாதிபதி திரு. எஸ். கே.யோகநாதன்



யாழ். கல்விச் சமூகத்தின் ஆசிரிய மாணவர்களை உருவாக்கும் முதன்மைக் கல்விக்கூடமாகத் திகழும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதல்வராகக் கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய கல்வியியலாளர் திரு. எஸ். கே. யோகநாதன் அவர்கள் ஓய்வு பெறுகின்ற இச்சந்தர்ப்பத்தில் மணிவிழாப் பாராட்டுச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1982ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக்கொண்ட திரு. எஸ். கே. யோகநாதன் அவர்கள் தனது விடா முயற்சியின் பயனாகக் கல்விப் பரப்பில் இருக்கின்ற உயர் பதவிகளாகிய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர்கள் சேவையில் உப பீடாதிபதி, மேலதிகப் பீடாதிபதி எனப் பல்வேறு பதவிகளை வகித்து, இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக உயர்பதவி வரை உயர்ந்துள்ளார். இவர் மாணவ சமூகத்தின் கண்களாக விளங்குகின்ற ஆசிரியர்களை உருவாக்குகின்ற பணியில் தனது தன்னலமற்ற அளப்பரிய கல்விச் சேவையினால் யாழ். உள்ளிட்ட வடமாகாண தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் மத்தியில் மட்டுமன்றி தீவு முழுவதிலுமுள்ள தமிழ்மொழி பேசும் மக்கள் மனங்களில் என்றும் நிலைத்திருப்பார் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

தனது சேவைக்காலத்தில் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து கல்லூரி நிர்வாகத்தை மிகச் சிறப்பாக நிர்வகித்த சிறந்த நிர்வாகியாவார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக் காலத்திலும் கூட யாழ்.கல்விச் சமூகத்தின் எதிர்பார்ப்பினைச் சோர்வடையச் செய்யாது அதனை எவ்வித சிதைவுமின்றி முனைப்போடு முன்னெடுத்தவர் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மேலும் இவர் சஞ்சிகை, பத்திரிகை போன்றவற்றில் கல்வி தொடர்பான ஆராய்ச்சிகளில் ஆசிரியமாணவர்களை ஈடுபடுத்தி அவர்களின் எதிர்கால வெற்றிகளுக்கு வித்திட்ட ஒரு முதன்மை ஆசான் ஆவார்.

திரு.யோகநாதன் அவர்கள் இன்று பணிஓய்வு பெற்றாலும் அவர் விட்டுச் சென்ற இடங்கள் மற்றையவர்களால் தொட்டுச் செல்லப்படும் என நான் உறுதியாக எண்ணுகிறேன். இவரது கல்விச் சேவையானது கல்விச் சமூகத்தினர் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்தும் இவரது கல்விச் சேவையானது பல்வேறு வடிவங்களில் தேவையானவர்களுக்குக் கிடைக்கும் என உறுதியாக நம்பி அவரது ஓய்வுக் காலம் பயனுள்ளதாகவும், தேக ஆரோக்கியத்துடனும் நீண்டகாலம் வாழ இந்த மணி விழாச் சந்தர்ப்பத்தில் ஆசீர்வதித்து வாழ்த்துகின்றேன்.

திரு. இஸட். தாஜுதீன்
*கல்விப் பணிப்பாளர், முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை,*
*கல்வி அமைச்சு, "இசுறுபாய", பத்தரமுல்ல.*

# பல்துறை ஆற்றல் மிக்க யோகநாதன்



நண்பன் யோகநாதன் அவர்களை 1975இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் கல்விகற்ற காலத்தில் இருந்து நன்கு அறிவேன். கல்விகற்கும் காலத்திலேயே ஒரு துடிப்புமிக்க மாணவனாகத் திகழ்ந்தார். பேராதனையில் இடம்பெறும் தமிழ் மாணவர்களது நிகழ்ச்சிகளில் இவரது வகிபங்கு கணிசமானதாகும். மனிதநேயம் மிக்கவர். எல்லோரையும் தமது குறும்புடன் கூடிய பகிடிகளால் மகிழ்வாக வைத்திருப்பவர். ஆசிரியத்துவத்தைப் பேணுகின்ற நல்லாசான்; கல்வியியற் கல்லூரியில் விடுதி விரிவுரையாளராகவும் செயற்பட்டவர். அவ்வாறு செயற்படுங்காலை; மாணவர்களுடன் மாணவஆசிரியர் தொடர்புக்குரிய பக்குவநிலையில் நின்றுகொண்டு மாணவர்களோடு அந்நியோன்னியமாக நடந்துகொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்கள் தேவையறிந்து நெறிப்படுத்தி வெற்றியுங்கண்டவர். நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் அவரது ஆளுமைக்கு வலுவூட்டின. இவரது புதல்வர்களும் தந்தையைப் போலவே ஆற்றல் மிக்கவர்கள்.

இவரது சிரேஷ்ட புதல்வனை வவுனியாவில் தொழில்புரியும் வேளையிலும், கனிஷ்ட புதல்வனை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தற்போதும் அறிவேன். தேசிய கல்வியியற் கல்லூரியைத் திரு. கமலநாதன் அவர்களுக்குப் பின்னர் பொறுப்பேற்று, காண்பவர் வியக்கும் வண்ணம் பல்வேறு வழிகளிலும் கவின் நிலைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் அதன்விளைவாக ஆசிரிய மாணவர்களது தரஉயர்வுக்கும் வழிவகுத்தார். யோகநாதன் எனது நண்பன் என்று சொல்வதிற் பெருமகிழ்வடைகின்றேன். மணிவிழாக் காணும் நண்பனையும் குடும்பத்தினரையும் உளமார வாழ்த்துகின்றேன்.

**நண்பன் வீ. கணேசராஜா**
*அதிபர்,*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.*

## வாழ்த்துரை



சிறந்த கல்வியியலாளரும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்வியின் இரண்டாவது பீடாதிபதியுமாகிய திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிச் சமூகம் பெருமையடைகின்றது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் மைந்தனான இவர் கல்வி கற்கும் காலத்தில் கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். க. பொ. த. (உயர்தர) கலை வகுப்பில் எனது சகபாடியாகக் கல்வி கற்றவர். எங்களுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்ற பதினெட்டு மாணவர்களும் சித்தியடைந்தோம். அதில் பதினான்கு மாணவர்கள் முதல் தடவையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றோம். திரு. எஸ். கே.யோகநாதன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றார்.

இவர் சாவகச்சேரி இந்துவில் சிறந்த விளையாட்டு வீரராக விளங்கியதுடன் விவாத மேடைகளில் பங்குபற்றி பேச்சாளராகவும், நாடக நடிகனாகவும், சிரேஷ்ட மாணவ முதல்வராகவும் தனது திறன்களை வெளிப்படுத்தினார். இவர் நடித்த "பண்டாரவன்னியன்" நாடகம் கல்லூரிச் சமூகத்தின் மதிப்பைப் பெற்றது.

சிறந்த புவியியல் ஆசிரியராக விளங்கி தனது பாடசாலைச் சேவையில் மாணவர்களின் நன் மதிப்பைப் பெற்றார். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வாண்மைத்துவம் மிக்க ஆசிரியர்களாக வெளிவருவதற்கு உதவியுள்ளார். வவுனியா கல்வியியற் கல்லூரியில் தனது திறமையைக் காட்டிய இவர் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார். ஆசிரிய மாணவர்களுடனும் ஏனையவர்களுடனும் நட்புரிமையுடன் பழகுவது இவரது இயல்பான செயற்பாடாக அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட காலம் முதல் குடாநாட்டின் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கு கொள்கின்ற ஓர் முக்கிய கல்விப்புலம் சார் சான்றோனாகக் கருதப்பட்டு வருகின்றார். பல ஆய்வுப் பட்டறைகள், கல்வியியற் கருத்தரங்குகள், நினைவுப்பேருரைகள் போன்றவற்றின் ஊடாக மாணவர்களதும் ஆசிரியர்களதும் வாண்மையை மேலோங்கச் செய்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

ஆசிரிய மாணவர்களின் கற்பித்தல் மேற்பார்வை செய்வதற்காக குடாநாட்டின் பல்வேறு பாடசாலைகளுக்கும் வருகை தந்து கல்லூரியின் கல்வி மேம்பாட்டிற்கு உதவி வருகின்றார்.

கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களுடன் சிநேக பூர்வமாகப் பழகி வருகின்ற பண்பு பாராட்டுக்குரியது.

இவரது கல்விச் சேவையைப் பாராட்டுவதற்கு விழா எடுக்கின்ற மணிவிழாக் குழுவினருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் விழா நாயகனும் அவரது குடும்பத்தினரும் சிறப்புடன் வாழ இறையருளை வேண்டி இந்துக் கல்லூரிச் சமூகம் சார்பாக மணி விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. அ. கயிலாயபிள்ளை**
*அதிபர்,*
*யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

# பல்கலைக்கழக காலத்து நட்புறவு



1975ஆம் வருடம் மே மாதம் 13ஆந் திகதி ஞாயிறு பேராதனை பல்கலைக்கழக அனுமதிக்காக உள் நுழைந்த எமக்குச் சம்பிரதாய சடங்குகள் வளாகத்தினுள் லெனின் மண்டபத்தில் இடம் பெற்றது. 14ஆம் திகதியும் தொடர்ந்தது. 15ஆம் திகதி பதிவுகள் மேற்கொள்வதற்காக லெனின் மண்டபத்திலிருந்து எமது சகபீட, ஏனைய பீட மாணவர்கள் மற்றும் சகோதர இன மாணவர்கள் சகிதம் பேராதனை கலகா வீதியூடாக ஜிம்னேசியம் நோக்கிசென்று கொண்டிருந்தோம். ஏனைய தங்குமிட மண்டபங்களிலிருந்து ஆண், பெண் மாணவர்கள் வந்து சேரச் சேர எமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த வளாகத்திற்கு உரிய வரவேற்புகள் குறையத் தொடங்கின.

கலைப்பீடத்திற்கு அப்பால் உள்ள மண்டபம் ஒன்றிலிருந்து எம்முடன் பல மாணவர்கள் இணைந்திருந்தனர். எனக்கு அருகில் வந்து கொண்டிருந்த சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட சகபாடிகள் இருவரை நோக்கி, ஒரு வெள்ளை உருவம் எமது உடை கோலமாக வந்து என்ன மச்சான் இவன்கள் எம்மை விடாங்கள் போல என்று கேட்டுநின்றது. என்னருகில் நின்ற யோகானந்தம், பரமநாதன் என்போர் சத்தம் போடாதே கவனமாகக் கதைப்பம் என்று அவரிடம் கூற, சரி வந்திட்டம் அவதிப்படத்தான் வேண்டும் என்றுகூறி நின்ற உருவம்தான் இன்றைய பீடாதிபதி எனதருமை நண்பன் உயர்திரு. எஸ். கே. யோகநாதன்.

அன்றைய அறிமுகம் இன்றும் நீடிக்கிறது. இவ்விடைக் காலத்தில் பல்கலைக்கழக வாழ்வில் அவர் தொடர்பாக எனது மனதிருப்பவை. கற்றல் செயற்பாடுகளில் விரிவுரைகள் யாவற்றிலும் தனது வரவு உறுதிப்படுத்தியவர். பரீட்சைக்காலங்களில் தனது பக்குவத் தன்மையைப்பேணியதுடன் கலந்துரையாடல் மூலம் ஏனைய சகபாடிகளுக்கும் தனது அறிவைப் பரிமாற்றம் செய்தவர். தவறுகள் இழைப்பவர்களுக்குத் தனது கருத்துரைகள் மூலம் ஆலோசனை வழங்கிப் பெயர் பெற்றவர்.

இரண்டாம் வருடத்தில் புவியியல் பாடத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றார். எனினும் எம் அனைவருடனும் வாரத்தில் இரு தடவைகளாவது இணைந்து அனுபவங்களைப் பகிர்வார். பகிடியுடன் பகிரப்படும் அவரது அனுபவங்களை இன்றும் நினைத்து நினைத்து நான் மட்டுமல்ல எனது நண்பர்களும் மகிழ்கின்றனர்.

பல்கலைக்கழக அனுபவங்களில் இன்னொன்று 1ஆம் வருட ஆரம்பத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையின் போது "நாளை முதல் பல்கலைக்கழகம் மூடப்படும் அதற்காக இன்று சகலருக்கும் ரூபா15/= வழங்கப்படும் எனக் காலை அறிவிப்பு வந்தது. சகலரும் ஒன்று திரண்டு வரிசையில் ஒரு குழு, குழம்பிய குழு, ஆறுதலாக எடுப்போம் என நின்ற குழு, தேவையில்லை என்ற நிலையில் ஒரு குழு எனச் செனட்டின் முன் உள்ள நிதிக்கிளையில் நெருக்கடியான நிலை.

நண்பன் யோகநாதன் வந்தவர் தன்னுடன் யாழ்ப்பாணம் ரயிலில் செல்லும் சகபாடிகளை நோக்கி, தம்பியவை இப்பிடி நிண்டா ஒரு நாளை வீணாக இழக்கிறம். (15ரூபா பெரிய காசு என்பது அன்றைய நிலை) நாங்கள் எங்களிட்ட இருக்கிற காசைக் கொண்டு நாங்கள் போறது தான் புத்திசாலித்தனம் என்ற அவர், தொடர்ந்தும் அங்க வாங்கோ (சரசவி உயன ஸ்டேஷன்) சமாளிப்பம் என்ற வார்த்தை கேட்டு வரிசையில் நின்ற குழு குழம்பிய நிலையில் நின்ற குழுக்களில் உள்ள யாழ்ப்பாணம் நோக்கிப்பயணிப்போர் எல்லோரும் தத்தம் விடுதி நோக்கிச் சென்று மாலை 5மணிக்கு சரசவி உயனவில் ஒன்று கூடினர். டிக்கெட் எடுக்க முடியாத மூன்று பேருக்குப் பொறுமையாக நின்று டிக்கெட் வாங்குவதில் ஒத்தாசை செய்தது எனது மனதை விட்டகலாத ஒன்று

நூலகத்தில் தனக்கேயுரிய பாணியில் பாடங்களைக் குறித்த நேரத்தில் மீட்பதும் ஓய்வு நேரத்தை உள மகிழ்வுடன் கழிப்பதும் சக மாணவரைப் பொதுநலமாக நோக்குவதும் ஆண்டு பல கடந்தும் தனக்கேயுரிய நகைச்சுவைப் பாணியில் பழையனவற்றை மீட்டு நட்பினைப் பலமாக்கிக் கொள்வதும் உயர்வான நிலையிலும் கல்வியியற் கல்லூரிக்கு வெளியே பழைய நண்பனாகவே செயற்படுவதும் பாராட்டப்பட வேண்டியது. பதவி மாறினும் பழைமையை மாற்றாது பலரதும் மனதிலும் உயர்வாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது எதிர்கால ஓய்வு வாழ்வு சகல வழிகளிலும் சிறப்புற எல்லாம்வல்ல இறைவனின் ஆசியுடன் எனது ஆசிகளையும் மனதார வழங்கி அமைகின்றேன்.

**திரு. என் . சுப்பிரமணியம்**
*அதிபர்,*
*யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.*




முகிழ்நிலை ஆசிரியர்சார் செயற்றிட்டங்கள்



கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகள்

# யோகநாதம்

## இயல் இரண்டு

## பீடாதிபதி சங்கரப்பிள்ளை கதிரவேலு யோகநாதன் அவர்களின்

# வாழ்வும் பணியும் பயனும்

- ஒரு சுருக்கக் குறிப்பு






முருகேசு கௌரிகாந்தன்,
*விரிவுரையாளர்.*


**28** - 04 - 2013 அன்று தமது அறுபதாவது அகவையினை நிறைவு செய்து மணிவிழாவினைக் கண்டு மகிழவிருக்கும் எமது தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு. எஸ். கே யோகநாதன் அவர்களின் மேலான வாழ்வும் வினைத்திறனுடன் கூடிய கல்விப் பணியும் இக்கால எமது கல்விச் சமூகத்தினருக்கு முன்னுதாரணமானவை என்று கூறலாம். மேலே எழுதப்பெற்ற தலைப்பினை பிறப்பு, கல்வி, தொழில், எழுத்தாக்கப் பணி, சமயப் பணி, இல்வாழ்க்கை என்ற உப தலைப்பின் கீழ் சுருக்கமாக நோக்கலாம்.

**பிறப்பு**

பீடாதிபதி உயர்திரு எஸ். கே. யோகநாதன் அவர்கள் தென்மராட்சி மீசாலையில் கதிரவேலு பொன்னம்மா தம்பதியினருக்குப் புதல்வராக 1953 ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்தெட்டாம் நாள் அவதரித்தார். தமது பேரனாகிய சங்கரப்பிள்ளை அவர்களின் முதலாவது எழுத்தை தமது முதலெழுத்துக்களில் முதலாவதாக வைத்து எழுதுவது இவர் மரபு. சாதாரண விவசாயக் குடும்பத்திற் பிறந்த திரு. யோகநாதன் அவர்கள் தமது கடின உழைப்பாலும் இடையறாத முயற்சியாலும் இந்நிலைக்கு உயர்ந்தவர்.

**கல்வி**

இவர் தமது ஆரம்பக் கல்வியை மீசாலை விக்கினேஸ்வராவிலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்று, பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானார். முதற் கலைத் தேர்வுக்கு அரசியல், பொருளாதாரம், புவியியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்று புவியியல் சிறப்புப் பட்டதாரியானார். பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், அ. சண்முகதாஸ், சி. தில்லைநாதன், அம்பலவாணர் சிவராஜா, வேல்முருகு, வை. நந்தகுமார், பொன். பாலசுந்தரம்பிள்ளை, சுப்பையா, ஜோஜ் தம்பையாபிள்ளை, மூக்கையா, லூதர் ஜெயசிங்கம் ஆகியோர் இவரது பல்கலைக்கழக ஆசான்கள். இவரது கல்விப்புல ஆளுமையில் இப் பேராசிரியர்களின் செல்வாக்கைக் காணமுடிகிறது.

பீடாதிபதியவர்கள் தமது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை 1990 - 1991 காலத்தில் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்திலும், இதே பல்கலைக்கழகத்திலே 2002 ஆம் ஆண்டு ஆசிரிய கல்வியில் முது கலைமாணி (M. A in Teacher Education) பட்டத்தையும் பெற்றார். நிறைவாக 2004 ஆம் ஆண்டு கல்வியமைச்சின் புலமைப்பரிசில் பெற்று மலேசியப் பல்கலைக்கழகம் சென்று ஆங்கில மெழிமூல ஆசிரிய கல்வி வாண்மை விருத்திப்பயிற்சியினைப் பெற்றார். இவ்வாறு பாடத்துறை மற்றும் கல்வியியல் துறையில் இவர் பெற்ற பட்டங்களும் பயிற்சிகளும் தான் பாடசாலையிலும் அதனையடுத்து தேசிய

கல்வியியற் கல்லூரிகளிலும் இவர் சிறப்பாகப் பணியாற்றிப் பிரகாசிக்கக் காரணமாக அமைந்தன.

**தொழில் வாழ்க்கை**

இவரின் கல்விப் பணி ஆசிரியப்பணியிலிருந்து ஆரம்பமாகியது. 1982 ஆம் ஆண்டு சிலாபம் புனித பெர்ணடேத் தமிழ் மகாவித்தியாலயத்திற்குச் சென்று அங்கே பன்னிரண்டு ஆண்டுகள் தமது பணியைச் சிறப்பாக ஆற்றியுள்ளார். அக்காலத்தில் இவர் சிறந்த புவியியல் ஆசிரியராக விளங்கியமையால் எம்மிடம் புத்தளத்திலே க. பொ. த. உயர்தரம் கற்ற பல மாணவர்கள் இவரிடம் சென்று புவியியல் கற்று உயர்ந்தனர். இவரின் கற்பித்தல் திறனால் சிலாபம், புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த பல தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லக் காரணமாக விளங்கினார்.

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்...**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 1993 அக்டோபர் 18 இல் ஆரம்பிக்கப்பெற்றபோது சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து தமது செயற்றிறனால், சில ஆண்டுகளில் தமிழ்ப் பகுதித் தலைவர் மற்றும் விரிவுரையாளர் இணைப்பாளராக (Dean & Lect. Co - Ordinator) ஆகப் பதவி உயர்வு பெற்று, விரைவில் கல்வியும் தரமேம்பாட்டுக்கான (Academic & Quality Assurance) உபபீடாதிபதியானார். இக்கல்லூரியின் 50 ஏக்கர் பரப்பு முழுவதும் காலை முதல் மாலைவரை மிவும் சுறுசுறுப்புடன் உலாவந்து பணியாற்றும் கல்வியியலாளராக இவரை நாம் அக்காலத்திற் பார்த்திருக்கிறோம். இவ்வாறு பணியாற்றிய திரு. யோகநாதன் அவர்கள் 2004 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மலேசியா சென்று உயர்பயிற்சி பெற்ற பின்னர் கல்வியமைச்சின் பணிப்பின் படி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2005 ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப் பெற்று இங்கே 2006. 09. 10 வரை மேலதிக பீடாதிபதியாகப் பணியாற்றிய பின் இன்றுவரை அதன் மதிப்பார்ந்த பீடாதிபதியாக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். யான் அறிந்த வகையில் இக்கல்லூரிக்கு இவரால் ஆற்றப்பட்ட பாரிய பணிகள் என்று கூறத்தக்கவை கல்லூரியின் சுற்றாடலை முகிழ்நிலை ஆசிரியரைக் கொண்டு அழகாக வைத்திருக்கின்றமை, பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தை வெற்றிகரமாக நடாத்தி முடித்தமை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களுடன் தொடர்புகொண்டு அவரது தந்தையாரான அமரர் திரு. வி. தர்மலிங்கம் அவர்கட்கு சிலை எடுத்தமை என்பவற்றைக் கூறலாம்.

**எழுத்தாக்கப் பணி:-**

தமது கற்பித்தற்பணி, நிர்வாகப் பணி என்பனவற்றின் மத்தியிலும் எமது கல்விச் சமூகத்துக்குத் தேவையானவற்றைப் பற்றிச் சிந்தித்து அவை தொடர்பாகப் பலருடன் கலந்துரையாடி தமது ஆளுமையினை வெளிக்காட்டும் கருத்துக்களை கட்டுரைவடிவிலே காலந்தோறும் வெளியிட்டு வந்தார். அக்கட்டுரைகள் பலருக்கும் பயன்படும் வகையில் 'கல்வியில் தரம்மேம்பாடு' எனும் தலைப்பில் தொகுக்கப் பெற்று நூலாக வெளி வருகின்றமையும் மகிழ்வைத் தருகின்றது.

எமது நினைவில் தற்போது பதிந்திருப்பவை என்ற வகையில், 'நம் நாட்டு எழுத்தறிவு ஏற்றம் பெறக்காரணம்' (1995), 'கல்வி மறுசீரமைப்பில் ஆரம்பக்கல்வியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள்' (1999), 'கல்விக் கல்லூரிகளில் ஆசிரியப் பயிலுனர்களுக்கான செயலாய்வு' (2001), 'ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் சூழலை ஒழுங்குபடுத்தல்' (2004), 'வகுப்பறைக் கற்றல் கற்பித்தலை வினைத்திறனாக்கும் ஆசிரியமுகாமைத்துவ நுட்பங்கள்' (2007),

'தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஊடாக ஆசிரியர் கல்விக் கலாச்சாரமும் பிரயோகங்களும்' (2010), 'ஆசிரியர் கல்வியிலிருந்து ஆசிரியர் அபிவிருத்தி நோக்கிய செயலாற்றுகைகள்' (2012), 'முடிமன்னரும் அற்புதங்களும்' (2012) என்பன குறிப்பிடத்தக்கவை. இக்கட்டுரைகள் 'வித்தியாதீபம்', 'கலாசுரபி', 'வித்தகர்', 'காலத்தை வென்ற கமலம்' என்பனவற்றில் வெளிவந்தவை. இவரால் எழுதப்பெற்ற 'தென்மராட்சிப் பகுதியின் நீரியல்வளம்' என்ற ஆய்வுக் கட்டுரையும் நூலாக வெளிவந்தால் புவியியல் துறையைச் சேர்ந்தவர்கள் பயன்பெறுவர்.

**சமயப்பணி**

இலங்கையில் உள்ள ஏனைய மதங்களை மதிக்கும் பீடாதிபதியவர்கள் தமது சமயத்தின் மீது பற்றும் கடவுள் பக்தியும் உள்ளவர். பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் மற்றும் நகுலேச்சரம், கோப்பாய் கண்ணகி அம்மன் ஆலயம் முதலானவற்றிற்கு எமது கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரை ஆண்டு தோறும் அழைத்துச் சென்று வழிபாடாற்றுபவர். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தினுள் கோயில் கொண்ட கண்ணகி அம்மன், எமது வித்தக விநாயகர் ஆகிய தெய்வங்கள் மீது மிகவும் பயபக்தியுள்ளவர். சென்ற வருடம் வித்தக விநாயகர் முடி மன்னர் தெய்வங்களுக்கு சமய ஆசாரசீலராக இருந்து, புனராவர்த்தன மகா கும்பாபிடேகத்தை முன்னின்று நிகழ்த்துவித்தமை வரலாற்றில் அவர் செய்த சிவ நல்வினையே எனலாம்.

**பிற பணிகள்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி தனித்து மூடப் பெற்றதாக இயங்கும் ஒரு நிறுவனம் அல்ல. யாழ். குடாநாட்டிலுள்ள பல பாடசாலைகளுடனும் மிகவும் நெருக்கமான உறவை அது கொண்டிருக்கின்றது. அவ்வகையில் அப்பாடசாலைகள் நடாத்தும் இல்ல விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், தமிழ் விழா, சமய விழாக்கள் என்பனவற்றிலும் பீடாதிபதி அவர்கள் கலந்து சிறப்புரைகளை ஆற்றியுள்ளமையும் குறிப்பிடப்பட வேண்டியதொன்று. இவ்வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலானவற்றில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளிற் கலந்து சிறப்பித்தமையினைக் கூறலாம்.

**இல்வாழ்க்கை**

பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அவர்களின் கல்விப்பணி சிறக்க அவரது குடும்பத்தினரின் நிறைவான ஒத்துழைப்பும் முக்கிய காரணம் எனலாம்.

"மங்கலம் என்ப மனைமாட்சி - மற்றுஅதன்
நன் கலம் நன்மக்கட் பேறு"

என்ற குறளுக்கேற்றவாறானது அவரது குடும்பம். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பண்பால் உயர்ந்த காணிப்பதிவாளர் குணரத்தினம், ஆசிரிய மணி செல்வமுத்து ஆசிரியை தம்பதிகளின் அரும் புதல்வியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானமாணிப் பட்டதாரியுமான பத்மராணி ஆசிரியை அவர்களை 1983ஆம் ஆண்டு மணம் முடித்தார். இருவரதும் நல்வாழ்வின் சாட்சிகளாக நிருஷாந்தன், வகீதன், ரிஷோபன் ஆகியோர் திகழ்கின்றனர்.

தலைமகன் நிருஷாந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட விஞ்ஞானமாணிப் பட்டதாரி. தற்போது வவுனியா வர்த்தக வங்கியில் பணியாற்றுகின்றார். வவுனியா குட்செட் வீதி, மதுஷா (Fashion designing) அவர்களைக் கைப்பிடித்து யோபீஸ் எனும் ஆண் மகவைப்பெற்று, தந்தைக்குப் பேரனாம் உறவைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

இரண்டாவது புதல்வர்கள் வசீதன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியை நிறைவு செய்து தற்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலே 'டெமொன்ஸ்ற்றேற்றராகப்' பணி புரிகின்றார். மூன்றாவது புதல்வர் ரிஷோபன் யாழ். இந்துவில் க. பொ. த. உயர்தரம் (விஞ்ஞானப்பிரிவு) கற்கின்றார்.

'தந்தை மகற்கு ஆற்றும் உதவி அவையத்து
முந்தியிருப்பச் செயல்'

எனும் குறளுக்கு இணையாக இவர் வாழ்வைக் குறிப்பிடலாம்.

**நிறைவுரை**

ஆரோக்கியமான உடலிலிருந்துதான் ஆரோக்கியமான சிந்தனைகள் பிறக்கும் என்பர். எமது பீடாதிபதி உயர்திரு. எஸ். கே. யோகநாதன் அவர்கள் உடல் உள ஆரோக்கியம் மிக்கவர். எந்நேரமும் முகமலர்ச்சியுள்ளவர். இரக்க சுபாவம் உள்ளவர். எதையும் ஒளிவு மறைவின்றி நகைச்சுவை கலந்து பேசுந்தகையர். இவரது வினைத்திறன் மிக்க கல்வி நிர்வாக செயற்பாடுகளால் இவர் சேவை செய்த நிறுவனங்கள் நிறையப் பயன் பெற்றிருக்கின்றன. இதற்கு இவருடன் கற்றவர்கள், இவரால் நெறிப்படுத்தப் பெற்றவர்கள் சமூகத்தில் மேல் நிலையில் உள்ளமை தக்க சான்று.

# ஆளுமை மிக்க ஆசான்



மாணவி திருமதி . ஞானச் செல்வி விநாயகமூர்த்தி
*விரிவுரையாளர்,*
*யாழ். தேசிய கல்வியற் கல்லூரி.*



நிமிர்ந்த நடை , முக அமைதி, பார்வையால் பணிகளை நிறைவேற்றும் பண்பு, பேச்சுக் குறைவு சாதனை பெரிது, அன்பினால் மாணவர்களைக் கட்டுப்படுத்தும் இயல்பு, மனிதநேய அணுகுமுறை ஏனையோருக்கு முன்னுதாரணமாக விளங்கும் தன்மை .....என எமது ஆசானின் ஆளுமைப்பண்புகள் அகல்விரி தன்மைகொண்டதாக அமைந்துள்ளன.

இத்தகையதொரு ஆளுமைமிக்க ஆசானின் கீழ்மாணவியாகவும், அவரின்கீழ் சேவையாற்றும் விரிவுரையாளராகவும் கடமை புரிவதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்.

முதன்முதலில் 1993ஆம் ஆண்டு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் அணி மாணவியாக அவரிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய நகைச்சுவையுடன் கூடிய உயிர்ப்பான விரிவுரைகளுக்கும் மேலாக ஆசானுடைய அன்பான வரவேற்பும், கனிவான பேச்சும் வயது பாராட்டாமல் மற்றவரை மதிக்கும் தன்மையும், எப்படி மற்றவர்களுடன் பழகவேண்டும் என்பதை எமக்குக் கற்றுத்தந்தன. அவருடைய கண்டிப்புக் கலந்த பேச்சு எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவரச் செய்வதற்கு வலுவூட்டியது என்றால் மிகையாகாது. இது ஆசிரிய மாணவர்களுக்கான முன்னுதாரண ஆளுமைப் பண்புகளாக அமைந்தன.

"ஊக்கல்" என்பது மனித செயற்பாட்டை விசைப்படுத்துகின்ற கருவி என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். இக்கருத்தினைத் தனது வகுப்பறைக்குள்ளும், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்களிடையே வலுப்படுத்தினார். இவரது ஊக்கல் செயற்பாட்டின் வெற்றிக்கு கல்வியியற் கல்லூரியின் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களே குறிகாட்டிகளாவர்.

1994ஆம் ஆண்டு இடப்பெயர்வு யாழ். மாவட்டத்தவர்களுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு கறுப்புத்துயரமாகும். அப்போது கல்லூரியின் நிர்வாகத்தினர் பரீட்சை நடாத்துவதற்கு அங்கு கற்றுக்கொண்டிருந்த மாணவர்கள் தமது உறவுகளின் நிலையென்ன என்ற பரிதவிப்பில் இருந்தமையால் மறுப்புத்தெரிவித்தனர். அந்தத் துயரமான வேளையில் மாணவர்களுக்கு ஆதரவாக அவர்களுடையதுயரத்தை அல்லது பரிதவிப்பை உணர்ந்து பரீட்சையைப் பிற்போடுவதற்கு ஆதரவாக நின்ற விரிவுரையாளர்களில் ஒருவராகத் தனது இன்னோர் ஆளுமைப் பண்பான மனிதநேயப் பண்பை மிளிர வைத்தார் என்பதை மறக்க முடியாது.

மேலும் எல்லோரும் ஆசிரியர்கள்தான். ஆனால், மாணவர்கள் மனதில் பதிவை ஏற்படுத்தியவர்கள் ஒருசில ஆசிரியர்களே. அவ்வகையில் மாணவர்கள் எல்லோர் மனதிலும் பதிந்த பெருமைக்குரியவர் எமது ஆசான் எனக் கூறுவது உண்மைக்குப் புறம்பாகாது.

ஒரு மனிதனது ஆராயும்திறன் அவனது அறிவைத்தூண்டும்; துலங்கவைக்கும்;

ஆழமாக்கும் என்பது தெளிவான உண்மையாகும். அந்தவகையில் மாணவர்களது தேடலை எப்போதுமே ஊக்குவிப்பவராகத் திகழ்ந்தவர். இன்றும் அதை ஊக்குவிப்பதாகவே அவருடைய விரிவுரையாளர்கள் கூட்டங்கள் இருக்கின்றன. அன்று நான் வவுனியா கல்வியியற் கல்லூரியில் விஞ்ஞானபாடத்துறையில் கற்றபோதும் என்னை "ஞானப்பழம்" என்றே குறிப்பிடுவார். அவர் கூறிய வார்த்தை இந்து சமய விரிவுரையாளராக என்னை அவர் முன் நிறுத்தியது. அது "குருபார்வை" அல்லது "பெரியவர்களின் உள்ளார்ந்த வார்த்தைக்கு" அர்த்தம் இது போலும் என இன்று என்னை எண்ணத்தூண்டியது. அவருடைய தலைமையின் கீழ் ஒரு விரிவுரையாளராகப் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

தனது தலைமையின் கீழ் கடமை புரியும் சகலரையும் வேறுபாடு, பாரபட்சம் காட்டாது ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என நோக்கும் தன்மை அவரது மனிதநேயத்தலைமைத்துவ அணுகுமுறையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து எல்லோரது கருத்துக்களையும் உள்வாங்கி நன்மை தீமைகள், நியாயங்களை சீர்தூக்கிப் பார்த்து முடிவெடுக்கும் திறமை அவர் ஜனநாயகத்தின் மீது கொண்டுள்ள அசையாத நம்பிக்கையையும் சிறந்த தலைமைத்துவப் பாங்கினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய யாரால் என்ன காரியம் முடியும் என்பதை அறியும் மதிநுட்பமும் அக்காரியத்தை அவர்களிடமே கொடுத்து நிறைவேற்றும் நுண்ணிய ஆற்றலும் அவருடைய ஆளுமையின் இன்னோர் மிகச்சிறந்த வெளிப்பாடாக அமைந்திருப்பது கண்கூடு. இது அவருடைய நிர்வாக இயந்திரத்தை இலகுபடுத்தியதுடன் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் உதவியது எனலாம்.

உலகில் மாற்றம் என்ற சொல்லைத்தவிர அனைத்தும் மாறிக்கொண்டே இருப்பவை. அந்தவகையில் நாட்டின் தேவைக்கும் காலத்தின் போக்கிற்கும் ஏற்ப கல்வி, கலைத்திட்டம் அமைய வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடற்றவர். விரிவுரையாளர் கூட்டத்தில் கருத்தேற்றக் கற்பித்தலைத் தவிர்ப்பதற்கும் தேடலுடன் கூடிய சுய கற்றலுக்குரிய வழிகாட்டலை வழங்குவதற்கும் ஊக்கப்படுத்தினார்; வலியுறுத்தினார். இதனூடாக வெளியேறும் மாணவ ஆசிரியர்கள் காலத்தின் போக்குக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கிக் கற்பிக்க வேண்டும் என்ற தனது ஆழ்ந்த விருப்பினூடாக தனது சமூக பொறுப்புணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றார்.

மனிதநேய அணுகுமுறையை முகாமைத்துவத்தில் புகுத்தி வெற்றிபெற்ற நிர்வாகியாக ஒரு புரட்சியை ஏற்படுத்தித் தனது ஆளுமையின் இன்னோர் பரிமாணத்தை வெளிப்படுத்தி நின்றவர். இன்றைய மணி விழா நாயகராகிய எமது பீடாதிபதியானவர். விரிவுரையாளராகவும் ஒரு தலைசிறந்த நிர்வாகியாகவும் தனது பல்வேறு ஆளுமைப்பண்புகளைப் பரிமளிக்கச் செய்த ஆளுமைமிக்க உத்தமசீலர் என்றால் மிகையாகாது.

# வடபுல தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஒளி விளக்கு பீடாதிபதி S.K. யோகநாதனின் பசுமை நிறைந்த நினைவுகள்.



மாணவன் திரு. நடேசபிள்ளை ஞானவேல்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



சிரித்த முகமும், செந்தண்மை மிக்க வாழ்வும் செயற்றிறனும் கொண்ட எனது ஆசானும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியுமாகிய திரு. S.K.யோகநாதன் அவர்களது மணி விழா மலரில் அவர்கள் பற்றிய நினைவலைகளை மீட்பதில் மட்டற்ற மகிழ்வெய்துகின்றேன்.

1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அதன் முதலாவது அணி மாணவனாகச் சென்றபோது விரிவுரையாளராக யோகநாதன் அவர்களைக் கண்டது தொட்டு இன்று யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகத் திகழ்ந்து கொண்டு இருக்கின்ற இக் காலகட்டம் வரையிலான சுமார் இருபது வருடங்களில், ஆசிரியமாணவனாகவும், ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், செயற்றிட்ட அதிகாரியாகவும், ஆசிரிய கல்வியியலாளராகவும் அவருடன் பழக வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன்.

இன்று இலங்கையின் தமிழ்மொழிமூலமான ஆசிரிய ஆளணியில் தேசிய கல்வியியற் கல்லூரிகளினால் உருவாக்கப்பட்ட ஆசிரியர்கள்45% இடத்தினைப் பெற்றுள்ளனர். அந்தவகையில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆசிரிய பயிற்சியில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துவிட்டன. ஆனால் 1993ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்மொழிமூலமான தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்பது அறியப்படாத ஒன்றாகவே அமைந்தது.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ இராஜமனோகரி புலேந்திரன் அவர்களது பெரு முயற்சியால் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகிய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வடகிழக்கின் முதலாவது தமிழ் தேசிய கல்வியியற் கல்லூரியாக அமைந்தது. இங்கு நியமிக்கப்பட்ட தமிழ்மொழிமூலமான 7 விரிவுரையாளர்களுள் ஒருவராக திரு. S.K.யோகநாதன் அவர்கள் விளங்கினார்.

**சிறந்த விரிவுரையாளர்**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது அணிக்குரிய ஆசிரிய மாணவர்கள் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவர்களில் சிலர் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பதிவுசெய்யப்பட்டு அவர்களுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியிருந்தன. ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், உடற்கல்வி ஆகிய பாடநெறிகள் முதலாம் அணியில் இடம் பெற்றன. திரு. யோகநாதன் அவர்கள் அனைத்துத் துறையினருக்கும் கல்வித்தத்துவம், கல்வி முகாமைத்துவம் ஆகிய பாடங்களையும் ஆரம்பக்கல்வி பாடநெறிக்கு சுற்றாடல்சார்

செயற்பாடுகள் என்ற பாடத்தையும் கற்பித்தார்.

ஆசிரிய மாணவர்கள் வீட்டுச் சூழலில் இருந்து கல்லூரியின் செயற்பாடுகளுக்கேற்ப இசைவாக்கமடையாத் தன்மை, உடற்பயிற்சி என்பவற்றின் காரணமாக வகுப்பறைகளில் சோர்ந்து இருந்த போதிலும் இவரின் விரிவுரையாற்றும் தனித்துவமான பாணியால் வகுப்பே கலகலப்பாக மகிழ்வுடன் மாற்றமடையும். இன்று முக்கியத்துவம் பெறும் மகிழ்ச்சிகரமான கற்பித்தல் (Joyful Learning), மாணவர் மையக்கற்பித்தல்(Student Teaching Centered) என்பன இவரின் விரிவுரைகளில் கலந்து இருப்பதை நான் ஆசிரியராகப் பாடசாலைக்கு சென்று கற்பிக்கத் தொடங்கிய போது அறிந்து கொண்டேன்.

போதிய விரிவுரையாளர்கள் இன்மையால் எமது விரிவுரைகளின் பெருமளவான நேரத்தை இவரே நிறைவு செய்வார். தனது துறைசார்ந்த பாடங்கள் இல்லாவிட்டாலும் ஆசிரிய மாணவர்களில் குறித்த பாடத்தில் ஓரளவு தேர்ச்சியுள்ள ஆசிரிய மாணவர்களை இனங்கண்டு கற்பிக்கவேண்டிய பாட அலகுகளை வழங்கி அவர்களை கற்பிக்க விட்டு அவர்களது கற்பித்தலை மேற்பார்வை செய்து வழிகாட்டுவார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக விளங்கியபோதும் தனது வேலைப்பளுக்களுக்கு மத்தியில் விரிவுரையாளர்கள் வருகை தராமல் இருக்கின்ற வகுப்பு மாணவர்களை அழைத்து அவர்களுக்குப் பாடசாலை முகாமைத்துவம், ஆசிரியரின் நடிபங்கு சுற்றாடல் சார் செயற்பாடுகள், முதலான விடயங்களைக் கற்பித்து அவர்களது வாண்மைத்துவ விருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவார்.

**இறை அன்பர்**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்ப கால இந்துமா மன்ற பொறுப்பு விரிவுரையாளராகக் கடமையாற்றிய யோகநாதன் சேர் அவர்கள் பாலை மரத்தின் கீழ் சிறிய ஓலைக்கொட்டகைக்குள் இருந்த கண்ணகி அம்மன் ஆலயத்தைப் பெரிய ஆலயமாக அமைத்து அதன் காண்டாமணி ஓசை பூந்தோட்டப் பிரதேசமெங்கும் கேட்கும் அளவுக்குச் சிறப்பித்த பெருமை இவரையே சாரும்.

யாழப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வித்தக விநாயகரது இரண்டாவது மஹா கும்பாபிஷேகத்தைத் தனது காலப்பகுதியிலேயே நிறைவேற்ற வேண்டும் என இறை அன்பு கொண்டு ஆலயத்தைப் புதுப்பித்து கடந்த ஆண்டு தம்பதியினராகத் தலைமை வகித்து வித்தக விநாயகரது இரண்டாவது மஹா கும்பாபிஷேகத்தை நிறைவு செய்தார்.

இலங்கையின் புராதன ஈஸ்வரங்களாகிய திருக்கேதீச்சரம், நகுலேஸ்வரம் ஆகிய ஆலயங்களின் மகோற்சவங்களின் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபயதினத்தில் எத்தகைய இடர்களுக்கு மத்தியிலும் அவ் உபயத்தைப் பக்தி பூர்வமாக ஏற்று நமது கல்லூரி சமூகத்தினரின் நலனுக்காக இறை ஆசி பெறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கல்லூரியின் அயற்சூழலில் காணப்படும் ஆலயங்களின் தெய்வீக தரிசனத்தை நாடிக் கொள்வதும் யோகநாதன் சேரின் இயல்பாக இருந்தது. வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய பொங்கல் தினம், கோப்பாய் பாலனை கண்ணகி அம்மன் ஆலய பங்குனித்திங்கள் பொங்கல், கோப்பாய் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் கோயில், நல்லூர் கந்தசுவாமி ஆலயம் என்பவற்றில்முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களை அழைத்துச் சென்று தெய்வீக தரிசனத்துக்காக நாடிநிற்பார்.

**சிறந்த நிர்வாகி**

திரு. யோகநாதன் அவர்கள் வவுனியா கல்வியற் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளர்,

Dean, விரிவுரை இணைப்பாளர், உபபீடாதிபதி ஆகிய நிர்வாக நிலைகளையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மேலதிக பீடாதிபதியாகவும், பீடாதிபதியாகவும் விளங்கிய காலங்களில் தனது பதவி நிலைகளுக்குரிய பொறுப்புக்களைத் திறம்பட மேற் கொண்ட சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்துள்ளார்.

நான் தேசிய கல்வி நிறுவனத்தில் இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆசிரிய கல்வியியலாளராக நியமனம் பெற்று அவரின் கீழ் விரிவுரையாளராகக் கடமையாற்றிய போது அவரது நிர்வாகத் திறமைகளைக் கண்டு அவர் பற்றிய எனது முன்னைய மனப்பாங்குகளை மாற்றிக் கொண்டேன். தனது அலுவலக அறையில் நீண்ட நேரம் இருக்காது கல்லூரியின் வளாகமெங்கும் அவரது கால்தடம் பதிக்காத இடமே இல்லை என்று கூறும் அளவுக்கு எங்கும் எப்போதும் பிரசன்னமாயிருப்பார்.

நான் ஒரு சில கல்லூரிகளில் விரிவுரை யாளராகவும், வருகை விரிவுரையாளராகவும் முன்னர் கடமையாற்றியுள்ளேன். அக்கல்லூரி களில் காணமுடியாத ஒரு கவின் நிலையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் காணக்கூடியதாக அமைந்துள்ளது. நேர்த்தியான பூங்கன்றுகள், கண்ணைக்கவரும் வண்ணச் சிலைகள் என்ற ஒழுங்கில் கல்லூரியை அழகுபடுத்திய பெருமை அவரையே சாரும்.

அனைத்து உதவிகளுக்கும் கல்வி அமைச்சை எதிர்பாராது கல்லூரி சார்பான நலன்விரும்பிகள், முகிழ் நிலை ஆசிரியர்களின் பெற்றோர்கள் என்போரிடமிருந்து கிடைக்கும் உதவிகள் மூலம் கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்ய வழிவகுத்தார். ஏனைய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வருகை தருகின்ற பீடாதிபதிகள் "எங்களால் இவற்றை செய்யமுடியவில்லை. இவற்றை யோகநாதன் எவ்வாறு செய்கின்றார்" என ஆச்சரியப்படும் அளவுக்கு இவரது நிர்வாகத்திறமை காணப்படுவதை என்னால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இன்றைய பொருட்களின் விலை உயர்வால் வீடுகளிலேயே தரமான உணவுகளை உண்ண முடியாத நிலையில் கல்லூரியில் உள்ள முகிழ் நிலை ஆசிரிய மாணவர்களுக்கு அவர்களது விருப்பத்திற்கேற்ப தரமான உணவுகளை வழங்குவதும் அது போன்ற தரமான உணவுகளை கட்டுறுப் பயில்வுக் காலத்தில் உண்ணமுடியவில்லை என மாணவர்கள் கூறுவதன் மூலம் மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்க வேண்டும் என சேர் செயற்பட்டதை அவதானிக்க முடிகின்றது.

**மனித நேயம் மிக்கவர்**

யோகநாதன் சேர் வகித்த பல பதவிகளுக்கு அப்பால் ஒரு தந்தையாக, அண்ணனாக, நண்பனாகத் தன்னை நாடி வருபவர்களோடு பழகி சிறந்த மனிதநேயம் மிக்கவராகச் செயற்பட்டதை எனது கண்களால் காணக் கூடியதாக அமைந்தது. வவுனியாவில் 2002 ஆம் ஆண்டு வரையும் பல பாஸ் நடைமுறைகள் காணப்பட்டன. இந் நடைமுறைகளால் பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவர்களுக்குத் தானே பாஸைப் பிணை நின்று அவர்களது பாதுகாப்பிற்கு வழிவகுத்தார்.

நான் 1994 ஆம் ஆண்டில் முதலாம் வருடத்தில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கும் போது விடுமுறைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள எனது வீட்டுக்கு அன்று நிலவிய பாஸ், பிணைகாரணமாக வருகை தராது, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விடுதியிலே தங்குவேன். அப்போது கல்லூரியின் இரண்டாம், மூன்றாம் தொகுதிக் கட்டட வேலைகள் முனைப்பாக இடம் பெற்றுக் கொண்டு இருந்தன. யோகநாதன் சேர் என்னை அழைத்து கல்லூரிவேலைகளை மேற்கொண்டு இருந்த சாமுவேல் அன்சன்ஸ் நிறுவனத்தின் பிரதான பொறியியலாளர் திரு. வ. மூர்த்தி அவர்களோடு உரையாடி வேலை வாய்ப்பையும் பெற்றுத்தந்தார். அது மாத்திரமல்லாது நான் விடுமுறைக் காலத்தில் நலத்துடன்

இருக்கின்றேனா என்பதை அவரும் அவரது பாரியார் திருமதி. பத்மராணி யோகநாதன் அவர்களும் கண்காணித்து வந்தனர்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பாரிய இடப்பெயர்வு காரணமாக ஆசிரிய பயிலுநனர்கள் தமது குடும்பத்தாரது நிலை அறியாது மிக்க துயரத்துடன் இருந்த வேளை ஒவ்வொரு யாழ்ப்பாண மாணவனையும் தனிப்பட்ட முறையில் அணுகி அவர்களது குடும்பத்தாரது நிலைபற்றி அறிய சேர் எடுத்த முயற்சிகள் பற்பல.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சேர் பீடாதிபதியாக விளங்கியபோது; வெளிமாவட்ட மாணவர்கள் கப்பலில் பயணம் செய்வதற்கு வேண்டிய பாஸ் அனுமதிகளை நீண்ட நேரம் பாஸ் வழங்கும் பாதுகாப்பு அலுவலகத்தில் காத்திருந்து பெற்று; அவர்களது கல்வி நடவடிக்கையைத் தொடரக் கண்ணியம் மிக்க தந்தைபோல செயற்பட்டதை; அம்மாணவர்கள் இன்று நன்நிலையில் இருந்து சேர் பற்றிக் கூறும் போது எனது உள்ளம் பூரிக்கின்றது.

**தொலைநோக்குச் சிந்தனை**

யோகநாதன் சேர் எதனையும் முன் பின் நன்கு ஆராய்ந்து எதிர்கால இலக்குகளுக்கேற்ப செயற்படுவார். அவரது மாணவர்களாகிய நாம் எமது ஆசிரிய நியமனம் கிடைத்த பின்னரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சென்றால் சேரையும் அவரது குடும்பத்தாரையும் சந்திக்காமல் வந்த நாட்களே இல்லை என்று கூறலாம். அவ்வாறு அவரை சந்திக்கும் போதெல்லாம் எமது உயர்கல்வி நாட்டங்கள் பற்றி அடிக்கடி விசாரிப்பார். அதைச்செய், இதைச் செய் எனக் கூறிக்கொண்டே இருப்பார்.

எமது சக நண்பர்கள் தமது பாடசாலைகளில் இடம் பெறுகின்ற நிகழ்வுகளில் இவரையும் விருந்தினராக அழைத்து அவரது தொலைநோக்கு சிந்தனைகளைத் தமது பாடசாலை மாணவர்களுக்கு வழங்க வாய்ப்பளிப்பார். நான் 2004ஆம் ஆண்டு வ/பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தின் பொறுப்பாசிரியராக விளங்கிய போது அம் மன்றத்தால் நடாத்தப்பட்ட வருடாந்த உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக இவரை வரவேற்று அவரது அரிய தொலைநோக்குச் சிந்தனைகளை உயர்தர மாணவர்கள் கேட்டுப் பயன்பெற வழி சமைத்தேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர்களின் தொடர் கல்வி சார்பாக எடுத்த நடவடிக்கைகள் அவரது தொலைநோக்குச் சிந்தனைக்கு எடுத்துக் காட்டாகும். பற்பல காரணங்களால் தடைப்பட்டு இருந்த தேசிய கல்வி நிறுவனத்தின் கல்விமாணிபட்டப் பாடநெறி கிரமமாக நடைபெற வழிவகுத்ததோடு, தமிழ் மொழி மூலம் இரண்டு இணைப்பு நிலையங்களையும், ஆங்கில மொழிமூலம் ஒரு இணைப்பு நிலையத்தையும் ஏற்படுத்தி ஏக காலத்தில் 210 ஆசிரியர்கள் கல்விமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு வழி வகுத்தார். ஆசிரியர்களின் உயர் கல்விசார் தேடல்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப அதிகரிக்கலாயின. அதற்கேற்ப ஆங்கில மொழி மூலமான கல்வி முதுமாணிகற்கை நெறியினை ஆரம்பித்ததோடு அதன் இணைப்பாளராகவும் பீடாதிபதி அவர்களே செயற்பட்டமை அவரது தொலைநோக்குச் சிந்தனைக்கு மற்று மொரு சான்றாகும்.

**நிறைவு**

யோகநாதன் சேர் அவர்களது கல்வியியற் கல்லூரி சேவையில் அவர் இருபது ஆண்டுகளை நிறைவு செய்கின்ற இவ்வேளையில் அவர் பத்தொன்பது மாணவ அணிகளைப் பயிற்றுவித்த பெருமை அவரையே சாரும். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இவரது காலத்தில் (1994 - 2004) தமிழ் மொழி மூலம் 1580

ஆசிரிய பயிலுநர்களும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இவரது காலத்தில் (2005-2012) 1593 ஆசிரிய பயிலுநர்களுமாக மொத்தம் 3173ஆசிரிய பயிலுநர்கள் இவரால் வழிகாட்டப்பட்டுள்ளனர். அவரது மாணவர்கள் பலர் நாடளாவியரீதியில், தேசிய, மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக விளங்குவதோடு அவர்களில் பலர் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை, இலங்கை அதிபர் சேவை என்பவற்றின் அலுவலர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். தேசிய கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரி, உதவிக் கல்விப்பணிப்பாளர் (இணைப்பு), ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய மத்திய நிலைய ஆலோசனை வழிகாட்டிகள், கல்விஅமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் வலயக்கல்வி அலுவலகம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவகம், என்பவற்றின் வளவாளர்களாகச் செயற்படுவது சேர் காட்டிய நல் வழிகாட்டல்களே காரணமாக அமைகின்றன.

எமது தமிழர் பாரம்பரியத்தில் 60 வயது ஒரு காலச் சுற்று. ஆகவே 60 வயதை ஒருவர் பூர்த்தி செய்தால் அதனை "ஷஷ்டியப்பத பூர்த்தி" எனக் கூறி அடுத்த சுற்றுக்குத் தயாராவதற்கு வேண்டிய நீண்ட ஆயுளை வேண்டி அவர்தம் உறவினர்கள் இறையருளை நாடி நிற்பர். தமிழகத்தில் மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயது வரம் அருளிய திருக்கடவூர்த் திருத்தலத்தில் இத்தகைய "ஷஷ்டியப்பதபூர்த்தி" பூசைகளை நிறைவேற்றுவர். பிள்ளைகள் 60 வயது ஆன தமது பெற்றோர்களுக்கு, அவர்களுக்கு முன்னர் நடந்த திருமணத்தை மீண்டும் ஒத்திகை பார்ப்பது போல் அறுபதாவது திருமணத்தை நடாத்தி மகிழும் மரபும் நமது தமிழர் பாரம்பரியத்தில் காலம் காலமாக இருந்து வந்த தொன்று. இத்தகைய மரபு வழியில்

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கு அமைய மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து அறுபதாவது வயதில் மணிவிழாவைக் கொண்டாடுகின்ற எமது பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்கள் தனது மனைவி பிள்ளைகளுடன் சிறப்புடன் வாழ்ந்து சமூகத்துக்குச் சேவையாற்றும் வகையில் நல்ல ஆரோக்கியத்தோடு பல்லாண்டு காலம் வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

# கல்லூரிக் களத்தில்...
# ஆசிரியர் விழுமியக் கோவையும் எங்கள் பீடாதிபதியும்



M.E. பப்சி மரியதாசன்
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



கடந்து செல்லும் வாழ்வு
கருத்தாய் அமைதல் வேண்டும்
கை கூடினாலே கார்மேகம் சூழும்
மாரி மழை பொழியும்
பாரில் பயன் பெருகும்
நிலை போல வாழ்வும்
நீடு புகழ் கொள்ள,
பூத்தார் ஒரு முதல்வர்
கல்லூரி வாழ...
காலத்தை வென்ற கமலம்
கடைந்தெடுத்துக் கொணர்ந்த
கற்பக தரு ஒன்றை
கல்லூரி காக்க
காவலனாய் ஆக்கி விடைபெற்றார் அவரும்
யோகம் நிலைத்திடவே...

எண் சாண் உடம்பதனில்
சிரசு பிரதானம் எனில்
யாழின் கண் தேசிய கல்விக் கல்லூரி
ஏற்றம் பெற உழைத்த
பெருமகனார் வாழ்வும்
ஆசிரியர் எமக்கு
ஆன்ற பொருள் தருமே...

ஆசிரிய விழுமியங்கள்
அனைத்தும் மிகப் பெற்றார்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

அன்பு, இரக்கம், கருணை
சிந்தனை, சொல், செயல்
எனப்பல விழுமியங்கள்
கூட்டாகச் சேர்ந்த கலவை வகிபாகம்
ஆசிரியர்க்கமைந்த தெனில்...
அதை நாங்கள் கண்டோம்
பீடாதிபதியவரின் வாழ்வில்...
ஒழுக்கமுடன் உடற்பயிற்சி
பாங்குடனே உடைச்சுத்தம்
கண்ணியமாய்த் தொடர்பாடல்,
கருத்தான வேலைப்பழக்கம்,
பெருமையுடன் தன் புகழை,
பறை சாற்றாத் தன்மையதும்,
எளிமையுடன் அனைவரையும்
சமமாக மதித்தல்
மனிதர்கள் மற்றும் மிருகங்களுடனும்
மாற்றமில்லா மதிப்பு
இரக்கத்துடன் உதவி
ஆசிரியர் தம் வாழ்வு
அமைய வேண்டும் இப்படியே....
அமைந்த நிலை நாம் கண்டோம்
பீடாதிபதியவரின் வாழ்வில்........

பெற்றோரும் பிள்ளைகளும்
தந்தை எனக்காணும்
பாசமிகு ஆசான்
நம்பிக்கை பிறழா நற்செயல்கள் புரிய

ஆண் இல்லை. பெண் இல்லை
அனைத்தும் இங்கு சமமே
சமயம் இல்லை சாதி இல்லை
எல்லோரும் ஒன்றே
சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல நின்று
காக்கும் கரம் கொண்டு
பாதுகாப்பதனை வழங்க
பயிலுநரும் தயங்கார்
தம் பிரச்சனைகள் சொல்வார்
தந்தை என நாடி தம் கதை கூறி
உள நலனும் பெற்றிடுவார்
ஊக்கமுடன் செயற்படுவார்
பெற்றெடுத்த பிள்ளைகளோ மூன்றெனினும்
தத்தெடுத்த பிள்ளைகளோ ஏராளம்
நாடிவரும் மாணவர்க்கு
நல்லதோர் தந்தையாய்
ஆசிரிய வாழ்வை நாம் கண்டோம்
பீடாதிபதியவரின் வாழ்வில்....

ஆசிரியர் என்றும் அறிவை வழங்கிடுவார்
சிறந்த மனப்பாங்கை விருத்தி செய்திடுவார்
திறமைகள் பெருக களம் அமைத்துக் கொடுப்பார்
ஆடல் என்ன? பாடல் என்ன?
அனைத்திற்கும் எங்கள் அன்னையாம் கல்லூரி.
பயிலுநர்கள் எல்லாம் பாங்குடனே கூடி
தத்தமது திறமைகளை அரங்கேற்றிடுவார்
அறிவை வளர்த்தெடுக்கும் நினைவுப்பேருரைகள்,
திறனை வளர்த்தெடுக்க ஆங்கில தமிழ் போட்டிகள்
உடற்தகமை பெற்றிடவே
உகந்த விளையாட்டுக்கள்
பாரம்பரியம் பேணிடவும்
மறந்ததில்லை என்றும்
நிலைபெற்ற ஆன்மீகம் நீக்கமற நிறைய
தமிழர் தம் சடங்குகளை
சரியாக நிறைவேற்றி
சுய கற்கை மூலம் அறிவு, திறன் பேணி
பயிலுநரின் சிந்தனைகள் சீர் பெறவே
கல்விச்சுற்றுலாக்கள், களப்பயணங்கள்
அனுபவங்கள் ஏராளம்

ஏற்படுத்திக் கொடுக்கும்
சீரிய மனப்பாங்கை
சார்புடனே கண்டோம் நாம்
பீடாதிபதியவரின் வாழ்வில்...

படைப்பாற்றல் மிக்கவராய்
வழிகாட்டுநராய் நல் ஆலோசகனுமாய்...
ஆசிரியர் இருந்திட்டால்
அதுவே மாணவர்க்கு யோகம் எனில்,
யாழ். கல்விக் கல்லூரி களம் கண்டபயிலுநரும்
ஆக்கத்திறனுடனே அற்புதமாய் செயற்படுவர்
சூழல் பாதுகாப்பு என்றும் உயிர்நாடி
சுற்றாடல் சுத்தத்துடன்
கவின் நிலையாய் வளாகமதை
கட்டிக் காத்திடவே
கல்லூரி வளம் பெறவே
காரியங்கள் செய்வதுவும்
செயற்றிட்டம் பல புரிந்து,
பிள்ளைகள் தம் பிரச்சனையைச்
செவிமடுத்து சீர் சொல்லி
ஆங்காங்கே வழி நடத்தி
பெற்றோருடனேயும் நல்லுறவைப்பேணி
பெருமை மிகு ஆசானின்
செயல் நிலைகள் பல கண்டோம்
பீடாதிபதியவரின் வாழ்வில்..........

ஆசிரியர் மாணவரைக் கணிப்பிட்டு
மதிப்பிடுவார்
கடமையொன்று இதுவாகும்
அங்கேயே வரும் போது
அத்தனையும் விழிவழியே, செவிவழியே
உள்வாங்கிச் சேகரிக்கும்
அவதானக் குறிப்புகளை அரங்கேற்றும் போது
ஆச்சரியம் காத்திருக்கும்
பயிலுநரை மதிப்பிடுதல்
பாங்காகக் குறித்தெடுத்தல்
பலரறியக் கூறிடுதல்
பயிற்சிகளை வழங்கிப் பல
மாற்றங்களைச் செய்திடுதல்

தலை சிறந்த மாணவனைத்
தனித்துக் கௌரவித்தல்
மதிப்பீட்டுப் பணியினையும் மாண்புடனே
செய்த நிலை நாம் கண்டோம்
பீடாதிபதியவரின் வாழ்வில்.........
தொழிற்திறமை பெருகிடவும்
உத்தியோக உயர்தரத்தைப் பேணிடவும்
சிறப்புறு கல்வித் தகமைகளைக் கூட்டிடவும்
செய் தொழில்சார் அபிமானம் பெருகிடவும்
தன்னலனும் தற்சார்பும் மிகவிடாது
சமூகத்தின் நிலை வாழ்வு பெருகிடவும்
தேர்ந்த பல கருமங்கள்
அறிவுத்தரம் சமைத்து நல்
ஆசானாய் வழிகாட்டும்
அற்புதத்தை நாம் கண்டோம்
பீடாதிபதியவரின் வாழ்வில்..........
முகாமையின் பொறுப்பாக
நிர்வாகம் பல புரிந்து
கல்விசார் கொள்கைகளைக்
கண்ணியமாய் அரங்கேற்றி
கல்லூரி கீர்த்தி பெற
கட்டுப்பாட்டுடனே உழைத்திட்டார்
சமூகம் சார் விழிப்புணர்வும்
சரியான பாதையிலே சளைக்காமல் நடந்துவிடும்
நிலையான நோக்கும்
கை வரப் பெற்றதனால்
விருட்சமாய் உயர்ந்திட்டார்
கௌரவமும் பெற்றிட்டார்
காட்டமான சொற்பேச்சை
காலை வேளை கேட்போம்
கனதியாகும் மனநிலையில்
கல்லூரி கலங்கும்
சில நொடிப்பொழுதில் நீங்கும்
நீண்ட நகைச்சுவையால்
நிம்மதியாய் முகம் மலர
நினைவு பல பெருக
நீங்கி விடும் கூட்டம்
நிலை பெறுமே மகிழ்வு
கல்லூரிக் காலம் கருத்துடனே கழிய
பயிலுநர்கள் பரவசத்தில்
பேசிடுவார் பலதும்

எந்த ஒரு தனிநபரின் உயர்விற்கும் பின்னால்
பெண்ணொருத்தி இருப்பாள்
பேசிடுவர் முன்னோர்
பீடாதிபதியவர்கள் உயர்வுபெற
காரணமாய் வீட்டின் அகலெனவே மனைவி
வாய்த்திட்ட வேளை
வரமெனவே பெற்றிட்ட பிள்ளைகளும்
வளம் பெருக வாழ்கின்றார்
வையமதில் கண்டோம்
பிறர்க்காற்றும் பேருதவி
பிற்போதில் எமக்கு
பேராசி மழையாய் இறைபொழியும்
பீடாதிபதியவரும் நாளும்
நிம்மதியில் நிலை பெற்று வாழ்ந்திடவே
வாழ்த்துகிறோம் நாமும்.



# கல்லூரி(க்) களித்தவை ........

பா. பாலகணேசன்
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



"உள்ளுவதெல்லாம் உயர்வதுள்ளல்" என்பார்கள் ஆன்றோர்கள். உலகம் நிலைக்கும்வரை தம் பெயர் நிலைநிறுத்தியவர்கள் எல்லோரும் செயற்கரியன செய்தவர்கள் ஆவார்கள். தமது சமூகத்திற்கு தாம் வாழ்ந்த காலத்தில் செய்த நன்மைகளே அவர் இவ்வுலகை நீத்த பின்னும் அவரை அச்சமுதாயத்தில் வாழ வைக்கின்றது. அவ்வாறான பெரியோர்கள் தாம் நினைத்த காரியத்தைச் செய்யும் போது அனுபவிக்கின்ற துன்பங்களும் துயரங்களும் அவர்கள் மனத்துடனே புதைந்தும் விடுகின்றன. இந் நிலையைப் பேச்சுமொழியில் சொல்லப்போனால், குறித்த பெரியோர்கள் அரிய செயல்களைச் செய்ய முனையும் போது அனுபவிக்கும் ஏச்சுக்களும் பேச்சுக்களும் , இன்னல்களும் இடைஞ்சல்களும் ஏராளம். அவைகள் ஒரு போதும் அச் செயல்களைச் செய்பவரின் மனத்தைக் காயப்படுத்தி விடுவதில்லை . அவ்வாறு காயப்பட்டு விட அவர்கள் எம்மைப்போன்று சாதாரண மனிதர்களும் அல்ல. அவர்கள் உலகில் சாதிக்கப் பிறந்தவர்கள். இதனால் இடையில் வரும் துன்பங்களை துச்சமென மதித்து தமது வழியில் சென்று நினைத்த காரியத்தை நிகழ்த்தி முடித்து விடுவார்கள்.

"கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லை எனில், கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாது".என்பார் அறிஞர் அண்ணா. இக் கூற்றின்வழிமுயன்றவர்கள் தான் உலகில்தாம்நினைத்தகாரியத்தைசாதித்தவர்கள். அவர்கள் தாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் தான் சமூகத்திற்கு ஒளிபாய்ச்சுகின்றனர். இவ்வாறான மகத்தான மனிதர்கள் பலருள் இக் கட்டுரை ஆராய விளைவது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதி உயர்திரு. S.K. யோகநாதன் அவர்களை ஆகும். எல்லோராலும் அன்பாக S. K. Y. என அன்பாக அழைக்கப்படும் பீடாதிபதி அப்படி என்ன செய்யற்கரியன செய்து விட்டார்! சும்மா வெறுமனே வாழ்த்துக் கவி பாடுவதுதான் இக்கட்டுரையின் நோக்கமா? இல்லை ஒவ்வொரு மனிதனும் உயர்ந்த எண்ணங்களுடன் தன்னை அர்ப்பணித்து சமூகத்திற்குச் செய்யும் அளப்பரிய சேவைகள் அவர் அவ்விடத்தை விட்டு நீங்கியவுடன் நீர்மேல் குமிழிபோல இன்றைய உலகு மறந்து விடுகின்றது. தன்னைப் பற்றி, தன் புகழைப்பற்றி அலட்டிக் கொள்ளாத அப் பெரியோர்களும், தன் உள்ளத்து உணர்வுகளை மனத்தினுள் உறைய வைத்துவிட்டு அமைதியாகுகின்றனர். அத்துடன் அவர் செய்த அரிய செயல்களும் பின்னாளில் மறக்கப்பட்டு விடுகின்றன. துரதிஷ்ட வசமாக அவருக்குப் பின் நாளில் ஏச்சுக்கள் பேச்சுக்கள் கூட , கிடைத்து விடுகின்றன.

இத்தகைய நிலையில் அரும்பணியாற்றி யோர்கள் செய்த செயற்கரிய செயலைக் கௌர விப்பதும், அவரது சேவையை நன்றியோடு நினைவு கூருவதும், அத்தகையவரை ஏனையோருக்கு முன்மாதிரியாக எடுத்துக் காட்டுவதுமே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். எளிமையான தோற்றம், கள்ளம் கபடமற்ற புன்முறுவல் இயற்கை அன்னை கொடுத்த எழில்மிகு தோற்றம், நகைச்சுவையான

பேச்சு, கேட்போரை சுண்டிஇழுக்கும் நளின வார்த்தைகள் கொண்ட சொல்லாடல், ஆதரவு தேடிவரும் அனைத்து இதயங்களையும் வென்றெடுக்கும் பேராண்மை, உயர்ந்த மனித நேயம், அனுபவக் கோடுகள் நிறைந்த அழகிய வனப்பு மிக்க வதனம். இவ்வாறு எங்கட பிரசிடென்டை உங்களுக்கு அறிமுகப்படுத்தி விடலாம். அவர் அப்படி என்ன செய்து விட்டார் நீங்கள் இப்படிக் கலாய்க்கிறீங்களே! என்றால்...

இராச வீதியில் இருந்து கல்லூரிக்குத் திரும்புகையில் இரவிலும் கல்லூரியை வழிப்படுத்தி நிற்கும். கேலிஸ் நிறுவனத்தில் பணியாற்றிய எமது கல்லூரியின் ஆரம்பக் கல்வி முகிழ்நிலை ஆசிரியரின் அன்புச் சகோதரன் பீடாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்கி அதை செய்து தந்தார். அப்படியே உங்களது பயணத்தைத் தொடர்ந்தீர்கள் எனின், மிகப்பிரமாண்டமாக அமைக்கப்பட்ட பெயர்ப்பலகை மும்மொழியிலும் வெள்ளி முலாம் பூசிய எழுத்துகளால் அமைக்கப்பட்டது. இதை, போர் மிகவும் உக்கிரமடைந்த காலப்பகுதியில் கட்டிடப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்ற வேளையில் 2006ஆம் ஆண்டு ஆறாம் அணி கணித ஆங்கில மொழிமூல முகிழ்நிலை ஆசிரியர்களால் பீடாதிபதியின் அன்பான சேவைக்காக அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அங்கு நின்றவாறே சற்றுப் பின்புறம் திரும்பிப் பார்த்தால் முன்னைய பீடாதிபதியினதும் விரிவுரையாளர்களினதும் அரும் முயற்சியினால் உருவாக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான வீர சங்கிலியன் விளையாட்டு மைதானம். அம் மைதானம் நிர்மாணிக்கப்பட்டு பல வருடம் பராமரிப்பின்றி அழகிழந்து காணப்பட்ட போது பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்கள் பாரிய கண்காட்சி ஒன்றை நடாத்தி அதன் மூலம் திரட்டிய நிதியில் அரச செலவின்றி தாமாகப் புனரமைத்தார்.

அப்படியே நின்று கால்களை சற்று நுழைவாயிலை நோக்கி நகர்த்துகையில் உங்களை வரவேற்கக் காத்து இருப்பது "நல்லாசிரியர் சிலை" உலகத்துக்கு வழிகாட்டும் தாய்மை உணர்வு கொண்ட இச்சிலையை 10ஆம் அணி சித்திரத்துறை முகிழ்நிலை ஆசிரியர் S. சோபன் ராஜ் பீடாதிபதியின் வழிகாட்டலில் அவரது எண்ணத்து உதித்த எண்ணங்களை சிலையாக வடித்தார்.

அவ்வாறே நின்று சுற்றுப்புறத்தை நோக்குவீர்கள் எனின், எங்கும் ரம்மியமான காட்சி மாந்தோப்பு, மூங்கில் மரங்கள், மூகைத் தோட்டங்கள், அழகிய பூஞ்செடிகள் யாவும் சிறப்பாகக் கத்திரிக்கப்பட்டு பீடாதிபதியால் பராமரிக்கப்படுபவை. வழி தெரியாமல் நின்று அல்லல் படுவோரின் இடரைக் களைவதற்காக பீடாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க 10ஆம் அணி ஆரம்பக் கல்வி முகிழ்நிலை ஆசிரியர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கல்லூரியின் கிடைத்தோற்றம் வரைபடமாக்கப்பட்டு கல்லூரிக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அவற்றைத் தாண்டி முன் செல்கையில் அன்றைய பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் எண்ணத்தில் உருவான சரஸ்வதி சிலை என்றும் இளமையோடும் வனப்போடும் காட்சிதருகின்றது எனின் அது அவ்வப்போது வரும் சங்கீதத்துறை முகிழ் நிலை ஆசிரியர்களினதும், பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்களினதும் சிறப்பான பராமரிப்பு, காலம் தவறாது வர்ணம்பூசுவதும், புற்றரைகள் அமைத்து நீர்பாச்சுவதும் ரம்மியமான பூஞ்சோலைகள் அமைத்து அவற்றைப் பராமரிப்பதுவுமே அதன் இன்றைய அழகிற்குக் காரணம் ஆகும். அவ்வாறே கல்லூரியின் பிரதான கலையரங்கை நோக்கினால் முன்னைய பீடாதிபதி திரு. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் அயராத உழைப்பினால் உலகவங்கி அமைத்துக் கொடுத்த அம் மண்டபத்துக்கு அழகூட்டுவதற்காக வர்ணம்பூசி சித்திரத்துறை முகிழ்நிலை ஆசிரியர்களான செந்தூரன், பிரதீபன், சுதன், ஆகியோர் தீட்டிய எழில்மிகு

சித்திரங்கள், சீதையின் நிலையாமையை உணர்த்தும் கீதாசாரம் பீடாதிபதியின் எண்ணக் கோலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மண்டபத்தின் உள் வாயிலை நோக்கினால் அதன் முகப்பில் சிந்தனை, சொல் , செயல் என்ற நாவலரின் வாக்கியம் பீடாதிபதி திரு S.K. யோகநாதன் அவர்களின் வேண்டுதலின் பேரில் விசேட கல்வித்துறை முகிழ்நிலை ஆசிரியர் அமைத்துக் கொடுத்தது. அவ்வாறே உள்ளேநுழைவோமாயின் அங்கேயும் சிந்தனை, சொல், செயல், ஆரம்பக்கல்வி முகிழ்நிலை ஆசிரியர்களால் மிகப் பிரமாண்டமாக வெள்ளி முலாமிட்டுப் பொறிக்கப்பட்டது. அவற்றைத் தாண்ட அண்ணார்ந்து பார்க்கும் அளவிற்கு மிகப்பிரமாண்டமான இலத்திரனியல் கடிகாரம் 10ஆம் அணி ஆசிரியமாணவர்கள் கல்லூரியை விட்டுப் பிரியும் போது பீடாதிபதியின் சேவையைக் கௌரவிப்பதற்காக மிகப் பெரும் பணச் செலவில் வாங்கி தாங்களே பொருத்தினார்கள்.

அவ்வாறே மண்டபத்தில் பார்வையை நுழைய விடுவீர்களாயின் அழகிய கதிரைகள் 12ஆம் அணி இஸ்லாமிய முகிழ் நிலை ஆசிரியர்கள் தமது செயற்திட்டமாக வாங்கி, கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்கள். ராபீக் இஸ்லாமிய மாணவமன்றத் தலைவனாக இருந்த போது கல்லூரியின் பீடாதிபதியின் அன்பானவழிநடத்தலுக்காக இவை இஸ்லாமிய மாணவரால் அன்பளிப்புச் செய்யப்படுவதாக விழாவில் குறிப்பிட்டிருந்தார். சுற்றும் திரும்பிப் பார்த்தால் அழகிய பிளாஸ்ரிக் கதிரைகள் ஜனாதிபதியின் இந்து சமயஆலோசகர் திரு. இராமச்சந்திரனும், வேறுசில முகிழ் நிலை ஆசிரியர்களும் அன்பளிப்புச் செய்தவை. இவை அனைத்துக்கும் வழிகாட்டிய பெருமை பீடாதிபதியைச் சாரும்.

மண்டபத்தை விட்டு வெளிநகர்ந்து மண்டபத்தின் கிழக்குப்புறமாகப் பார்த்தால் வரவேற்புமாது, தண்ணீர்க் குடம் தாங்கிய பெண், மண்வெட்டியுடன் தோட்டம் செல்லும் பள்ளி மாணவன், வாள் ஏந்திய வீரன், முதுமை நிறைந்த பெண், முதிய ஆண்மகன் தத்ரூபமாக சிலையாகக் காட்சியளிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் பீடாதிபதியின் அன்பான வேண்டுகோளுக்கு அமைய வாசன், கிருபா, சுதன், நிஷாந்தன், அஜந்தன், பிரகாஷ், கோபி ஆகியசித்திரத்துறைமுகிழ்நிலைஆசிரியர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டவை இச்சிலைகள் ஒவ்வொன்றும் வாழ்வின்பல்வேறு அர்த்தத்தைப் புரிய வைப்பதுடன் 24 மணிநேரமும் நின்று எமது பீடாதிபதியுடன் கல்லூரி வளவுக்குள் நின்று உழைத்தவை என்றால் அதில் மிகை இல்லை. அவ்வாறே அலுவலகத்துக்குள் நுழைவீர்களானால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் அமைவிடங்கள் கிடைப்படமாக்கப்பட்டுள்ளது. அதைத்தாண்டி வருகையில் அழகிய தாமரைத் தடாகம் 10 அணி விஞ்ஞானத்துறை தமிழ் மொழிமூல முகிழ் நிலை ஆசிரியர்கள் செயல்திட்டமாக துஸ்யந்தன் தலைமையில் பீடாதிபதியின் வேண்டுகோளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டது . இன்றும் காலத்துக்குக் காலம் வரும் விஞ்ஞானத்துறை முகிழ் நிலை ஆசிரியர்களால் பராமரிக்கப்பட்டும் வருகின்றது.

அலுவலகத்தைத் தாண்டி வெளியே வரும்போது வறிய முகிழ்நிலை ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிக்காகச் செல்லும் போது ஏற்படும் சிரமங்களைப் போக்க பல படிகள் ஏறி இறங்கி ஈற்றில் அம்கோர் நிறுவனம் அளித்த பேருந்து உள்ளது. இந்தப் பேருந்து பீடாதிபதியின் அரிய முயற்சியாலும், அம்கோர் நிறுவன ஊழியர்கள் தெய்வேந்திரம் பாலசுப்பிரமணியம் அவர்களின் உதவியோடும், தொழிலதிபர் வின்சன்ராஜ் அவர்களின் வரிநீக்க உதவியோடும் ஆசிரிய மாணவரின் பாவனைக்கு அளிக்கப்பட்டது. பீடாதிபதி அவர்களின் அரிய முயற்சியால் கொண்டுவரப்பட்ட பேருந்துக்கு தரிப்பிடம் அமைக்க 12ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்கள் நிதி தாமாகத் திரட்டி விஞ்ஞானத்துறை அஜந்தன், கணிதத்துறை

கமல் ஆசிரியமாணவர்கள் வேறுசில ஆசிரிய மாணவர்களின் உதவியுடன் தாமாகவே கட்டிக் கல்லூரியின் பீடாதிபதியின் சேவையை மதித்து அவரைக் கொண்டே திறந்து வைத்தார்கள். நிச்சயமாக அரச செலவில் கூட, இவ்வளவும் செய்து முடிக்க முடியாத இவ் அரிய செயலை பீடாதிபதியின் மனித நேய முகாமையால் ஆசிரியமாணவர்களும் விரிவுரையாளர்களும் இணைந்து செய்து முடித்தார்கள்.

அப்போது தரிப்பிடம் தாண்டிச் செல்கையில் எங்கும் ரம்மியமான காட்சி, முருங்கைத் தோட்டம், பப்பாசித் தோட்டம், தென்னந்தோப்புக்கள், பூஞ்செடிகள் அழகாகக் கத்தரிக்கப்பட்ட குறோட்டன்கள் இவை அனைத்தினதும் பிதாமகன் பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்களே! அவற்றை (தென்னங்கன்றுகள்) ஒவ்வொன்றும் பீடாதிபதியும் சில விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரக்கன்றாக பீடாதிபதி S. K. யோகநாதன் தலைமையில் நாட்டப்பட்டு இன்று கண்ணுக்குக் கவர்ச்சியாக காய்த்துப் பயன்தந்து கொண்டு இருக்கின்றன.

அவற்றைத் தாண்டி நகர்கையில் டாக்டர் லயன் V. தியாகராசா படிப்பகம் கல்லூரியின் சிரேஷ்ட ஆலோசனை சபை உறுப்பினராக நீடித்து வரும் அவர் கல்லூரியின் உருவாக்கத்தில் பெரும் பணி புரிந்தவர் அவரின் அந்த நன்றியை நினைவுகூர அவரின் பெயர் பொறிக்கப்பட்டது. கல்லூரியின் வகுப்பறைகள் ஒவ்வொன்றும் கற்றலுக்கு உரிய கவி நிலையில் அழகாகக் கத்திரிக்கப்பட்ட பூஞ்செடிகள், குறோட்டன்கள் நாட்டப்பட்டு இன்றும் அவை சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன.

வகுப்பறைகளைத் தாண்டி விஞ்ஞான ஆய்வு கூடம் விஞ்ஞானத்துறை விரிவுரையாளர்களின் துணையுடன் பீடாதிபதியின் வழிகாட்டுதலுடன் ஆசிரிய மாணவர்கள் தாமாக நிதி திரட்டி, கற்றல் உபகரணங்கள் வாங்கி தரமான ஆசிரியர் உருவாக்கத்திற்கு வழிகோலினார். கணினி ஆய்வு கூடம் இருந்த போதும் நூலக விஞ்ஞானம் எனும் பாடநெறி ஆசிரியமாணவர்கள் இருந்த போதும் கணிணிகள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் இருந்த போது அவற்றைத் தனது காலத்திலேயே மாணவர்கள் பலரின் நிதி சேகரிப்பின் ஊடாக திருத்தியும் பல நிறுவனங்கள் ஊடாக புதிதாக வாங்கியும் கணிணி ஆய்வு கூடத்தை இயங்கு நிலைக்குக் கொண்டு வந்த பெருமையும் பீடாதிபதி திரு.S. K. யோகநாதன் அவர்களைச் சாரும்.

விஞ்ஞான கணிணி ஆய்வுகூடங்களுக்கு அமைவாக பீடாதிபதி அவர்களின் வழிகாட்டலில் மொழிக் கூடம் மிக சிறப்பாக அமைக்கப்பட்டு ஆங்கில விரிவுரையாளர்களின் துணையுடன் ஆங்கில மொழி மூல முகிழ் நிலை ஆசிரியர்களின் செயல் திட்டம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பல்லூடக எறியி, வெளிநாடுகளில் இருந்து ஆங்கில மொழி விரிவுரைகளை இங்கே பெற்றுக் கொள்ள SKYP வசதியை லண்டனில் வதியும் Dr. Dan முத்துவேலு அவர்களின் துணையுடன் மூன்று லட்சம் பெறுமதியான உபகரணங்களை வாங்கி சிறந்த ஆங்கில ஆசிரியர் உருவாக்கத்திற்குத் துணை செய்தார். அவ்வாறே பின்புறமாகச் செல்வோமாயின் வித்தகவிநாயக ஆலயம் எழில் மிக தோற்றத்துடன் காட்சி அளிக்கின்றது. அங்கு உள்ள விநாயகரின் அற்புதங்களையும் நடனத்தையும் படமாக இந்துசமய துறை முகிழ் நிலை ஆசிரியர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். அத்துடன் 2012 ஆம் ஆண்டு இந்து சமய ஆசிரிய மாணவர்களின் துணையுடன் பெருமளவில் நிதி சேகரித்து கும்பாபிஷேகம் செய்து, புதிய ஆலய மணியையும் அமைத்ததோடு; ஆலயம் எதிர்காலத்திலும் சிறப்பாக அமைய ஒரு தொகைப் பணத்தை வங்கியில் வைப்பிட்டுள்ளார். இதற்கு இந்து சமய பொறுப்பு விரிவுரையாளர்களின் உதவியையும் பெற்றது அவரது முகாமைத்துவத்தின் மற்றொரு சிறப்பு.

இந்துக் கோயில் மட்டுமல்லாது கிறிஸ்தவ ஆலயங்களையும் அழகாகப் பராமரித்து சர்வமத சமரசத்தை சிந்தனை சொல் செயல் ஆகியவற்றால்கடைப்பிடித்து ஏனையோருக்கும் வழிகாட்டியவர்.

ஆலயங்களைத் தாண்டிச் செல்லுகையில் குமரக் கோட்டம், குமரிக் கோட்டம் அண்மையில்தான் பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்களின் வழிகாட்டலில் பொறுப்பு விரிவுரையாளர்களின் துணையுடன் மாணவர்கள் தாமாக சேர்ந்து நிதி திரட்டி வர்ணம் பூசினார்கள். பின், பீடாதிபதியே புனர்நிர்மாணம் செய்து விடுதியைத் திறந்தும் வைத்தார்.

விடுதியைத் தாண்டி வருகையில் சமயலறை சாப்பாட்டறை. அங்கு பப்பாப்பழங்கள், காய்கறிகள், முருங்கைக்காய், வாழைப்பழங்கள், மாம்பழங்கள் அனைத்தும் பீடாதிபதியுடன் சேர்ந்து முகிழ் நிலை ஆசிரியர்களால் செய்கைபண்ணப்பட்டவை. அல்லாது விடின் 75 ரூபாவிற்கு போசாக்கான உணவை ஆசிரிய மாணவர்களுக்கு எவ்வாறு வழங்க முடியும். விவசாயத்தில் ஈடுபாடு கொண்ட பீடாதிபதி S. K .யோகநாதன் அதன் மூலம் கல்லூரியை அழகுபடுத்தியதோடு மாத்திரமல்லாமல், விடுதி வசதிகள் கொண்ட கல்லூரிக்கு தேவையான உணவுப் பொருட்களையும் ஆக்கினார்.

இவைமட்டுமல்ல இவற்றையெல்லாம் தாண்டி வருகையில் வாழைத் தோட்டம், மாந்தோப்பு, தென்னந்தோப்பு இவையாவும் கல்லூரியின் நாயகன் உருவாக்கத்தில் கல்லூரிக்குக் கிடைத்த கற்பக தருக்கள் என்பது உண்மை.

இவைமட்டுமல்ல கல்லூரிக்கு வரும் வறிய மாணவர்கள் வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், எல்லோருக்கும் மாதாந்தம் தனவந்தர்கள், விரிவுரையாளர்கள், தொண்டுநாத சுவாமிகள், சிவபிறநேய நிறுவனத்தார் ஆகியோரின் துணையுடன் 2000 ரூபா வழங்கி கற்றலுக்கு துணைபுரிந்தவர் . இவை மாத்திரமல்ல, கல்லூரியின் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கான நிதியை E. S. பேரம்பலம், ஐங்கரன் வெதுப்பகம், இலங்கைவங்கி, கொமேசல் வங்கி ஆகியவற்றிடம் இருந்து வருடாவருடம் பெற்று உரிய வகையில் நடைபெற வழி செய்தார்.

காலத்துக்குக் காலம் சமுகத் தொண்டு செய்பவர்களை அழைத்து அவர்களைக் கௌரவிப்பது எமது பீடாதிபதி S. K. யோகநாதனின் வழக்கம் ஆகும். அந்த வகையில் இலக்கிய கலாநிதி ஆறு திருமுருகன், ESP பேரம்பலம் போன்றவர்கள் முறையே செஞ்சொற் சொல்லழகர், கல்விக் காருண்யன் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். அத்துடன் இரவு பகல் பாராமல் கல்லூரிக்குள் நின்று தேவை ஏற்படின் சாதாரண ஊழியரைப் போன்று, நின்று சேவை செய்தவர். நடு நிசியிலும் வைத்தியசாலைக்கு வாகனச் சாரதியாக இருந்து ஆசிரிய மாணவர்களை அழைத்துச் செல்வது அவரின் சேவையை எடுத்துக்காட்ட மற்றொரு ஆதாரமாகும்.

2006 போர் உக்கிரமடைந்த காலப்பகுதியில் உணவு பணம் கொடுத்துக் கூட வாங்க முடியாத நிலையில் பல நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று ஆசிரிய மாணவர்களுக்கு உணவு அளித்தார். போக்குவரத்து வசதி குறைந்த காலத்தில் மாணவர்களின் முழுத் தேவைகளையும் ஆற்ற அரும்பாடுபட்ட அவரது சேவை மதிக்கப்பட முடியாததொன்று.

இவ்வாறு அவர் ஆற்றிய பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். காலம் போதாது. நேரம் போதாது. என்றாலும்; பயன்கருதாது சேவை செய்தவர்; தமது ஓய்வுக் காலத்தில் தங்குவதற்குக் கூட ஒரு இருப்பிடத்தை அமைக்காது இனியும் என்ன செய்யலாம் என்பதே நோக்காக உள்ளார்.

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃது இன்றேல்**
**மண்புக்கு மாய்வதுமன்" -திருக்குறள்**

# கல்வி சாராப் பணியாளன் பார்வையில் ...



திரு. சண்முகநாதன் துஷ்யந்தன்
யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி
கல்விசாரா ஊழியர்கள் சார்பாக,



ஒழுக்கம், கட்டுப்பாடு, தமது சிறப்புத் துறையிலே போதிய அறிவு, பிள்ளைகளின் உளவியலை நுணுகி நோக்கி அவர்களுக்குக் கற்பிக்கும் திறன் என்ற இவற்றை உள்ளடக்கிய பயிற்சியினை அளிக்கும் குறிக்கோளை முன்வைத்துத் தொடங்கப்பட்டனவே தேசிய கல்வியற் கல்லூரிகள். எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 02-05-2000ஆம் ஆண்டின் முதற்பீடாதிபதியாகவிருந்த கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் பெரும் முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. புதுமைப்பித்தன் கூறியது போல "பிறக்கும் பொழுதே தொப்பூழ் கொடியைத்தோளில் போட்ட வண்ணம் பிறந்தது" இந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்றால் அதில் தவறில்லை. ஏனெனில், தனது குறுகிய எல்லைக்குள் பல சாதனைகளை - வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் இடையே சாதித்த பெருமை எங்கள் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உண்டு. கல்லூரி சாதித்த பெருமைகளை மென்மேலும் கூறிக்கொண்டே போகலாம்.

2003ஆம் ஆண்டில் எமது கல்லூரிக்கு ஒரு ஆலயம் தேவை என நினைத்து கலாநிதி. திரு . திருநாவுக்கரசு கமலாநாதன் அவர்களால், வித்தக விநாயகர், முடிமன்னரான வைரவர் மற்றும் ஏனைய விக்கிரங்களுக்கும் ஆலயம் அமைத்து, கிரியைகள் செய்வதற்கு ஒரு பூசகரையும் நியமித்துக் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

2005ஆம் ஆண்டில் இரண்டாவது பீடாதிபதியாக திரு. S. K. யோகநாதன் அவர்கள் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். அவர் கல்லூரியின் "இரண்டாவது பீடாதிபதி" என்ற பெருமைக்குரியவராவர் உப-பீடாதிபதிகளிடமும், சகல கல்வியியலாளர்களிடமும், சகல கல்விசாரா ஊழியர்களிடமும், நட்புறவுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டு வருகின்றார். இதனால், சகலரும் மனக்கசப்பின்றி பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செய்து வருகின்றனர். இது அவரின் தலைமைத்துவத்துக்கு ஓர் முன்னுதாரணமாகும்.

படித்தவர்களும் புத்திஜீவிகளும் எம்மண்ணை விட்டு வசதி வாய்ப்புக்கள் கருதி ஓடிக்கொண்டிருக்கும் போது எமது பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்கள் தூரநோக்குடன் பல்வேறு தியாகங்கள் செய்து எம் பிரதேசக் கல்வி அபிவிருத்திக்காகத் தம்மையே அர்ப்பணித்துச் சேவையாற்றுகின்றார். அவரது சேவைக்கு எமது சமூகம் என்றும் நன்றியறிதல்களைத் தெரிவிக்கும்.

வெளி மாவட்ட ஆசிரிய மாணவர்களைப் பீடாதிபதி. திரு. S. K. யோகநாதன் அவர்கள் பல நெருக்குவாரங்களுக்கு மத்தியில் சென்று திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அழைத்து வந்து இறுதிப்பரீட்சை எடுக்க வைத்தவராவர்.

2005ஆம் ஆண்டு நாட்டுப் பிரச்சினை

யுத்தத் தாக்கங்களால் எமது கல்லூரி மூடப்பட வேண்டிய நிலையிலிருந்தது. அப்போது எமது பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்களும், அவர்களுடன் சகல கல்லூரிச் சமூகத்துடனான ஆதரவுடனும் கல்லூரியைத் தொடர்ச்சியாக இயங்க வைத்தவராவர்.

யுத்த நெருக்கடிகளால் ஆசிரிய மாணவர்களுக்கான உணவு நெருக்கடி மிகமோசமான நிலையில் இருந்த வேளையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும், ஆசிரிய மாணவர்களுக்கு உணவளித்து வந்தவராவார்.

எங்கள் கல்லூரிக்கு ஆசிரிய மாணவர்களின் போக்குவரத்துக்கென ஒரு பேரூந்து தேவை என நினைத்து "UMCOR" நிறுவனத்திலிருந்து "TATA" வகையைச் சேர்ந்த பேரூந்தை எமது பீடாதிபதியின் கடும் முயற்சியினாலும், சில விரிவுரையாளர்களின் முயற்சியினாலும் அன்பளிப்பாகப் பெறப்பட்டது.

ஆசிரியர் உயர்கல்விப் பாதையை விருத்தியாக்கத் தேசிய கல்வி நிறுவகம் B.E.D ஆங்கிலம் மொழிமூல பாடநெறியும், M.E.D பாடநெறியும் எமது கல்லூரியில் எமது பீடாதிபதி. திரு. S. K. யோகநாதன் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

எமது கல்லூரியின் வித்தக விநாயகர், முடிமன்னரான வைரவர் ஏனைய விக்கிரகங்களுக்கும் மீண்டும் 2011ஆம் ஆண்டில் பீடாதிபதி திரு.S.K. யோகநாதன் அவர்களின் தலைமையில் புனருத்தாரணம் செய்யப்பட்டு பின்னர் 2012ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

இப்படியே பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் அவர்களைக் கூறிக்கொண்டே போகலாம். அவரது ஆற்றலும், துணிச்சலும், ஊக்கமும் ஆசிரிய மாணவர்களை நல்லாசிரியர்களாகவும், உபபீடாதிபதிகளையும், கல்வியியலாளர்களையும், கல்விசாரா ஊழியர்களையும் மென்மேலும் வளர்ந்து கொண்டு போக பெரிதும் உதவின. ஆகவே அவர் இங்கு மட்டுமல்லாது எங்கு சென்றாலும் மென்மேலும் கல்வி வளர்ச்சியில் வளர்ந்து இந்நாட்டுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் உதவ வேண்டும் என வாழ்த்தி எல்லாம் வல்ல எமது கல்லூரியின் வித்தக விநாயகரினதும், முடிமன்னரான வைரவரினதும் கடாட்சம் அவருக்கும், அவரது குடும்பத்துக்கும் என்றென்றும் இருக்கும் எனக்கூறி மீண்டும் ஒரு முறை மனதார வாழ்த்துகின்றேன்.


UNIVERSITI MALAYA
KAMPUS KOTA
http.www.um.edu.my.
11th Batch
Ceremony
கல்விசார் செயலாற்றுகை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
முக்கிய நிகழ்வுகள்

# யோகநாதம்

## இயல் மூன்று

# உலக மக்களின் இணையத்தளப் பயன்பாடு

இணையத்தளங்கள் இன்று அறிவையும் தகவல்களையும் வழங்கும் பிரதான சாதனங்கள். மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அறிவையும் தகவல்களையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள கணினி அறிவும் இணையத்தளங்களும் உதவுகின்றன. இவ்வசதிகளைப் பெறாத குழுக்கள் வளர்முக நாடுகளில் அதிகம். இதனால் அவர்களுக்கு ஏற்படும் இழப்பும் அதிகம். இவ்வாறு ஒரு நாட்டிலோ சமூகத்திலோ கணினி அறிவும் திறனும் இல்லாதோர் காணப்படுகின்ற நிலை 'இலக்க இடைவெளி (digital devide)' எனப்படும். வளர்முக நாடுகளில் கணினி அறிவையும் பயன்பாட்டையும் கொண்டோர் மட்டும் தொழில் உலகில் நன்மை பெறுவோராய் உள்ளனர். இது புதுவகையான சமூக வேறுபாட்டை உருவாக்கி வருகின்றது.

தகவல் தொழில்நுட்பம், கணினி, இணையத்தளம், மின்னஞ்சல் என்பன மனித வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. பாடசாலைக்கல்வி, உயர்கல்வி, மருத்துவ நிறுவனங்கள், வர்த்தகம், கைத்தொழில், போக்குவரத்து, தொடர்பாடல் எனச் சகல துறைகளிலும் இன்று பயன்படுத்தப்படுகின்றன. கணினிப் பயன்பாடு அதிகரித்துள்ள நாடுகளில் நூல்கள், சஞ்சிகைகள் எல்லாமே இறுவெட்டு வடிவில் வருகை தந்து நூல் நிலையப் பயன்பாட்டைக் குறைத்து வருகின்றது. இவை பற்றி இன்று அறியாதவர்கள் குறைவு.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாட்டின் காரணமாக இன்றைய யுகம் அறிவு யுகம், தகவல் யுகம் என்றும் 21ஆம் நூற்றாண்டு அறிவு மைய நூற்றாண்டு என்றும் வர்ணிக்கப்படுகின்றன. புதிய அறிவு துரிதமாக உருவாகவும், உருவாக்கப்பட்டவுடன் உலகெங்கும் பரப்பப்படவும் இணையத்தளங்கள் உதவுகின்றன. இவ்வாறான நிலைமை காரணமாக இன்று ஒரு அறிவுப் புரட்சி நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.



இத்தகைய பின்புலத்தில் இன்று உலக நாடுகளில் வாழும் மக்கள் எந்த அளவுக்கு இணையத்தளங்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்ற விடயம் ஆராயப்படுகின்றது. சென்ற நூற்றாண்டில், மக்களின் கல்வி அறிவு வளர்ச்சியில் எழுத்தறிவு/படிப்பறிவு என்பன முக்கிய குறிகாட்டிகளாக அமைந்தன. (உதாரணமாக இந்தியாவின் எழுத்தறிவு 60%, இலங்கையர் 92% ). இவ்வாறான மற்றொரு அறிவுக் குறிகாட்டி மக்கள் எத்தனை ஆண்டுகள் முறையான கல்வி பயின்றார்கள் என்பதாகும். (இலங்கையர் 9 ஆண்டுக் கல்வி, இந்தியர் 6 ஆண்டுக்கல்வி, தென்கொரியர் 9 ஆண்டுக் கல்வி, வளர்ச்சியடைந்த மேலைநாடுகள், ஜப்பான் என்பன 13 ஆண்டுக்கல்வி ). ஆனால் இன்று உலக நாடுகளில் வாழும் மக்கள் எத்தனை சதவீதமானவர்கள் இணையத்தளங்களைப் பயன்படுத்துகின்றார்கள்? அவர்களுடைய 'இணையத்தளத் தொடர்புகை (internet connectivity)' யாது? என மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒரு நாடு அறிவுப் பொருளாதாரமாகவும் அறிவுச் சமூகமாகவும் மாற வேண்டுமாயின் பெரும்பாலான மக்கள் இணையத்தளங்களைப் பயன்படுத்த வேண்டும்.

இத்தகைய மதிப்பீடுகளின் அடிப்படையில் மக்களின் இணையத்தளப் பயன்பாட்டு சதவீதத்தை அதிகரிக்கும் திட்டங்களை அரசாங்கம் வரையமுடியும். அத்துடன் ஒரு நாட்டில் எப்பகுதிகளில் பயன்பாடு குறைவு என்பதையும் அறிந்து அப்பகுதி மக்களில் கவனம் செலுத்தலாம். இம்மதிப்பீடுகளின் அடியில் மக்கள் பயன்பாட்டிற்காக பொது அல்லது சமுதாயக் கணினிக் கூடங்களும் நிலையங்களும் வளர்முக (வறிய) நாடுகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான மக்களின் இணையதளம் பயன்பாட்டுப் புள்ளி விபரங்களை நோக்கும்போது, பொதுவாக இரு விடயங்களை அவதானிக்க முடியும்.

1. இவ்விடயத்தில் வளர்ச்சியடைந்த செல்வந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையே பெருத்த இடைவெளி காணப்படுகின்றது. இது நாடுகளுக்கிடையிலேயான இடைவெளி எனப்படும்.

2. அதேவேளையில் நாடுகளுக்குள்ளேயும் மாவட்டங்கள், மாகாணங்களுக்கிடையிலும் பயன்பாட்டுசதவீதத்தில்இடைவெளிகளைக் காணமுடியும். இதற்குக் காரணம் பல வளர்முகநாடுகளுக்குள் பொருளாதார வளர்ச்சியில் பிரதேசங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுவதாகும்.

ஆசிய நாடுகளை மட்டும் எடுத்து நோக்கினால், செல்வந்த நாடுகளான ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங், தைவான் ஆகிய நாடுகளில் 70 - 80 சதவீத மக்கள் இணையதளங்களைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியும் உயர்ந்த தனிநபர் வருமானமும் இதற்குக் காரணமாகும் என்பது வெளிப்படையானது. இந்நாடுகள் வாழ்க்கைத்தரத்தில், மேலை நாடுகளுக்கு ஒப்பானவை. இரண்டாம் நிலையில் மலேசியா (61%), சவூதி அரேபியா (47%), சீனா (38.4%), பிலிப்பைன்ஸ்(33%), மாலைதீவு(35%) என்பன வருகின்றன. ஏனைய நாடுகளான கம்போடியா, பூட்டான், பீஜி, இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, தாய்லாந்து என்பவற்றில் 5-30 சதவீதத்துக்கிடையிலான மக்களே இணையதளப் பயன்பாடுடையவர்கள். இவ்விடயத்தில் வங்காளதேசமும் (5%) கம்போடியாவும் மிகப்பிந்தியவை. (பார்க்க அட்டவணை II)

அட்டவணை I

இணையதளங்களில் மொழிகளைப் பயன்படுத்துவோரின் சதவீதம்.

| மொழிகள் | சதவீதம் |
|---|---|
| ஆங்கிலம் | 27% |
| சீனம் | 25% |
| ஜெர்மன் | 5% |
| ரஷ்யன் | 3% |
| அரபு | 3% |
| ஜப்பானியமொழி | 5% |
| பிரஞ்சு | 3% |
| கொரியன் | 2% |
| போர்த்துக்கேய மொழி | 4% |
| பிறமொழிகள் | 17% |

அட்டவணை II

ஆசிய நாடுகளில் இணையதளப் பயன்பாடு (மக்கள் தொகை, சதவீதம்)

| நாடு | மக்கள் தொகை | சதவீதம் ஆண்டு |
|---|---|---|
| சீனா | 51கோடி | 38.4%(2011) |
| ஜப்பான் | 10 கோடி | 80%(2011) |
| இந்தியா | 12 கோடி | 10.2%(2011) |
| இந்தோனேசியா | 5 1/2 கோடி | 22%(2011) |
| தென்கொரியா | 4 கோடி | 82%(2011) |
| பிலிப்பைன்ஸ் | 3.3 கோடி | 33% |
| பாகிஸ்தான் | 3 கோடி | 15.5% |
| மலேசியா | 1.7 கோடி | 61 % |
| தைவான் | 1.6 கோடி | 72% |
| தாய்லாந்து | 1.5 கோடி | 23% |
| சவுதிஅரெபியா | 1.2 கோடி | 47% |
| வங்காளதேசம் | 79 இலட்சம் | 5% |
| ஹொங்கொங் | 53 இலட்சம் | 74% |
| சிங்கப்பூர் | 39 இலட்சம் | 75% |
| இலங்கை | 31 இலட்சம் | 15% |

அட்டவணை III

உலகில் இணையத்தளப் பயன்பாடு மக்கள் தொகைப் புள்ளிவிபரம், 2012

| உலகப் பிராந்தியங்கள் | பயன்படுத்துவோர் தொகை | மொத்த மக்கள் தொகையில் சதவீதம் |
|---|---|---|
| ஆபிரிக்கா | 16,7300000 | 15.6% |
| ஆசியா | 107,6600000 | 27.5% |
| ஐரோப்பா | 51,8500000 | 63.5% |
| மத்தியகிழக்கு | 9,0000000 | 40.2% |
| வட அமெரிக்கா | 27,3700000 | 43% |
| அவுஸ்திரேலியா | 2,4200000 | 67.8% |
| உலகம் | 240கோடி | 34.3% |

அட்டவணை IV

இலங்கையில் இணையதளப் பயன்பாடு - மக்கள் தொகைப் புள்ளிவிபரம்

| ஆண்டு | பயன்படுத்துவோர் தொகை | மொத்த மக்கள் தொகையில் சதவீதம் |
|---|---|---|
| 2000 | 1,21000 | 0.5% |
| 2007 | 4,28000 | 2.2% |
| 2008 | 7,71000 | 3.7% |
| 2009 | 11,63000 | 5.5% |
| 2010 | 17,76000 | 8.3% |
| 2011 | 31,92000 | 15.0% |

ஆதாரம் : சர்வதேச நாணய நிதியம்

அட்டவணை V

மாகாண வகைப்படி கணினி உள்ள இல்லங்கள் (2004)

| மாகாண வளதரப்பு கணினி உள்ள இல்லங்கள் (2004) |
|---|
| சகல மாகாணங்கள் - 3.8% இல்லங்கள் |
| மேல் மாகாணம் - 8% இல்லங்கள் |
| மத்திய மாகாணம் - 3.3% இல்லங்கள் |
| வட மேல் மாகாணம் - 3% இல்லங்கள் |
| தென் மாகாணம் - 2% இல்லங்கள் |
| சப்பிரகமூவா மாகாணம் - 2% இல்லங்கள் |
| வட மாகாணம் - 1.9% இல்லங்கள் |
| வட மத்திய மாகாணம் - 1.0% இல்லங்கள் |

உலகின் மக்கள் தொகையில் 240 கோடிப் பேர் அல்லது 34 சதவீதமானவர்கள் இணையதளங்களைப் பயன்படுத்துகின்றனர். செல்வந்த நாடுகளைக் கொண்ட ஐரோப்பாக் கண்டத்தில் தான் பயன்பாடு அதிகம். அங்கு 51 கோடிப்பேர் அல்லது மொத்த மக்களில் 63 சதவீதமானவர்கள் இப்பயன்பாடு கொண்டவர்கள். அவ்வாறே அவுஸ்திரேலியா 67% ஐக்கிய அமெரிக்கா, கனடாவை உள்ளடக்கிய வட அமெரிக்காவில் 43%, மத்திய கிழக்கில் எண்ணெய் வளங்கொண்ட முஸ்லிம் நாடுகளில் 40%. வளர்முக நாடுகளைக் கொண்ட ஆபிரிக்கா இவ்விடயத்தில் உலகில் மிகவும் பின் தங்கிய கண்டமாகும்(15.6%). ஆசியாவில் பெரும்பாலான நாடுகள் வளர்முக நாடுகள் என்றாலும் ஜப்பான், தென்கொரியா போன்ற செல்வந்த நாடுகளும் துரித முன்னேற்றம் கண்டு வரும் மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் இருப்பதாலும் பயன்படுத்துவோர் சதவீதம் சற்று உயர்ந்து காணப்படுகின்றது. (ஆசியா 27.5%) பார்க்க அட்டவணை III

**இணையதளங்களின் மொழிகள்**

ஆங்கிலம் சர்வதேச மொழியாகவும் இணையதள மொழியாகவும் விளங்கிய போதிலும் இன்று உலகில் எல்லோரும் ஆங்கிலமொழி தெரிந்தவர்களல்ல. ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட நாடுகள் சிலவே. ஐக்கியஅமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என்பன பிரதான ஆங்கிலம் பேசும் நாடுகள். ஏனைய நாடுகளில் ஆங்கிலம் இரண்டாம் மொழி. பிரித்தானியராட்சிக்குட்படாத நாடுகளில் ஆங்கில அறிவு குறைவு. இந்நிலையில், ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய பிரதான மொழிகளும் இணையதளங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இணையதளங்களைப் பயன்படுத்துவோரில் 27சதவீதமானவர்களே ஆங்கிலமொழியைப் பயன்படுத்துகின்றனர். இன்று பொருளாதாரத்துறையில் துரித முன்னேற்றம் கண்டுவரும் சீனாவின் மொழியும் இன்று 25 சதவீதமானோரால் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றைவிட ஐரோப்பிய மொழிகளான ஜெர்மன், ரஷ்யன், பிரஞ்சு, போர்த்துக்கேயம் ஆகிய மொழிகளும் பலராலும் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றுக்கு ஈடாக அரபு மொழி, கொரியன் மொழி என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. (பார்க்க அட்டவணை I)

ஆங்கிலம் பேசாத நாடுகளில் மக்கள் அறிவுத்தேட்டத்துக்காக ஆங்கில மொழியில் தங்கி இருக்க முடியாது என்பதால் தமது மொழியில் கிடைக்கக்கூடிய வசதிகளை நாடுகின்றனர்.

**இலங்கையில் இணையதளப் பயன்பாடு**

அரசாங்க அறிக்கைகளின்படி இலங்கையில் கணினி அறிவு (computer literacy) கணிசமான முன்னேற்றங்கண்டுள்ளது. தற்போது35% மக்கள் இவ்வறிவுடையவர்கள் என்றும் 2016ஆம் ஆண்டில் 75% மக்கள் கணினித்திறன்களைக் கொண்டவர்களாக இருப்பர் என்றும் அவ்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயின் இணையதளத் தொடர்புளைப் பற்றிய மதிப்பீடுகளின் படி, அதனைப் பயன்படுத்துவோர் சதவீதம் கடந்த காலங்களில் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைகளின்படி 2001இல் நாட்டுமக்களில் 1,21000 பேரே (0.5%) இணையதளத் தொடர்புகளை வைத்திருந்தனர். 2011ஆம் ஆண்டில் இச்சதவீதம் 15ஆக உயர்ந்தது என ச. நா. நிதியம் தெரிவிக்கின்றது. (பார்க்க அட்டவணை IV).

மேலே சொல்லப்பட்ட இருதரவுகளில் வேறுபாடு காணப்படுகின்றது. இதற்குக்காரணம் 'கணினி அறிவு', 'இணையதளத் தொடர்புகை' என்னும் இரு விடயங்களைப் பற்றி ஆய்வு செய்தவர்கள் இவற்றுக்கு வழங்கிய வெவ்வேறு

வரையறைகளாக இருக்கலாம். உதாரணமாக, இணையதளங்களைப்பயன்படுத்திவிளையாடும் பிள்ளைகளும் கணினி அறிவுடையவர்கள் என்ற முறையிலும் அவ்வப்போது கணினிக் கூடங்களைப் பயன்படுத்துவோர், சொந்தக் கணினியில்லாவிட்டாலும் அல்லது நாளாந்தம் பயன்படுத்தாவிட்டாலும் அதனைப் பற்றித் தெரிந்தவர்கள் எனப் பரந்த முறையில் நோக்கும் போது, பயன்பாடு அதிகரித்துள்ளதாகவே தெரியும். அத்துடன் இவ்வாறான மதிப்பீட்டுக்கான முறையியல் யாது? எவ்வாறு இம்மதிப்பிடுகள் செய்யப்படுகின்றன என்றும் விடயங்கள் பற்றி மேலும் ஆராயப் படல் வேண்டும்.

தொலைத் தொடர்பு, தகவல் தொழில்நுட்ப அமைச்சின்தரவுகளின்படி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் 138 ஆவது இடத்தில் இருந்த இலங்கை தற்போது கணினி அறிவில் 66ஆவது இடத்துக்கு வந்துள்ளது. இதற்குக் காரணம் இலங்கையரில் 35 சதவீதமானவர்கள் கணினி அறிவு உடையவர்கள். இலங்கை தற்போது தகவல் தொழில்நுட்பத்துறையினூடாக 400 மில்லியன் டொலர்களை உழைப்பதாகவும் 2015 இது 100 கோடி டொலர்களாக உயர இடமுண்டு எனவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது. 2007 ஆம் ஆண்டானது அரசாங்கத்தில் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வி ஆண்டாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

அரசாங்க ஊடகநிலையம் மேற்கொண்ட மதிப்பீடுகளின் படி (2010):

- நகர்ப் புறங்களில் 25 % வீடுகளில் கணினி உண்டு. நான்கு வீடுகளுக்கு ஒரு வீட்டில் கணினி உண்டு.
- கிராமப் புறங்களில் 9.2% வீடுகளிலும் பெருந்தோட்டப் பகுதிகளில் 3.1சதவீத வீடுகளிலும் கணினி உண்டு.
- கணினி பற்றிய விழிப்புணர்வு நகர்ப் புறங்களில் 60% மக்கள்; பெருந்தோட்டத்துறையில் இது மிகவும் குறைவு(15.8%).
- மாகாண ரீதியாகப் பார்த்தால் மேல் மாகாணத்தில் விழிப்புணர்வு அதிகம் (51%); ஊவாமாகாணத்தில் மிகக்குறைவு(29%).
- இவ்விழிப்புணர்வு விடயத்தில் பால்நிலை வேறுபாடு அதிகமில்லை; ஆண்கள் 22%, பெண்கள் 19%.
- கல்விச் சித்திக்கும் கணினி அறிவுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. க.பொ.த உ/தரம் மற்றும் அதற்கும் மேலேபடித்தவர்களில்60சதவீதமானவர்கள் கணினி அறிவு பெற்றவர்கள்.
- ஆங்கில அறிவுடையோரின் கணினி அறிவு தேசிய சராசரியை விட மும்மடங்கு அதிகம் - 56%
- தொழில் வகைப்படி நோக்கினால், சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் முகாமையாளர்களில் 86%: உயர் தொழில் வல்லுநர்களில் 72%; இலிகிதர்களில் 77% கணினி அறிவுடையவர்கள்.
- கணினி அறிவுடையோரில் பெரும்பாலானவர்கள்பாடசாலைகளிலும்பல்கலைக்கழகங்களிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் கணினிப் பயிற்சி பெற்றவர்கள். அரசபயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்கள் 8% மட்டுமே.

பேராசிரியர் சோ.சந்திரசேகரன்

# அறிகைச் சிகிச்சைமுறை உளவியலின் தேடல்

அறிகை (COGNITION) வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலே, தவறான முறையிலே தகவல்களை உள்வாங்குதல் உளப்பாதிப்புக்கு இட்டுச்செல்கின்றது. திரிபும், வழுவும், தவறும் இன்றிச் சரியான முறையிலே அவற்றை உள்வாங்கும் செயல்முறையை வளர்க்கும்பொழுது ஒருவரின் மனநலம் வளம்மிக்கதாக அமையும்.

ஒருவர் தம்மைப்பற்றிய காட்சிகொள்ளலும், தனது உலகம்பற்றிய காட்சியை உருவாக்கிக் கொள்ளலும் நடத்தை உருவாக்கத்திலே நேரடியான செல்வாக்குகளைஏற்படுத்துகின்றன. தம்மைப் பற்றிய கட்டுமை (CONSTRUCT) யைத் தவறாக ஏற்படுத்திக்கொள்வோர் உளநிலையிலும், நடத்தைநிலையிலும் பாதிப்புக்களைச் சந்திக்க நேரிடுகின்றது. உளவியல் நிலையில் ஏற்படும் ஒழுங்குகுலைதல் அல்லது சிதறல் அறிகையுடன் தொடர்புடைய தோற்றப்பாடு ஆகின்றது. (ALFORD AND BECK, *1997;14)*

மனிதரின் அடிப்படையான எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பாக 'சீமா' என்ற கருத்துக் கண்டறியும் வடிவம்" அமைகின்றது. புறவயமானது மற்றும் அகவயமானது என்ற இரு நிலைகளிலே கருத்துக்கண்டறிதல் அல்லது அர்த்தங்களைத் தெரிந்துகொள்ளல் நிகழ்கின்றது. அதனை அடியொற்றியே கவனம், ஞாபகம், மனவெழுச்சிகள், நடத்தைகள் ஆகிய அனைத்தும் உருவாக்கம் பெறுகின்றன. சூழலுடன் இசைந்து வாழ்வதற்குரிய தந்திரோபாயங்களும் அதன்வழியே முன்னெடுக்கப்படுகின்றன.

தனியாள் அனுபவங்களாலும், சூழலுடனான இடைவினைகளாலும் உருவாக்கப்படும் "சீமா" என்ற அறிகைத்திரள் கற்றல் அனுபவங்களால் மேலும் கட்டமைப்புச் செய்யப்படுகின்றது. சார்பு நிலையில் நிலையான கட்டமைப்பு வடிவத்தைப் பெறுகின்றது. ஒருவருக்குரிய அறிகை ஒழுங்கமைப்புத்



திறனோடு அதன் ஆக்கமும் விரிவும், நெகிழ்ச்சிப்பாங்கும் இடம்பெறுகின்றன.

மரபு வழியான அறிகை உளவியலிலே விதந்து பேசப்படும் ஒரு கருத்துருவமாக சீமா அமைகின்றது. நவீன அறிகை உளவியலில் "முற்றிணைப்பு" (MODES) என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. (BECK ABD WEISHAAR, 2008) அறிகை, எழுச்சி, மற்றும் ஊக்கல் நடத்தைத்திரள்களை உள்ளடக்கிய வலைப்பின்னலமைப்பே "முற்றிணைப்பு" எனப்படும். அதுவே ஆளுமைக்கும் அடிப்படையாகின்றது. உயிர்மரபு வழியமைந்த ஒருவருக்குரிய இயல்பான அமைப்புடன் அதனால் உள்வாங்கப்படும் சமூக பண்பாட்டு நம்பிக்கைகளும், விழுமியங்களும் ஒன்றிணைக்கப்பட்டு உருவாக்கம் பெற்றதாகவே "முற்றிணைப்பு" அமைந்திருக்கும். முற்றிணைப்பு முதன்மையானது. அது மனித உயிர்வாழ்க்கைக்கு அடிப்படையானது.

பதகளிப்பு என்பது முதன்மையான முற்றிணைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு, படித்தல், பேசுதல், எழுதுதல் முதலியவை உணர்வுநிலைக் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகிய முற்றிணைப்பைப் புலப்படுத்தும். முதன்மை உற்றிணைப்புக்களுடன் இணைந்ததாகப் பூர்விக நிலைப்பட்ட சிந்தனைகள் அமையும். மிருகவியல்பைப் புலப்படுத்தும் பூர்விக சிந்தனைகள் சமகாலத்தைய வாழ்விற் பிறழ்வான

நடத்தைகளுக்கும் இட்டுச்செல்லும் ஆனால் அவற்றைச் சீர்ப்படுத்தக்கூடிய உயர்நிலையான அறிகைச் செயற்பாடுகள் மனிதரிடத்துக் காணப்படுகின்றன. அதனை அடியொற்றியே உளவியற் சிகிச்சை முன்னெடுக்கப்படுகின்றது.

உளவியற்பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பொழுது தகவல்களைப் புறவயமாக நோக்காது, தற்சார்புநிலையில்ஆதரவுதரமுடியாதவையாகக் கட்டமைப்புச்செய்யப்பட்டுவிடுதல் நிகழலாம். எடுத்துக் காட்டாக ஒருவரோடு கோபமாக இருக்கும் நிலையில் அவரது பேச்சுக்கள் அனைத்தும் தமக்கு எதிரானவை என்று கருத்துக்கொள்ளும் ஒருபக்கநிலை காணப்படும். ஆனால், பேசியவர் அத்தகைய எண்ணத்தோடு பேசாதிருப்பின் கருத்துக்கொண்டவர் தவறான சிந்தனை வயப்பட்டிருத்தல் புலப்படும். அது அறிகைச்செயற்பாட்டின் "ஊறுபடத்தக்க நிலை" என்று குறிப்பிடப்படும்.

அடுத்ததாக ஒவ்வொருவருக்குமுரிய தன்னியக்கமான சிந்தனைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. தன்னியக்கச் சிந்தனைகளின் சிறப்பார்ந்த இயல்புகள் வருமாறு:

1. தமக்குள்ளே தாம் பேசிக்கொள்ளலின் ஒருபகுதி.
2. சொற்களாகவோ, படிமங்களாகவோ இரண்டுமாகவுமோ அது இடம் பெறுதல்.
3. நனவுணர்வின் விளிம்பில் அது நிகழல்.
4. மனவெழுச்சி அருட்டல்களைத் தொடர்ந்து நிகழல்.
5. சொல்வழியாக வெளிப்பாடு கொள்ள முடியாத நிலையில் உடல்மொழியாலும் நிகழ்த்தப்படும் அல்லது உடல்மொழியைத் தாக்கும்.
6. பேச்சுக்கு அங்கீகாரம் கிடைக்கும் நிலையில் அது முன்னெழும்.

அறிகைச் சிகிச்சை முறையிற் பிறழ்வான நம்பிக்கையினூடாகத் திரண்ட அறிகைத் திரளானது திரிபுநிலைகளைக்கொண்ட சிந்தனைகளுக்கும் இட்டுச்செல்வதுடன் தன்னியக்கப் பேச்சையும் இலகுவாகச் சென்றடையும்.

அறிகைத் திரிபுபடுத்தல் நிலை பின்வரும் வழிகளிலே ஏற்படுகின்றது.

1. காரண காரியம் அற்றவகையில் நிகழும் எழுந்தமானமான ஊகங்களை மேற்கொள்ளும் வேளைகளில்.
2. அதிக அளவிலே பொதுமையாக்கம் செய்யும் சந்தர்ப்பங்களில்- எடுத்துக்காட்டாக ஒருவர் வஞ்சகம் செய்பவராக இருத்தல் அவரது கிராமத்தில் உள்ள எல்லாருமே தீயவர்கள் என்று எண்ணும் நிலை.
3. ஒரு நிகழ்ச்சியை அதீத நிலையில் மிகப் பெருப்பித்தோ மிகவும் சிறிதாக்கியோ நோக்கும் வேளைகளில்.
4. இது அல்லது அது என்று மிகவும் துருவப்பாடான நிலையிலே சிந்திக்கும் நிலைகளில்.
5. அனைத்தையும் அதீத சுயநலத்துடன் நோக்குகையில்.
6. அதிமுக்கிய நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கும் வேளைகளில்.

சிறுவயதிலே நிகழ்த்தப்படும் கேடுறுத்தல்கள் வளர்ச்சியுற்ற நிலையிலே அறிகை நிலைப்பட்ட ஊறுபடலுக்கு வழிவகுக்கும். உதாரணமாக: ஒருவரைச் சிறார் நிலையிலே ஆற்றல்குன்றியவர் திருந்த முடியாதவர் என்று அடையாளப்படுத்தும் பொழுது அவ்வாறான நிலை வளர்ந்தோரிடத்துத்தோற்றப்பெறும்.

சமூகக்கற்றல் நிலைவரங்களினாலும், திறன்களை வளர்த்துக் கொள்வதற்குரிய போதிய அனுபவங்கள் கிடைக்கப்பெறாதவிடத்தும்

அறிக்கை நிலை ஊறுபடலுக்கு இட்டுச் செல்லப்படும்.

உள அழுத்தம் (DEPRESSION) என்பது அறிகை நிலைப்பட்ட தோற்றப்பாடாகவே கருதப்படுகின்றது. (BECK,1991)உள அழுத்த நிலைகளிலே பின்வரும் மனக்கோலங்கள் இடம்பெறும்.

1. பயனற்றவர், ஆதரவற்றவர், மகிழ்ச்சியை எட்டமுடியாதவர் என்று தம்மை எண்ணிக்கொள்ளல்.
2. இலக்குகளை எட்டமுடியாத தடைகளைக் காணலும், ஆனால் அவை மிகுந்த தேவையாக இருத்தலும்
3. எதிர்காலம் நம்பிக்கையற்றதாகத் தோன்றுதல்.

"பதகளிப்பு" என்பது உயிர்வாழ்வதற்குரிய ஓர் உயிரியல் தேவையாகக் கருதப்படுகின்றது. பதகளிப்பு அதீதமாகத் தொழிற்படுதலும் பிறழ்வாகத் தொழிற்படுதலும் மனச் சுகத்திலே பாதகமான நிலைகளைத் தோற்றுவிக்கின்றது. வளர்ச்சிதரும் மாற்றங்களோடு இணைந்து கொள்ளமுடியாத நிலைக்கு அத்தகையோர் தள்ளப்பட்டுவிடுகின்றனர்.

கோபம் ஏற்படும்பொழுது சூழலைச் சரியாகப் புலக்காட்சி கொள்ளமுடியாதநிலை தோற்றம்பெறுகின்றது. அதேவேளை மாற்றுச் சிந்தனைகளை இயக்கமுடியாத பலம் குன்றிய அறிகைநிலையும்ஏற்படுகின்றது. பிரச்சினையை விடுவித்தலுக்குப் புறவயமான ஏற்பாடுகளைக்காட்டிலும் அகவயமானவற்றின் மீதே கூடுதலான கவனம் எடுக்கும்நிலை விரிவடைகின்றது. எதிர்மறையான பொருள் கோடல் மேலெழுதலால், மகிழ்ச்சியற்றநிலை தோற்றம்பெறுகின்றது.

மேற்கூறியவை அனைத்தும் அறிகையோடு தொடர்புடையவையாகின்றன. அறிகைச் சிகிச்சைமுறையானது நேர்நிலையான அறிகைத் தொழிற்பாடுகளுக்கு மீள்வலுவூட்டுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் தமது சிந்தனைகளை எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பது பற்றிச் சிந்திப்பதற்குச் சீர்மியரால் வலுவூட்டப் படுகின்றனர். அதாவது, சிந்திப்பதுபற்றிச் சிந்திக்கவைக்கும்"மீயறிகை" (META COGNITION) தூண்டப்படுகின்றது. அவற்றின் வழியாக உளநலம் பாதிக்கப்பட்டவர் தம்மைத்தாமே நெறிப்படுத்தி வளம்பெறச்செய்யும் நிலைக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

மேலும் சொல்லப்போனால் தமக்குத்தாமே சீர்மியராகும் நிலை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படும். அந்நிலையில் அவர்களுக்குப் பின்வருவன கையளிக்கப்படும். (BECK AND WE ISHAAR,2008)

1. அறிகை, எழுச்சி, நடத்தை ஆகியவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளையும், இணைப்புக்களையும் இனங்காணுமாறு தூண்டப் படுதல்.
2. திரிபுபடுத்தப்பட்ட தன்னியக்கமான சிந்தனைகளுக்கு எதிரான வகையிலும் சார்பான வகையிற் பரிசீலனை செய்தலை வளர்த்தல்.
3. பக்கச்சார்பான அறிகைக் கோலங்களுக்கு மாற்றீடானதும், நடப்பியல் வயப்பட்டதுமான பொருள்கோடும் செயற்பாடுகளை வளர்க்க உதவுதல்.
4. திரிபுபடுத்தப்பட்ட அனுபவங்களை இனங்காண்பதற்கும் ; மாற்றியமைப்பதற்குமான கற்றலுக்கு இட்டுச்செல்லல்.

தமக்குத்தாமே பொறுப்பாக இருக்கும் நிலைக்குச் சீர்மியநாடிகள் இட்டுச் செல்லப்படுவர். தமக்குரிய தன்னியக்கச் சிந்தனைகள்மீது அவர்களுக்குக் கவனக்குவிப்பு ஏற்படுத்தப்படும்.

இந்தச் சிகிச்சைமுறையிலே சீர்மிய நாடியின் மொழித்தளத்திலே நின்று உதவும் முறைகள்

முன்னெடுக்கப்படும். சீர்மியரும், சீர்மிய நாடியும் ஒன்றிணைந்த முறையிலே செயற்படுவர். சீர்மியரின் மேலாதிக்க நிலைக்கு இடமில்லை. வழிகாட்டல் வழியான கண்டுபிடிப்புக்களுக்குச் சீர்மிய நாடிகள் இட்டுச்செல்லப்படுவர்.

சீர்மிய நாடிகள் ஒவ்வொருவருக்குமுரிய தன்னியக்கச் சிந்தனைகளின் இயல்பைக் கண்டறியுமாறு தூண்டப்பெறுவர். அதற்குரிய வழிமுறைகளாக வினாவுதல், துலங்கலை எழுதிக்காட்டல், பதகளிப்பை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துதல், சிந்தனைப் படிமங்களைக் குவியப்படுத்துதல், தம்மைத்தாமே நெறிப்படுத்திக்கொள்ளும் சிந்தனைகளிலே ஈடுபடவைத்தல் முதலிய ஊடுதலையீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சீர்மியநாடியின் தன்னியக்கச் சிந்தனைகளைக் கண்டறிவதற்கு அவரிடத்தே ஆழப்பதிந்துள்ள எதிர் நம்பிக்கைகள் தடையாக அமையும். தான் பிறரால் அங்கீகரிக்கப்படாதவர், தாம் தாழ்ந்தவர், முதலாம் எதிர் நம்பிக்கைகளை வரித்துக்கொண்டிருப்பர். உற்சாகமளிக்கும் வினாக்களை விடுத்தல், கருதுகோளைப் பரீட்சித்துப்பார்க்குமாறு செய்தல், நம்பிக்கைகளை மீள்வடிவாக்கல் முதலியவற்றால் ஆழ்ந்த எதிர்நம்பிக்கைகளை மாற்றியமைக்கலாம்.

அறிகை வழியாக உளவளத்துணை செய்தல் நவீன சீர்மியச் செயல்முறையாக மேலைநாடுகளில் உருவாக்கப்பட்டாலும், தமிழ் மரபில் அத்தகைய அணுகுமுறைகள் இடம்பெற்றுவந்துள்ளன. ஒருவர் தவறான எண்ணங்களை உருவாக்கிக்கொள்ளும் செயற்பாட்டினைக் கிராமிய மரபில் "வரிச்சு" என்று குறிப்பிடுவர். அவற்றை மாற்றியமைத்தல் "வரிச்ச விழ்ப்பு" எனப்பட்டது. தவறாகத் தகவல்களை உட்கொள்ளல் "கெடுபார்வை" எனப்பட்டது. இவ்வாறாகப் பல்வேறு நாட்டார் பதிவுகள் காணப்படுகின்றன.

## References:


Alford, B.A. and Beck, A.T .(1997) The Integrative Power of Cognitive Therapy, Newyork, Guilford.

Beck, A.T . (1991) Congitive therapy; A 30 year retrospective, American Psychologist, 46.

Beck, A.T . and Freeman, A et. sal , (2003) Cognitive Therapy and Personality Disorders, New york : Plenum

Beck, A.T . and Weishaar, M.E. (2008) Cognitive Therapy in Current Psycotherapies Corsini and Wedding (eds). C A. Thomas Books, Cole.

Gilbert, P. (2009) The Compassionate Mind,London: Constable.

Weishaar,M.E (1993) Arrow T.Beck , London : Sage.


-முனைவர், பேராசிரியர் சபா ஜெயராசா.

# ஆசிரியர்களின் உயர்தொழில் சார் சமூகமயமாக்கல்

கற்பித்தல் தொழிலில் ஈடுபடுகின்ற ஆசிரியர் ஒவ்வொருவரும் சிறந்த ஆளுமையுள்ளவர்களாக விளங்குவதற்கு உயர்தொழில்சார் சமூக மயமாக்கலுக்கு உட்படுதல் முக்கியமானது. ஆசிரியர்கள் தமது வகிபாகங்களை முதிர்ச்சியுடன் கூடியவகையில் முன்னேற்றகரமாக மேற்கொள்வதற்கு சமூகமயமாக்கல் துணையாகவுள்ளது. ஆசிரியர்களின் சமூக அந்தஸ்து மேம்படுவதற்கும் நன்மதிப்பு மிகுவதற்கும் இச்செயல்முறை அத்தியாவசியமானது. ஓர் ஆசிரியர் சமூகமயமாக்கலுக்குள்ளாகும் இயல்புகள் அவருடைய கற்பித்தல் கற்றல் செயல்முறைகளுடன் இணைந்தவை. சமூகமயமாக்கல் செயல்முறைகள் ஒவ்வொரு நாட்டினதும் கல்விமுறைமையுடன் கிட்டிய தொடர்புடையன அண்மைக்காலங்களில் நாடுகள் பலவற்றில் ஏற்பட்டுவரும் கல்விமுறைமை மாற்றங்கள் ஆசிரியர்களின் உயர்தொழில்சார் சமூகமயமாக்கலில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலுக்காக மட்டும் பயிற்சிபெறுதல் உயர்தொழிலுக்கான திறன்களை வழங்கிவிடுவதில்லை. தெளிவாக இனங்காணப்பட்ட கற்றல்- கற்பித்தல் செயல்முறைகளோடு தொழில்சார் முன்னேற்றங் களும் தொடர்ச்சியாக ஏற்படுதல் இங்கு முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆசிரியர்கள் பற்றி ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோருக்கும் ஆசிரியர்களின் உயர்தொழில்சார் சமூகமயமாக்கல் செயல்முறைகள் பிரதான ஆய்வுப்பொருளாக மாறிவருகின்றன. பாடசாலைகளில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தலைமைத்துவத்தை வழங்கும் முகாமையாளருக்கும் இவ்விடயத்தில்கூடுதலான ஆர்வமும் ஏற்பட்டு வருவதனைக் காண லாம்.



இக்கட்டுரையானது ஆசிரியரின் சமூகமயமாக்கல் தொடர்பான 1. உயர் தொழில்சார்சமூகமயமாக்கல்- வரைவிலக்கணம். 2. உயர் தொழில்சார் சமூகமயமாக்கல்- ஆராய்ச்சி மாதிரிகைகள் 3. தற்கால ஆராய்ச்சிகள் 4. இலங்கையில் நிலைமைகள் ஆகிய நான்கு விடயங்களில் கவனஞ் செலுத்துகிறது. அண்மைக்காலங்களில் பாடசாலைகளில், வகுப்பறைகளில் மாற்றும் வழிகளைத் தேடுதலுக்கும் அவர்கள் தமது வகிபாகங்களை அங்கீகரிக்கப்படும் விதத்தில் நிறைவேற்றுவதற்கும் உயர்தொழில் சமூகமயமாக்கல் தொடர்பான நோக்கு இன்றியமையாதது.

### உயர்தொழில்சார் சமூகமயமாக்கல் ஆராய்ச்சி மாதிரிகைகள்

சமூகமயமாக்கல் தொடர்பாக மேட்டன் (Merton,1957) தந்துள்ள வரைவிலக்கணமானது, " மக்கள் தாம் வாழும் குழுவில் அல்லது சமூகத்தில் உறுப்பினராவதற்குரிய பெறுமானங்களையும் மனப்பாங்குகள், அறிவு, திறன் மற்றும் ஆர்வங்களைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறை" எனச் சமூகமயமாக்கலைக் குறிப்பிடுகிறது. சுருங்கக்கூறுவதானால் கலாசாரத்தைக் கற்றுக்கொள்ளல் எனலாம். ஆசிரியரின் உயர்தொழில்சார் சமூகமயமாக் கலை அவ்வரைவிலக்கணத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கும போது ஓர் ஆசிரியரும் பெறுமானங்கள், மனப்பாங்குகள் மற்றும் ஆர்வங்கள் என்னும் விடயங்களுடன் அவற்றிலும் மேலாக கல்விசார் அறிவு, திறன் முதலியவற்றைப் பெற்றுக் கொள்வதையும்

குறிக்கும். மேட்டனுடையவரைவிலக்கணத்தின் அடிப்படைகளோடு இவ்விடயங்கள் இணைந்து செல்கின்றனவாயினும் ஆசிரியர் உயர்தொழிலைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சியாளரின் அவதானங்கள் இவற்றிலும் மேலாக உள்ளன. ஆசிரியர் தொழிலில் இடம்பெறும் இடைவினைத்தாக்கம், முரண்பாடுகளை எதிர்கொள்ளுதல் மற்றும் சூழமைவுசார்ந்த நிலைமைகள் ஆகிய விடயங்கள் பெரிதும் கவனத்துக்குள்ளாகின்றன. ஆசிரியர் உயர்தொழில்சார்ந்த ஆராய்ச்சிகள் இவ்விடயங்களில் கூடுதலான கவனஞ் செலுத்துகின்றன.

ஆசிரியர் உயர்தொழில்சார் சமூகமயமாக்கல் தொடர்பாக வெளிவந்த ஆரம்பகால ஆய்வுகள் பல தொழிற்பாட்டுவாத மாதிரிகைகளை அடிப்படையாகக் கொண்டவை. இவ்வாறான ஆய்வுகள் சமூகத்தை ஓர் உயிரியாகக் கருதிய வகையில் பகுப்பாய்வுகளை மேற்கொண்டிருந்தன. (Lecey, 1973) ஒரு சமூகமானது அதன் பிரதான நோக்கத்துடன் இசைவாக்கமுள்ள விதத்தில் தொழிற்படும். சமூகத்தில் பொறுப்புள்ள உயர்தொழில்களில் ஈடுபடுவோர் அச்சமூகம் எதிர்பார்க்கும். நடைமுறைகளுக்கு அங்கீகாரம் வழங்குவர். ஆசிரியர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதும் இந்நடைமுறைகளைப் பின்பற்றியே நிலவிவந்தன. 1950 மற்றும் 1960 களில் இத்தகையதொரு நோக்கு உயர்தொழில் தொடர்பாகஇருந்துவந்தது. ஆயினும்1970களில் இத்தகைய அணுகு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இங்கு பயன்படுத்தப்பட்ட மாதிரிகைகளில் ஆசிரியர்களின் அந்தஸ்தினை எதிர்வுகூறுவதற்கான நியதிகளை முன்வைப் பதற்கும் புதிய ஆசிரியர்களின் தராதரத்தினை மேம்படுத்துவதற்கும் துணையாக இருக்கவில்லை (Morrison, 1969) 1980களில் கல்வி முறைமைகளை மீளவடிவமைப்பதற்கு நாடுகள் பலவும் ஆர்வங்காட்டியமையால் ஆசிரியரின் உயர்தொழில் சார்ந்த விடயங்கள் ஆசிரியர் தொழிலை மேலும் பயனுள்ளதாக உருவாக்க முற்பட்டன.

புதிதாகச் சேருகின்ற ஆசிரியர் ஒருவர் உயர்தொழில்சார் ஆசிரியராக வருவதற்கு பலவகையான மாற்றங்களுக்கு உள்ளாதல் அவசியம். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் பெறுமானங்களை நடைமுறையில் பின்பற்றும் ஆசிரியர்களே பாடசாலைச் சமூகத்தினாலும் மதிக்கப்படுகின்றனர். மேலைத்தேயச் சமூகங்களாலும் ஆசிய சமூகங்களாலும் ஆசிரியரின் நடையுடை பாவனைகள்கூட கவனத்தில் கொள்ளப்பட்டன. மாணவர் சமூகம் ஆசிரியர்கள் மீது கொண்டிருந்த அபிப்பிராயங்கள் மற்றும் யதார்த்த பூர்வமாக அவர்கள் விருத்திசெய்துகொண்ட பதிற்குறிகள் முதலியனவே ஆசிரியருக்கான மதிப்பைத் தேடிக்கொடுத்தன.

ஏனைய உயர்தொழில்களிலும் பார்க்க ஆசிரியர்களிடையில் ஏற்படும் மாற்றங்கள் நிறுவனங்களின் செல்வாக்கு உட்பட்டவை. கற்பித்தலானது ஏனைய உயர்தொழில்களிலும் பார்க்க வித்தியாசமான நிலைமாற்றங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அந்தந்த நிறுவனங்களிலுள்ள சிரேட்ட ஆசிரியர்களின் அனுபவங்களும் வழிகாட்டல்களும் இங்கு முக்கியமானவை. சிரேட்ட ஆசிரியர்களைப் பின்பற்றுவதால் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. தொழிற்பாட்டுவதாக் கொள்கை மேற்கூறிய வகையிலேயே சமூகமயமாக்கல் பற்றிய கொள்கைகள் ஆசிரியனின் சமூகமயமாக்கலுக்கு உதவியுள்ள முறைபற்றியும் அறிதல் அவசிய மானது. 1960களில் பெக்கர் (Becker) மற்றும் றோங் (Worng) ஆகியோரால் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் முக்கிய மானவை. பெக்கருடைய ஆய்வில் மருத்துவத் துறை மாணவர்கள் தொடர்பான அவதானங்கள் முக்கிய இடம்பெற்றன. இம்மாணவர்களின் சமூக நடத்தைகளை ஆராய்ந்ததன்மூலம் பல சிக்கலான செயல்முறைகளை அவர்

விளக்கியிருந்தார். வளர்ந்தோர் சமூகமயமாக்கல் தொடர்பாக கலாசாரம், மறைநிலைக் கலாசாரம் சமூகமயமாக்கல் பற்றிய கருத்துகள் மற்றும் ஈடுபாடுகள் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மேற்கொண்ட ஆய்வுகள் ஆசிரியர்களின் உயர்தொழில் சமூகமயமாக்கல் தொடர்புமையமாகவும் அமைந்தன.

வளர்ந்தோரின் சமூகமயமாக்கல் தொடர்பான றோங் என்பவரின் கருத்துகள் பெக்கருடைய கருத்துகளிலும் பார்க்க சற்று வேறுபட்டவை. கலாசாரமானது மனித இயல்புகளை மீறும் ஒன்றென அவர் தெரிவிப்பதுடன் சமூகமயமாக்கல் என்பது முழுமைபெறாத செயல்முறை என்றும் அங்கு தனியாட்களின் தெரிவுகளின்படியே விடயங்கள் அமைகின்றன என்றும் றோங் வாதிடுகிறார். தனியாட்கள் வெற்றி- தோல்விகளை அடைவதும் இந்த அடிப்படையிலேயே அமைகின்றன என்பதுடன் ஆசிரியர்களின் தொழில்சார் சமூகமயமாக்கலிலுள்ள சிக்கல்தன்மையை மிகவிரிவாக விளங்கிக்கொள்ள பெரிதும் வழிகோலின. இவருடைய கருத்தானது சமூகமயமாக்கல் தொடர்பாக நிலவிய தொழிற்பாட்டுவாதக் கொள்கையில் முக்கியமான திருத்தங்களுக்குக் காரணமாக இருந்தன.

**தற்கால ஆராய்ச்சிகள்**

ஆசிரியரின் உயர்தொழில்சார் சமூகமயமாக்கல் தொடர்பான ஆய்வுகள் கவனஞ்செலுத்திவரும் முக்கியமான விடயங்கள் பின்வருமாறு

1. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் தராதரம்
2. இளைய ஆசிரியர்கள் வகுப்பறையில் எதிர்நோக்கும் சவால்கள் குறிப்பாக மாணவர்களின் கற்றலில் ஏற்படும் சிரமங்களும் அளவுக்கதிகமான வேலைப்பளுவும்
3. சக ஆசிரியர் மற்றும் நிருவாகத்தினரின் செல்வாக்குகள்

மேற்கூறிய விடயங்களுடன் ஆசிரியர்களை ஆட்சேர்க்கும் முறைகளும் பயிற்சிக்குத் தெரிவுசெய்யும் முறைகளும், ஆசிரியராகச் சேர்ந்து கொண்டமைக்கான நோக்கம், ஆசிரியர் தொழில்பற்றிக் கொண்டிருக்கும் கருத்துகள், ஆசிரியர் தொழிலை ஆரம்பிக்கும் பாடசாலை, கற்பித்தல் பயிற்சிகள், சேர்ந்துகொண்ட நிறுவனத்தின் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புகள், கற்பித்தலுக்கெனத் தெரிவு செய்யும் பாடங்கள் முதலான விடயங்களில் கவனங்கள் ஈர்க்கப்பட்டுள்ளன.

ஆரம்பகால மாதிரிகைகள் ஆசிரியர்களை அதிகாரமற்றவர்களாகப்பார்த்தன. இந்நிலையில் மாற்றங்கள் ஏற்பட மேற்கூறிய விடயங்கள் காரணமாயின. அண்மைக்காலங்களில் கல்விமுறைமையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மாணவர்கள் புதிய விடயங்கள் பலவற்றைக் கற்பதற்கானவாய்ப்புகளைத் தோற்றுவிப்பதுடன் அவர்களுடைய பெற்றோர் காலத்திலிருந்தும் வேறுபட்ட அனுபவங்களையும் மாணவர்களுக்குத் தந்து கொண்டிருக்கின்றன. மாணவர்களில் தேவைகளுக்கும் விருப்புக்கேற்ற விரிவடையத் தொடங்கியுள்ளன. இதற்கேற்றவாறு ஆசிரியரும் மரபுவழி அணுகுமுறைகளிலிருந்து மாற்றங்களுக்குட்பட வேண்டிய நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் உயர்தொழில்சார் சமூகமயமாக்கலில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இன்னொரு விடயம் நிறுவனத்தின் நோக்கங்களை அறிந்தவராகச் செயற்படுவதாகும். இது ஆசிரியரின் தனிப்பட்ட விடயமாக இருந்தாலும் மறுபுறத்திலே

குழுவின் செல்வாக்குக்கு உட்படுவதையும் குறிப்பிடலாம். நிறுவனங்களில் இடம் பெறும் இடைவினைத்தாக்கங்கள் சிக்கலான வையாக இருந்தாலும் அவற்றுக்கு மத்தியி லேயே ஆசிரியர்கள் மாற்றிக்கொள்ள வேண்டியவராகின்றனர். நிறுவனங்களில் நிகழுகின்ற பாரிய மாற்றங்களுக்கு மட்டும் பதிற்குறி காட்டுவோராக மட்டுமன்றி நுண்ணிய மாற்றங்களுக்கேற்பவும் செயற்படும் பாங்கினை விருத்திசெய்யும் தேவையை எதிர்பார்க்கிறது.

உயர்தொழில்கள் அந்தஸ்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. உயர்தொழில்கள் உயர் குழாத்தினருக்கு மட்டும் உரியவையல்ல சமூகத்திலுள்ள தனிப்பட்டவர்களும் உயர்நிறுவனங்களில் சேர்ந்து பயில்வதன்மூலம் உயர்அந்தஸ்துக்கான தகுதியை அடைகின்றனர். தனியாட்களின் எதிர்பார்ப்புகளாலும் அபிலாசைகளாலும் இவை உறுதிசெய்யப்படுகின்றன. இன்று உருவாகியுள்ள போட்டிச்சூழலில் தொழிலில் ஏற்படும் முன்னேற்றங்கள், அத்தொழில்கள் வாயிலாகக் கிடைக்கும் வருமானம் முதலியவை சமூகமயமாக்கலில் கணிசமான பாதிப்புகளை உருவாக்குகின்றன. இத்தருணத்தில் ஒவ்வொரு வரும் உயர்தொழில்சார் நியதிகளால் எதிர்பார்க் கப்படும் விடயங்களை வளர்த்துக்கொள்ள வேண்டியவராகின்றனர். இதனையே "எதிர்பார்க்கப்படும் சமூகமயமாக்கல்" (anticipted socialization) என்கின்றனர். ஏனைய உயர்தொழில்களில் எதிர்பார்க்கப்படும் சமூக மயமாக்கல் ஏற்படும் அளவுக்கு ஆசிரியர் தொழிலில் இடம்பெறுவதில்லை என்ற அவதானமும் உண்டு.

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர் தொழில் ஒரு சிறந்த தொழிலாக மாற்றம் பெற்றுள்ளது. முன்னைய காலங்களைப் போலன்றி சமூக அந்தஸ்து வேறுபாடின்றி தகைமையின் அடிப்படையில் ஆசிரியராக வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆசிரியர் தொழில் தொடர்பான அகக்காட்சியை அநேகமானோர் பாடசாலைக் காலத்திலேயே பெற்றுக் கொள்கின்றனர். அதனிலும் மேலாக விடய அறிவிருந்தால் ஆசிரியராக வரலாம் என்ற கருத்து இன்று வலுவிழந்து வருவதனையும் அவதானத்தில் கொள்ள வேண்டும். பல சமூ கங்களில் சமூக அசைவுக்கான வழிமுறையாகவும் இத்தொழில் அமைந்துள்ளது. சமகாலத்தில் ஆசிரியர் தொழில் பெண்களைப் பெரிதும் உள்வாங்கும் துறையாகவும் (இலங்கையில் 80%) மாறியுள்ளது. மருத்துவம் சட்டம் முதலியன ஏனைய உயர்தொழில்களுக்குச் செல்லமுடியாத தருணத்தில் ஆசிரியர் தொழில் மாற்றுத் தொழிலாக அமைகிறது.

**இலங்கையில் நிலைமைகள்**

இலங்கையில் ஆசிரியர் உயர்தொழில் சமூகமயமாக்கல் பெரிதும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாக மாறியுள்ளது. ஆசிரியர்களின் வெற்றிக்கு இதுவே அடிப்படையாக இருக்கும். இன்று ஆசிரியர் மத்தியில் நிலவும் விலகல் போக்குகளுக்கும் சமூகமயமாக்கலில் நிலவும் சீரின்மைகள் காரணமாக இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துகளில் "ஓர் ஆசிரியர் நூல்களைக் கற்பதாலோ அல்லது பரீட்சைகளில் சித்தியடைவதாலோ அவர் நல்ல ஆசிரியராகத் திகழ்வதில்லை. சமூக மற்றும் மனவெழுச்சிப் பண்புகளை விருத்திசெய்வதன் வாயிலாகவே நல்ல ஆசிரியருக்குரிய பண்புகளை விருத்தி செய்ய முடியும்" என Jod என்பவர் குறிப்பிடு கின்றார்.

ஆசிரியர்கள் பொதுவாக மாணவரது தேவைகள், விருப்பங்கள் ஊக்கல்கள், ஆற்றல்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை விளங்கிக்கொண்டு செயற்பட்டாலேயே வெற்றிபெறலாம் என நோவெல்ஸ் குறிப்பிட்டுள்ளார். இவற்றிலும் மேலாக ஆசிரியர்கள் தங்களைத்

தாங்களே அறிந்து கொண்டு சுயகௌரவம் கொடுப்பவராக இருத்தல் பற்றியும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஆசிரியர்கள் தாம் வாழும் சமூகத்திலும் பணியாற்றும் பாடசாலையிலும் பல பொறுப்புகளை ஏற்க வேண்டியவராகவும் அவற்றுக்கு வகைசொல்ல வேண்டியவராகவும் இருக்கிறார். ஆசிரியருடைய சிந்தனைகளும் செயற்பாடுகளும் சமூகம் எதிர்பார்க்குமளவுக்கு இருந்தாலேயே மேற்கூறிய விடயங்களை அவர்களால் சரிவர ஆற்றமுடியும். இத்தகைய பொறுப்புகள் கடந்தகால ஆசிரியர்களில் இடம்பெற்றிருந்த அளவுக்கு அப்பொழுது இல்லை என்னும் கருத்துகள் பரவலாகப் பரிமாற்றப்படுகின்றன. சமூகத்தின் தேவைகளையும் எதிர்ப்பார்ப்புகளையும் அறிந்து செயற்படும் ஆசிரியர்களே ஆசிரியர் சமூகம் தொடர்பாக எழுந்துவரும் இத்தகைய கருத்துக்களை மாற்றியமைக்க முடியும். இவையாவும் ஆசிரியரின் சமூகமயமாக்கலுடன் தொடர்புடைய விடயங்களே.

தொழில்வழங்கும் துறைகளில் கல்வித்துறை முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது. கற்றோர் வேலையின்மையை ஓரளவுக்கேனும் குறைக்கும்துறையென்ற வகையில் தொழிலைத் தெரிவுசெய்யும் எல்லோரும் அத்தொழிலை விரும்பித் தெரிவுசெய்யவில்லை என்பதுவும் வெளிப்படையான விடயமாகும். வேறு தொழில்களுக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகள் கிடைக்குமாயின் ஆசிரியர் தொழிலை விட்டுச்செல்லுதல் இதற்குச் சான்றாகும். இந்நிலைமை தொடருகின்ற வகையில் ஆசிரியர்கள் சமூகமயமாக்கலுக்கு உட்படுதல் கடினமான விடயமாகும்.

ஏனைய உயர்தொழில்களிலிருந்து ஆசிரியர் தொழிலுக்குரிய பண்புகள் வேறுபடுவதனால் அதனை ஓர் உப உயர்தொழிலாகவே கருதும் நிலை இன்னும் தொடர்கிறது. முதலாவதாக ஆசிரியர் ஆட்சேர்ப்பில் அறிவுத்தொகுதிக்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை. க.பொ.த உயர்தரம் அடிப்படைத் தகுதியாக இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது தெரியாது ஆசிரியர் எல்லோரும் பட்டதாரிகளாக மாறவேண்டும் என்னும் கொள்கை வலுப்பெற்று வருகிறது. தகைமையினை அடிப்படையில் ஆசிரியர்கள் மத்தியில் வேறுபாடுகள் நிலவுமிடத்து சமூகமயமாக்கல் செல்முறைகள் பாதிக்கப்படும்.

ஆசிரியரின் விருத்தி அவருடைய தனிப்பட்ட ஆர்வத்தில் தங்கியுள்ளது. ஆசிரியர் தமது தொழில்சார் அறிவு மற்றும் அனுபவ விருத்திக்கு எப்பொழுதும் பயிற்சி நிறுவனங்கள் வழங்கும் கற்கை நெறிகளில் தங்கிருக்க முடியாது. அறிவு விருத்தியில் ஆசிரியருடைய அக மற்றும் புற ஊக்கல்களுடன் கூடியவராக ஈடுபாடுகாட்டுதல் முக்கியமானது. தமது அறிவினை இற்றைப்படுத்தும் ஆசிரியர்கள் எத்தனை சதவீதத்தினர் உள்ளனர் என்பதுவும் எம்முன்னுள்ள வினாவாகும். பயிற்சியைப் பொறுத்தவரையிலும் நிறுவனங்கள் வழங்கும் குறுங்கால மற்றும் நீண்டகால பயிற்சிகளைப் பெற்றபின்னர் அவற்றினை மேம்படுத்தும் நோக்கில் செயற்படும் ஆசிரியர்களும் குறைவு . தொடருறு ஆசிரியர் கல்வி என்பது பற்றிய விளக்கமின்றிப் பலர் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் பலர் சேவைக்காலத்திலே தமக்குக் கிடைக்கும் கற்கைநெறிகள் பயிற்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தாமல் தப்பித்துக் கொள்பவர்களாகவும் அவ்வாறு பங்கு கொள்ளாமைக்குப் பல தனிப்பட்ட மற்றும் நிறுவனஞ் சார்ந்த காரணங்களைத் தெரிவிப்பதுடன் நின்றுவிடுகின்றனர். தொடர்ச்சியான செயற்பாடுகள் இல்லாத நிலையில் உயர்தொழில்சார் சமூகமயமாக்கல் சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறியாகும்.

ஆசிரியர்கள் தொழிலுக்கான பெறுமானங்களைப் பேணுவதில் ஆர்வமின்மை சுய ஒழுக்கம் மாணவர் ஒழுக்கவிழுமியங்கள், முதலிய

விடயங்களில் சீர்குலைவுகளை உண்டாக்குகின்றன. அதன் விளைவாக பாடசாலையும் சமூகமும் பாதிக்கப்படுவதால் எதிர்மறைச் சமூகமயமாக்கல் இடம்பெறுகிறது. கல்வியினால் சமூகம் அடைய விரும்பும் விளைவுகளை இவை பெரிதும் பாதிக்கின்றன. பாட அடைவை மேம்படுத்துவதில் நிலவுகின்ற அக்கறையும் அதனை நோக்காகக் கொண்ட உபாயங்களும் தனிமனித ஒழுக்க விழுமியங்கள் குறித்து ஒருமுகப்படுத்தப்படுவதில்லை.

ஆசிரியர்கள் மத்தியில் சான்றிதழ்களைச் சேர்ப்பதில் உள்ள ஆர்வம் பெருகிவருகின்றது. சான்றிதழ்களைப் பெறுதல் முக்கியமான விடயம் என்பதனை மறுப்பதற்கில்லை. ஆயினும் அச்சான்றிதழைப் பெறுவதற்கான நோக்கில் தாம் பெற்ற அறிவையும் அனுபவங்களையும் மாணவருடைய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பிரயோகிக்கின்ற மனப்பாங்கு குறைந்து செல்கின்றது. ஆசிரியரின் உயர்தொழில்சார் சமூகமயமாக்கலில் அத்தகைய மனப்பாங்கும் அதன் வழி செல்வாக்குக்கு உள்ளாகும் நடத்தைகளும் கல்வியின் உண்மையான நோக்கங்களைப் பாதிக்கும். கலைத்திட்டத்தின் மூலம் அறிமுகமாகும். எத்தகைய சிறந்த விடயங்களையும் இத்தகைய செயல் புறந்தள்ளிவிடும். எமது வகுப்பறைகளிலும் பயனுள்ள விதத்தில் ஆசிரியர்கள் மற்றும் விளைதிறனுள்ள விதத்தில் செயற்படுவதற்கும் சமூகத்தின் நன்மதிப்பைப் பேணும் பொருட்டும் தம்மைச் சமூகமயமாக் கும் உபாயங்களைக் கடைப்பிடித்தல் இன்றியமை யாதது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

பேராசிரியர் மா. கருணாநிதி
*கல்விப்பீடம் , கொழும்புப் பல்கலைக்கழகம்*

# குடும்பம், தலைமுறை, சமூக அடுக்கமைவு என்பன கல்விச்செயல்முறையில் ஏற்படுத்தும் தாக்கங்கள் சில அவதானங்கள்:

### அறிமுகம்

கல்வியில் முதலீடு செய்தல், கல்வியின் வினைத்திறன்மூலம் பெறக்கூடிய நன்மைகள்: குறிப்பாக, பொருளாதார மற்றும் சமூக நன்மைகள் பற்றி நவீன அபிவிருத்திக் கொள்கை வகுப்பாளர்கள்மட்டத்தில் அண்மைக்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

தரமான கல்வி பெறுபவர்கள் நியாயப் படுத்துதல், அறிவுத்திறன்கள் அதிகரித்தல், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், மொழி மற்றும் கணிதத் திறன்களை அதிகரித்தல் போன்ற பல ஆற்றற் பண்புகளை அதிகரித்துக்கொள்ள முடியும்.

சிறந்த மனித மூலதனமாகவும், உற்பத்தித்திறன் அதிகரிக்கும் ஆற்றலாகவும் , வாழ்நாள் முழுவதும் அதிக வருமானத்தை அதிகரிக்கும் ஆற்றலாகவும் கல்விகற்றல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உயர்ந்த தரத்திலான கல்வி ; தலைமுறை மாற்றங்களை யும், உயர்தொழில் நோக்கிய அசைவுகளையும் உறுதிப்படுத்துகின்றது.

இதனால் மரபுவழிச் சொத்துடை மையாளர்களும், ஆட்சிப்பணித்துறை சார்ந்த மேல்வகுப்பினரும், தொழில்நுட்ப நிபுணத்துவத்திலே தனியுரிமை கொண்டுள்ள தொழில்நுட்ப அறிவியலாளர்களும், உயர்கல்விபெற்ற மேட்டுக்குடியினரும் தரமான உயர்கல்வியிலே தமது மேலாண்மையைத் தொடர்ந்து பேணுதற்கு முயல்கின்றனர்.

இதனால் கிராமிய விவசாயிகள், நகர்ப் புறத்தொழிலாளர்களும் வலிமைமிக்க கற்கைநெறிகளிலும், உன்னதமான கல்வி நிறுவனங்களினதும் வாய்ப்புப் பெறமுடியா தவாறு விலக்கப்படுகின்றனர்.



இவ்வாறு கல்வியின் நலன்களைத் தலைமுறை தலைமுறையாக, பாரபட்சமான முறையிற் கவனமாகப் பங்கீடு செய்வதற்குரிய மாதிரியில் நாட்டின் பொருளாதார, நிர்வாக முறைகளும், அவை சார்ந்த கொள்கைகளும் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ஒரு தலைமுறைக்குள்ளேயும், பல தலைமுறைகளுக்கிடையில் கல்விசார் பாரபட்சங்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

செல்வந்த நாடுகள் மற்றும் வறிய நாடுகள் தொடர்பான கல்விசார் ஏற்றத்தாழ்வுகளும் வறிய நாடுகளுக்குள்ளேயே பல சமூகக் குழுக்களிடையே பாரபட்சமான நலப்பகிர்வு களும் தொடர்ந்து நிலவுகின்றன.

இவை தொடர்பான பல்வேறு உயர்மட்ட அறிவுசார் கலந்துரையாடல்களும், ஆய்வுகளும் தொடர்ந்து நிகழ்ந்துவருகின்றன.

இந்தப்பின்னணியிற் குடும்ப, சமூக அடுக்கமைவு என்பன கல்விச் செயன்முறைகளி லும், கல்வி நலன்களில் உரிமைகொள்வதிலும் எத்தகையதாக்கவிளைவுகளைஏற்படுத்தியுள்ளன என்று இங்கு ஆராயப்படுகின்றது.

### கல்வி வாய்ப்புக்களிலான முன்னுரிமைகள்

எல்லா நாடுகளும் தமது அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குப் பொருளாதாரத் துறைகளில் முதலிடுவது போலவே ; கல்வி நலத்துறை போன்ற சமூகத் துறைகளிலும் முதலிடுவதும் அவசியம் என்பதை உணர்ந் துள்ளன. குறிப்பாக, உலகமயமாதல்

மற்றும் அறிவுப் பொருளாதாரம் நோக்கிய தளமாற்றத்திற்குட்படுகின்ற நிலைமைகளிலிருந்து விலகமுடியாத சூழல் வளர்ந்து வரும் நிலையிலே சமூகத் துறைகளில் முதலிடல் சார்ந்த முன்னுரிமையும் ,முக்கியத்து வமும் ,கூர்மையடைந்து வருகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளினதும், வளர்முக நாடுகளினதும் கல்வித்துறை தொடர்பான கண்ணோட்டமும், கருத்தியலும் 1990களிலிருந்து குறிப்பிடத்தக்க மாறுதல்களுக்கு உட்பட்டு வருகின்றன. பொருளாதார உற்பத்தித்துறைகளில் முதலி டப்படும் நிதிவளங்களுக்குரிய விளைவுகளை உறுதிப்படுத்துவதற்குச் சமகாலத்திற் சமாந்தரமாகக் கல்வித்துறையிலான முதலீடும், முதலீடு தொடர்பான கருத்தியில் மாற்றங்களும் அவசியம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பொருளாதாரத் துறைகளில் வளர்ச்சி, வினைத்திறன், விளைதிறன், என்பவற்றை அதிகரிப்பதற்கு உதவக்கூடிய பல்வகை ஆற்றல்மிக்க, மாற்றங்களை உள்வாங்கக்கூடிய மனிதவளத்தைக்கல்வித்துறை தொடர்ச்சி யாக வழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இதன்படி பொருளாதார வளர்ச்சிக்கான ஆதாரத் துறையாகக் கல்வி நோக்கப்படுகின்றது.

அறிவுப்பொருளாதாரம் நோக்கிய வளர்ச்சிப்போக்கிற் கல்வித்துறையும் பொருளாதாரத்துறையாக மாற்றம்பெற்று வருகின்றது. குறிப்பாக; முதலீடு, இலாபம், போட்டி, சந்தைநிலைமை போன்ற அடிப்படைகளில் தனியார் பொருளாதாரத் துறையாகக் கல்வித்துறை வளர்ச்சிபெற்று வருகின்றது. இதற்கும் மேலதிகமாக தொழில் வாய்ப்பு, தொழில்நுட்ப முன்னேற்றம் அந்நியச் செலாவணி வருவாய் போன்ற அடிப்படைகளிலும் கல்வித்துறை; பொருளாதாரத்துறை மாதிரிக்கு மாறிவிட்டது. பொருளாதார உற்பத்தித் துறைகளில் முன்னேற்றத்துக்குத் துணை செய்வதான ஒரு வகிபாகத்தையும், நேரடியாகப் பேரினப்பொருளாதார மாறிகளை மாற்றியமைக்கும் வகிபாகத்தையும் கொண்டதாகக் கல்வித்துறை வளர்ந்துள்ளது.

பல்வேறு நாடுகளும்பலமான பொருளாதாரத் துறைகளின் நீண்டகால விளைதிறனையும், துரித முன்னேற்றத்தையும் நிச்சயமற்றதாக்கக்கூடிய நிலைமைகளைப் பலவீனமான கல்வித்துறைச் செயலாற்றல்களினால் உருவாக்கமுடியு மென்பது உணரப்பட்டு வருகின்றது.

கல்வித்துறை முக்கியத்துவம் அதிகரிக்கப்படுகின்ற நிலைமைகளின்போது, அவற்றின் விளைவுகள் (out comes) பற்றிய கண்ணோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கல்வியானது திறமை மிக்கவர்களை உருவாக்குவதையே முதன்மை இலக்காகக் கொண்டு தொழிற்பட்டு வந்துள்ளது. கல்வித்தகைமைகளைக் குறிப்பாக, பரீட்சைப் பெறுபேறுகளை முன்னிலைப்படுத்தும் சமூகம் (Credential Society) மேலாண்மை கொண்டு இயங்கியதோடு பல நிலைகளிலும் கல்வி நிறுவனங்கள், கல்வித்தீர்மானங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தியும் வந்துள்ளது. திறமை என்பது மாத்திரமே மேன்மையான சமூக முன்னுரிமையாக இருந்துவந்துள்ளது. இதனால் சிக்கனம், வினைத்திறன், விளைதிறன் என்பவற்றை அதிகரிப்பதே கல்வித்துறையின் குறிக்கோள்களாக இருந்துவந்துள்ளது. கல்வித்திறமையாளர்கள் பொருளாதார, சமூக, அரசியல் செயலமைப்பு (Systems) க்களில் அதிஉயர் அடுக்குநிலையிலே தங்களை நிலைநிறுத்திக்கொண்டு, அத்தகைய மேலாதிக்கத்தைத்தொடர்ந்து தக்கவைப்பதற்குரிய மாதிரியிற் கல்வி இலக்குகளை வடிவமைத்தும் வந்தனர். கிறோஜோ (Sainon Kyrgiou 2008) ,ஹல்சே (Halsey

; 1993) , லெத்வூட் (Leath wood ; 2004) மோர்லோ மற்றும் அன்ஸ்லே (Morly and Aynsley :2007) போன்றோரது ஆய்வுகள் இக்கருத்துக்களை ஆதரிக்கின்றன.

இத்தகைய நிகழ்போக்குகளினாற் கல்வித்துறை பன்முக மாதிரிகளில் வளர்ச்சியடைந்தபோது சமூகநீதி குலைந்து போய், சமூக மற்றும் அரசியல் அமைதியின்மைகள் வளர்ச்சிபெற்றன. கல்வித்துறையில் வளர்ச்சியின் பயன்கள் நியாயமான முறையில் நாட்டின் எல்லா சமூகக் குழுக்களுக்கும் பகிரப்படாத போது, கல்வித்துறைக்கு எதிரான நெருக்கடிகள் பரவலானதோடு தீவிரத்தன்மைமிகுந்து முழுமையான பொருளாதார வளர்ச்சி நிலைமைகளுக்கும் , அரசியல் உறுதிப்பாட்டுக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தலாயிற்று. மாணவர் தொழிற்சங்கங்கள், ஆசிரிய தொழிற்சங்கங்கள் பெற்றோர் அமைப்புக்கள், குடியியல் சமூகங்கள் (Civil Societies) என்பன தேசிய சொத்துக்களுக்கு அழிவையும், அமைதியான பொருளாதார, சமூகச்செயற்பாடுகளுக்குரிய தடைகளையும் அதிகரிக்கச் செய்வதன்மூலம் கல்வித்துறையை மாத்திரமன்றி பொருளாதாரத் துறைகளையும் சவால்களுக்குட்படுத்தின.

கற்கும் திறன் மற்றும் பரீட்சை அடைவு என்பது தனியே மாணவனது தனிப்பட்ட மதிநுட்பத்துடனும், கற்கும் திறனுடனும் மாத்திரம் தொடர்புபட்டவையல்ல; அவை குடும்பங்களின் பொருளாதார அந்தஸ்து; பெற்றோரின் கல்விமட்டம்; பெற்றோரின் தொழில் மாதிரிகள்; பிள்ளைகள் வாழும் சமூகத்தின் முன்னேற்றம் பற்றிய வேணவா, ஊக்கமளிக்கும் குடும்ப மற்றும் சமூகச் சூழல் போன்ற பல காரணிகளுடனும் தொடர் புடையன என்று; பல கல்வியியலாளர்கள் தமது ஆய்வு முடிவுகளை வலியுறுத்தினர். கலே (Trevor Gale (2011), செலர் (Sam Sellor;2011), ரப்போ (CarloRaffo;2011) போன்றோர் அண்மைக்காலத்தில் இக்கருத்துக்கு அதிகமுக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்துவருகின்றனர்.

தனிமனிதர்களினால், அல்லது குடும்பங்களினால் குறுங்காலத்திலே தமது தனிப்பட்ட முயற்சிகளினால் மாத்திரம் மாற்றியமைக்கமுடியாத பல தகைமைகளைக் குறிகாட்டிகளாகப் பயன்படுத்துவதன்மூலம் கல்வியின்மீதான தமது உரிமையை மறுக்கமுடியாதென்ற கருத்து எதிர்ப்புணர்வுடன் தீங்குறுகின்ற சமூகக்குழுக்க (Valnerable groups) ளிடமிருந்து எழுந்தது. இது அரசியல் இயக்கங்களின் (Political Morements) தேசிய நெருக்கடிகளாக விரிவுபடுத்தப்பட்டு, முன்னிலைப்படுத்தப்பட்டன. இதன் காரணமாகத் தேசிய கல்விக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படலாயின. அனைவருக்கும் கல்வி (Education for all) அனைவருக்கும் உயர்கல்வி (Hight Educationforall) போன்ற சர்வதேசிய கல்விக் கொள்கைகள் முன்னிலைப்படுத்தப்பட்டன. எல்லோருக்குமான கற்றல் (Learning for all ; World Bank 2011) என்ற கல்வித்தந்திரோபாயமும் இத்தகையதே. பரவலாகவும் , ஒன்றிணைந்த வகையிலும் வளர்ச்சிபெற்ற அனுகூலம் பெறாத சமூகக் குழுவினருக்குச் சார்பான இத்தகைய முன்னேற்றங்களினால் கல்வியின் குறிக்கோள்களிற் சரிநிகர் (Egnality) மற்றும் சமத்துவம் (Equality) பற்றிய தகுதியும் பிரமாணங்களும் (Criteria) உள்ளடக்கப்பட்டன.

பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட பின்னர் அத்தகைய வளர்ச்சியிலிருந்து சமூகநலன்களும், சமூகநீதியும் பரவல் விளைவுகளாக மக்களைச் சென்றடையும் என்ற கருத்தியல் வளர்முக நாடுகளைப் பொறுத்துச் சாத்தியமாகவில்லை. இதனால் பொருளாதார வளர்ச்சி தொடர்பான முனைப்புக்களில் அக்கறை காட்டும் அதே காலத்தில். சமாந்தரமாகச் சமூக நீதிக்கான முயற்சிகளும், மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கொள்கை அங்கீகாரம் பெற்றது. இதற்கமைவாகவே கல்வித்துறையிலும்

, கல்வி இலக்குகளாக வினைதிறன், விளைத்திறன், தரம் (Quality) என்பவற்றுடன் சரி நிகர் (Equality) மற்றும் சமத்துவம் (Equality) என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எல்லா நாடுகளிலும் கல்வி நிறுவனங்களும், கல்விச்செயற்றிட்டங்களும், இத்தகைய இலக்கு களை அடையும் வகையில் வளங்களைத் திரட்டி, ஆளணியை வழிப்படுத்தி, தீர்மானங்களை மேற்கொண்டு, தேவையான மாற்றங்களையும் உள்வாங்கிச் செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய முயற்சிகள் தோல்வியுறும்போது தேசிய வளங்களிலிருந்தும், சர்வதேசக் கடன் மற்றும் கொடைகளிலிருந்தும், கல்விமீது மேற்கொள்ளப்படும் முதலீடுகள் விரயமாகி விடுகின்றன. இதன் காரணமாக வளர்முக நாடுகள் வளர்ச்சியின்றியும்; சமூகநீதி குலைந்தும் துன்புறுவதோடு; பொருளாதார வளர்ச்சிக்குக் கிடைத்திருக்கக்கூடிய வளங்களையும் இழந்து நிற்கின்றன.

எல்லா நாடுகளினதும், சமூக அடுக்கின் எல்லா நிலைகளிலும் வாழுகின்ற மக்கள் அனைவரும், சாதகமான பொருளாதார ,சமூக மாறுதல்களினாலே சமமான உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறக்கூடியவகையிற் கல்வி முறைமை முகாமை செய்யப்படவேண்டும். இத்தகைய இலக்கு நோக்கிய செயற்பாட்டுப் பொறிமுறையில், சமத்துவம், மற்றும் சரிநிகர் என்பவற்றை உறுதிப்படுத்துவதிற் கவனம் செலுத்தப்படுகின்றது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவுவதைப் போலவே, வளர்முகநாடுகளிலும் கல்வியை வழங்கி, கண்காணித்து, வழிப்படுத்தி, நிதிவழங்கி மாற்றங்களை ஏற்படுத்தி, தகைமைகளை அங்கீகரித்து வருவனவாக அரசாங்கங்கள் நிலவுகின்றன. இதே அடிப் படையிற் கல்வித்துறையில் நிலவுகின்ற ஏற்றத் தாழ்வுகளையும், வேறுபாடுகளையும் குறைக்கும் பணி இலக்குடனும், அரசாங்கங்கள் கல்வியைத் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்துகின்றன. வாக்குரிமைப் பலத்தைப் பயன்படுத்திக் கல்வியிற்சரிநிகரையும், சமத்துவத்தையும் பெற்றுவிடும் இலக்குடன் பயனாளிகளான பொதுமக்கள் செயற்படுகின்றனர். எனினும் இந்த அரசு- குடிமக்கள், வழங்குநர்- பெறுநர் என்ற இந்தத் தொடர்பு அல்லது உறவுமுறையடிப்படையிற் கல்வித்துறையிற் சரிநிகர் மற்றும் சமத்துவத்தை நிலைநிறுத்து வதற்குரிய முயற்சிகள் சிறிய முன்னேற்றமும் , பெரிய பின்னடைவையும் கொண்ட ஒடுபாதையில் முயன்று வருகின்றனர்.

இத்தகைய இலக்கு நோக்கிய முயற்சிகளிலான பல்வேறு தடைகள், பிரச்சினைகள் பற்றி ஆராய்வது அவசியமாகின்றது.

**கல்வியியல் ஆய்வின் முக்கியத்துவமும் நோக்கமும்**

கிடைக்கின்ற பல்வேறு வகையான சர்வதேச நிறுவனங்களினதும்; ஆய்வாளர்களினதும்; ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் அபிவிருத்திக்குரிய நச்சு வட்டத்திலிருந்து வெளியே வருவதற்குத் தொடர்ந்து முயன்று வருகின்ற மூன்றாம் உலக நாடுகளிற் சரிநிகர் சமத்துவம் தொடர்பாக நிலவைகள் நிலைகள், நெருக்கடிகள்பற்றி இங்கு கலந்துரையாடப்படுகின்றன.

பயனாளிகளான மாணவர்கள் சார்பாக அவர்களது குடும்பங்கள் கல்வி தொடர்பான தமது உரிமைகளைப் போதியளவில் விளங்கிக்கொண்டவர்களாக இல்லாதிருப்பது சரிநிகர் மற்றும் சமத்துவம் தொடர்பான கவனக்குவிப்பை அரசாங்கம் தொடர்ச்சியாகக் கொண்டிராமைக்கு உதவி செய்துள்ளது. ஆனால், அமைப்புரீதியாக மாணவர் செயற்படும் போது அரசியற் கட்சிகளின் அல்லது குடியியல் சமூகங்களின் துணையுடன் இத்தகைய நெருக்கடிகளுக்கான தீர்வுகள் தொடர்பான அவசியத்தையும், அவசரத்தையும் மாணவர் அமைப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

தேசிய ரீதியான நாட்டம் என்பதை விடவும் பிராந்திய ரீதியான (Regional Organizations) அமைப்புக்களும், சர்வதேச ரீதியான அமைப்புக்கள் மற்றும் மாநாடுகள் என்பனவும் இவை தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்திவருவது இவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைகின்றது.

யுனெஸ்கோ நிறுவனம் மற்றும் சார்க் அமைப்புப் போன்றன தொடர்ச்சியாக இவை சார்ந்த முன்முயற்சிகளில் ஈடுபட்டே வருகின்றன. நாடுகளின் வளர்ச்சித் தேவைகளுக்கு உதவக்கூடியவர்களாகக் குழந்தைகளையும், இளைஞர்களையும் மாற்றுவதும், கல்வியின் பயன்கள் மனிதாபிமானத்துக்கு முரணாக ஓரிடத்தில், வலிமையான சமூக வகுப்பினரது கையிற் குவிந்து வருவதைத் தடுப்பதும் அவசியம் என்பதை இவை வலியுறுத்தி வருவதற்கான சான்றாதாரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

கல்வியியலாளர்களினதும், பொருளியலாளர்களினதும், சமூகவியலாளர்களினதும் ஆய்வுக் கவனத்துக்குரிய விடயங்களிற் கல்வியிலானசரிநிகரும், சமத்துவமும் தொடர்ந்து முக்கியத்துவம் பெற்றே வருகின்றன. இந்த ஆய்வும் இதே திசையில் கல்வியில் நிலவுகின்ற அமைப்பு ரீதியிலான வேறுபாடுகளைக் குறைப்பதிலான தேவைகள், அவை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றது.

**கல்வியும் வருமான சமத்துவமும்**

தனிநபர்களின் கல்விமட்டத்துக்கும், தனிநபர்கள் தமது வாழ்நாளில் உழைக்கும் வருமானத்துக்குமான நேர்முறைத்தொடர்பு பற்றிப் பல்வேறு நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், அவற்றின் முடிபுகளும் இருபதாம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

பிளாக் (Blaug;1972), வைல்ஸ் (Wiles:1974), டோரே (Dore:1976) போன்ற பல ஆய்வாளர்கள் இவை தொடர்பாக முரண்பட்ட தொடர்புபற்றிய விளக்கங்களையும் வழங்கியுள்ளனர்.

கல்விவாய்ப்புக்களில் ஏற்பட்ட விரிவாக்கத்துக்கும், வருமான ஏற்றத்தாழ்வைக்குறைப்பதற்குமான முயற்சிகளுக்குமுரிய தொடர்புபற்றிப் பல்வேறு வகையான முடிவுகளை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இவை தொடர்பாக லெவின் (Keelth Lewin), லிற்றில் (Angela Little) *1982*, கொல்கிளோ (Christopher cloclough) போன்றோர் பல கேள்விகளை முன்வைத்துள்ளனர்

ஆரம்ப பாடசாலைக்குச் செல்லுதல் முழுமையாகச்சமூகத்தில் வருமானப்பங்கீட்டில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றதா?

பல்கலைக்கழகக் கல்வி விரிவாக்கம் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகின்றதா?

எல்லாக் கல்வி மட்டங்களிலும் ஏற்படும் சமகால மாற்றங்கள் தொடர்ச்சியாக அதற்கே உரித்தான மாதிரிகளில் வருமானப் பங்கீட்டில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றதா?

பீல்ட்ஸ் (Fields; 1980) கல்விக்கும், வருமானப்பங்கீட்டுக்குமான ஆய்வுபற்றிப் பின்வருமாறு தொகுத்தளிக்கின்றார் என லெவின், லிற்றில், கொல்கிளோ (1982) சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியிற் பல்வேறு நாடுகளிற் கிடைக்கும் தகவல்களை ஒப்பிடுவதன் மூலம் சராசரி கல்வி மட்டத்துக்கும் வருமான சமமின்மைக்குமிடையில் தொடர்புபற்றிய ஆய்வு.

**கல்விப்பரம்பலுக்கும், வருமானப் பங்கீட்டுக்குமான தொடர்புபற்றிய ஆய்வு**

ஒரு நாட்டிற்குள் நிலவும் சராசரி கல்வி மட்டத்துக்கும் வருமானப் பங்கீட்டிலான சமமின்மையின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி தொடர்பான ஆய்வு.

கல்வி வழங்குதலில் நிலவும் பங்கீடு தொடர்பான மாற்றங்களுக்கும்; நாட்டிற்குள் வருமானப் பங்கீட்டில் நிலவும் மாற்றங்களுக்குமான தொடர்புபற்றிய ஆய்வு.

போதிய தரவுகள் இன்மையால், முதல் இரண்டுவகையான ஆய்வுகள் போதியளவினதாக இருக்கவில்லையென்றும்; மூன்றாவதுவகை ஆய்வு பிறேசில் நாடு தொடர்பானதாகக் காணப்படுகின்றது என்றும் குறிப்பிடப்படுகின்றது. பொதுவாக, கல்விக்கும், வருமான பங்கீட்டுக்குமிடையிலான தொடர்புபற்றிய ஆய்வுகள் எதிர்மறை முடிவுகளையே வெளிப்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகின்றது. சைமன்ஸ், அலெக்சான்டர் (Simmons and Alexander ;1980) ஆகியோர் தமது ஆய்வுகளினடிப்படையில் எல்லா மட்டங்களினதுமான கல்வி விரிவாக்கம் வருமான சமமின்மையைக் குறைப்பதற்கு மாறாக அதிகரித்தே வந்துள்ளது என்றனர் ஊழியச்சந்தையில் நீடித்து நிலைத்திருக்கும் வேலை தொடர்பான பாகுபாடுகளினடிப்படையிற் சமமின்மையானது கல்வியினால் தோற்றுவிக்கப்படுவதாக கார்னோய் (Cornoy ;1967) குறிப்பிடுகின்றார்.

கல்வியை மாற்றுவதால் வருமானச் சமமின்மையை மாற்றிவிடலாம் என்பதில் அதிக நம்பிக்கை கொள்ளமுடியாதென ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. கல்விமட்டங்கள் ஒரு பங்கீட்டுக் குறிகாட்டியாக முடியாது என்றும், வாய்ப்புக்களின் பங்கீட்டை மாற்றுவதாலேயே வருமான பங்கீட்டிலே தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

இலங்கை மற்றும் பிலிப்பீன்ஸ் நாடுகளிற் கல்விக்கும், வருமானப்பங்கீட்டுக்குமான தொடர்புபற்றி ஆராய்ந்த லியோனர் மற்றும் ரிச்சாட்ஸ் (Leonor and Richards ;1980) முழுமையான வேலை சார்ந்த வருமானப் பங்கீடு என்பது வேலைப்பங்கீடு மற்றும் வேலைமீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் சார்ந்தே காணப்படும் கல்வி மட்டங்கள் சார்ந்து, வருமானப்பங்கீடு தீர்மானிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் தரவுகள் போதியளவு கிடைப்பதில்லையென்றும் அவர்கள் விளக்குகின்றனர். கல்விச் சொத்துக்களின் பரம்பலை (Distributon of Edutafronal assets) தொழிலாளர்களின் வேலைக்குரிய வருமானங்களையும் அவர்கள் ஒப்பிட்டனர். இரு நாடுகளிலும் கல்வி மற்றும் வருமானப் பங்கீடுகள் ஆய்வுக்குரிய காலத்தில் மேம்பட்டிருப்பதையும் அவர்கள் விளக்கியிருந்தனர். வளர்முக நாடுகளில் கல்விக்கும் வருமான பரம்பலுக்குமான தொடர்பைத் தீர்மானிப்பதிற் பின்வரும் காரணிகள் முக்கியபங்கு வகிப்பதாக லெவின், லிற்றில், கொல்கிளோ ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

- வரி விதிப்பிலான வேறுபாடுகள்
- வருமானம் பற்றிய கொள்கை
- தொழிற் சங்கங்களின் பலம்
- சங்கங்களின் பேரம் பேசும் ஆற்றல்
- சர்வதேசத் தொழிற்சந்தையுடன் உயர்தொழில்
- வல்லுனர்களைக் கொண்டுள்ள தொடர்பு
- பல்வேறு மட்டத் தகுதிகளுக்குரிய விலைகளைச் சார்ந்து நிலவுகின்ற வேறுபட்ட வரலாற்று மரபுகள்

கல்வி, வருமானம் தொடர்பாக நாடுகளில் நிலவுகின்ற உள்ளார்ந்த கொள்கைத் தாக்கங்கள்; கல்வி, வருமானம் தொடர்பாக நாடுகளில் நிலவுகின்ற உள்ளார்ந்த கொள்கைத் தாக்கங்கள்; கல்விநிறுவனங்களின் பொறிமுறைகள்; ஒவ்வொரு நாட்டுக்குமுரிய வரலாற்று அம்சங்கள் போன்ற பலவும் கல்விப் பரம்பலுக்கும், வருமானச் சமமின்மைக்குமான தொடர்பைத் தீர்மானித்துவருகின்றன.

பாடசாலை செல்லுதல் என்பது, குறைந்த வேதனம் தரும் தொழில்கள், உயர்ந்த வேதனம் தரும்தொழில்கள்என்பனஎத்தகையவர்களுக்குக் கிடைக்கும் என்பதைத் தீர்மானித்தாலும்; வேலைசார்ந்த வருமானப்பங்கீட்டைப்பெரிதும் தீர்மானிப்பதில்லை என்று வரிசைக்கோட்பாடு (Queue Theory) விளக்குகின்றது. வருமானப் பங்கீடானது தொழில் கிடைக்கும் வாய்ப்பு மற்றும் அத்தகைய வேலைகளுக்குரிய வருமானங்கள் என்பவற்றின் விளைவாகவே காணப்படுகின்றது. பாடசாலைகளின் பரம்பல் சார்ந்த வகிபாகம் ஒப்பீட்டு ரீதியில் வருமானமட்டத்தைப் பரம்பரை பரம்பரையாக ஒரே குழுவினருக்குக் கைமாற்றுவதாக ; சமூக வர்க்கக் கட்டமைப்பு மீளுருவாக்கம் பற்றிய விவாதம் வலியுறுத்துகின்றது.

இத்தகைய வருமானப்பங்கீடு மற்றும் பாடசாலை செல்லுதல் என்பவற்றிடையிலான தொடர்பு சார்ந்து இருவகையான எழுவினாக்கள் (Issues) காணப்படுகின்றன

**வேறுபட்ட பல தலைமுறையினரிடையிலான கல்வி நிலைமை**

ஒரு வம்சத்துக்குள்ளேயே நிகழும் கல்வி மாற்றங்கள்பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. Flond et a l 1957, Having burst and Gouvia 1969, Jencks et al 1972; Sewell and Hauser 1974 Fagerlind 1975; Jenck et al 1979 ) சீவெல் மற்றும் ஹவுசர் (Sewell and Hauser 1974) ஐக்கிய அமெரிக்காவில் பெற்றோரின் தொழில் சார் அந்தஸ்து அவர்களது பிள்ளைகளின் கல்வி அடைவு, வலுவான தொடர்பைக் கொண்டுள்ளமைபற்றிய முடிவுகளை வெளியிட்டனர். பெற்றோரின் அந்தஸ்துப் பற்றிய முழுமையான செல்வாக்கு ஒரு நபரின் நடைமுறை வருமானம், அவர்களது கல்வி அடைவு என்பவற்றின்மீது முக்கிய பாதிப்பு ஏற்படுத்துகிறதென்றும் விளக்கினர். இதேபோல் ஐக்கிய அமெரிக்கா, சுவீடன் போன்ற நாடுகளினதும் உழைப்பு வருமானம் என்பது பெற்றோரின்சமூக, பொருளாதார அந்தஸ்திலும், தனிநபரின் மதிநுட்பத்திலும் , கல்வி அடைவிலும் கூடுதலாகத் தங்கியிருக்கவில்லை என்று கண்டறிந்துள்ளனர். அது 10% லும் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. எனினும் பவுல்ஸ் மற்றும் ஜின்ரிஸ் (Bowles and Gintis 1976) தமது ஆய்வுகளில் தனிநபர்களின் பொருளாதார மேம்பாட்டில் பெற்றோரின் சமூகப் பொருளாதார அந்தஸ்து, பெரியளவான பாதிப்பைக் கொண்டுள்ளதென்றும், இது கல்வி அடைவுமூலமாக நிகழ்கின்றதென்றும் விளக்கியதோடு; மதிநுட்பம் (1Q) என்பது வரையறுக்கப்பட்ட அளவிலான பங்களிப்பை மாத்திரமே கொண்டுள்ளதென்றும் விளக்கியுள்ளனர். பெற்றோரின் சமூக , பொருளாதார பின்னணி கவனத்திற்கொள்ளப் படுமிடத்து, பாடசாலை மயமாதல் கூடியளவிலான அசைவியக்கத்துக்குத் துணை செல்வதைக் கண்டறிந்தனர்.

வளர்முக நாடுகளிற் பாடசாலை மயமாதலினால் உழைப்புமீது ஏற்படுத்தப்படும் தாக்கம் அமெரிக்காவுடன் ஒப்பிடுமிடத்து மிக அதிகம் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். கானோஸ் (1967), காஸ்ரோ (1970), சாக்ரபோலஸ் (1973), கானோயும், மற்றவர்களும் (1975), லியு (1975), கானோயும் மற்றவர்களும் (1976), பிறை (1977) ,ஹைன்மன் (1979), மசும்தார் (1981) போன்றோர் இவை தொடர்பான ஆய்வுகளை அதிகளவில் மேற்கொண்டுள்ளனர். பெற்றோரது சமூக வர்க்கப்பின்னணி அவர்களது பிள்ளைகளின் பாடசாலை அடைவுகள்மீதும், பிற்கால வருமானத்தின்மீதும் தாக்கவிளைவுகளை ஏற்படுத்தியிருப்பது தொடர்பாக மெக்சிக்கோ, தியூனிஷியா, மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து, உகாண்டா போன்ற பல நாடுகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், ஐக்கிய அமெரிக்காவை விடவும் வளர்முக நாடுகளில் உழைப்பு வருமானத்தின் மீதான பாடசாலை

மயமாதலின் தாக்க விளைவு மிகவும் அதிகம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வளர்முக நாடுகளில நிலவும் வருமான வேறுபாடுகளிற் பாடசாலைமயமாதலும், சமூக வர்க்க நிலையும் இணைந்த முறையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த ஆய்வுகள் பல சமூக வர்க்க நிலையில் நிலவுகின்ற வேறுபாடுகளில் அதிக கவனம் செலுத்தாத போதிலும், பாடசாலை மயமாதல் மாத்திரம் உழைப்பு வருமானத்தின்மீது செலுத்தும் தாக்கம் ஐக்கிய அமெரிக்கக்கணிப்பீடுகளை விட வளர்முக நாடுகளிலே துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளன.

**இத்தகைய பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளும் பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றன.**

உயர்வருமான நாடுகளைவிடவும் வளர்முக நாடுகளில் உழைப்பு வருமானம் மற்றும் தொழில் அந்தஸ்து என்பவற்றிற் பெற்றோரது சமூகப் பொருளாதார, பின்னணியும் பாடசாலை மயமாதலும் ஒன்றிணைந்த வகையில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

தாழ் வருமான சமூகங்களில் உள்ள பிள்ளைகள் உயர்ந்த பொருளாதார அந்தஸ்தை அடைவது சிரமமாகவேயுள்ளது.

பிள்ளைகள் பாடசாலை செல்லும் காலப்பகுதியானது பெற்றோரது சமூகவர்க்க நிலையில் தங்கியுள்ளமைபற்றிப் போதிய தகவல்கள் இல்லை.

பிறேசில் நாட்டில் தனிப்பட்ட மாணவரது கல்வி அடைவு தொடர்பான வேறுநாடுகளில் ஏறக்குறைய 50சதவீதம் பெற்றோரின் சமூகவர்க்க நிலையில் தங்கியிருப்பதாகப் பெல்லனியும், வெஸ்கஸ்டி மிரண்டா (Bellonis and Vesquwz de Miranda 1975) வும் கண்டறிந்துள்ளனர்.

மிக உயர்ந்த சமூக வர்க்கத்தில் உள்ளவர் களது ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் அதிஉயர் சம்பளம் பெறக்கூடியனவாகவும், வேலையின்மை மிகவும் குறைவாகவும் உள்ளனவுமாகிய மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளில் கற்கும்போது தாழ்நிலை சமூக வர்க்கத்து இளைஞர்கள் கலைப்பட்டங்களையே பெறுகின்றனர் என்று தார் மற்றும் அவரது சகபாடிகள் தமது (Dar et al 1976) ஆய்வுகள்மூலம் கண்டறிந்துள்ளனர்.

பெற்றோரது வருமானத்துக்கும், அவர்கள் படிக்கும் பாடசாலை வகை (Kind) மற்றும் காலப்பகுதிக்கும் மிக நெருக்கமான தொடர்பு நிலவுவதாகக் கென்யாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. (Mwaniki, 1973)

பிள்ளைகள் எவ்வளவு பாடசாலைக்கல்வி யைப் பெறுவர் என்பது பெற்றோரின் சமூகவர்க்க நிலையினால் தீர்மானிக்கப்படுவதில்லையென உகாண்டாவிலும் மலாவியிலும் மேற்கொண்ட ஆய்வுகளினடிப்படையில் ஹெய்ன்மான் (Heyneman) தெளிவுபடுத்துகின்றார். (Heyneman 1973,1979,1980).

பரம்பரையினரிடையில் எவ்வாறு சமூக அந்தஸ்து நிலை கைமாற்றப்படுகின்றதென்பது பற்றி நோக்கும்போது பாடசாலைமயமாதல் என்பது வளர்முக நாடுகளில் அதிக செல்வாக் குடையதாகவே காணப்படுகின்றது. அது அசைவியக்கத்துக்கு (Mobiliz) பெரிதும் உதவுகின்றது. ஆனால், ஒரு பிள்ளை எவ்வளவு தூரம் பாடசாலைக் கல்வியைப் பெறுவான் என்பதில் பெற்றோரது சமூக வர்க்கம் (வகுப்பு) மிகவும் செல்வாக்கும் செலுத்தும் அம்சமாகவே விளங்குவதைப் பல்வேறு ஆய்வாளர்களும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

**ஒரு தலைமுறைக்குள்ளே நிகழும் கல்விநிலை மாறுதல்கள்**

இந்த மட்டத்தில் வருமான வேறுபாடு களிலான பாடசாலை மயமாதலின் வகிபாகம் மிகவும் சிக்கலானது. பாடசாலை மயமாதல் தனிநபரின் அசைவில் ஏற்படுத்தும் தாக்கவிளைவுகளை விடவும், கட்டமைப்பு ரீதியில் நிகழும் மாற்றங்களே முக்கியமானவை. சமமற்ற வருமானக்கட்டமைப்பு உயர் வாகக் காணப்படும் நிலையில் தலை

முறையினரிடையிலான நகர்வு மிக உயர்வாகக் காணப்படலாம், வருமான சமமின்மை மிகவும் உயர்வாகக்காணப்படும்வருமானக்கட்டமைப்பு நிலவும்போது தலைமுறையினரிடையிலான அசைவியக்கம் கூடியளவில் நிகழமுடியும். தொடர்ந்து இருக்கக்கூடிய சமூக வர்க்க முறைமை இல்லாதிருப்பதற்குரிய நிலைமையை இது தோற்றுவிக்கும்.

இதற்குமாறாக வருமான சமத்துவம் கூடுதலாகக் காணப்படுகின்ற வருமானக் கட்டமைப்பு முறையில் ஒப்பீட்டு ரீதியாகச் சிறிதளவு நகர்வே வருமானத்தில் ஏற்பட முடியும்.

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமூக வர்க்கங்கள் நிலவுவதை இது வெளிப்படுத்த முடியும். ஆனால் அத்தகைய வர்க்கங்கள் வாழ்க்கைத்தரம் மற்றும் நுகர்ச்சிமாதிரிகளை நிர்ணயிப்பதில் முக்கியத்துவம் கொண்டிருப்பதில்லை. சுவீடன், இஸ்ரேயில் , கிழக்கு ஐரோப்பா , கியூபா போன்ற பல நாடுகளில் இந்த இரண்டாவது நிலைமை நிலவுவதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இவை இரண்டு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

1. வருமானக்கட்டமைப்பு அவற்றிலான அசைவும் ஒன்றுடன்ஒன்று தொடர்புடையன.
2. கைத்தொழில் மய நாடுகளில் வருமானப் பங்கீட்டுக் கட்டமைப்பிற் செல்வாக்குச் செலுத்துவதென்பது, நகர்விற் செல்வாக்குச் செலுத்துவதைவிடவும் சாத்தியமானது. வர்க்க அமைப்பினை மாற்றுதற்குத் தேவைப்படும் திறன்களை எல்லோரிடையிலும் உருவாக்குவதற்கு நீண்டகாலம்தேவைப்படும்என்பதோடு, அது அதிக செலவுடையதுமாகும், கல்வி மட்டம் உயரும்போது அதற்கேற்றதான உற்பத்தி மற்றும் ஒழுங்கமைப்புத் திறன்களையும் வளர்க்க வேண்டியதுஅவசியமாகியுள்ளது.

நன்கு கல்வி கற்கப் பெற்றோரின் பிள்ளைகள் கல்வி அடைவு நிலைகளில் உயர்சாதனைகளை உருவாக்கக் கூடியவர்களாக உள்ளனர். நவீன சமூகங்களிலே திறன் விருத்தி மாதிரிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது மிகவும் சிரமமாகவேயுள்ளது.

ஒரு நாட்டின் தலாவருமானம் உயர்நிலைக்குச் செல்லும்போது வருமானப் பங்கீட்டில் அதிக சமத்துவம் ஏற்படுவதாக 1950களிற் குஸ்நெற்ஸ் (Simon Kuznets; 1955) விளக்கினார். இதற்குப்பொறுப்பாக இருந்த காரணிகளாகப் பின்வருவனவற்றை அவர் இனங்கண்டார்.

i) உயர் வருமான நாடுகளில் தொழிற்படையினர் பெற்ற உயர்கல்வி.
ii) கூடியளவுக்கு மக்கள் அரசியலில் பங்கேற்றமை.
iii) கல்வியினாலே தொழிலாளர்களுக்குக் கூடிய வலு கிடைத்தமை

தொழிலாளர்கள் போதியளவு கல்வி பெறும்போது அரசியல் ரீதியில் அதிக அழுத்தம் கொடுக்கும் வல்லமை பெறுகின்ற நிலையிற் கூலியிலும் அங்கத்துவமுடைய கட்டமைப்பை உருவாக்கி விட முடிவதாகக் குஸ்நெற்ஸ் கருதினார்.

சராசரியாக உயர்ந்தமட்டக்கல்வியை மக்கள் பெறும்போது, உழைப்புத் தொடர்பான வேறுபாடுகள் குறைந்துவிடுவதாகப் புதுப் பழம் பொருளியலாளர்கள் விளக்கி இருந்தனர். கல்விக்கும் உற்பத்தித்திறனுக்கும்; உற்பத்தித்திறனுக்கும் உழைப்புக்கும் நேரடித் தொடர்பு நிலவுவதாலே சராசரி கல்விகற்கும் காலம் உயர்ந்து செல்லும்போது தொழிலாளர் கல்வி கற்கும் காலத்திலான வேறுபாடுகளும் வீழ்ச்சியடைகின்றன என்று விளக்கினர். அரசாங்கங்களும் ஆகக் குறைந்த காலக் கல்வியைத் தீர்மானித்து வழங்குதற்கு முயன்று வரும் நிலையிலே தொழிலாளர் கல்வி கற்கும் காலமும் ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்து வரலாயிற்று. பார்க்கின் (Barkin

1971), பிஸ்லோ (Fishlow ;1973) போன்ற பலர் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு பொருளாதாரத்தில் உள்ள அனைத்துக் குழுவினரும் அத்தகைய அதிகரிப்பிற் பங் கேற்றார்கள் எனக் கொள்ளவேண்டிய அவசியமில்லை என்று தமது ஆய்வுமூலம் வெளிப்படுத்தினர்.

பொருளாதார வளர்ச்சி என்பது பல சமயங்களில் வருமானப் பங்கீட்டிலான சமத்துவத்தை விட்டுக்கொடுத்து ஏற்படுவதுமுண்டு. சேர்ணியும் ஏனையோரும் (Chenery et al 1974) இவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். பொருளாதாரங்கள் வளர்ந்து செல்வதற்கான காரணங்களை விளங்கிக்கொள்வதன்மூலம் வருமானசமத்துவம் கல்விக்கும் அல்லது சமத்துவமின்மை தவிர்ந்து வேறு சில காரணிகளின் செல்வாக்கையும் அறிய முடியும். செல்வம் மற்றும் வருமான சமமின்மை நீண்டகாலத்தில் அரசியல் அமைதியின்மைக்கும் வழிவகுத்திருப்பதை டாஹ்ல் (Dali 1974) தம் ஆய்வின் வழியாகக் காட்டியுள்ளார்.

கல்வி நீண்டகாலமாகப் பாரியளவிலான சமூக, பொருளாதார சமத்துவத்தை உருவாக்கும் என்று நம்பப்பட்டுள்ளது. (Smith 1937, Kuznets 1955) பாடசாலை முறைமையும் அதன் செயற்பாடுகளும் வருமானப்பங்கீட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதுண்டா என்பது பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனித மூலதனக் கோட்பாடு இயன்றளவு சமமாகப் பாடசாலைக்கல்வியை வழங்கும் ஏற்பாடுகள், ஊழியர்களின் வருமானம், உழைக்கும், ஆற்றல் என்பவற்றிற்சமத்துவத்தை உருவாக்கும் என்று தெளிவுபடுத்துகின்றது. தாழ்ந்த அல்லது உயர்ந்த சம்பளம் பெறக் கூடிய வேலையைப் பெற்றுக்கொள்வர் என்பது பாடசாலை முறைமையினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

**முடிவுரை**

கல்வி தேசிய ரீதியிலும், தனிமனித அடிப்படையிலும் மிகப்பெரிய விரும்பத்தக்க நீண்டகால மாறுதல்களை ஏற்படுத்தும் வல்லமைகொண்டதென்பது பல நிலைகளில் நிறுவப்பட்டுள்ளது.

எனினும், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து உலகம் முழுவதிலும் கல்வி வாய்ப்புக்களும், கல்வியினாற் பெறக்கூடிய பலமானதும், நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான நன்மைகளும் சமமாகப் பகிரப்பட்டிருக்கவில்லை. சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் வலுவான நிலையில் உள்ளோரிடமே மிகச் சிறந்த கல்வி வாய்ப்புக்களும், கல்விசார் நலன்களும் சமூக நீதிக்குப் புறம்பாகக் குவிந்துள்ளன.

இந்தக்கல்வி - பொருளாதாரத் தொடர்புகளும் நலப்பாடுகளும் இயல்பாகவோ, தற்செயலாகவோ ஏற்றத்தாழ்வை உருவாக்கி விடவில்லை. இதற்கு மாறாக சமூக; பொருளாதார, அரசியற் கொள்கை வகுப்பாளர்களும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும். ஆட்சிப்பணித்துறையினரும் கல்வியின் மீது தமது அதிகார ஓடுபாதையை கவனமாக வடிவமைத்துள்ளனர். இதனால், கல்விமுறையின் உச்ச நன்மைகளும், பொறிமுறைகளும் அவர்களது கட்டுப்பாட்டிற்பேணப்படுகின்றன.

கல்வியின் எச்ச விளைவுகளை மாத்திரம் பலவீனமானவர்களுக்கு வழங்குவதன் அபாயங்கள் உணரப்படுகின்றன. கல்வியில் "இரட்டை வகிபாகம்" என்பதை அரசாங்கங்கள் தொடர்ந்து பராமரிக்கின்றன எனினும் பாதுகாப்பின்மை அல்லது அதிர்வுகள் எதிர்கொள்ள முடியாத நிலைகளில் கல்வி சமத்துவம் அங்கீகாரம் பெற்றுவருகிறது.

பேராசிரியர் மா. சின்னத்தம்பி
*கல்வியியல் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

# விஞ்ஞானக் கல்வியும் மொழியும் : ஒரு முன்னோட்டம்

**அறிமுகம்**

"புத்தாக்கப் புனைவுகளையும் ஆற்றல்களையும்
மனித வாழ்வுக்கு உரித்தாக்குவதே
விஞ்ஞானத்தின் முறையான மெய் நோக்கு".

- பிரான்சிஸ் பேகன்.

விஞ்ஞானமும் மொழியும் ஒன்றிலிருந்தொன்று பிரிக்க முடியாதவை. மொழியின் பிரயோகமே விஞ்ஞானத்தை வளர்த்தது; விஞ்ஞானக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காகமொழிவிருத்திபெற்றது. விஞ்ஞான வளர்ச்சியினால் மொழியானது புது மெருகு பெறுவதோடு, விஞ்ஞான முறையில் மொழியியல் ஆய்வுகளும் இன்று நடைபெற்று வருகின்றன. விஞ்ஞானமும் மொழியும் மனித முன்னேற்றத்தின் அடையாளங்கள். விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியைத் தொடர்ந்து, இலத்திரனியல் வளர்ச்சியும் ஏற்பட்டு, உலகு துரித மாற்றம் கண்டு வரும் இன்றைய நிலையில் விஞ்ஞானக் கல்வியுடன் மொழி கொண்டுள்ள தொடர்பைக் குறித்ததான முன்னோட்டமொன்றை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்**

விஞ்ஞானம் என்பது ஆராயும் அறிவாகும். உண்மையில் அடிப்படையிலேயே ஆரம்பித்து உண்மையைக் காண்பதிலே முடிவடைவதுதான் இதன் செல் நெறியாகும். உண்மையின் மீதான ஆர்வமே இன்றைய மனித நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டது.

ஆதி மனிதனின் சக்தியும் நேரமும் வாழ்க்கைப் போராட்டத்திலேயே செலவாயின. வனவிலங்குகளிலிருந்தும் இயற்கைச் சக்திகளிலிருந்தும் பாதுகாப்பு அவனின் முக்கிய பிரச்சினையாக இருந்தது. உணவு, உடை, வீடு அவனின் தேவைகளாக இருந்தன. இத்தேவைக்கும், இத்தேவைகளை அடைவதில் அவன் எதிர்கொள்ள நேர்ந்த இன்னல்களிலிருந்து அவனுக்கான பாதுகாப்பும் அவன் வாழ்க்கையையே ஒரு போராட்டமாக மாற்றின. இயல்பூக்கமும் உள்ளக் கிளர்ச்சியுமே ஆதி மனிதன் வாழ்வை வழிநடத்தி வந்தவேளை, அவனின் வாழ்க்கைப் போராட்டம் அவனின் 'மனம்' பரிணமிக்க வழிவகுத்தது.



மனிதனைச் சிந்திக்குமாறு செய்வது மனித மனமே எனலாம். மனிதனின் சிந்தனையாற்றல் காரணமாகவே விலங்குகள் ஐந்தறிவுடையன என்றும் மனிதன் ஆறறிவுடையவன் என்றும் மனிதனை விலங்குகளிடமிருந்து பிரித்து, 'சிந்திக்கும் பிராணி' என்ற உன்னத நிலைக்கு மனிதனை உயர்த்த முடிகின்றது. இச் சிந்தனையாற்றலின் வழியாகவே சுற்றாடலைக் கவனிக்கவும், இயற்கைத் தோற்றப்பாடுகளுக்கிடையேயான காரண - காரியத் தொடர்புகளைப் பெறவும் அவனால் முடிந்தது.

மனிதன் மனத்தை மட்டும் கொண்டு பயனுள்ள, முறைமையான வழியிற் சிந்திக்க இயலாதவன்; அதற்குக் கருவியொன்று வேண்டியதாயிற்று. மொழியே அக்கருவி. மனித வரலாற்றில், ஓரளவு பிற்பட்ட காலத்திலே தான், மொழி படைக்கப்பட்டது. மொழியைப் பயன்படுத்திய மனிதன் கூடிவாழக் கற்றுக் கொண்டான். மொழிப்பிரயோகம் காரணமாக அறிவைப் பெறவும், அதை ஞாபகத்திற் பேணிவைக்கவும், தன் போன்றோருடன் அதனைப் பரிமாறவும் அவனால் முடிந்தது. இக்கருத்துப் பரிவர்த்தனையின் விளைவாக,

தனி ஒருவருக்கு மட்டுமுரிய பிரத்தியேக அறிவை ஒதுக்கிவிட்டு, எல்லோர்க்கும் பொதுவான, அநுபவ வழிவரும் அறிவைப் பேணும் முறைமை தோன்றிற்று; பொது அறிவுக்கு இசைவானவையே போற்றப்பட்டன. இவ்வாறாக, பொது அறிவு உருவாகி விருத்தியடையலாயிற்று. முறைப்படுத்திய பொது அறிவே விஞ்ஞானம் ஆகும்.

முறைப்படுத்தித் தொகுக்கப்பட்ட அறிவே விஞ்ஞானம். எனினும் இந்த அறிவின் உண்மை நிலை சிந்திக்கற்பாலது. ஏனெனில் இவ்வறிவிலே மனித மனத்தின் அமைப்பு, வரையறைகள் சிந்திப்பு முறைமை, மனித வரலாறு என்பனவும் மொழி வளர்ச்சியும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக உள்ளன. இக் காரணிகள் யாவும் மனிதவியல்பு சார்ந்தனவாக இருத்தலால் மனித அறிவும் நீண்ட காலமாக மனிதவியல்பு சார்ந்த நிலையிலேயே இருந்து வந்திருக்கின்றது. மொழியானது விருத்தியடைய அடைய அறிவில் மனிதவியல்புச் சாயல் சிறிது சிறிதாக மறையலாயிற்று. மொழியில் விருத்தியோடு கூடியதாகவே அறிவை ஒழுங்கு செய்யும் முறையும் வளர்ச்சி பெற்றது. மொழியின் வளர்ச்சி நிலையில் படைக்கப்பட்ட தருக்கம் எனும் துறை, மனிதனை உணர்ச்சி வயப்படாது சிந்திக்கச்செய்ததோடு சிந்தனைச் செயன் முறையினின்றும் அகவயமான இயல்புகளை விலக்கி அறிவை ஒழுங்கு செய்யும் முறையின் வளர்ச்சியை முன்னேற்றமடையச் செய்தது. இவ்வாறாக வளர்ச்சியடைந்த ஒழுங்கு முறையே விஞ்ஞான முறை ஆகும்.

விஞ்ஞான முறையே உண்மைக்கு வழிகாட்டும் அறிவியல் பாதை ஆகும். இப்பாதையிலே வீறுநடை போடுபவர்கள் உடனடியாகவே எவர் சொல்லுக்கும் மதிப்புக் கொடுத்து அவற்றை அப்படியே உண்மை என ஏற்றுக் கொண்டுவிடமாட்டார்கள். மாறாக சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட முடிவுகளையே உண்மை எனக் கொள்வார்கள். இவர்கள் உண்மையைக் காண்பதற்கு முதற் படியாக விபரங்களைச் சேகரிப்பர். அவ்வாறு செய்யும் போது விபரங்களை உள்ளது உள்ளவாறே அறிய முயல்வர். கண்ட விபரங்களைத் துல்லியமாக அளந்து துல்லியமாக எழுதுவர். இவ்வாறு சேகரித்த விபரங்களைக் காய்தல் உவத்தலின்றி ஒழுங்காக வகைப்படுத்துவர். அவற்றிடையே காணும் உறவுகளை ஆராய்வர். இந்த உறவுகளை வைத்து எது உண்மை என்று ஆராயும் போது பல ஊகங்கள் தோன்றும். அவற்றுள் எது தாம் சேகரித்த விபரங்கள் எல்லாவற்றுக்கும் பொருத்தமானது என்று காண்பர். இந்த ஊகத்தைப் பரிசோதித்துச் சரியானது என்று கண்டாலும், இது சம்பந்தமாக இதற்குமுன் கண்ட கொள்கைகளுடன் பொருந்துகின்றதா என்றும் ஆராய்வர். பொருந்தாவிடின் காரணத்தைக் கண்டுபிடித்து ஊகத்தைத் திருத்துவர். இவ்வாறாக, சோதனை செய்தல், உற்று நோக்குதல், செய்திகளைச் சேகரித்தல் தற்காலிக முடிவுக்கு வரல், மீண்டும் சோதனையில் ஈடுபட்டுத் தெளிவு பெறல் என்ற பல்வேறு படிகள் விஞ்ஞான முறையைத் தீர்மானிக்கின்றன. இப்படிகளைப் பயன்படுத்தி ஆராயும் முறையே (method of inquiry) உண்மையைக் காணும் வழியாகும். இம்முறையே கி.பி. 12ஆம் நூற்றாண்டில், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக பேராசிரியர் றோஜேர்ஸ் பேகன் (Rogers Bacon) வலியுறுத்தினார்.

சான்றுகளை அமைத்துக் காணப்பட்ட முடிவுகள் எல்லாமே நிலைபெற்ற உண்மைகளாக ஆக முடியாது. மேலும் சோதனைகள்மூலம் புதிய சான்றுகள் கிடைக்கும்போது அச்சான்றுகளுக்கு ஏற்றாற்போல் இம்முடிவுகள் மாற்றப்படவோ அல்லது நீக்கப்படவோ வேண்டிய நிலைமையும் ஏற்படலாம். இவ்வாறாக வெளியே வீசியெறியப்பட்ட பல கொள்கைகளும் விஞ்ஞான வரலாற்றில் உண்டு.

விஞ்ஞான முறையின் இரு சிறப்பம்சங்கள் :

(i) அது அநுபவ பூர்வமானது.(Empiricism)

(ii) அது பகுத்தறிவுத் தன்மை கொண்டது. (Rationalism)

நம்பகத் தன்மை வாய்ந்த முறைகளைப் பயன்படுத்துபவர்கள் பெறுகின்ற அநுபவத்தின் அடிப்படையில் கண்ட உண்மைகளே விஞ்ஞான முறையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்றவகையில் அது அநுபவ பூர்வமானது; இவ்வாறு கண்ட உண்மைகளையும் முறைப்படுத்தி, தர்க்க ரீதியாக விதிகளையும் கொள்கைகளையும் அமைத்து, என்ன? ஏன்? எவ்வாறு?' என்ற வினாக்கள் மூலம் உண்மையை ஆராய்ந்து பெறப்படும் புறவயத் தன்மை வாய்ந்த முடிவுகளைக் கொண்டவை (objetibity) என்ற வகையிலும், தவறு நேர்ந்தவிடத்து தாமே திருத்திக்கொள்ளும் பண்பு வாய்ந்தவை (self - correctiveness) என்ற வகையிலும் அது பகுத்தறிவுத் தன்மை கொண்டது.

பழக்கத்தின் காரணமாகவோ அல்லது வழக்கத்தின் அடிப்படையிலோ தான் கொண்டுள்ள நம்பிக்கை தவறு என்று அறிந்தும் மாற்றிக்கொள்ள மறுக்கும் பிடிவாதப் போக்கு முறையும், தன் குரு சொல்வது அனைத்தையும் சரியானது என நம்பி அதன்படி ஒழுகுதலான அதிகாரத்திற்குக் கட்டுப்படும் முறையும், ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்து ஞானத்தைக் கொண்டு உள்ளுணர்வினாலோ (intuition) அல்லது தெளிந்த முடிவுகளைக் கொண்டோ பேருண்மையை அறியமுயலும் உள்ளுணர்வு முறையும் விஞ்ஞானமல்லாத முறைகளே ஆகும். இம்மூன்று முறைகளிலும் எந்தஒரு கருத்திலும் வெவ்வேறு எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டவர்களையும், சில நேரங்களில் முற்றிலும் மாறான கருத்துக் களைக் கொண்டவர்களையும் காணலாம்.

விஞ்ஞான முறையைப் போன்று இக்கருத்துக்களை ஆய்வுசெய்வதென்பதோ அல்லது சரிபார்ப்பதென்பதோ இயலாது. ஆனால், உண்மையான அறிவு என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அறிவாக அமைதல் வேண்டும். எனவே தான், மேலேகூறிய மூன்று முறைகளும் விஞ்ஞான முறைக்கு எவ்விதத்திலும் மாற்று முறைகளாக மாட்டா.

**மொழியும் எண்ணக்கரு ஆக்கமும் .**

மனித வரலாற்றுக் கண்டுபிடிப்புக்களில் தலைசிறந்தது, மனித சிந்தனையைப் பரப்பும் சாதனமான மொழியே ஆகும். மனித நாகரிகத்தின் தோற்றம் மொழியின் தோற்றத்தினுடனேயே ஆரம்பமாகியது எனலாம்.

மொழி என்றால் என்ன? என்பதற்கு மொழியியலாளர் பலர் பலவிதமான வரைவிலக்கணங்களைத் தந்துள்ளனர். "மனித எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், விருப்பங்களையும் இயல்பாக உருவாக்கிய குறியீடுகள் மூலம் வெளிப்படுத்தும் மனிதனுக்கே உரித்தான ஒரு முறையே மொழி ஆகும்". என மொழியியலாளர் சப்பீர் (sapir) குறிப்பிடுகின்றார். மேலும், "சமூகக் குழு வொன்றைக் கூடிச் செயலாற்ற வைக்கும், பேச்சொலி சார்ந்த குறியீடுகளின் அமைப்புத் தொகுதியே மொழி" எனவும், "மனிதத் தொடர்புகொள்ளலுக்கான குரல் சார்ந்த, கேள் தகைமையுள்ள ஊடகமே மொழி" எனவும், "மனித அநுபவங்களுடன் இணைந்ததான நெறிகளுக்கமைய வழக்கிலுள்ள குறியீடுகளையும் ஒலியலகுகளையும் சேர்த்துப் பயன்படுத்தும், குரல்சார்ந்த கேள் தகைமையுள்ள தொடர்புறுத்தும் தொகுதியே மொழி" எனவும் மொழியியலாளர்களினால் மொழிக்கு வரைவிலக்கணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

மொழிக்கான வரைவிலக்கணங்களாக மொழியியலாளர் வழங்கிய வரைவிலக்கணங்களிலிருந்து மொழியின் சிறப்பியல்புகளை வரையறுத்துக்

கொள்ளமுடியும். மொழியின் குறியீட்டுத் தன்மையும் ஒழுங்கமைப்புத் தன்மையும், மனிதனுக்கே உரிய தன்மையும், சமூக சாதனமாக விளங்குகின்ற தன்மையும், இயல்பான தன்மையும் மொழியின் உயிர்க் கூறுகளாக விளங்குகின்றன. மனித இனம் தவிர்ந்த ஏனைய உயிர்கள் தத்தம் கருத்தைத் தெரிவிப்பது போல, ஒலியெழுப்புவதனால் அவ்வொலியும் மொழியோவென்ற ஐந்தறிவை, மொழியின் சிறப்பியல்புகளை அவ்வுயிரினங்களின் மொழி கொண்டிராத காரணத்தால் விலக்கிக் கொள்ளலாம். ஏனைய உயிரினங்கள் ஒலியெழுப்புவது இயல்பூக்கத்தினாலேயே ஆகும். இவை பெரும்பாலும் மகிழ்ச்சி, அச்சம், சீற்றம், பசி முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு ஒலியெழுப்புகின்றன. ஆனால் மனிதர்களைப் போல உள்ளத்தெழும் கருத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் அவற்றுக்கு இல்லை. குறிப்பிட்ட ஒரு கருத்தை குறிப்பிட்ட ஓர் ஒலிக்கோ ஓர் ஒலித் தொடருக்கோ ஏற்றி, தம் கருத்தைப் பிறர்க்கு அறிவிக்கும் ஆற்றல் மனிதருக்கே உண்டு.

மனிதன் தன் பண்பாட்டினூடாகத் தனது நடத்தைக் கோலங்களை ஒரு சந்ததியிலிருந்து மறு சந்ததியினருக்குக் கையளித்தல் என்பது மொழியின்பிரயோகத்தினாலேயே நிகழ்கின்றது. மொழியும் சமூகமும் ஒன்றோடொன்று இணைந்து செல்வன; ஒன்றின்றி மற்றையது நிலைத்திருத்தல் இயலாது.

மொழியானது எம்மை நிகழ்காலச் சூழலிலிருந்து விடுவிப்பதோடு, அதனது குறியீட்டுப் பண்புகள் காரணமாக, எமது சூழலைக் கற்பனை செய்யமுடியாத அளவுக்கு விரிவுபடுத்தியுள்ளது. யதார்த்த உலகில் உள்பொருளல்லாத பல இல்பொருள் வகைகளையும் நாம் மொழியினால் படைக்க முடிகின்றமையே இதற்குக் காரணம்.

எண்ணக்கரு ஆக்கத்தை மொழி எளிதாக்குகின்றது. உலகத்திலுள்ள பல்வேறு பொருள்களும் நிகழ்ச்சிகளும் பண்புகள், செயற்பாடுகளில் ஒன்றுக்கொன்று மாறுபட்டனவாகும். இந்த மாற்றங்கள் ஒவ்வொன்றையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டால் இது கருத்துள்ள சிந்தனைக்குத் தடையாக அமையும். சிந்தனையை இலகுவாக்குவதற்குக் கருத்துக்களை உருவாக்கும் மட்டத்தில் இவ் வேறுபாடுகளிடையேயும் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள பொதுப் பண்புகளை அறிந்து அவற்றைப் பகுப்புக்களாக விளங்கிக் கொள்ளவேண்டும். இது பொதுமையாக்கம் எனப்படும். இப்பொதுமையாக்கமே எண்ணக்கரு ஆகும். இக் கருத்துக்களின் அடிப்படையில், "தம்மிடையே சில பண்புகளைப் பொதுவாகக் கொண்ட அநுபவவகைப் பிரிவொன்றுக்கான பொதுத் துலங்கலே எண்ணக் கரு ஆகும்" என எண்ணக்கருவுக்கு வரைவிலக்கணம் கூறலாம்.

ஒருவர் யதார்த்த நிலையில் பெற்றுக் கொள்ளும் அநுபவங்களினூடாகவே எண்ணக்கரு உருவாக்கம் ஏற்படுகின்றது. எண்ணக்கரு உருவாக்கத்தில் முக்கியமான அம்சம் புலக்காட்சி ஆகும். ஐம்புலனுணர்வால் ஒரு பொருள் உணர்த்தப்பட்டு விளக்கம் பெறுதலே புலக்காட்சி எனப்படும். இவ்வாறாக ஒரு பொருளை புலக்காட்சி பெறாதவரை அவ்வகையான பொருட் கூட்டம் ஒன்று பற்றிய எண்ணக்கருவை விருத்தி செய்யமுடியாது. அதேபோல, ஒரு பொருளின் அல்லது செயற்பாட்டின் முக்கிய அம்சங்களை வேறு வேறாக அறியாத வரை, அநுபவத்திலிருந்து பொதுமையாக்கம் செய்வதும் கடினமானது.

ஒரு மனிதன் கற்றுக்கொள்ளும் முறைமை ஏனைய உயிரினங்கள் கற்றுக் கொள்ளும் முறைமையிலிருந்து வேறுபடுவதற்கு அவனின் கற்றலின் சிந்தனை முக்கியமான இடத்தைப் பெறுகின்றமையே காரணமாகும். இச்சிந்தனையில், எண்ணகரு உருவாக்கத்தில் மொழி எவ்வாறு பங்கு கொள்கின்றதெனப் பல்வேறு உளவியலாளர்களும் விளக்க

முற்பட்டிருக்கின்றார்கள். இவர்களின் கருத்துக்கள் மாறுபாடுடையனவாயிருப்பினும் கூட, சிந்தனையில், எண்ணக்கரு உருவாக்கத்தில் மொழி வகிக்கும் முக்கியத்துவம் குறித்து அனைவருமே ஒரே கருத்தையே கொண்டிருக்கின்றனர்.

மனிதனில் கற்றல் எவ்வாறு நிகழ்கின்றதென பியாஜேஎனும்உளவியலாளர்குறிப்பிட்டிருக்கும் கருத்துகள் விமர்சனத்துக்குரியனவையாய் இருப்பினும்கூட, மொழியின் கற்றலுக்கும் கூட பிரயோகிக்கப்படத் தகுந்தவையாகும்.

பியாஜேயின் கருத்துகளின் படி, எல்லா உயிர்களிலும் கற்றல் இரு முறைகளிலே நிகழ்கின்றது

(i) சூழலுக்கேற்பத் தழுவும் முறை (adaptation)

(ii) புலக்காட்சி, ஞாபகம், வியாபித்தல் ஆகிய உளப்பணிகளினால் அநுபவங்களை ஒழுங்கமைக்கும் முறை (organization)

தாழ்ந்த உயிரினங்களிலே சூழலுக்கேற்ப தழுவும் திறன் தமது மூலாதாரமான தேவைகளைப் பூர்த்தி செய்வதுடனேயே நின்றுவிடுகின்றவேளை, மனிதனில் ஒரு குழந்தை தனது வளர்ச்சிப் போக்கில் எதிர்ப்படுகின்ற பல தரப்பட்ட சூழல்களுக்கும் பொருந்த, தனது சூழலுக்கு, அநுபவங்களுக்கு ஓர் ஒழுங்கமைப்பைக் கொடுத்தே அவற்றைக் காண்கின்றது. இவ்வாறாக ஒழுங்கமைக்கப்பட்ட நடத்தைக் கோலங்களினதும் அநுபவங்களினதும் ஒழுங்கமைப்பை அநுபவத் திரளமைப்பு (schema) என பியாஜே குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக, குழந்தையிடம் அநுபவத் திரளமைப்பு விருத்தியாகத் தொடங்கியதும், புதிய நிலைமைகள் எதிர்ப்படும்போது, தனது அநுபவத் திரளமைப்பில் அப்புது அநுபவத்தை உறிஞ்சியெடுக்கின்ற செயல் தன்மயமாக்கல் (.... .ssimilation) எனப்படும். ஆயினும், குழந்தையிடம் ஏற்கனவேயுள்ள திரளமைப்பில் பொருந்தமுடியாதவேளை, தனது திரளமைப்பையே திருத்தி அமைத்து இப்புதிய அநுபவங்களையும் காட்சிகளையும் அதனுள் இயைபுபடுத்த முயல்கின்ற செயல் தன்னமைவாக்கல் (accommodation) எனப்படும். இவ்வாறாகக் குழந்தையின் வளர்ச்சியோடு, மொழித்திறன் விருத்தியும் ஏற்படுவதனால் குழந்தையின் எண்ணக்கரு உருவாக்கத்தை அது இலகுவாக்கும்.

எண்ணக்கரு உருவாக்கத்தில் மொழித்திறன் விருத்தி வகிக்கும் பங்கு காரணமாக, இன்று மொழியியலாய்வுகள் விஞ்ஞான முறையிலே மேற்கொள்ளப்படுகின்றன. முன்னைய நாளிலே மெய்யியல், இலக்கியத் திறனாய்வு என்பவற்றுடன் மட்டும் இணைந்ததாகவே இருந்து வந்த மொழி இன்று ஒரு தனித்துறையாக வளர்ச்சியடைந்து மொழியறிவியல் (Linguistic science) என்ற முறையிலே முன்னேறிச் செல்கின்றது.

மொழி பற்றிய விஞ்ஞான முறை ஆய்வினை மேற்கொண்டு அதன் எல்லைகளை வேறு துறைகளுக்குள்ளும் புகுத்திய பெருமை நோம் சொம்ஸ்கி (Noam Chomsky) என்பவரையே சாரும். இவரின் ஆய்வின் பயனாக, 'மொழியறிவியல்' எனும் துறையானது, வேறு பல துறைகளைச் சார்ந்த ஆய்வாளர்களையும் கவர்ந்துள்ளது. கணித மொழியியல் ( Mathematical Linguistics) எனும் புதிய துறை மொழியியலாளருக்கு மாத்திரமன்றி தர்க்கவியலாளர், கணிதவியலாளர் ஆகியோருக்கும் விருப்புள்ள துறை ஆகியுள்ளது. 'குழந்தைகள் மொழியறிவு பெறுதல்' (child acquisition of Language) எனும் விடயத்தைக் குறித்து உயிரியலாளர் மொழியியலாளருடன் சேர்ந்து ஆய்வுகளும் மேற்கொள்கின்றனர்.

சொம்ஸ்கியினுடைய சில கருத்துக்களின்படி குழந்தைகள்பிறக்கும்போதே முறைமையான சில இலக்கணக் கொள்கைகளை உடையவர்களாகப் பிறக்கின்றார்கள் என்ற ஓர் எண்ணப்பாட்டினை

உணர முடிகின்றது. இந்த 'மாற்றிலக்கணக் கோட்பாடு' காரணமாக உலக மொழிகள் யாவும் சில அடிப்படைப் பண்புகளிலே ஒற்றுமைப்படுகின்றன என்றும், அப்பண்புகள் மனிதனுக்கு உயிரியல் அடிப்படையில் கிடைக்கப்பெறுகின்றன என்றும், அதனாலேயே ஒரு குழந்தை பிறந்து மிகக் குறுகிய கால எல்லைக்குள்ளேயே தன் சூழலிலுள்ள மொழியினை இலகுவில் கற்றுவிடுகின்றது என்றும் சொம்ஸ்கி குழுவினரின் ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. மொழித்திறன் ஆற்றலானது உயிரியல் அடிப்படையில் கிடைக்கின்றதா என்பது அண்மையில் மொழியியல், உளவியல், உயிரியல் ஆய்வாளர்களிடையே சர்ச்சைக்குரிய ஒன்றாகவும் இருந்து வருகின்றது.

மொழி என்பது தன்னுள் எண்ணிலடங்கா வாக்கியங்களைக் கொண்டது. ஒரு மொழி பேசுகிறவன் தான் இதுவரை கேட்டிராத வாக்கியங்களையும் புதிதாகக் கேட்டவுடன் புரிந்து கொள்ளுகின்றான். இதே போல் அவனால் புதியபுதிய வாக்கியங்களையும் உண்டாக்கமுடியும். இதுதான் ஒவ்வொரு மொழியிலும் அமைந்திருக்கின்ற படைப் பாற்றல் (creative aspect)பகுதி. இந்த ஆற்றலின் அடிப்படையில் தான் மொழியும் புதியபுதிய சிந்தனைக் கருத்துக்களை வெளியிட முடி கின்றது. ஆகையால், இலக்கணம் என்பது மொழியில் எதிர்காலத்தில் படைக்கப்படுகின்ற வாக்கியங்களின் தன்மையையும் விபரிக்கக் கூடிய தன்மையுடன் இருக்கவேண்டும். அமைப்பு மொழியியலாளர்கள் மொழியின் முழுப்பரப்பையும் ஆராய்வதில்லை என்பதால், மொழியில் இருக்கின்ற அடிப்படை ஒலியங்களையும் (phonemes) சொற்களின் அமைப்பு முறையையும் ஆராய்வதோடு நின்றுவிடுகின்றனர். மொழியின் படைப் பாற்றல் பகுதியை இவர்கள் அறியவே இல்லை. தொடரியல் (syntax) பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே வந்தது. தொடரியலின் முழுப்பரப்பையும் ஆராய்கின்ற தன்மையில் அவர்களுடைய கொள்கை வலுவுடையதாய் இல்லை. ஆனால் சொம்ஸ்கி தலைமையிலான மாற்றிலக்கணத்தார் எண்ணிலடங்கா வாக்கியங்களின் தொகுதி இது என்கிறார்கள்.

**தாய் மொழியில் விஞ்ஞானக் கல்வியின் அவசியம்.**

"குழந்தைகளின் வியப்பே இளைஞர்களின் கனவாகவும் , வயது வந்தோரின் வாழ்க்கைக் குறிப்பாகவும் அமைகின்றது." என்பது ஒரு முதுமொழி. இம் முதுமொழியின் அடிப்படையில் நோக்குவதாயின் இன்றைய துரித விஞ்ஞான முன்னேற்றங்களுக்கெல்லாம் குழந்தைமையில் பெற்றுக் கொள்ளும்

அடிப்படை அறிவே காரணமெனலாம். இதனைப்பற்றி விளக்கிச்சொல்லும் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள், அம்புலியைக் கண்டு குழந்தை வியப்புமேலீட்டால் அதனைக் கரங்களாற் பிடிக்க வேண்டுமென விரும்புகிறது. அத்தோடு

அம்புலி இறைவனாகவும் வணங்கப்படு கின்றது. அவ்வியப்பு இளமைப்பருவத்தில் கனவாக மாறி, அந்நிலவு உலகில் அவ்விளவயதினர்க்கு நீந்தி வருவது போன்ற உணர்வைத் தருகின்றது. ஆனால் அறிவில் முழு வளர்ச்சி பெற்று வயது வந்த பருவத்தில் அந்த அம்புலியை நேரிற் சென்று, கையினாற் பற்றும் நோக்கம் எழுகிறது. பன்னெடுங்காலமுயற்சியின் பின்னர் நிறைவேறியும் விட்டது." என்று குறிப்பிடுகிறார்.

குழந்தை இளமையில் பெற்றுக் கொள்ளும் அடிப்படை அறிவு தாய்மொழி மூலமே பிள்ளைக்கு வழங்கப்படுகின்றது. பிறந்தது முதல் இறக்கும்வரை, தொட்டிலிலிருந்து சுடுகாடு வரைக்கும் கேட்டு, பேசியும், பயின்றும் வரும் தாய்மொழி மூலமாக ஒருவன் அறிவைப் பெற்றுக்கொள்ளும்போதே அவ்வறிவு பொருத்தமுடையதாகும். தாய்மொழியே ஒருவனுக்கு இயல்பான

மொழியாகும். குழந்தைப்பருவத்தில் எண்ணங்கள் கருத்துக்களை மிக இயல்பாகவே தாய்மொழியில் வெளியிடமுடிகின்றது. இவ்வியல்பான மொழியில் புதிய பாடங்களைப் புகட்டும் போது, பொருள் விளக்கம் பெறுதல் எளிதாகின்றது.

எளியமுறையில் ஒரு பொருளைக் குறித்துத் தெளிவாகப்பேசவும், தெளிவான முறையில் ஒருவர் ஒரு பொருளைப் பற்றிக் கேட்கவும், கேட்டுப் பொருளுணரவும், ஒரு பொருளைத் தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணரவும், ஒரு பொருளைப் பற்றித் தெளிவான எளிய முறையில் எழுதவுமான ஆற்றல்களை ஆசிரியர் மாணவர்களிடத்து உண்டு பண்ணத் துணை நிற்பது தான் மொழியேயாகும்.

தாய்மொழிக் கல்வி பற்றிக் காந்தி அடிகள் கூறுபவை இங்கு கவனத்திற்குரியன "நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்புள்ளவர்கள் சற்று மனம் வைத்து யோசித்துப் பார்த்தால் குழந்தையின் உடல் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ அப்படியே மனிதன் மனவளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கையானது என்பதை உணர்வார்கள். வேறெப்படி இருக்க முடியும்? குழந்தை தன் முதற் பாடத்தைக் கற்பது தாயிடமிருந்துதானே? ஆகவே குழந்தைகளின் மனவளர்ச்சிக்குத் தாய்மொழியல்லாது வேறொரு மொழியை அவர்கள் மீது சுமத்துவது தாய் நாட்டிற்குச் செய்யும் பெரிய பாவம் என்றே நான் கருதுகிறேன்." சிந்தனைக்கு ஊடகமாக அமைவதே மொழி என்பதால், சிந்தனை அகற்சியை ஒருவன் தாய்மொழியினூடாகவே பெற்றுக் கொள்ள முடியும். இச்சிந்தனை அகற்சிக்கான செயல்களாவன :

1. எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளலும், ஒழுங்குபடுத்துதலும்.
2. பகுத்தாய்தலும் தொகுத்தலும்.
3. தீர்மானங்களை மேற்கொள்ளலும் தத்துவங்களை உருவாக்கலும்.
4. உரு வெளிப்பாடும் கண்டுபிடித்தலும்.
5. ஞாபகப்படுத்துதல்.
6. வேறு தர்க்க ரீதியான செயற்பாடுகள்.

இச் சிந்தனைச் செயல்கள் யாவும் ஒருவனின் உளத்தோடு தொடர்பானவை என்பதால், இச் செயல்களைத் திட்டமிட்டு வளர்ச்சிக்குரியதாக்குவதென்பது தாய்மொழியிலேயே எளிதாக இருக்கும். விஞ்ஞானக் கல்வியின் அடிப்படையாக அமைபவை இச்சிந்தனைச் செயல்களேயாகும். தமிழ்மொழியில் விஞ்ஞான விருத்தி என்பது தமிழ்மொழியில் அளிக்கப்படும் விஞ்ஞானக் கல்வியை அடிப்படையாகக் கொண்டது. சிந்தனை அகற்சித் திட்டங்களைத் தாய்மொழியில் வகுக்காதவரை பிள்ளைகளிடத்து விஞ்ஞானக் கல்வியை வேரூன்றச் செய்தல் சிக்கலானதாகவே அமையும்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப அறிவைப் புகட்டக் கூடிய அளவுக்குத் தமிழ் வளம்வாய்ந்ததாக இல்லை என்ற கருத்தே 'தமிழ் மொழியில் விஞ்ஞானம் என்ற செயற்பாட்டுக்கு என்றும் குந்தகமாக இருந்து வருகின்றது. ஆனால் காந்தியடிகள் கூறியது போல குறித்த ஒரு மொழியில் விஞ்ஞானம் சம்பந்தமான கருத்துகளையும் வேறுபல செய்திகளையும் தெளிவாக எடுத்துச்சொல்ல முடியாதென்றும் அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லையென்றும் சொல்வதை விடப்பெரிய மூடநம்பிக்கை வேறு கிடையாது. மொழி வளர்ச்சி என்பது ஒரு நாளில் நிகழ்ந்துவிடக்கூடிய ஒன்றல்ல. அது காலத்தை வேண்டி நிற்பது. மொழியின் பிரயோகமே மொழி வளச்சிக்கு உந்து சக்தியாக அமையும்.

தமிழ் ஆற்றல் வாய்ந்த ஒரு மொழி. தமிழின் சிறப்புக் குறித்தும் இலக்கியத்திலும்,

பண்பாட்டிலும் தமிழ் அடைந்த வளர்ச்சி குறித்தும் பிற நாட்டவரே பாராட்டுகின்றனர். ஆனால், இன்றைய விஞ்ஞான யுகத்தின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய மொழியாகத் தமிழை வளர்த்தெடுப்பதிலே தான் தமிழ் மொழி விருத்தி பல இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. விஞ்ஞானத் தமிழாகத் தமிழை வளர்த்தெடுப்பதில் தமிழின் தூய்மை பேணப்பட வேண்டும் என்பது இம் முயற்சிக்கான முக்கியமான எதிர்க்குரலாகும்.

தமிழ்மூலம் விஞ்ஞான, தொழில்நுட்ப, இலத்திரனியல் அறிவினை ஈட்டமுடியாதென்ற தாழ்வு மனப்பான்மையை ஒரு சாரார் கொண்டிருக்கையில், தமிழில் எல்லாம் இருக்கிறது; அதுவும் சங்கத் தமிழிலேயே இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு தமிழின் பெருமை பாடித்திரியும் மற்றொரு சாராரும் தமிழரிடையே இருக்கின்றனர். இவர்களின் அறிவை உணர்வு வென்றுள்ளமையே இவர்களின் இந்நிலைக்குக் காரணமெனலாம். இவர்களின் அறிவை வென்ற இந்த உணர்வு நிலை, சில வேளைகளில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குமுட்டுக்கட்டையாவதும் உண்டு. ஆயினும், அறியாமைஇருளகற்றும் ஞானவிளக்காக விஞ்ஞானம் விளங்குகின்ற தன்மையை அறிந்து கொள்ளச் செய்வதனூடாகவே இந்த உணர்வு நிலையிலிருந்து அறிவு நிலைக்கு ஒருவனை மீட்கமுடியும். இவ்வடிப்படையிலேயே, தமிழில் விஞ்ஞானக் கல்வியின் அவசியத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**உசாத்துணைகள்**


அரங்கன், தி. (1975)மாற்றிலக்கண மொழியியல் சென்னை : தமிழ் நூலகம்

சண்முகதாஸ்,அ. (1974).கருவிலே திருவுடையார். ஊற்று, 2 (5),5-6

சந்திரசேகரம், ப. (1985).கல்வியியற் சிந்தனைகள். இணுவையூர் :கமலாதேவி சந்திரசேகரம்

சுப்பு ரெட்டியார்,ந. (1980). தமிழ் பயிற்றும் முறை சென்னை : எஸ்.இராசலிங்கம்

பன்னீர்ச் செல்வன், ஏ,இ.(1976) பொருளறிவியல்களைக் கற்பித்தல் தமிழ் நாடு :தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

முத்துலிங்கம், ச. (1980):கல்வி உளவியல் :பாகம் ii யாழ்ப்பாணம் :ஆசீர்வாதம் அச்சகம்

தாமோதரன் ,ஜி.ஆர். (1976).காந்தியடிகளும் ஆதாரக் கல்வியும் கலைக்கதிர் 28 (10), 9-12

Borger, R. (1969). The psychology of learning. Harmondsworth : Penguin Books Ltd .

Petty, W.T.(1980).Developing Children's language. Masschusetts : Allyn & Bacan, Inc.



**கலாநிதி த. கலாமணி**
சட்டத்துறைத் தலைவர்
சிரேஷ்ட விரிவுரையாளர் , கல்வித்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

# A Study on power of English Language in International Perspectives with Special References of Sri Lanka.

## Introduction

It is widely accepted that English is the language which is commonly used for communication in the international arena. The influence of English language is evident in all the fields of socio, economic, cultural area of life in the individual as well as in the national and international levels. When we look at a language, it has to perform many function at the national level and facilitate the other languages. Do we really need the efficiency of a foreign language for the survival of a common man in a society? Does it affect the native language of a society? There are many languages in the world in use, why are only a few languages more powerful at international level? Is it due to the richness of language or the power of the language? This article will consider the above factors in relation to the international perspectives with special references to Sri Lanka.

## Methodology

This article deals the influence of English in the international arena in relation to socio, cultural academic and political environment. For this purpose, the investigative project approach is employed which is mainly based on a literature review. The purpose of this study is to identify the power of English in relation to the world and specifically in Sri Lanka. There are a few specific terms used in this study such as power, English, international perspectives. In this context, power could be analyzed in symbolic as well as material power in relation to the English language. At the same time, role of English in relation to global perspective will be discussed in detail in multicultural and intercultural purview.

## Power of language

The formation of language power is primarily based on political or military power. In this point of view, English got the power due to their political influences. "Without a strong power base, whether political, military or economic, no language can make progress as an international medium of communication. Language has no independent existence, living in some sort of mystical space apart from the people who speak it." (Crystal, 1997,p5). Therefore, English acquired this influence due to two reasons. British political imperialism had sent English around the world, during the nineteenth century, so that it was 'a language on which the sun never sets'. During the twentieth century, this world economy is maintained and promoted by new American super power. (Calvet,1998, p.6). The Latin and other languages were in power in the past due to the political power. It is better to note here that the Britain ruled Sri Lanka for more than 250 years. Almost all the system of life was mostly based on the English language system. (Mendis, 1965, p125).

## Symbolic and material power of English language

The power of the language could be classified in two categories, which are called symbolic power and material power. Symbolic power means that the language is only powerful because people give it symbolic status. (Bourdieu, 1991,p9). Some of the countries in the developing world could use English as medium of instruction in the school system due to symbolic power. Most of the parents believe that English medium education could bring prosperity for their children and parents believe that English has material power also. It provides entry to middle class, to the middle class jobs, particularly working class people access to the languages that will give them social mobility. This type of perception commonly has prevailed in the developing countries. The material power of English could wipe out its competitors, even if it is inferior products. (Granville at el, 1998 p35). From the point of view of Britain, the second language of teaching is the largest export industries. This really indicates the symbolic power as well as the material power of the language.

In Sri Lanka, parents believe that the English language could bring symbolic power and material power for their children. There are a good number of International schools opened in the past to educate the children through the medium of instruction in English. In addition to this, the urban-based job market in the private sectors seeks people for jobs with knowledge of English. Countries like, Sri Lanka could depend on job opportunity for their people outside the world. In this connection, the power of English is very much important for their material power. When we compare with demand of English educated people, the supply will be always very less. The so-called social elite in the society controlled the social system in favor of them in the developing countries by using the English language.

## Present power of English in the International perspectives

English is used as an official language or semi official language in over 60 countries, and has prominent place in further 20. It is either dominant or well – established in all six continents. It is the main language of books, newspaper, airports and air traffic control, international business and academic conferences, science, technology, medicine, diplomacy, sports, international competitions, pop music, and advertising. Over the two - thirds of the world's scientists write in English. Three quarters of the world's mail is written in English. Of all the information in the world's electronic retrieval systems, 80% is stored in English. Over 150 million in twenty countries receive English radio programs. Over 50 million children study as an additional language at primary level; over 80 million study it secondary level. In any one year, the British Council helps a quarter of a million foreign students to learn English, in various part of the world. (Crystal, 1887,p358). In Sri Lanka, there are four daily newspapers in English. In addition to this, there are few weekly newspaper in English. There are many channels for broad casting in English. At the same time, there are many local and the international channels available in television.

There are quite a lot of bookshops that sell books in English language. All is evidence that shows the importance of English in the country.

**Power of English and global culture**

In the global context, the transmission of culture is coming through a common language. It is very important to note here that the English is the language, which plays a role in global context. Therefore, the culture of English language is common for all. "An international language is not the possession of a specific group. It is public property. It is not the vehicle of single culture. It becomes the vehicle of any culture to which a user applies it". (Hayhoe & parker,1994p 101). Therefore, English becomes the global cultural language. It is a common vehicle for all the nation of the world. English becomes more and more rich due to the accommodation of various cultures under this umbrella. Most of the countries of the world express their cultural diversity through English to other part of the world. There is no other way to express their cultural potential to the world. "Almost every country in the world communicates with another through English, quite often even with its close neighbors". (Dhamija, 1994p62). In this context, it is very important to note here that a country like India needs a link language to communicate within the country itself. Minority of any country would like to learn English rather than any other local languages. It is applicable in Sri Lanka too.

It is stated earlier that English is widely used in al most all part of the world. At the same time, it is accepted that English is an international language. In this view, it has a common culture. Whether people accept it or not, the way living in the world has some common pattern which was formulated through a common culture. English is the factor to form for that commonality of the international culture.

Due to the socio, economic, cultural and political factors of the post-modern world create multi cultural society most of the countries of the world. Some of the monocultural countries become multicultural due to the above factors. Those countries could maintain communal relation ship by using English language. United state of America, Canada, Australia, United Kingdom and India could use English for multi cultural development. In addition to this, the intercultural transmission of the world could be possible by using a common language. In this context, English can play a major role between the countries. Some of the important literatures which represent the cultural identity are translated into English. Therefore, English becomes a common language for all nations.

English could play another role in relation to formulating the global culture. Every culture has some specific item to enrich other culture of the world. In Sri Lanka, a form of dance called 'Knadyan Dance' is very famous in other part of the world. In the same manner, other area of the culture could be transformed to the global village.

It is commonly accepted that Sri Lanka has mostly adopted English as a way of practice in the public sector. Same the system of Britain has changed, but Sri Lanka is still continuing the formality of the colonial patterns. Cricket is the famous game in Sri Lanka. In other

words, Sri Lanka becomes popular due to tea and cricket, which were introduced by Britain.

### Power of English in socio political environment

From the social and political point of view, the spread of English around the world was largely the result of exploitation and colonization and in many multicultural countries, English is still the language of an exclusion of social elite. In all these countries in south Asia, the English language, sustained by English – by using elite of essentially the some kind, has continued, even after independence, to play comparable crucial roles. (Cheshire,1991, p. 271). In Sri Lanka, using the English language could motivate the social mobility of the society. Fernando (1982) point out that the non cultivator casts it offered, in addition, the possibility of moving away from the cast system based on heredity occupation towards a class system based on education, government or commercial employment and money. (Fernando,1982p 123). This typs of situation prevails in most of the countries of the South East Asia. Joseph and Ramani explain that "English after all, is the most highly resource language in the world and it seen as the language of opening and social mobility". (Joseph & Ramani, 1998, p.215). Therefore, the power of English still plays major role in social mobility.

Social elite and the politics are interrelated in any political system. It is very common in almost all the colonial countries of Britain. Social elite is formed through English education. Even after independence, this situation is still prevailing in these countries. (Canagarajah, 1997,15). India and Sri Lanka are very good examples of the political influence on term of English. Most of the political figures in system are English educated in England. At the same time, the English literature on politics mostly influences the democratic principle of political system. Parliament, cabinet and mode of electoral system are based on English system. Therefore, English influences every part of life. In addition to this, English educated elite initiated the independent movement in the colonial countries.

### Power of English in other languages

Zandvoori (1970) explain that English has enlarged into the lexical heart of the languages of Europe, it has certainly colored the complexion of Dutch, French, German, the Scandinavian languages, and to a lesser degree Italian and other European languages. The extent to which it has done this varies from languages to languages. (Zandvoori, 1670,p.170). In the same manner, English has influenced the lexicon of Indian and Sri Lanka languages. Most of the Lexicican in the field of science, technology are borrowed from English, which would enrich the native languages.

It is commonly accepted that the acceptance of a foreign language will be a threat to native languages. In other words, it is said that is genocide. (Pennycook, 1994). The spread of English has often been associated with the death, or virtual death, of the indigenous languages in those countries to which it has been transplanted. (Pennycook, 1998 p84). In this context, after the independence, the native languages of Sri Lanka have been promoted to the state languages, which were

used to discriminate against minority ethnic groups. In other words, the national language policies of Sri Lanka brought civil war among the ethnic groups.

**Power of English in education**

English language is used in the school system for different purposes. English is used as first language, English as a second language, English as a foreign language and English as an international language. Most of the countries, which were under British rule, use English as second language or international language. Some African and Asian countries use English for medium of instruction, which creates a division among the social environment. Some countries use only as a subject for communicative purposes. In Sri Lanka, English is used only as a subject for communicative purposes.

Education for all is accepted formula for all nations. Some countries do not have common languages or do not have written languages. Therefore, to educate their people, those countries need a common language. Therefore, English is used as a medium of instructional language.

In a country like India, native languages and English are used for medium of instruction. It is commonly believed among parents that English medium education could bring a glorious future for their children. Therefore, parents promote the medium of instruction in English. At the same time, Language problem is strictly related to that of the cultural identity of a country and the determinant its culture. Mother tongue as vehicle of instruction and education and as fundamental elements in the development of autochthonous regional cultures must emphasized. In Sri Lanka, after the independence, Mother tongue education was introduced which brought high rate literacy among the population. At the same time, it promotes native language education up to the university level.

Another important aspect in power of English in education is that the volume of literature written in English is enormous and comparable with the best written in any one language or regional languages. Native language do not have the facilities to translate that literature in English to their languages. In the global village, knowledge is vital for survival. In this context, those countries whether they like it or not, they are forced to teach English to cope up with the world movement. In addition to this, most of the western world teaches English as second as second languages. "English is already part of primary school curriculum in European countries such as Austria, Denmark, Holland, and there are exceptional project to bring English to the primary school in other countries: Spain, France, Italy, Hungray, Czechoslovakia, Poland and Bulgaria. (Cenoz & Lindsay, 1994,p 204). Therefore, teaching English language is accepted formula in the world.

No country could escape from this this third wave society of information technology. (Hough & paine, 1997p.93) The development of a country would depend upon science and technology. Education system generally incorporates science and technology in their system. Dajamija (1994) explained that no language is more suitable vehicle for science and technological research and purveyance. Currently, more than 50 percent to the research

papers on physical science are published in English. The remaining papers are available in English translation across the world. So, if we know English, we have direct access to this enormous source of information. Therefore, the power of English is immense in the global village.

It is generally believed that students should be learned their studies in their own languages. If they learn there studies in their mother tongue which will facilitate the under standing of the subject. If they learn their studies in their mother tongue which will facilitate the understanding of the subject. If they learn the subject other than their mother tongue or native language which will be a problem for the learner. The student who needs English as second language carries a double load because learning their second or other language at the same time, as they must cope with the demands of the curriculum in their second language. In this situation, the performance of their learning will be affected due to the medium of instruction. (Holdinott, 1998). Therefore, it is better to teach learners in native languages, which will promote learning with understanding.

Learning, English is easy for students who live in a country where English is spoken all the time, but in English as a foreign language setting teaching and learning are different. There will be a break down in the home and schools. (Eleghorn, 1998 p.463). In Sri Lanka, very recently, a few schools started in the city in the name of international schools, which practices English for medium of instruction. International schools follow the London based syllabus and preparing children for London based examination. This syllabus is not at all relevant to the native situation. It is common in other parts of the world. Affluent parents could afford to educate their children in those schools, which will create social disparity among the members of the society.

**Conclusion**

Power of English could bring advantages as well as disadvantages among the countries where practice in their system. Therefore, conclusion part will cover the strength, weakness, opportunity and threats or limitations (SWOT). Power of English in terms of strength is wide spread of the language all over the world. Therefore, all of us are forced to learn English to have communication with other part of the world.

There must be a common language for international communication for the world. It is generally accepted that English could play in that roles. No any other languages could spread as like English. Therefore, English could play as link language in the world of communication.

English has material power as well as symbolic power on the area of commerce and trade, knowledge and skills, education and other allied fields, which will facilitate the other parts of the world to improve the quality of life in the global village.

The power of English creates lot of problem in the national arena especially in the native languages. Due to English, the native language of India become inferior position in India, almost fifty years of after independence. In addition to this, I do not believe that Indian culture and Indian civilization can survive healthy and flourish unless the original language of the country flourishes. (Tally,1997).

The most powerful medium for conveying culture is language. A deep knowledge of a culture, one might almost say the acquisition of a culture could really be obtained through the knowledge of the language or one of the languages of that culture. Using English for in an official status will bring disadvantages to those countries in the area of native culture

Medium of instruction in education could play major role in cultural development of the learner. English medium schools attract the best teachers, resources, to provide modern facilities and the brightest pupils which contribute the division of the countries.

In the ideal world every body has English and another language, and every body does their support on endangered languages as well a sort of three fold linguists responsibility for 21st century – learn English well, learn another language well which will contribute the survival of a language as well as safeguard the culture of the society. English is to be used link language of the country which will promote national and international relationship.

It is not possible to teach English for the population other than their mother tongue. At the same time, it needs lot physical, human resources to teach them English who are not available almost in all the third world countries. Therefore, it is better to concentrate to educate their mother tongue, which will empower the population to improve their socio, economic, cultural, political aspects of the individuals.

**References**


1. Bourdieu, p. (1991). Language and Symbolic power, Polity press, Cornwall.
2. Calvet., L.J. (1998). Languages wars, Oxford University press, New York.
3. Canagarajah,. A.S,.(1997). Challenges in English literacy for African and Lankan Tamil learners, Language and education, Vol 11:1
4. Cenoz., J.& Lindsay., D. (1994) Teaching English in primary school: A project to introduce a third language to eight years olds, Language to eight years olds, Language and education, Vol 8no 4
5. Cheshire, J.,(1991). English Around the World, Cambridge University Press, Cambridge.
6. Cleghorn, A.,(1998) Classroom language use in multilingual settings: Mathematical lesson from Quebec and Zimbabwe vol 11
7. Crystal, D. (1997). English as a global languages, Cambridge, University press.
8. Fernando, C., (1982) English in Sri Lanka, New Englishes, Newbery House Publishers Inc, London.
9. Granville, S., at el (1998) English with or without G(u) ilt, : A position paper on language in education policy for South Africa, Language and education Vol 12:4

10. Hayhoe, M.,& parker.l, (1994). Who owns English? Open University Press, Buckingham.
11. Holdinott, D., (1998) Meeting the literary needs of non – English speaking background student, Unicorn, Vol 2o
12. Hough., M & paine., (1997) Creating Quality Learning communities, Macmillan, Australia.
13. Jeshoph, M., & Ramani., E. (1998) ELT specialist and linguistic hegemony, ELT Journal, Vol 53/2
14. Mendis, G.L.,(1965). Ceylon Under British Rule, Lake House Press, p125.
15. Pennycook, A., (1998). English and the discourses of colonialism, Routledge, London.
16. Pennycook. A., (1994). Cultural politics of English as an international language, Longman, London.
17. Swiniarski. L., (19990) Educating the Global Village, Merrill, Ohio.
18. Tally, M.,(1997).English: An advantage to India, Language and Education, vol 51/2
19. Zandvoori, R.W., (1970). Collected paper, Noordhoff publishing, Gronigen. U.NAVARATNAM. Ph. D.

*U.Navaratnam, Ph.D.*

# கற்பித்தற் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்தல், ஊக்கப்படுத்தல் தொடர்பில் ஆசிரியர்களின் புலக்காட்சி ஒரு நோக்கு

**முன்னுரை**

மாற்றத்திற்கான முகவர்களாகச் செயற்பட வேண்டியபணிபெருஞ்சுமையாகவும், சவால்கள் நிறைந்ததாகவும் கருதப்படுகின்றன. பூகோளமயமாக்கத்தின் விளைவாகப் பல்வேறு நிலைகளிலான மாற்றங்கள் மிக விரைவாக ஏற்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த உண்மையாகும். இவ்வாறான விரைவான மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்களும் மாற்றத்திற்கான முகவர்களாகச் செயற்படும் தமது பாங்கினை விரைவாக்கவேண்டிய தேவை அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஆசிரியர்களது பணிகளும் பல்வேறு வகைகளில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிகரித்துச் செல்லும் என்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது.

இதனிடையே கல்விவிருத்திப் போக்கிற் காணப்படும் பின்னடைவுகளுக்கும், மோசமான விளைவுகளுக்கும் கல்விப் புலத்தின் நடுநாயகமாகப் பணி நடைமுறைப் படுத்துவோராகப் பணியாற்றும் ஆசிரியர்கள் மீதே அதிக குற்றச்சாட்டுக்கள் அதிகம் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய குற்றச் சாட்டுக்கள் சரியானவையா? எந்தளவுக்குப் பொருத்தமானது? அவற்றைச் சீராக்கமுடியுமா? அவ்வாறாயின் அதற்கான உபாயங்கள் எவை? என்பவைபற்றிய விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தவேண்டிய தேவை இன்று அவசியமாக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

கல்விச் செயற்பாடுகளினதும், அதன் விளைவுகளினதும் பின்னடைவுகளுக்காகக் குறிப்பிடப்படுகின்ற காரணங்களில் ஆசிரியர் சார்பான காரணங்களின் உண்மைத் தன்மை எத்தகையது? ஆசிரியர் சார்பான நியாயப்பாடுகள், பின்னடைவுகளைக் குறைப் பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை? - போன்ற வினாக்களுக்கு விடைகாணும் நோக்கில் ஆய்வாளனின் பார்வை நீண்டுள்ளது. வரையறுக்கப்பட்ட எல்லைகளில் நின்றுகொண்டு, குறிக்கப்பட்ட வினாக்களின் அடிப்படையிற் சிபார்சுகளை மேலும் பரிசீலனைக்காக முன்வைப்பதும் இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.



ஆசிரியர்களின் பிரதிபலிப்புகளை அடிப்படையாகக்கொண்டு இவ் ஆய்வானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்க முற்படுகின்றது.

1. கல்விப் பின்னடைவுகள், கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பான தெரிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய கருத்துக்களை முன்வைத்தல்.
2. கல்விச் செயற்பாடுகள், கற்பித்தற் செயற்பாடுகளைச் செய்வதில் ஆசிரியர் களுக்குள்ள தடைகளைக் கண்டறிவது கருத்துக்கூறுதல்.
3. ஆசிரியர்களினது வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை அதிகரிப்பதற்குக் கையாளக்கூடிய வழிமுறைகள் பற்றிய கருத்துக்களைக் கண்டறிதலும் சிபார்சு செய்தலும்.
4. மாணவர்களிடையே ஏற்பட்டு வரக் கூடிய நடத்தை மாற்றங்கள் பற்றி வெளிப் படுத்துவதும் எதிர்வு கூறுவதும்.

5. கடந்தகாலத் தேசிய மட்டப் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் தமிழ்மொழி மூல மாணவர்களின் அடைவு மட்டப்போக்கினை விமர்சிப்பதும், அதனை மீளெழுச்சி பெறச் செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைத்தலும்

6. புதிய கற்பித்தல் முறைகளினால் ஆசிரியர்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள், சவால்களைக் கண்டறிந்து அவற்றைக் குறைவடையச் செய்யும் வழிமுறைகளைக் கண்டறிந்து சிபார்சுகளை முன்வைத்தல்.

7. ஆசிரியர் கல்வியின் பயிற்சி முறைகளில் உட்படுத்தக்கூடிய புதிய பயிற்சி நுட்பங்களைச் சிபார்சு செய்து முன்வைத்தல். என்பனவாகும்.

குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை அடைவதற்கு ஆய்வானது ஆழமானதாக வும், பரந்துபட்டதாகவும், அமையவேண்டி இருக்கின்றபோதும் மேலதிக ஆய்விற்கான அடிப்படைகளைத் தோற்றுவிப்பதற்காகக் குறித்த வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் ஆய்வினை அமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது என்பது இங்கு கவனிக்கப் படவேண்டியதொன்றாகும்.

**இலக்குக் குழுவும் வரையறைகளும்**

பரந்துபட்ட ஆய்வாக அமைய வேண்டிய ஒன்றிற்காக ஆய்வுக்கான காலம், ஆய்வுக்கு உட்படுவோரை அதிகரிக்கமுடியாமை போன்ற காரணங்களினால் ஆய்வுக்கு உட்படுவோரின் எண்ணிக்கையை வரையறுக்கவேண்டியிருந்தது.

ஆய்வுக்குரிய தகவல்களைத் தற்போது கடமையில் உள்ள ஆசிரியர்களில் எழுமாறாகத் தெரிவுசெய்யப்படக்கூடிய ஐம்பது ஆசிரியர்களிடமிருந்து பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் கற்பித்தற் பயிற்சிப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களிடமிருந்து கற்பித்தற் பயிற்சி மேற்பார்வையாளராகச் செல்லும் ஆசிரிய கல்வியியலாளர்கள் ஊடாகத் தயாரிக்கப்படும் வினாக்களின் அடிப்படையில் தகவல்களைத் திரட்டுவதற்கு முயற்சி செய்யப்பட்டது. எவ்வாறாயினும் வினாக்கள் வழங்கி, தகவல்களைப் பெறும்போது ஆசிரியர்கள் எந்த அளவிற்கு வெளிப்படையாகவும், உண்மையாகவும் ,பொறுப்புணர்வுடன் பதில் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதும்; ஆசிரிய கல்வியியலாளர்களிடமிருந்து இதற்கான தகவல்களைத் திரட்டுவதற்குப் பூரண ஒத்துழைப்பும், சிரத்தையும் கிடைக்கும் என்பதும் முக்கிய வரையறைகளாகக் காணப்படுகின்றன.

**தகவல்களுக்கான வினாக்கள்**

கல்விக்கான தடைகள், பின்னடைவுகள், பின்னடைவுகளுக்கான காரணிகள் ஆசிரியர்களின் கற்பித்தற் செயற்பாடுகள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, கடமையுணர்வு போன்ற பல்வேறு காரணிகளையிட்டுப் பல்வேறு விதமான விமர்சனங்கள் எழுவதும் முன்வைக்கப்படுவதும், வியாக்கியானம் கூறுவதும் பொதுவான போக்காகக் காணப்படுகின்றது. இவற்றின் உண்மைத் தன்மை, விமர்சனப் பார்வை போன்றவற்றிற்கு விளக்கமளிப்பது இவ் ஆய்வின் நோக்கமல்ல. மாறாக; ஆசிரியர்கள்பக்கமானபிரச்சினைகளும், எதிர்நோக்கப்படும் சவால்களும், கற்பித்தற் செயற்பாடுகளுக்கு எவ்வாறு தடையாக அமைகின்றன? அவற்றை மேலாண்மை செய்வதற்குக் கையாளக்கூடிய வழிமுறைகள் எவை? - என்பன போன்ற வினாக்களிற்கும் விடை காண வேண்டியிருக்கின்றது. இதற்காகப் பரந்து பட்ட பல வினாக்களைக் கேட்கவேண்டி யிருப்பினும் வரையறுக்கப்பட்ட குறித்த சில வினாக்களின் அடிப்படையிலே தகவல்களைப் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

ஆசிரியர் எதிர்நோக்குகின்ற சம்பளம், பொருளாதார நிலை, பதவியுயர்வு, இடமாற்றம், விடுதி வசதிகள் போக்குவரத்துப் போன்ற வெளிப்படையான பிரச்சினைகள் தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பலவும் அவ்வப்போது வெளிப்படுத்தியும், போராட்டங்கள் நடத்தியும் வருகின்றன. அவை பற்றியும் இவ் ஆய்விற் கருத்திற்கொள்ள வேண்டிய தேவைக்கு இடமளிக்கப்படவில்லை.

இவற்றுக்கு மேலதிகமாகக் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளில் ஆசிரியர் எதிர்நோக்கும் சவால்களையும், தடைகளையும், பிரச்சினைகளையும் வெளிப்படுத்தி அவற்றுக்கான வழிமுறைகளை முன்வைக்கும் வகையில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அதிக அக்கறையை வெளிப்படையாகக் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் ஆங்காங்கே முன்வைக்கப்படுகின்றன. எனவே, ஆசிரியர்களின் தொழில் வாண்மைக்குத்தடையாக உள்ள விடயங்களை ஓரளவுக்கேனும் வெளிக்காட்டக் கூடியவாறு சில வினாக்களின் வழியாகத் தகவல்கள் பெறப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது. அவ்வினாக்களும், அவற்றுக்குக் கிடைத்த கருத்துக்களும், ஆலோசனைகளும், அவற்றுக்கான ஆலோசனைகளும் தனித்தனியாகத் தரப்படுகின்றன.

ஆசிரியர் வாண்மைவிருத்தி தொடர்பாக இன்னும் பல வினாக்கள் எழுப்பப்படக் கூடியதாக இருக்கின்ற போதும், ஒரு முன்னோடி ஆய்வு என்பதனாலும், வரையறைக்குட்பட்ட ஆய்வு என்பதனாலும் மேற்குறிப்பிட்ட வினாக்களுக்குள் உட்பட்ட தகவல்களை மட்டும் உள்ளடக்கியதான ஆலோசனைகள் முன்வைக்க முயற்சிசெய்யப்படுகின்றது. குறித்த வினாக்களின் வழியிற் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை ஒழுங்குபடுத்தி அதனடிப்படையிலானாலும் பொருந்திப்போகக் கூடியதுமான கருத்துக்களே இவ்வாய்வில் முன்வைக்கப்படுகின்றன.

**தகவல்களும் ஆலோசனைகளும்**

இவ்வாய்வுக்காக ஆசிரியர்களிடம் வழங்கப்பட்ட வினாக்களுக்குச் சரியாகவும் உண்மையாகப் பதிலளிக்க, சில ஆசிரியர்கள் தயக்கம் காட்டியமை ஆச்சரியத்தை அளித்தது. எவ்வாறாயினும் பலர் தமது கருத்துக்களை தெளிவாகவும், விளக்கமாகவும், தெரிவித்திருந்தனர். இலகுவான ஒப்பீட்டு விளக்கம் கருதி ஒவ்வொரு வினாக்களுக்கும் தனித்தனியாக வழங்கப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து வழங்கப்படுகின்றது.

**வினா இல - 01**

**கற்பித்தற்செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர் மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றிய ஆசிரியர்களின் கருத்துக்கள்.**

- சந்தர்ப்பங்களைப் பொறுத்துச் சிலவேளைகளில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இருக்கலாம். சில குற்றச்சாட்டுக்களை ஏற்கமுடியாது.
- பெரும்பாலும் மாணவர்களினது பொருளாதாரப் பின்னணியின் தாக்கங்கள், பெற்றோரது பங்களிப்பு மற்றும் ஆதரவின்மை, ஊட்டக் குறைபாடுகள், மாணவர்களின் இயல்பான கற்றல் ஆர்வமின்மை, பாடசாலையிற் காணப்படுகின்ற வளங்களின் வசதிகளின் பற்றாக்குறை போன்ற காரணிகள் குறிப்பாகக் கஷ்ரப் பிரதேசப் பாடசாலைகளின் மாணவர்களின் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை ஆசிரியர் மட்டும் பொறுப்பேற்க முடியாதுள்ளது.
- பாடசாலைகளிற் காணப்படக்கூடிய ஆசிரியர் பற்றாக்குறை, பாடத்திற்குப் பொருத்தமான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றபோது, இரண்டு வகுப்புக்களுக்கு ஓர் ஆசிரியர் எனச்

செயற்படுகின்றபோது கற்பித்தலிற் குறைபாடுகள் பற்றி எவ்வாறு கதைக்கமுடியும்?

- குணநல உள்ளீடுகளைப் பயன்படுத்துவதில் உள்ள குறைபாடுகள், பலவீனங்கள், கற்பித்தலைப் பாதிக்கின்றன. அதேவேளை, பாரம்பரியமான, வழமையான கற்பித்தற்சாதனங்களே பயன்படுத்தப்படுகின்றன.
- ஆசிரியர்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் காணப்படினும் எல்லா ஆசிரியர்களினாலும் அக்குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஒரு சில ஆசிரியர்களின் செயற்பாடுகள் இக் குற்றச்சாட்டுக்களினால் உண்மைப்படுத்தப்படுகின்றன. எனினும், ஆசிரியர்களுக்கான வேலைப்பளுக்கள், பாடநேரங்களில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் வேறு வேலைகளில் ஈடுபடுத்தல், பாடத்திட்டத்தின் அதிகளவான உள்ளடக்கம் போன்றவையே ஆசிரியர்களின் கற்பித்தலிற் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.
- கல்வி நிர்வாகக் கட்டமைப்பின் வரையறைகள், அரசியல் தலையீடுகள், தனிமனித செல்வாக்குப் போன்றவற்றாற் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், முறையாகத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தாமையினால் கல்வி செயற்பாட்டிற் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையே அதனால் கற்பித்தல் செயற்பாடுகள் தடைப்பட்டே காணப்படுகின்றன.
- ஆசிரியர்களின் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையே, அதனால் கற்பித்தற் செயற்பாடுகள் தடைப்பட்டே காணப்படுகின்றன.
- கற்பித்தலிற் சரியான முறைகள் பயன்படுத்தப்படின் ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்களைத் தவிர்க்கலாம்.
- ஆசிரியர்கள் மீது மட்டும் குற்றச்சாட்டுக் களை முன்வைக்கமுடியாது. கல்வியில் மாணவர்களின் குடும்பம், சூழல் ஆகிய காரணிகளும் பெருமளவிற் செல்வாக்குச் செலுத்துகின்றன. தனித்து ஆசிரியரால் மட்டும் மாணவர்களின் கற்றலிற் செல் வாக்குச் செலுத்தமுடியாது.
- பாடசாலைகளின் உள்ளேயும், வெளியேயும் நடத்தப்படுகின்ற இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் அளவு என்பனவாகும்

மேற்கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்களைப் பலர் ஏற்றுக்கொள்வதையும், அவற்றுக்கான காரணங்களை முன்வைப்பதையும் காணக்கூடியதாக உள்ளன. இக்காரணங்கள் ஆசிரியர் சார்பானவையாகவும், கல்வி நிர்வாகம் சார்பானவையாகவும், கலைத்திட்டம் சார்பானவையாகவும், பிரித்து நோக்கமுடியும்.

ஆசிரியர் சார்பான காரணங்களை ஏற்றுக்கொள்பவர்கள் அவற்றை நிவர்த்திசெய்து கொள்வதிலும், கல்வி, நிர்வாகம், கலைத்திட்டம் சார்பானவற்றைத் தொடர்புடையவர்கள் கருத்திற்கொண்டு, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

மாணவர்கள் சார்பானவற்றைத் தீர்க்க; மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்களை நடாத்துதல், மாணவர்களின் பொருத்தமான நடத்தை மாற்றங்களை வருவிக்கக்கூடிய ஆலோசனைகள், வழிகாட்டல், தொழில் வழிகாட்டல், பாடத்தெரிவுகளுக்கான வழிகாட்டல்கள் என்பன போன்றவற்றை வழங்குதல் ஆகிய வழிகளைப் பின்பற்றி

ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்களைக் குறைத்துக்கொள்வதற்கும், கல்வித் தர மேம்பாட்டிற்கும் வழிவகுக்கக் கல்வி உலகு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். எவ்வாறாயினும் ஆசிரியர்களது செயற்பாட்டிற்குத்தடையாக உள்ள காரணிகளும் ஆராயப்படல்வேண்டும்.

**வினா இல - 02**

**ஆசிரியர்களுக்கு அவர்களது தொழிலைச் செய்வதில் உள்ள தடைகள் என நீங்கள் கருதுபவை எவை?**

ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்களும், அவற்றுக்கான காரணங்களும் முன்னைய வினாவில் நோக்கப்பட்டுள்ளன ... அத்தகைய செயற்பாட்டுக்குறைவுக்குக் காரணமாக இருக்கக்கூடிய தடைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.

- போக்குவரத்துத் தடைகளும் தாமதங்களும் நேர முகாமைத்துவத்திற்குத் தடையாக உள்ளன.
- கற்றல்-கற்பித்தலுக்கான நேரப்பற்றாக் குறை
- செயற்பாட்டுக்குப் பொருத்தமான போதிய இடவசதிகளின்மை.
- வளங்கள் உரிய நேரத்துக்குக் கிடைக்காமை.
- பொருத்தமற்ற குடும்பச் சூழ்நிலைகள்
- பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளின் சிக்கலான நிலை.
- பொருத்தமற்ற, ஒத்துழைக்காத தன்மையுள்ள மாணவர்கள், அவர்களது குறைபாடுகளுடைய முன்னறிவு.
- தரம்குறைந்த ஆசிரியர்களின் பொருளாதார, சமூகச்சூழல்கள்
- மாணவர்களது குடும்ப, கற்றற் சூழல் வேறுபாடுகள்.
- ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் குறைவு.
- நவீன தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பும், பாடங்கள் வழங்கப்படாமையும்.
- ஆசிரியர்களது சொந்தப் பிரச்சனைகளும் அதனால் ஏற்படக்கூடிய இடர்பாடு களும்
- பாடவேளைகளில் வழங்கப்படும் ஏனைய எழுத்துமூல ஆவணங்களும், வேலைப்பளுக்களும்.
- ஆசிரியர்கள் தமது திறமைகளை வெளிக் காட்ட உரிய சந்தர்ப்பம் வழங்கப்படாமை.
- கல்வித் திணைக்களங்களின் (வலய) முன் திட்டமிடப்படாத செயற்பாடுகள்? வெளி நிறுவனங்களின் தலையீடுகள்
- பொருத்தமற்ற பாட ஒதுக்கீடுகளும், திடீரென எழும் மாற்றங்களும்
- அதிபர்களின் உதவிகள், ஒத்துழைப்புகள் கிடைக்காமை; பொருத்தமற்ற இடமாற்றங்கள்.
- பாடசாலைச் சமூகத்தின் பொருத்தமற்ற இடைத்தாக்கங்கள்.
- ஆசிரியர்கள் சுயமாகச் செயற்படுவதற்கு உள்ள தடைகள், உரிய மதிப்புகள் வழங்கப்படாமை.
- மாணவர்களுக்கிடையிலான கற்றல் வேறுபாடுகள்.
- பாடசாலை நிர்வாகச் சிக்கல்கள்.
- பாடசாலை வளங்களின் பற்றாக்குறை, மாணவர்பங்களிப்புக்குறைபாடு, பெற்றோர் ஒத்துழைப்பு க் கிடைக்காமை.
- சொந்த இடங்களில் நியமனம் கிடைக் காமை.
- மேலதிகாரிகளின் கடுமையான நிர்வாகப் போக்கு.

- ஆசிரியர்களுக்குப் பாட ஆயத்தங்களுக்குப் போதிய நேரம் கிடைக்காமை.
- மாணவர்களது பழக்கவழக்கம், வீட்டுச் சூழல், ஒழுக்கம் குறைந்து கட்டுப்படுத்த முடியாத நடத்தைகள்.

இவ்வாறான தடைகள் ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டிருப்பினும் இவற்றின் உண்மைத்தன்மைகள் சில ஆராயப்பட வேண்டியதும்; சில கருத்திற் கொள்ளப்பட்டு உரிய நேரப்படுத்தல்வழிமுறைகள்கையாளப்பட வேண்டியவையுமாகக் காணப்படுகின்ற அதேவேளை; சில ஆசிரியர்களின் தனிப்பட்ட தேவைகளையும், எதிர்பார்க்கைகளையும் கருத்திற் கொண்டவையாகவும், நிர்வாகச் சிக்கல்களையும்கருத்திற்கொள்ளாதவையாகவும் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இவ்விடயங்கள் சகலராலும் கருத்திற் கொள்ளவேண்டியவையாகவும் உள்ளன.

எவ்வாறாயினும் ஆசிரியர்களின் வினைத்திறன்மிக்க செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

**வினா இல - 03**

**ஆசிரியர்களின் வினைத்திறன்மிகு செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு உங்களால் வழங்கப்படக்கூடிய ஆலோசனைகள் எவை?**

ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்களைக் குறைத்துக்கொள்வதற்கு அவர்களது வினைத்திறன்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. அதற்காக ஆசிரியர்களே தெரிவிக்கும் கருத்துக்கள் பின்வருமாறு அமைந்தன.

- பாடசாலை மட்டங்களில் வருடத்துக்கு ஒரு முறையாவது வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை நடத்துதல்.
- ஆசிரியர் செயற்பாடுகளுக்கு உதவக்கூடிய மகிழ்ச்சியான பாடசாலைச்சூழலை ஏற்படுத்தல்.
- நவீன சாதனம் பயன்படுத்தக்கூடிய ஆகக்குறைந்தளவிலாவது வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.
- சகபாடி, வழிப்படுத்தல் தன்மையுள்ள மேற்பார்வை.
- வகுப்பறை மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பிற் கவனம்.
- பெற்றோரின் சாதகமான, ஆரோக்கியமான பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்தல்.
- நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் பயன்படுகின்றமை தொடர்பான பயிற்சி.
- ஆசிரியர்கள் தாம் சிறப்புத் தேர்ச்சிபெற்ற துறைகளிற் கற்பிப்பதற்கு பாடங்களை ஒதுக்கிக்கொடுக்கக்கூடியவாறு ஆசிரியர் வளங்களைப் பங்கீடு செய்தல்.
- பாடசாலைகளிலேயே ஆசிரியர் பாடங்களை முன்னாயத்தம் செய்யக்கூடிய நேரங்களையும், வசதிகளையும் வழங்குதல்.
- ஆசிரியர்கள் அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் செயற்படும் மனப்பாங்குகளுக்கு இட்டுச்செல்லக்கூடிய முயற்சிகளில் ஈடுபடல்.
- ஆசிரியர்களுக்கான சமூக மதிப்பையும், அந்தஸ்தையும் உயர்த்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்.
- ஆசிரியர்களுக்கான வேலைப் பழுக்களை இயன்றவரைகுறைத்து; மாணவர்களுடனான கற்றற்செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
- ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான கற்றல் அல்லது பயிற்சிச் சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
- ஆசிரியர்களின் நலனோம்பல்களில் அதிக கவனம் செலுத்தி ஊக்குவிப்பளித்தல், பாராட்டு வழங்குதல்.

- ஆசிரியர் - மாணவர்களுக்கிடையிலான சிறந்த ஆரோக்கியமான, துணை போகக்கூடிய உறவுகளை வளர்க்க முயற்சித்தல்.
- ஆசிரியர்களிடம் உள்ள குறைகளை விமர்சிக்காது திருந்தி நடப்பதற்கு உதவுதல்.
- ஆசிரியர்களின் சுயமான கற்பிப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
- ஆசிரியர்களின் திறமைகளை இனங்கண்டு ஊக்குவித்துப் பாராட்டுதல்.
- கட்டுக்கோப்பான நிர்வாகச் செயற்பாடு களின்கீழ் பணியாற்ற இடமளித்தல்.
- மாற்றுமொழித்திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.
- நேரடி அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள் வழங்கல்.
- ஆசிரியர்கள் மன அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கான பரிகாரக் குறைகளை அடையாளங்கண்டு நடைமுறைப்படுத்துதல்.
- இடர்ப்படக்கூடிய விடயங்களை இனங்கண்டு உரிய உதவி வழங்குதல்.
- ஆசிரியர் தொழிற் சட்டம் ஒன்றை உருவாக்குதல், ஆசிரியர் தொழிலுக்கு வாண்மைத்துவ அந்தஸ்த்தைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

ஆசிரியர்களின் விளைத்திறன்மிக்க செயற்பாடுகள் அதிகரிக்க மேற்கூறப்பட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையில் இவ்வாலோசனைகளை யார்? எவ்வாறு நிறைவேற்றுவது என்பதுபற்றிய சிந்தனைகளையும், இங்கு தோற்றி நிற்கின்றது. இவ்வாலோசனைகளைப் பாடசாலை நிர்வாகம், கல்வித்திணைக்கள நிர்வாகம், கல்வி அமைச்சு, கல்வி நிர்வாகக் கட்டமைப்பு நிறைவேற்றவேண்டும் என மறைமுகமாகக், கோரிநிற்கின்றது.

இவற்றிற் பலவற்றை ஆசிரியர்களும் தாங்களாக முயற்சி செய்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற கருத்தும் இல்லாமில்லை. ஓர் ஆசிரியரின் ஆலோசனைகளைக் கணிப்பதற்காக அவ்வாறே இங்கு உதாரணத்திற்காகத் தரப்படுகிறது.

- ஆசிரியர்கள் நவீன கற்றல் - கற்பித்தல், உபகரணங்களைப் பயன்படுத்துதல்.
- மாணவர்களுக்குக் கற்பித்தல் உபகரணங்களுடன் கற்பித்தல்.
- மாணவர்களுக்கு நல்ல கவின்நிலை யுடைய கற்றற்சூழலை ஏற்படுத்துதல்.
- ஆசிரியர்கள் வகுப்புக்குள் முழுமையான ஆயத்தத்துடன் செல்லுதல்.
- ஆசிரியர் நல்ல தேடல் உள்ளவராகக் காணப்படுதல்.
- ஆசிரியர்கள் கற்று, கற்பிக்கப்படக் கூடியவராக இருத்தல்.

ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கருத்துக்களிலும், ஆசிரியர்களின் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களிலும் ஆலோசனைகளிலும் மாணவர்கள் தொடர்பான கருத்துக்களும் செறிந்து காணப்படுகின்றன. எனவே, மாணவர் தொடர்பான இயல்புகளும், தடைகளும் கவனத்திற்கொள்ளவேண்டியவையாகின்றன.

**வினா இல - 04**

நீங்கள் மாணவர்களாக இருந்த காலத்திற்காணப்பட்ட மாணவர்களின் நடத்தைக்கும்; தற்போது, நீங்கள் ஆசிரியராக இருந்து அவதானிக்கும் மாணவர்களின் நடத்தைக்குமிடையிற் காணப்படும் வேறுபாடுகள் எவை?

இவ்வினாவுக்குக் கருத்துத் தெரிவித்தவர்களுடைய கருத்துக்களிலிருந்து இரண்டு வகைப் படுத்தல்களுக்கு உட்பட்ட கருத்துக்களை அவதானிக்க முடிந்ததினால் அவற்றை இங்கு வேறுபடுத்தித் தரப்படுகின்றது. தற்கால மாணவர்களின் கற்றலுக்குச் சாதகமான இயல்புகளும், பாதகமான இயல்புகளும் அவையாகும்.

**கற்றலுக்குச் சாதகமான மாணவர்களின் இயல்புகள்**

- இயல்பான துடிப்பும் துடுக்குத்தனமும் நிறைந்தவர்கள்.
- நுணுகி ஆராயும் இயல்பும், புதுமை நாட்டமும் உள்ளவர்கள்.
- நவீன இலத்திரனியற் சாதனங்கள்பற்றி அறிவும், பரீட்சயமும் உள்ளவர்கள்.
- பல்திறமை கொண்ட மாணவர்கள்.
- ஆசிரியர்களுடன் அந்நியோன்யமாகப் பழகும் விருப்பம் கொண்டவர்கள்.
- குழுவாகக் கற்பிப்பதனூடாக மகிழ்ச்சிகரமான கற்றலில் ஈடுபடுகின்றவர்கள்.
- பூகோளமயமாகுதலால் மாணவர் கள் அதிக விடயங்களை அறிந்திருப்பவர்களாகக் காணப்படுகின்றமை.

**கற்றலுக்குப் பாதகமான மாணவர்களின் இயல்புகள்.**

- எல்லாவற்றையும் ஆசிரியர் கூறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடையவர்கள்.
- தாய் தந்தையரைப் பிரிந்துவாழக்கூடிய மாணவர்கள் கல்வியில் ஆர்வமற்றவர்களாகக் காணப்படுவர்.
- தனியார் கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ளமையால் தனியார் கல்வி நிறுவனங்களிற்கற்பதிலேயே அதிக ஆர்வமும் விருப்பமுடையவர்களாக இருக்கின்றனர்.
- தண்டனைகளுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகம் காணப்படுகின்றமையினால் ஒழுக்கம் பேணமுடியாத நிலையும், ஒழுக்கச் சீரழிவுகளும் அதிகமாக மாணவர்களிடம் காணப்படுகின்றது.
- ஊடகங்களின் பயன்பாடு அதிகம் உள்ளமையினால் மாணவர்கள் நேரடியாக அவர்களை வாழ்க்கையிற் பிரயோகிக்க முற்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். சமூகச் சீரழிவுகளுக்குக் காரணமானவர்களாகக் காணப்படுகின்றனர்.
- மாணவர்கள் தங்களது கடமைகள், பொறுப்புக்களை மறந்து செயற்படுவர்களாக உள்ளனர்.
- பாடசாலை வகுப்புச் செயற்பாடுகளில் அக்கறை காட்டாதவர்களாகவும், கற்பித்தலைத் திசை திருப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.
- கலாசாரச் சீரழிவுகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய பொழுதுபோக்கு அம்சங்களில் அதிக நாட்டமுடையவர்.
- ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்புகள் குறைவாகக் காணப்படுகின்றன.
- பெரியவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கத் தவறுபவர்களாக, காணப்படுகின்றனர்.
- ஆசிரியர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காதவர்கள்.
- பாடசாலை ஆசிரியர்களை அதிகம் குறை கூறுகின்றனர்.
- பரீட்சைக்கு மட்டும் ஆயத்தப்படுத்துபவர்களாக உள்ளனர்.

முற்கால மாணவர்களுடன் ஒப்பிட்டுத் தற்கால மாணவர்களின் இயல்புகள்

முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றிற் கற்றலுக்குச் சாதகமாக மாணவர்களிடம் காணப்படும் இயல்புகளைச் சரியாக இனங்கண்டு அவ் இயல்புகளுக்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறைகளையும், நுட்பங்களையும் கையாளுவதனூடாக மாணவர்களைப் பயன்படுத்தவும், முகாமைசெய்யவும் விளைதிறன்களை அதிகரித்துக்கொள்ளவும் முடியும். இவ்விடயங்களின் ஆசிரியர்கள், நிர்வாகிகள், திட்டமிடலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் அதிககவனம் செலுத்தவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கமாக, மாணவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் என்பதைவிட, கற்றலுக்குப் பாதகமான மாணவர்களின் இயல்புகளிலும் அதிகம் கவனம் செலுத்தி, அவ் இயல்புகளைக் கற்றலுக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் அதிகம் முயற்சி காட்டப்படல்வேண்டும். மாணவர்களின் ஒழுங்கீனங்கள், கலாசாரச் சீரழிவுகள், பெரியவர்களை மதிக்காமை போன்றவற்றாற் கல்விக்கும், மாணவர்களது தனிப்பட்ட ஆளுமைக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை உணரச் செய்வதற்கான கருத்தரங்குகள், வழிகாட்டற்செயற்பாடுகள், பயில் அரங்குகள், பிரதிபலிப்புக்கள், திசைமுகப்படுத்தல்கள், ஆலோசனை வழிகாட்டல்கள் செய்யப் படுவதினூடாக மாணவர்களைத் திசைப்படுத்த முயற்சிக்கவேண்டும். முடியாது என்பதை விட, முயற்சி செய்து பார்ப்பது பல நல்ல விளைவுகளைத் தரும்.

**முடிவுரை**

இதுவரை ஆசிரியர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றிய கருத்துக்கள், ஆசிரியர்களுக்கான தடைகள், தற்கால மாணவர்களின்இயல்புகள்ஆகியனதொடர்பான கருத்துக்களும், அவை தொடர்பான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாலோசனைகளும், கருத்துக்களும் இவ்வாய்வுக்குக் கொள்ளப்பட்ட 5ஆம், 6ஆம் வினாக்களுக்கான கருத்துக்களாக மீண்டும் கூறப்பட்டுள்ளன. எனவே, அவ்வினாக்களுக்கான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தொகுக்கவேண்டிய தேவையில் இருந்து தவிர்க்கப்படுகின்றது.

ஆசிரியர்கள் தொடர்பான கருத்துக்கள் மாதிரிகளாகக் கொள்ளப்பட்ட சில ஆசிரியர்களின் கருத்துக்களினூடாகவே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவை சிறிய தொகையினருடையகருத்துக்களாகஇருப்பினும் பொதுமைப்படுத்தக்கூடியதாக அமைகின்றமை கவனத்திற் கொள்ளக்கூடியதாகும். கல்வித்தர மேம்பாட்டிற்கு உதவக்கூடிய பங்காளிகளாக ஆசிரியர்களை மாற்றிக்கொள்வதற்கு அவர்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும், அவர்கள் எதிர்நோக்கக் கூடிய நியாயமான சவால்களையும், தடைகளையும் கருத்திற்கொண்டு கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு முன்வைத்து வசதிப்படுத்துவது அவசியமாகும்.

ஆசிரியர்களுடைய கருத்துக்களுக்கும், ஆலோசனைகளுக்கும் அமைவாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மேலும் ஆய்வுக்குட்படுத்தி சிந்திக்கவேண்டியவையாகும். ஆய்வுகளை மேற்கொள்ள விரும்பும் கல்வியியலாளர்கள், கல்வி நிர்வாகிகள், கல்வித்திட்டமிடுவோர் இவை தொடர்பான மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டு விதப்புரைகளை மேலும் தெளிவாக முன்வைக்க முடியும்.


க. பேர்ணாட்.
*பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி*
*வவுனியா*

# ஆசிரியர் கல்வியும் அதனை வழங்கும் நிறுவனங்களும்

ஆசிரியர் (ஆசு-மாசு, இரிதல் -நீக்குதல்) என்பவர் அறிவை மாணவர்களிடத்து நிரப்புவதன்மூலம் அறியாமையை நீக்குபவர் "தாரமும் குருவும் தலைவிதிப்படி" எனப்படுகிறது. வாழ்க்கைத்துணை ஒருவரது வாழ்க்கைக்கு ஆதாரமானதும், அவசியமானதும் அதேயளவு ஆதாரமும் அவசியமானதும் ஆனவர் குரு (ஆசிரியர்) என்பதே பொருள். ஆசிரியர் தொழிலை மகாகவி பாரதியார் பின்வருமாறு வியந்து பாராட்டுகிறார்.



" அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"




சமுதாயசிற்பிகளாகவும், அறிவொளி ஏற்றும் தீபங்களாகவும் விளங்கும் ஆசிரியர்கள் வகிபாகங்களை ஏற்று நடப்பவராயிருத்தல் வேண்டும்

"டொன்வெஸ்லி" என்பவர் ஆசிரியரிடம் பின்வரும் பண்புகள் இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

1. ஆசிரியர் மற்றவரிடம் இரக்க மனப்பாங்குடன் செயற்படுபவராக இருக்க வேண்டும்.
2. ஆசிரியர் என்போர் தனியாகச் செயற்படுவோர் அல்ல, கூட்டாகச் செயற்பட்டு மாணவர்களின் கற்றலை விருத்திசெய்தல் வேண்டும்.
3. ஆசிரியர் தமது பணிக்கான வகைகூறும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
4. ஆசிரியர் நீண்டகாலப் பொறுப்புடன் தரிசன நோக்குடன் செயற்படுவராக உள்ளார்.

5. வகுப்பறைச் செயற்பாட்டின் (கற்றல்- கற்பித்தலின்) வெற்றி ; ஆசிரியர் செயற்பாட்டிலே தங்கியுள்ளது.

6. தமது மாணவர்கள் தொடர்பில் மிகுந்த நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்.

7. பாடசாலை மட்டத்தில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்று செயற்படுபவராக ஆசிரியர் இருக்க வேண்டும்.

8. ஆசிரியர் தமது செயற்பாடு தொடர் சுயமதிப்பீட்டில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும்.

9. ஆசிரியர் தாம் செய்யும் தவறுகளை ஏற்றுக்கொண்டு உடனடியாகத் தீர்வு கிட்டச் செய்பவராக இருக்கவேண்டும்.

10. ஆசிரியர் மாணவர்களின் இரு கண்களாகச் செயற்படுபவர்களாக இருக்கவேண்டும்.

ஆசிரியரானவர் ஒவ்வொருமாணவரைப்பற்றியும் ஆழமாக அறிந்திருக்கவேண்டும். ஆங்கிலேய நாட்டுக் கல்வியியலாளரான "சேர் ஜேனர் அடம்ஸ்" அவர்கள் கூறுகையில் " ஜோனுக்கு லத்தீன் மொழி கற்பிக்கும் ஆசிரியர், லத்தீன் மொழியை மாத்திரம் தெரிந்தாற் போதாது. ஜோனைப் பற்றியும் அறிந்திருக்கவேண்டும் என்றார்.

**கல்வி**

மனிதனை மனிதனாக மாற்றுவது எது? மனிதனைவிலங்குகளிடம்இருந்துபிரிப்பதுஎது? மனிதனுக்கு நாகரிகத்தையும், பண்பாட்டையும் கற்றுக்கொடுப்பது எது? உலகில் அழியாச் செல்வம் எது?- என்ற வினாக்களுக்கு எல்லாம் விடையாக அமைவது கல்வி ஆகும். "ஆசையே துன்பங்களுக்குக் காரணம்" என்கிறார் கௌதம புத்தர் . " அறியாமையே துன்பங்களுக்கு ஆணிவேர், என்கிறார் அறிஞர் பிளேட்டோ. அறியாமையை அறிவதே அறிவின்ஆரம்பம்; அதற்கு அடித்தளமாக அமைவது கல்வியாகும்.

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கீடான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை என்பதிற் கல்வியின் மகிமையை அறிந்துகொள்ளலாம்.

**ஆசிரியர் கல்வி**

ஆசிரியர் கல்வி என்பது ஒரு பொறி முறையானசெயற்பாடு அல்ல. அது மனிதர்களை உருவாக்கும் செயன்முறையாகும். ஆசிரியர் கல்வி என்பது கற்போனை மையப்படுத்திய ஒரு செயன்முறையாகும். அது மனித ஆளுமையை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசிரியர் கல்வியானது ஒரு வாழ்க்கைச் செயன்முறை. இது தம்மைத்தாமே கற்பித்துக்கொள்வதற்காகச் சுய ஊக்கத்தைக் கொண்டுள்ளனர் என்பதை யுனெஸ்கோ கல்வி தொடர்பானஅறிக்கைமூலம்அறியமுடிகின்றது.

கற்றல் கற்பித்தலானது ஆரம்ப காலங்களை விடத் தற்காலத்தில் ஆசிரியர் மத்தியிற் புதிய போக்குகளைக் கொண்டு உள்ளது. அதாவது இதன்மூலம் செயற்பாடுகள் வெற்றிகரமாகவும், தனியாள் விருத்திக்கும், சமூக விருத்திக்கும் அடிப்படைக் காரணிகளாக அமைவதற்கு ஆசிரியரே சிறப்பாகப் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர் கல்விக்குரிய நோக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- தரமான கல்வியை வழங்குவதற்குரிய அடிப்படையான பயனுறுதியுள்ள கற்பித்தலை உருவாக்குதல்.
- ஆசிரியர்களின் ஆளுமையை வளர்த்தல்.
- கல்வியில் விரயத்தைத் தவிர்த்தல்.
- தகவல் தொழில் நுட்பத் திறனை விருத்தி செய்தல்.

- சமூகத்தின் புதிய சமூக பொருளாதார கலாச்சாரமாற்றங்களுக்கும் ,சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வல்லமையை விருத்தி செய்தல்.
- அறிவு, திறன் ,மனப்பாங்கு ஆகியவற்றைக் கொண்டு சிறந்த விழுமியங்களையும் , மனப்பாங்குகளையும் வளர்த்தல்.
- ஒவ்வொரு மாணவர்களினதும் உடல்சார்ந்த, அறிவுசார்ந்த, வளம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து இருத்தல்.

ஆசிரியர் கல்வி: பராம்பரியக் கல்வி முறையிலிருந்து உலகமயமாதல், தகவல் தொடர்பாடல், நவீன சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இலங்கையிலும் ஆசிரியர்கல்வியும், காலத்தின் தேவை, நிலைமைகளுக்கு ஏற்ப அதன் கட்டுமானம், பரிணாமம், நடைமுறைகள் மாற்றி அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இந்தவகையில் ஆசிரியர் கல்விக்கு நீண்டகால வரலாறு இலங்கையில் உண்டு. இதற்குரிய சான்றுகளும், ஆவணங்களும் பல உள்ளன.

குருகுலக்கல்வியில் ஆரம்பித்து மேலைத்தேயத்தவர்களின் வருகையின் பின்னர் ஆசிரியர் கல்வி விரிவுபடத்தொடங்கியது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றவர்களாற் செமினெறிமூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சி பெற்றனர். இவ்வாறு இருந்தபோதிலும் *1931*இல் ஆசிரியர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பது உண்மையாகும். இவ்வாண்டிற் கண்டி ஹந்தெஸ்சவில் அரசாங்க இருமொழிப்பாடசாலையில் ஆசிரியர் பயிற்சி பரீட்சார்த்தமாகவும் ஆரம்பிக்கப்பட்டது. *1945*இற் கன்னங்கரா குழு, ஆசிரியர் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து அதற்குரிய சிபார்சை முன்வைத்தது.

ஆசிரியர் பயிற்சிபற்றி J.E. ஐயசூரிய பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*1945*இல் கன்னங்கரா குழு கல்விச் சீர்திருத்தத்திலே திறவுகோலாக அமைவது ஆசிரியருக்குச் சரியான பயிற்சி வழங்குவது எனவும் ,எதிர்காலத்தில் எல்லா ஆசிரியர்களும் பயிற்சி பெற்றவர்களாக விளங்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**1945இற்குப் பின் ஆசிரியர் பயிற்சி**

*1945*வரை ஆசிரியர் தொழிலில் ஈடுபட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்குக் குறைந்தளவு சந்தர்ப்பமே இருந்தது. இதனால் பட்டதாரி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பொறுப்பைப் பல்கலைக்கழகம் ஏற்கவேண்டும் எனவும் ,இதற்காகப் பல்கலைக்கழகங்களில் கல்வித்துறையை அமைப்பதற்கு வேண்டிய நிதியை அவற்றிற்கு வழங்கவேண்டும் எனவும், கன்னங்கரா குழு சிபார்சு செய்தது. பாடசாலைகளிற் பொதுப்பாடங்களைக் கற்பிக்கக்கூடிய பட்டதாரி அல்லாத ஆசிரியர் களைப் பயிற்றுவிப்பதற்கு ஒரே வகையான ஆசிரியர்பயிற்சி நிறுவனம் ஸ்தாபிக்கவேண்டும் எனவும் இக்குழு சிபார்சு செய்தது. ஸ்தாபிக்கப்படவிருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்விபற்றி J.E. ஜெயசூரிய பின்வருமாறு கூறுகின்றார்.

ஒரு பயிற்சிக்கல்லூரி தனித்து இயங்க முடியாது. அது கல்வி மையம் ஒன்றுடன் தொடர்புபட்டே இருக்கவேண்டும் .ஒரு கல்வி மையமானது பயிற்சிக் கல்லூரி கற்பித்தற் கலையைப் பழகுவதற்கான பாடசாலைகள் என்பவற்றை உள்ளடக்கப்படல் வேண்டும். இந்தக் கல்லூரியின் அதிபரே பாடசாலைகளைக் கட்டுப்படுத்துபவராக இருப்பார் ஒவ்வொரு பயிற்சிக் கல்லூரியுடனும் ஆரம்பப் பாடசாலை, செய்முறைப்பாடசாலை, இடைநிலைப்பாடசாலை என்பன இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இக்கல்வி மையத்திற்கு மிக அண்மையில் விளையாட்டுத்திடல், உடற்பயிற்சிக்கூடம் பயன்பாட்டிற்காக இருக்கவேண்டும்.(J.E ஜெயசூரிய, *1969,1971.)*

பயிற்சிக்கல்லூரி தனது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அம்சங்கள் பற்றி மேற்படி கூற்றுத்தெளிவாகக்கூறுகின்றது. "சமயக்குழுக்களால் நடாத்தப்படும் பயிற்சிக் கல்லூரிகளைக் கன்னங்கரா அறிக்கையிற்குறிப்பிட்டுள்ளவாறு கல்வி மையங்களாக ஒழுங்கமைத்தால், அவற்றிற்கான நிதி தொடர்ந்து பொது நிறுவனத்திலிருந்து வழங்கப்படும்" என கன்னங்கரா குழு மேலும் கருதியது 1944-1945 வரை அரசசபையில் பின்வரும் அம்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமர்வு அறிக்கை xxiv, 437,37ம் பந்தியில் சிபார்சு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் இடத்து அரசபயிற்சிக் கல்லூரிகளும், சமயப்பிரிவுகளின் பயிற்சிக்கல்லூரிகளும் தொடர்ந்தும் இயங்கும் என்பதற்காகத் தனதறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. சேவையில் அமர்த்தப்படுவதற்கு முன்பதாக எவ்விதப் பயிற்சியுமின்றி வெறும் காகிதச் சான்றிதழ்களுக்காக ஆசிரியர் நியமனம் வழங்குவது ஆரோக்கியமாக அமையாது என்பதே அவ்வாசகம்.

இதன்பின்னர் ஆசிரியர் பயிற்சி தொடர்பாகப் பாரிய மாற்றங்கள் பெரியளவில் மேற்கொள்ளாமல்; மிகச்சிறிய அளவிலே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதன்பின்னர் 1992இன் தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கிணங்க 1998இற் கொண்டு வரப்பட்ட கல்விச்சீர்திருத்தம் ஆசிரியர்கல்வி தொடர்பாகப் பின்வரும் அம்சங்களை முன்வைத்தது.

பாடசாலை முறைமைக்கு அவசியமான தேர்ச்சி ஆளுமையைக் கொண்ட ஆசிரியப் பரம்பரையை உருவாக்குவதற்கான ஆசிரியக் கல்விக்கொள்கையைச் சீரமைத்தல்.

01. பல்கலைக்கழகங்களில் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான வாய்ப்பை அதிகரித்தலும், அதனை அமுல்படுத்தலும்.

02. கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கையை 15ஆக அதிகரித்தல்.

03. ஆசிரியர் கல்லூரிகளில் 05ஐத் தெரிவு செய்து அவற்றை அபிவிருத்தி செய்தல்

1945-1981 இடையில் ஆசிரியர் பயிற்சி ஏற்பட்ட மாற்றங்கள்.

1945 - அரசாங்கப் பயிற்சிக் கல்லூரிகளில் பட்டதாரி ஆசிரியர் தொழில் வாண்மைப்பயிற்சி

1948 - இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் 2வருட தொழிற் கல்விப் பாடநெறி

1949 - இலங்கைப்பல்கலைக் கழகத்தில் கல்வித்துறை ஆரம்பம் செய்யப்பட்டது.

1950 - பெரதெனியா குண்ட சாலையில் விவசாய ஆசிரியர் பயிற்சி.

1953 - மகரகம ஆசிரியர் கலாசாலை தொழிற் பயிற்சி.

1953 - கணித- விஞ்ஞானப் பயிற்சி.

1954 - விவசாய ஆசிரியர் பயிற்சி பலாலி, மீரிகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் செயல் முறைப்பயிற்சி. தேசியப் பயிற்சிக் கல்லூரி கள் ஸ்தாபிக்கப்படும் எண்ணக்கரு உருவாக்கம்.

1955 - மகரகம ஆசிரிய கலாச்சாலையிற் கணித ஆசிரியர் பயிற்சி - விசேட பாடநெறி

1957 - மகரகம இல் ஆங்கில ஆசிரியர் பயிற்சி

1957 - 'மீரிகம' இல் பொதுப் பயிற்சி

1958 - இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியிற் பயிற்சி பெற்ற

இடைநிலை ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி நெறி

1958 - இலங்கைப் பல்கலைக்கழகம் கல்வி டிப்ளோமா பட்டப்பயிற்சி

1958- 22 ஆசிரியர்கலாசாலைகளிற்பட்டதாரி அல்லாத ஆசிரியருக் குப் பயிற்சி. இவற்றுள் இரண்டு கலாசாலைகள் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் கைப்பணி போன்ற சமூகவியல் பயிலுநர்.

1959 - விவசாய ஆசிரியப் பயிற்றுவிக்கும் பரிமாற்றலுக்கும் திட்டம் மீண்டும் குண்ட சாலையில் ஆரம்பம்

1960 - பலாலி மகரகம இல் ? பயிற்சி

1961 - ஆசிரியர்,பயற்சிக்கல்லூரி கல்விப் பணிப்பாளரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

1964 - பெரதேனியா பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப்பட்டம் (B.Ed)

1970 - தபால் மூலமான ஆசிரியர்பயிற்சி (ஆசிரியர் கலாசாலையும் இணைந்து.)

1972 - ஆசிரியர் பயிற்சிச் சான்றுகள்

1981 - வெள்ளை நிலையின் பிரகாரம் முன்சேவைப் பயிற்சி பெரதெனியா

04. ஆசிரிய கல்லூரிகளில் 03 இணைத் தேசிய கல்வியியற் கல்லூரிகளாக மாற்றி ஆசிரிய மீள் பயிற்சி வழங்கல்.

05. சகல ஆசிரியர்களுக்கும் 07 வருடங்களுக்கு ஒரு தடவை ஆசிரிய மீள் பயிற்சியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற் கொள்ளல்.

06. மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்தல் , ஆசிரிய வாண்மை விருத்தி, ஆசிரிய ஆளுமை விருத்தி, ஆசிரியர்களின் சமூக வகிபாகம் ஒன்றுடன் ஒன்று உள்ளடங்கும் வகையிலான ஆசிரிய கலைத்திட்டத்தைத் தயாரித்தல்.

07. ஆசிரிய கல்வியைத் திட்டமிடுவதற்கான அதிகார சபை (NATE) ஐ ஆரம்பித்தல்.

08. ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு, பயிற்சி, பதவியுயர்வு போன்ற பணிகளை மேற்கொள்ள ஆசிரியர் சேவை ஆணைக் குழுவை மீளமைத்தல்

09. ஆசிரியர் வாண்மை விருத்திக்காகவும், நூலறிவு விருத்திக்காகவும் வசதிகளை ஏற்படுத்தல்.

10. கோட்ட மட்டத்தில் ஆசிரியர்களுக்குத் தேவையான நூல்கள், சஞ்சிகைகள் கொண்டதாகவும், கலந்துரையாடல்களில் ஈடுபடக்கூடியதுமான ஆசிரிய வள மத்திய நிலையங்களை உருவாக்கல்.

11. 2000ம் ஆண்டளவில் சகல ஆசிரியர் களையும் பயிற்சி பெற்றோராய் ஆக்குதல்

12. ஆசிரியர் தொடருறுக் கல்விக்கான வாய்ப்புக்களை நீக்க ஒரேயொரு கல்லூரியை ஆரம்பித்தல் .

13. தொழில்நுட்ப ஆசிரியர்களின் பற்றாக்குறைவை நீக்க ஒரேயொரு கல்லூரியை ஆரம்பித்தல்.

14. சகல ஆசிரியர்களினதும் ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்தல்.

15. தற்போது கல்விப்பீடங்களைக் கொண்ட பல்கலைக்கழங்களின் கல்விமாணிப் பட்டப்படிப்பினைச் சிறந்தமுறையில் ஒழுங்கமைத்து நடத்தல்.

16. ஆசிரியகலைத்திட்டத்தைப்பாடசாலைக் கலைத்திட்டத்துடன் ஒத்திசைந்ததாகப் புதுப்பித்தல்

2002இலிருந்து 2005 வரையான காலப்பகுதியில் ஆசிரிய கல்வியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இதுவரை காலமும் ஆசிரிய கல்விக்கிளையினால் மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்டம், தேசிய கல்வி நிறுவகத்திடம்ஒப்படைக்கப்பட்டதோடு கலைத்திட்டம், பாடத்திட்டத்திலும் மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன. இதன்விளைவாகத் தொழில்நுட்பக்கல்வி, தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம், செயல்நிலை ஆய்வு என்பன கட்டாயமாக உள்வாங்கப்பட்டன.

தற்போது இலங்கையில் ஆசிரிய கல்வி முறைமையில் மூன்றுவகையான ஆசிரியர் கல்வி முறைமைகள் இடம்பெறுகின்றன.

01. முன்சேவை ஆசிரியர் கல்வி

ஆசிரிய சேவைக்குப் புகுவதற்குமுன் பெற்றுக் கொள்ளப்படும் முழுநேர ஆசிரிய கல்வி, இதனை தேசிய கல்வியியற் கல்லூரிகள் வழங்குகின்றன.

02. சேவைக்காலப்பயிற்சி

ஆசிரிய சேவையில் உள்ளவர்கள் கற்கை நெறியைப் பின்பற்றுதல் இதனை ஆசிரிய கலாசாலை தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் கற்பித்தலில் ஆரம்பத் தகைமையைப்பெற்றுக்கொடுத்தல்

03. ஆசிரியர் தொடருறு கல்வி.

கற்பித்தலில் ஆரம்பத்தகைமையைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழிலில் இருந்துகொண்டு பின்பற்றும் குறுங்கால அல்லது முழுநேர அடிப்படையில் இது இடம்பெறும்.

இலங்கையில் ஆசிரியர் பயிற்சியை வழங்கும் நிறுவனங்கள்

- தேசிய கல்வி நிறுவகம்
- தேசிய கல்வியியற் கல்லூரிகள்
- பல்கலைக்கழகங்கள்
- ஆசிரிய நிலையங்கள்

**தேசிய கல்வி நிறுவகம்**

1985 இல் தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ் (28ஆம் இலக்க சட்டம்) இது உருவாக்கப்பட்டு, கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளரின்கீழ் இயங்குகிறது. ஆசிரியபயிற்சி, கலைத்திட்ட விருத்தியில் முதன்மையான பங்களிப்புச் செய்கின்றது. அத்துடன் முன்சேவை ஆசிரிய கல்வி, சேவைக்கால ஆசிரிய கல்வி, ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. தேசிய கல்வி நிறுவகம் ஐந்துவகையான ஆசிரியப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்றது.

1. தற்போது சேவையிலுள்ள பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்கள் அல்லாத ஆசிரியர்களுக்குத் தொலைக்கல்வி மூலமான பயிற்சி.
2. பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா.
3. கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா.
4. கல்வியில் பட்டப்பின் பட்டங்கள் (கல்வி முதுமாணி)
5. ஆசிரியர்களுக்கான குறுகிய கால சேவைநிலைப்பயிற்சி

**தேசிய கல்வியியற் கல்லூரிகள்**

1985இல் நடைமுறைக்கு வந்தது. தேசிய கற்பித்தல் டிப்ளோமா என்ற மூன்று வருடச் சேவைமுன் ஆசிரிய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை இக்கல்லூரிகள் வழங்குகின்றன. நாடு பூராகவும் 17 கல்வியியற் கல்லூரிகள் உள்ளன. 18ஆவது தேசிய கல்வியியற் கல்லூரி பெரதேனிய தேசிய கல்வியியற் கல்லூரி வாண்மைத்துவம் தொடர்பான குறுகிய காலப் பயிற்சி வழங்குகின்றது.

**பல்கலைக் கழகங்கள்**

ஆசிரிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களைக் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், ,திறந்தபல்கலைக்கழகம், மட்டக்களப்பு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகிய ஆறு பல்கலைக்கழகங்களில் நடைபெறுகின்றன. இங்கு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

1. பட்டப்பின் கல்வி டிப்ளோமா
2. கல்விமாணிப்பட்டம்
3. கல்வியின் பட்டப்பின் பட்டங்கள் கல்விமுதுமாணி, விஞ்ஞானக் கல்வியில் கல்வியியல் முதுவிஞ்ஞானமாணி, கல்வியியல் தத்துவ முதுமாணி கல்வியில் தத்துவக் கலாநிதிப்பட்டம் என்பன.

**ஆசிரிய நிலையங்கள்**

ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் புதிய நூற்றாண்டின் கல்வி இலக்குகளை அடைவ தற்கும், தொழில் தகைமைகளை மேம்படுத்திக் கொள்ளவும், மீள் பயிற்சிக்களை வழங்கவும் இது உருவாக்கப்பட்டது. நாடு முழுவதிலும் 100 ஆசிரிய நிலையங்கள் உருவாக்கப்பட்டு வலயக் கல்விப்பணிமனைகளினால் நிர்வக்கிகப் படுகின்றன.

இதற்கு மேலாக ஆசிரிய கல்வியைக் கல்வித் திணைக்களங்களும், அவற்றின் ஆசிரிய ஆலோசகர்களும்,துறைசார்ந்த பணியாளர்களும் ; செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பவற்றின் மூலமாக, குறுகிய கால அளவில் வழங்குகின்றன. கல்வி அமைச்சு ஆசிரியர் கல்வியை விருத்தி செய்ய ஆசிரியர்களுக்கும் கல்வியியலாளர்களுக்கும், உள்ளூரிலும் வெளியூரிலும் உயர்கல்வி வாய்ப்புக்களையும் புலமைப் பரிசில் வழங்கி ஊக்குவித்து வருவது அண்மைக்காலங்களில் அதிகரித்து உள்ளமை காணக்கூடியதாயுள்ளது.

ஆசிரியர் என்பவர் மாறும் உலகத்திற்கு ஏற்பப் பல மாற்றங்களை உள்வாங்கி அதனை நடைமுறைப்படுத்துவதிற் கவனம் செலுத்துதல் வேண்டும். இதற்காக ஆசிரியர், ஆசிரியர்க்கல்வி வழங்கும் நிறுவனங்களின் துணையோடு அல்லது நவீன தொழில்நுட்ப சாதனங்களின் (Internet) பயன்படுத்துவதன் மூலம் தனது வாண்மையைத் தொடர்ந்து தேர்ச்சியாக உயர்த்துவதன் மூலம் அது சமூகத்திற்கும் ஆசிரியருக்கும் பயனுடையதாக இருக்கும்.

**உசாத்துணை நூல்கள்**


1. ஆசிரிய கல்வி நோக்குகள் -தொகுதி (திறந்த பல்கலைக்கழகம்).
2. மனித விருத்திக்கான கல்வி பற்றிய தொலைநோக்கு.



**S.Amirthalingam,**

*Pres. Jaffna College of Education*

*B.sc. (Hons); PGDE, PGDEM, (Ment);*

*M.Sc. (Information Management)*

*M.Sc. (Aplild stalisics)*

# பிள்ளைகளின் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் பெற்றோரின் பங்கு

கல்வியானது எப்போதும் இருவித நோக்கமுடையதாக இருந்து வந்துள்ளது. அவையாவன, நன் நடத்தையைப் புகட்டுவதும் பயிற்றுவதுமாகும். நன் நடத்தையின் எண்ணக்கருவானது அரசியல் அமைப்புக்கள் மற்றும் சமூகத்தின் பாரம்பரியங்களுடன் வேறுபடுவதாக உள்ளது. முன்னைய காலங்களில் கீழ்ப்படிவு சிறந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டதுடன்; பெற்றோருக்குக் கீழ்ப்படியவும், மூத்தோரை மதிக்கவும் கடவுளுக்குப் பணியவும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டது. ஒரு பிள்ளையில் நல் நடத்தையை உருவாக்குவதற்கு இரு வெவ்வேறு உத்திகளைப் பின்பற்ற முடியும். வெகுமதிகள் அல்லது தண்டனைகளால் இதனை ஏற்படுத்த முடியும். வெகுமதிகள் தண்டனைகளைப் பொருத்தமான வகையில் வழங்குவதன் மூலம் நெறிபிறழ்வைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. புகழ்ச்சிஅல்லது குற்றம் சுமத்துதல் ஆகியவையே வெகுமதி அல்லது தண்டனையின் வழமையான வடிவங்களாக உள்ளன. இந்த வழிமுறை மூலம் இயல்பாகவே பயந்த சுபாவமுடைய பிள்ளைகளைத் துணிவு பெறுவதற்கும் வேதனையைத் தாங்கிக் கொள்வதற்கு அஞ்சும் பிள்ளைகளைஅதைத் தாங்கிக் கொள்வதற்கும் கற்பிக்க முடியும்.சிறந்த பழக்கங்களைச் சிறு வயதிலேயே பிள்ளைகள் கற்காது விட்டால், அவர்கள் விடலைப் பருவத்தினராக இருக்கையில், மற்றவர்களின் வெறுப்பான பார்வை என்ற மோசமான தண்டனையின் மூலம் கற்க நேரிடுகின்றது.

இன்று ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் அபிவிருத்திக்கு,முன்பு இருந்ததிலும் கூடியளவு சுதந்திரம் தேவையாக உள்ளது. அவர்களுக்கு வேறு வகையான ஒழுக்கக் கட்டுப்பாடும் தேவையாக உள்ளது. வீட்டில் உள்ள ஒழுக்கக் கட்டுப்பாடானது பாடசாலை ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு அனுசரணையாகவோ அல்லது முரண்பாடானதாகவோ அமையலாம்



சாதாரணமாகபெற்றோருடைய ஒழுக்கக் கட்டுப்பாடு, பாடசாலையினது ஒழுக்கக் கட்டுப்பாட்டை அதிகரிப்பதாக இருக்க வேண்டும். அல்லது அதனால் அதிகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். பிள்ளையின் சுதந்திரத்தைப் பொறுத்த வரையில், பெற்றோர்களுக்கு அவர்களின் கடந்த காலத்திலும் பார்க்க இன்று அதிக பொறுப்பு மிக்கவர்களாக இருக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. பிரச்சினைகள் மற்றும் தவறான இசைவாக்கம் (maladjustment) ஆகியன இன்றி; பிள்ளைப் பராயத்திலிருந்து முதிர்ச்சி நிலை அடைவாரென கட்டிளமைப் பருவத்தினரை எதிர்பார்க்க முடியாதுள்ளது. இப்பருவம் மிகவும் கஷ்டமான பருவமாகக் கருதப்படுகிறது. இப்பருவத்தில் சந்தோச மின்மை, களைப்பு, விரக்தி, அதிருப்தி, ஆகிய வற்றைக் கடந்து முதிர்ச்சியையும் அறிவையும் மாணவர்கள் பெறுகின்றனர்.

### பெற்றோரின் உணர்வுகள்

பிள்ளைகளை வளர்ப்பதிலுள்ள சில பணிகள் ஒழுக்கக் கட்டுப்பாட்டிலும் பார்க்க உணர்ச்சி முரண்பாட்டுடன் சேர்ந்த அதிக விரக்தியை ஏற்படுத்துபனவாக உள்ளன. ஒரு பிரச்சினை ஏற்படும் போது என்ன செய்வதென்றறியாது பல பெற்றோர்கள் உள்ளனர். அவர்களின் உள் உணர்வுகள் (instincts) எப்போதும் பயனளிப்பதில்லை. அத்துடன் அவர்கள்

தமது உணர்ச்சிகளை நம்பினார்களாயின் பெரும்பாலும் குற்ற உணர்வை இறுதியில் அடைவர். எனவே அன்பை அளவுடன் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஆய்வாளர்கள் வலியுறுத்துவதுடன், ஒவ்வொரு பெற்றோருக்குமான எந்தவொரு அணுகு முறையும் இல்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறைகளானவை வேறுபடுவது மட்டுமல்லாது, பிள்ளைகள் யாவரும் வித்தியாசமானவர்களாக இருப்பதால், பெற்றோர்கள் நம்பத் தகுந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர்களாக இருக்க முடியாதுள்ளது.

விளைவுத்திறனுடைய ஒழுக்கக் கட்டுப்பாட்டாளர்களாக வருவதற்கு முன்னதாக, பெற்றோர்கள் தமது கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் பிரச்சினை நிலைமைகளைத்தீர்த்து, ஏனையோருக்கு ஆதரவு வழங்கவும் பெற்றோர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தமது பிள்ளைகளின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யும் பெற்றோர்களின் பிள்ளைகள் அதிக கீழ்ப்படிவுள்ள பிள்ளைகளாக இருக்கின்றனர். பிள்ளைகளுக்கு அடிப்பது, பிள்ளையின் சுய கௌரவத்தையும் பெற்றோர் - பிள்ளை உறவையும் பாதிக்கின்றது. இந்நிலைமை, பின்னர் அதிக பிரச்சினைகளை யும் ஏற்படுத்துகின்றது. பிள்ளைகளுடன் எவ்வாறு விளையாடுவது, தொடர்பாடல் மேற்கொள்வது, பாராட்டு வெகுமதிவழங்குவது. வரையறைகளைஅமைப்பது, அவர்களை எவ்வாறு கையாளுவது என்பன குறித்துப் பெற்றோர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

பிள்ளை என்ன செய்கின்றது என்பதைக் கருத்திற் கொள்ளாது, நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்கின்ற 'சகிப்பு அணுகுமுறை' (permissive approach) அநேகமான பெற்றோர்களுக்குப் பேரளிவை ஏற்படுத்தியதாக Dr. ஹெரால்ட் பற்றசன் (Dr.Herald patterson) தெரிவித்துள்ளார். ஒரு பிள்ளை நெறி பிறழ்வான நடத்தையில் ஈடுபடும்போது, ஆசிரியர் அல்லது பெற்றோர் வழங்கும் கண்டிப்பு உடனடியானதாகவும் விளைவுத்திறனுடையதாகவும்இருக்கவேண்டும். குரலின் தொனி, நேர அளவு ஆகியன விளைவுத் திறனைத் தீர்மானிப்பவையாக உள்ளன. அறுபதுவார்த்தைகள் அடங்கிய வசனத்தை விட, 'தொடாதே' என உடனடியாகவும் உறுதியாகவும் வழங்கப்படுகின்ற கண்டிப்பு விளைவுத் திறனுடையதாக இருக்கின்றது.

காரண ரீதியான ஜனநாயக அணுகு முறையானது, அதிகார அணுகு முறையை விட, பிள்ளைகள் சிறந்த முறையில் நடந்து கொள்வதற்கு உதவுகின்றது. பேராசிரியர் மார்க்.W றொபேட்ஸ் என்பவர் கீழ்ப்படி வில்லாத பிள்ளைகளின் நடத்தை ரீதியான முன்னேற்றங்களை வளர்ப்பதில் மிக முக்கிய காரணியாகத் தொடர்ச்சியான (மாற்ற மில்லாத) ஒழுக்கக்கட்டுப்பாடு இருப்பதாகக் கூறுகின்றார். கடந்த பதினைந்து இருபது வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளி லிருந்து 'சீரழிவான பிள்ளைகளுக்குப் போது மான பரிகாரமாக, ஒழுக்கக்கட்டுப்பாடு இருக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றார்.

கீழ்ப்படியாத பிள்ளைகளை அடிக்கடி அடிப்பது, அவர்களிடம் உரத்த குரலில் சப்தமிடுவது அல்லது அவர்களைக் கடுமையான தண்டனைகளால் அச்சுறுத்துவது என்பன நெறி பிறழ்வை வளர்க்கும். பெற்றோர்களால் கட்டுப்பாடற்றபிள்ளைகளாகக் கருதப்படுகின்ற பிள்ளைகளுடன் பணியாற்றும் வின்டெல் (windell) என்பவர் அடிவாங்குவது போன்ற எதிர்க்கணிய விளைவுகள் கூட, பிள்ளையின் நெறி பிறழ்வை பலமடையச் செய்கின்றன. எனக் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் யாரோ ஒருவர் அதற்கு மிகவும் நாடக பாணியிலான வகையில் செயற்படுவதனாலாகும் எனவும் கூறியுள்ளார்.

டொறொதி பிறினான்டெஸ் ( Dorothy frenandez) அவர்களின் கருத்துப்படி பாடசாலையைப் போன்று பிள்ளையின் ஆளுமையை உருவாக்குவதில் வீடும் ஒரு நேர்கணியப் பாங்கினை வகிக்கிறது. இதில் பெற்றோரின் மனப்பாங்கு மிகவும் முக்கியமானதாகும். கல்வியென்பது ஒரு முக்கோணம். பெற்றோர், மாணவர், ஆசிரியர், என்ற மூன்று பேரைக் கொண்ட ஒரு சமபக்க முக்கோணமாகும். ஒரே இலக்கினை அடைவதில் இம் மூவரும் சமபங்கினை வகிக்கின்றனர்.

பாடசாலையில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டு முறையானது, பிள்ளையின் ஆளுமையின் மேற்பரப்புப் பகுதிகளை மட்டுமே கணிப்பீடு செய்கின்றது. இதனைப் பெற்றோர் உணராது,சிறந்த பெறுபேற்றைப் பெறாது விட்டால் கடுமையாக நடந்து கொள்ள முற்படுகின்றனர். இவை பிள்ளையின் சுய கௌரவத்தை பாதிக்கச் செய்வதுடன், நெருக்கீடுகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். எனவே பிள்ளையின் முழு ஆளுமையையும் கருத்திற் கொள்ளக் கூடிய கணிப்பீட்டு முறை இதற்குச் சரியான தீர்வாக அமைய முடிவதுடன், பெற்றோர் பிள்ளையானது நன்றாகச் செயற்பட்டிராத சந்தர்ப்பங்களில்,அமைதியாக இருப்பது அவசியமாக இருப்பதுடன்,அப் பிள்ளையுடன் சிறிது நேரத்தைச் செலவிட்டு நம்பிக்கையளிப்பதுடன், குறைவான செயற்பாடுகளுக்கான காரணத்தையும் அப் பிள்ளையிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையினதும் உளவிருத்தி வெவ்வேறு வேகத்தில் வளர்கின்றன. பிள்ளைகள் அவர்களுக்குரிய வேகத்தில் கற்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமே தவிர பெற்றோரின் விருப்பத்தினால் இவ் வேகம் தீர்மானிக்கப்படக்கூடாது. பிள்ளைகள் மிகவும் குறைவான வயதில் பாடசாலை செல்வது (இரண்டு அல்லது இரண்டரை வயது) பெரும்பாலும் தீமை பயக்கின்றது. இவ்வாறான பிள்ளைகள் பாடசாலையை வெறுக்கின்றனர். வீட்டில் பிரச்சினை காணப்படும் போது பாடசாலை வெறுப்பு (school phobia) செயலூக்கம் பெறுவதாக Kleanor Kerbs என்ற உளவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

**பெற்றோரின் வழிப்படுத்தல்கள்**

ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு உள மற்றும் உணர்வுகளின் ஸ்திரத்தன்மை அவசியமாகும். பிள்ளைகள் எதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் வளர்வதற்குப் பெற்றோர்கள் அனுமதிக்க வேண்டும். பெரும்பாலும் பெற்றோர்கள் இலக்குகளை அமைத்து, பிள்ளைகள் அவற்றை அடையவேண்டுமென விரும்புகின்றனர். இவ் இலக்குகள் எட்ட முடியாதவையாக இருக்குமானால் அவை,பிள்ளைகளிடம் விரக்தியை ஏற்படுத்தலாம்.இந் நிலைமையை மாற்றுவதற்கேற்ற உள உணர்வையும் விவேக விருத்திக்கான சூழலையும், உருவாக்கிக் கொடுத்தல் பெற்றோரின் கடமையாகும்.அன்பு, வழிகாட்டல், பாதுகாப்பு உணர்வு, போன்ற பிள்ளைகளின் உணர்ச்சிகளின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வழிகாட்டுவது அதிக பயனைத் தரும். இந்த வகையில் பெற்றோர்கள் பல வழிகளில் பிள்ளைகளுக்கு உதவ முடியும்.

- பிள்ளைகளது இயற்கையான திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பொழுது போக்குகளில் (hobbies) ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல்
- சரியான நட்பை வளர்ப்பதில் உதவுதல்.
- பிள்ளையைஒருபோதும்ஒதுங்கியிருப்பதற்கு (isolation) அனுமதிக்காதிருத்தல்.
- பொறுப்பான பணிகளை ஒப்படைத்தல்.

இவற்றின் மூலம் பிள்ளைகளிடம் தன்ன... பிக்கை, சமூகப் பொருத்தப்பாடு, ச... தன்மை, தலைமைத்துவம், புரி...

போன்ற பண்புகளை வளர்க்க முடியும். இவை பிள்ளைகளின் மகிழ்வான, அமைதியான வாழ்வுக்கான அடிப்படைகளாகும். புத்திசாலித்தனமான பெற்றோரின் பாசம் அளவுடன் பிள்ளைகளுக்குக் கிடைப்பது சிறந்தது. இது பிள்ளைக்குப் பாதுகாப்பு உணர்வையும், மனிதன் என்ற வகையில் அதனது பெறுமதியையும் வழங்குகின்றது. பிள்ளைகளின் நடத்தைமீது பெற்றோரது பாச உணர்வு ( sentiment) அதிக செல்வாக்கைச் செலுத்துகின்றது. இவ் உணர்வு அகற்றப்படுவதால் பிள்ளைகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

Dr. பென்ஜமின் ஸ்பொக் (Dr. Benjamin spock) என்பவர் "அதிகளவு தளர்வாக இருக்கும் பெற்றோரை விட, அதிக கண்டிப்பான பெற்றோர்களால் அதிக தவறுகள் விடப்படுகின்றன" எனக் குறிப்பிடுகின்றார். பாடசாலையில் நன்றாகச் செயற்பட வேண்டுமென பெற்றோர்கள் எதிர்பார்ப்பது போன்று, சாதனையில் திறமையற்றிருக்கும் இயல்பான தன்மையையும் சகித்துக் கொள்ள வேண்டும். புதிய விடயங்களையும் கருத்துக்களையும் செயற்படுத்துவதற்கு எப்பொழுதும் விரும்புகின்ற ஒரு பிள்ளை தனக்கென்ற ஓர் உலகத்தில் இருக்கக் கூடும். அத்துடன் ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து பழகாத தன்மையுடையவராகவுமிருப்பார். மாறாக, இவர்கள் ஒரு குழுவில் இருந்தவாறு ஏனையோரைக் கட்டுப்படுத்தி அதிகாரம் செலுத்தவும் முனைவர். ஏனெனில் தம்மிடம் மேன்மையாக ஆற்றல்களிருப்பதாக இவர்கள் அறிந்திருப்பதனாலாகும். ஏனையோர் இதனை வெறுக்கக் கூடும். ஆகையால் பிள்ளைகள் இயல்பான திறமையைக் கொண்டிருந்தாலும், கொண்டிருக்காவிட்டாலும், சகோதரத்துவம், மற்றும் நட்புணர்வு ஆகியவை அவர்களுக்குப் புகட்டப்பட வேண்டும். இவற்றின் மூலம் ...க்கை இழக்கச் செய்யாத வகையில் உற்சாகப்படுத்துவது பெற்றோரினது மனப்பாங்காக இருக்கவேண்டும்.

மேலும் இயல்பான திறமையற்ற பிள்ளைகளைத் தாழ்வாக மதிக்கவோ, திறமையுள்ள பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கவோ கூடாது. இவ்விரு வகையான பிள்ளைகளையுடைய பெற்றோர்கள், அவர்களுடைய செயற்றிறனை ஒப்பிட்டு மதிப்பிடவும் கூடாது. ஓய்வு நேரத்தைச் சரியான முறையில் திட்டமிட வேண்டும். பிள்ளை தொலைக் காட்சி பார்ப்பது பற்றிக் கண்டிக்கும் பெற்றோர், தொடர்ந்து தாம் அதையே பார்ப்பார்களானால் அது ஆரோக்கியமானதாக இருக்காது. "பிள்ளைகளுக்கென ஒரு தொகுதி விதிகளும், தமக்கு வேறு வகையான விதிகளும் எனக் கூறும் பெற்றோர்கள், பிரச்சினைகளை உருவாக்குகின்றனர்" என miller மற்றும் price என்பவர்கள் தெரிவிக்கின்றனர். விளையாட்டு, பொழுது போக்குகள், நண்பர்கள் மற்றும் வாசிப்பு ஆகியவற்றை தொலைக்காட்சி பார்ப்பதற்கு மாற்றீடாக பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள் எனவும் குறிப்பிடுகின்றனர்.

இயல்பான திறமையுள்ள பிள்ளைக்குப் பொருத்தமானபுதிய சேவைகளைவழங்கக்கூடிய வகையில்பாடசாலைகள்மற்றும்கொள்கைகளை மாற்றியமைப்பதில் பெற்றோர்களால் முக்கிய பங்கினை ஆற்ற முடியும். தம்மால் அடைய முடியாத பிள்ளைப் பராயத்துக் கனவுகள், தமது பிள்ளைகளால் நிறைவேற்றப்பட வேண்டுமென பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது, தமது விருப்பங்களையும், தெரிவுகளையும் சுமத்தும் தன்மையுள்ளவர்களாக இருக்கின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும்.

உயர்வான இலக்குகளை அடைவதற்கு, இயல்பானதிறமையுள்ள பிள்ளையை போட்டித் தன்மை தூண்டுவதாக அமைந்தாலும்,

அது அப் பிள்ளைக்கு நெருக்கீட்டை (stress) ஏற்படுத்தக் கூடும். நெருக்கீட்டிற்கான மூலங்களை இனங்கண்டு, சுமையைத் தாங்கிக் கொள்வதற்கு, பிள்ளைக்கு வழி காட்டுவது பெற்றோரின் பொறுப்பாகும். ஒழுங்கான உடற்பயிற்சி, பொழுது போக்கு, வேடிக்கைச் செயற்பாடுகள் போன்ற நெருக்கீட்டைக் குறைக்கும் வழிமுறைகளைக் கைக்கொள்வதற்கு பிள்ளை ஊக்குவிக்கப்பட வேண்டும். தமக்கு ஏற்படும் அழுத்தங்கள், மற்றும் ஏக்கங்கள் குறித்து வெளிப்படையாகப் பிள்ளைகள் உரையாடக் கூடிய, பாதுகாப்பான சாதகமான சூழலை பிள்ளைகளுக்கு வழங்குவதும் பெற்றோரின் பொறுப்பாகும்.


இந்த வகையில் பிள்ளைகளின் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் சமூக இயல்பினனாக்கும் பொறுப்பில் முக்கிய அங்கத்துவம் பெறுபவர்களாகப் பெற்றோர்கள் கருதப்படுகின்றார்கள். எதிர்கால வாழ்க்கைத் தொழிலுக்கான அத்திவாரத்தை அமைத்தல், சமூக உணர்வுடைய பிரஜையாக்குதல் என்பவற்றின் பெரும்பகுதி பாடசாலையின் பொறுப்பாக விளங்கும் அதே நேரம்; இவற்றைப் பொருத்தமான வகையில் வழிப்படுத்தலுக்கும், கண்காணித்தலுக்குமான பங்கும் பணிவும் பெற்றோரைச் சார்ந்ததாகும். எனவே எதிர்கால தரமான சமூகத்திற்கான தரமான கல்வியை முன்னெடுப்பதற்கு, பிள்ளைகளின் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் பெற்றோரின் பங்கு இன்று அவசியமானதாக உணரப்படுகின்றது.

**திருமதி. ஜெயமலர் தியாகலிங்கம்**
*உப பீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

# "ஆசிரியரே ஆய்வாளர்" புதிய கல்விக்கலாசார - அறிவுப் பொருளாதாரப் பிரயோகங்கள்



எந்த ஒரு நாட்டின் கல்விச் செயன்முறையின் வெற்றி அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. வினைத்திறனுள்ள வாண்மையாளராக சமகால அறிவுப் பொருளாதாரப் பிரயோகத்தில் ஆசிரியர்கள் மாற வேண்டுமாயின் அவர்கள் ஆய்வாளர்களாக வேண்டும். இதற்கு அவசியமான சந்தர்ப்பங்கள், தேர்ச்சிகள், மனப்பாங்குகளை சக்தி மிக்க வகையில் விருத்தியாக்க வேண்டிய நிலையில் நாமிருக்கிறோம். இன்று பிரயோகிக்கப்படும் அறிவுப் பொருளாதாரம் கல்வி முறைகளிலும், கலைத்திட்டத்திலும், கற்றல் - கற்பித்தல் முறைகளிலும், கல்வி முகாமைத்துவத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. இம் மாற்றங்களை வினைத்திறனாக்கும் காரணியாக ஆய்வுகள் முக்கியப்படுத்தப்படுகின்றன.




கல்வி முறையின் நிலைபேறான அபிவிருத்திக்கு ஆய்வை அடிப்படையாகக் கொண்ட அறிவே அடித்தளமாகும். ஆய்வு தொடர்பான நோக்கங்களை நிறைவேற்றுகையில் சகல கல்வி நிறுவனங்களும் தத்தமது வகிபாகங்களை ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். பல்கலைக்கழகங்களோ, தேசிய கல்வியியற் கல்லூரிகளோ, ஆய்வு நிறுவனங்களோ கல்வியில் ஆய்வுகளை மேம்பாடடையச் செய்ய பின்வரும் பாரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

இவ்வாறாக கல்வியியல் துறையில் ஆய்வுக் கலாசாரத்தை விருத்தியாக்க வேண்டியுள்ளது. சமகால அறிவுப் பொருளாதார செயன்முறை இதற்கு பல்வேறு வழிகளை இயம்பி நிற்கின்றது.

அறிவுப் பொருளாதாரமானது விஞ்ஞான தொழில்நுட்ப அறிவை உற்பத்திக்குப் பயன்படுத்தும் செயன்முறையாகும். உலகளாவிய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவை உள்வாங்கும் பொருளாதாரமாகும். உள்வாங்கிய அறிவை நாடெங்கும் சமூகமெங்கும் பரப்பிடும் பொருளாதாரம். உற்பத்தி முறைகளுக்கு ஆய்வுகளினூடாக அறிவை உருவாக்கிடும் பொருளாதாரம். சமகால அறிவுப் பொருளாதாரத்தில் அறிவு சேமிக்கப்படுகின்றது. ஆய்வுகளினூடாக முகாமை செய்யப்படுகின்றது. இத்தகைய நிலை உலகளாவிய ரீதியில் விருத்தியாகி வருகின்றது. இதற்கு எம் கல்வித்துறையும், ஆசிரியர்களும், ஆசிரிய பயிற்சி பெறுவோரும் ஈடுகொடுக்கும் வகையில் வாண்மையாளர்களாக்க "ஆசிரியர்களே ஆய்வாளர்கள்" என்ற நடிபங்கை விருத்தியாக்க வேண்டியுள்ளது. கல்வித்துறையில் தரத்தை (Quality) ஏற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு கல்வியியல் ஆய்வுகள் தொடர்பான தேர்ச்சிகளை வழங்க வேண்டியது இன்றைய மிக முக்கிய தேவையாகும். வெறும் பரீட்சை, பட்ட நோக்கத்தை நிறைவேற்றும் சம்பிரதாயங்களாக கல்வியியல் ஆய்வுகள் இருக்காமல் தேவை கருதிய பயன்பாட்டாய்வுகளாக இவை மாற்றப்பட வேண்டும்.

**கல்வியியலில் ஆய்வுகள்:**

இன்று எல்லாத்துறைகளிலும் ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு மிக முக்கிய கூறாக உள்ளது. ஆய்வானது உண்மையைக் கண்டறியும் செயன்முறையாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி முறையாகவுமுள்ளது. கல்வியியல் துறையிலும் இன்று பல வகையான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக கல்வித்துறையில் மிக முக்கியமானவர்களான ஆசிரியர்கள், அதிபர்கள் கல்வித்துறை ஆய்வுகள் தொடர்பான செயன்முறை அறிவையும் , ஆய்வுகளையும் செய்த அனுபவங்களையும் பெற்றிருக்க வேண்டும்.




இவ்வாறாகக் கல்வியியல் ஆய்வுகள் பரப்பளவு ஆய்வுகள், செயல்நிலை ஆய்வுகள், பங்கேற்பு ஆய்வுகள், குறுக்கு வெட்டு ஆய்வுகள், நெடுக்குவெட்டு ஆய்வுகள், எனப் பலவகையாகப் பிரயோகிக்கப்படுகின்றன.

**இங்கு பரப்பளவு ஆய்வில்:**

இயல்I அறிமுகம் - ஆய்வுக்கான பின்னணி, பிரச்சனை நோக்கமும் குறிக்கோள்களும், ஆய்வு வினாக்கள், கருது கோள்கள், ஆய்வுக்கான நியாயப்பாடு.

இயல் II இலக்கிய மீளாய்வு: ஆய்வுக்கான கோட்பாட்டுச்சட்டகம், குறித்த ஆய்வு தொடர்பான முன்னைய ஆய்வுகள், விமர்சனங்கள், வரலாற்றுப்பார்வை.

இயல் III ஆய்வு முறையியல் - ஆய்வு வடிவமைப்பு, கற்றல் இடக்குவியம், தரவு சேகரிப்பு முறைகள், கருவிகள், தரப்பகுப்பாய்வு முறைகள் (அளவறிசார், பண்பறிசார்), தரவுகளின் தரம், நம்பகம், தகுதி, உறுதிப்பாடு.

இயல் IV தரவு அறிக்கையும் வியாக்கியானமும் - சேகரித்த தகவல்களை ஒழுங்குபடுத்தி அளித்தல், தரவுப்பகுப்பாய்வு (பண்புசார் முறைகள்), புள்ளிவிபரவியல் நுட்பங்கள்) கருதுகோள்களைப் பரிசீலித்தல், தரவுகளின் விளக்கம்.

இயல் V பெறுகைகளும் தொடரும் கலந்துரையாடல்களும் - கண்டறிதல்களின் பொழிப்பு, வியாக்கியானங்கள்.


இயல்VI நிறைவுரையும்விதப்புரைகளும் - குறித்த ஆய்வு தொடர்பான முழுமையான கருத்து, விதப்புரைகள், எதிர்கால ஆய்வுகளுக்கான வழிகாட்டல்கள்.

இவ்வாறாகக் கல்வியியலின் பரப்பளவு ஆய்வுகளை மேற்கொள்ள பொதுவான வழிகாட்டல்கள் காணப்படுகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு ஆய்வுத் தலைப்பைத் தெரிவு செய்து ஆசிரியர்கள் தம் அறிவின் எல்லைகளை அகலிக்கலாம். ஆனாலும் கல்வியியல் ஆய்வுகள் அவற்றின் பயன்பாடுகள் தொடர்பாக எமது நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. கல்வியியல் ஆய்வுகளுக்கான போதுமான பயிற்சிகளை வழங்கும் வசதிகளின்மை, பயிற்சிகளை முன்னெடுக்காமை, கல்வியியல் ஆய்வு, கலாசாரம் உறுதியாகக் கட்டியெழுப்பப்படாமை, ஆய்வு மேற்பார்வைக்குரிய ஆளணி பற்றாக்குறை, ஆய்வு வளங்கள், வசதிகள், ஊக்கல் கிடைக்காமை, ஆய்வு வெளியீடுகள் இன்மை, தரவுகள் பெறுதலில் இடர்பாடுகள் காரணமாக கல்வியியல் ஆய்வுகள் தொடர்பான சவால்கள் பல உள்ளன. இவற்றைத்தீர்த்து விரைவாக, நெகிழ்ச்சியாக நடைமுறைப்பயனுள்ள செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்ளும் மாற்றுத்திட்டம் விரைவாக எமது நாட்டில் நடைமுறைக்கு வந்துள்ளது. தேசிய கல்வியியற் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகங்கள் தற்போது செயல் நிலை ஆய்வுகளைத் தமது பாடநெறிகளில் சேர்த்து பயனுள்ள ஆய்வுக் கலாசாரத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

**செயல்நிலை ஆய்வுப் பிரயோகங்கள்:**

பிரயோக ஆய்வுகளில் செயல் நிலை ஆய்வு பிரபலமானது,

Action Research என்ற தொடரை முதன் முதலில் கையாண்டவர் அமெரிக்க சமூக உளவியலாளரான கேர்ட் லீவின் (Kurt Lewin) ஆவார். கேர்ட் லீவின் செயல் நிலை ஆய்வை கல்வித்துறையில் பிரயோகித்தார். இவரே செயல் நிலை ஆய்வு சுழற்சிப் படிகளை (Spiral of steps) அறிமுகப் படுத்தினார். அது பின்வருமாறு:



செயல் நிலை ஆய்வு என்பது குறித்த விடயம் பற்றிய ஒன்றிணைந்த சுய பிரதிபலிப்பு விசாரணையாகும். கல்வி சார் நடைமுறைகளின் நியாயபூர்வத் தன்மையையும், அறிவு பூர்வத் தன்மையையும் மேம்படுத்துதற்காகவும் அந் நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலைகளை விளங்கிக் கொள்வதற்காகவும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், தொழில் வாண்மையை உயர்த்துவதற்காகவும் மேற்கொள்ளப் படுகின்றது.

நடைமுறைப்படுத்தப்படும் கல்வி நிலைமைகளுக்கும், எதிர் நோக்கும் சந்தர்ப்பங்களுக்கும் இசைவடைதல் பண்பே செயல்நிலை ஆய்வாகும். செயல் நிலை ஆய்வில், ஆய்வு மாதிரிகள் அதே வடிவில் இறுக்கமாகப் பின்பற்றப்படுவதில்லை. மாறாக அதனை நடைமுறைப்படுத்தும் வாண்மையாளரின் குறிக்கோளையும் வாண்மை வகிபாகத்தையும் ஆற்றும் வகையில் ஆய்வின் கோட்பாடுகள் நெகிழ்ச்சியுடன் இசைவுபடுத்திக் கொள்ளப்படும். செயல்நிலை ஆய்வின் நோக்கம், ஆசிரியர்களின் பிரயோக ஆற்றலை மேம்படுத்துவதேயன்றி, ஆய்வுகளைப்போன்று இறுக்கமான ஆய்வுச் சட்டகமொன்றின் மூலம் அறிமுறைகளைக் கட்டியெழுப்புவதோ அவற்றைப் பரீட்சிப்பதோ அல்ல என்பதே அதற்கான காரணமாகும். ஆயினும் BEd, Dip. in Ed, med, ஆகிய பாடத்துறைகளில் செயல் நிலை ஆய்வு, சில ஆய்வு வரையறைகளைக் கொண்டதாக நோக்கப்படுகின்றது. தேசிய கல்வியியற் கல்லூரிகளில் உள்ளகப்பயில்வை மேற்கொள்ளும் முகிழ்நிலை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் செயல்நிலை ஆய்வுகள் அவர்களுடைய தொழில் வாண்மையை உயர்த்தும்வகையில்எளிமையாக்கப்பட்டுள்ளன.

**உள்ளகப்பயில்வில் செயல்நிலை ஆய்வு:**

'ஆசிரியரே ஆய்வாளர்' என்ற வகிபாகத்தை இரண்டு வருட வதிவிடப் பயிற்சி முடிவுற்றதும் ஒரு வருடம் பாடசாலைகளில் உள்ளகப்பயில்வை மேற்கொள்ளும் முகிழ் நிலை ஆசிரியர்கள் கைக்கொள்ளும் வகையில் இவர்களுக்கு செயல் நிலை ஆய்வு அறிமுகப் படுத்தப்படுகின்றது. செயல் நிலை ஆய்வு தொடர்பாகப் பல மாதிரிகள் (Models) உள்ளன. இம் மாதிரிகள் தொடர்பான விரிவான விளக்கம் இருப்பது இன்றியமையாததாக உள்ள போதிலும், அதற்கான பூரணமானசந்தர்ப்பம் தேசிய கல்வியியற் கல்லூரி கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கும் காலம்; ஆசிரியர் தொழிலில்இணைந்து கொள்வதற்காகப் பயிலும் முதன்மையான பருவமாகையால், செயல் நிலை ஆய்வு தொடர்பானவை எளிமையான, அடிப்படையான அறிவையும், திறன்களையும் பெறுவதும்; அதனூடாக செயல் நிலை ஆய்வை ஆசிரிய வாழ்க்கையின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்ள வைத்தல் அவசியமாகும். உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு செயல் நிலை ஆய்வு தொடர்பான நெகிழ்ச்சியான மாதிரியைப் பின்பற்ற வைத்தல் அவசியமாக வேண்டப்படுகின்றது. இங்கு மீள் நோக்கு குறிப்பேடு, நாட்குறிப்பேடு, ஆசிரியரின் அவதானிப்பின் மூலம் வகுப்பறையில் குறித்த மாணவர்களின் பிரச்சினை, இனம் காணப்பட்டு, பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தலையீட்டின் மூலம் செயல் வடிவம் பெறும் . இதனை அறிக்கையிடும் போது பின்வரும் பண்புகள் மிளிரும்.

- கல்வி சார்ந்த எழுத்துப்பாணியைப் பின்பற்றல், கதை போன்று படர்க்கையில் எழுதுதல்.
- தேவை ஏற்படின் அளவு ரீதியான தரவுகள், அட்டவணைகள், வரைபுகளை இடல்.
- தன் ஆய்வுச் செயன் முறையின் போது தன் ஆசிரிய வாண்மை விருத்தியடைந்த விதத்தைப் பிரதிபலித்தல்.

- தன்சுய தொழில் விருத்தி, வகுப்பறை விருத்தி, பாடசாலை அபிவிருத்தி தொடர்பான புலக்காட்சியை வழங்குதல்.
- செயல் நிலை ஆய்வின் இலக்குக் குழுவின் அபிவிருத்தியை வெளிக்காட்டல்.

இவ்வகையில் பாடசாலை அறிமுகம், ஆய்வாளர் அறிமுகம், மீள்நோக்குக் குறிப்பேடு அவதானிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினை வெளிவந்த விதம், ஆய்வின் நோக்கம், விடயங்களைத் தேடுதல் என்ற வகையில்; அவதானிப்பு, ஆவணப் பகுப்பாய்வு, கலந்துரையாடல், நேர்காணல், போன்ற முறைகள் மூலம் பிரச்சினையின் உண்மையை உறுதிப் படுத்தல். பின்னர் பிரச்சினையைத் தீர்க்க பொருத்தமான தலையீட்டுச் செயன் முறையைத்திட்டமிடல் - நடைமுறைப்படுத்தல் என்ற வகையில் செயல்நிலை ஆய்வு உள்ளகப் பயில்வு ஆசிரியர்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்டு செயல்நிலை ஆய்வு அறிக்கை தயாரிக்கப்படும். இது உரிய நபரால் ஆரம்பத்தில் முதலாவது முன்வைப்பு, இறுதியாக இரண்டாவது முன்வைப்பும் மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக செயல்நிலை ஆய்வுக் கணிப்பீடு பின்வரும் அட்டவணைப்படி மேற்கொள்ளப்படும்.

**செயல் நிலை ஆய்வுக்கணிப்பீடு**

| நியமங்கள் | உரிய புள்ளி |
|---|---|
| 01. பிரதிபலிப்புப் பதிவேட்டை வெற்றிகரமாகப் பேணிவரல். | |
| 1.1 நேர்த்தியாகப் பேணிவரல். | 03 |
| 1.2 பதிவேட்டின் பூரணத்துவம். | 04 |
| 1.3 பல்வேறு சம்பவங்கள் அவதானிக்கப்பட்டிருத்தல். | 03 |
| மொத்தப் புள்ளி | 10 |
| 2. செயல்நிலை ஆய்வு தொடர்பாக ஆலோசனைகள் பெறல். | |
| 2.1 பிரதிபலிப்புப் பதிவேட்டுக் குறிப்புக்களை நுணுகி நோக்குவதன் மூலம் விளக்கல். | 05 |
| 2.2 பிரச்சினையைச் சரியாக இனம்காணல். | 05 |
| 2.3 விரிவுரையாளரைச் சந்திப்பதில் காட்டும் ஆர்வம். | 05 |
| மொத்தப் புள்ளி | 15 |
| 03. முதலாவது முன்வைப்பு. | |
| 3.1 பிரச்சினையை இனங்கண்ட விதத்தைத் தெளிவாக விபரித்தல். | 05 |
| 3.2 பிரச்சினையின் பொருத்தப்பாடு, குறிக்கோள்கள், ஆராய்ச்சித் திட்டம். | 05 |
| 3.3 முன்வைப்புக்கான ஆயத்தம், முன்வைப்புத் திறன்கள். | 05 |
| மொத்தப் புள்ளி | 15 |
| 04. தலையிடல், செயலில் வெற்றிகரமாக ஈடுபடல் (ஆய்வு நாட்குறிப்பேட்டின் ஊடாக) | |
| 4.1 செயல் நிலை ஆய்வுக்கான தலையீட்டுத் திட்டம். | 05 |
| 4.2 ஒழுங்குமுறைப்படி தலையிடல். | 05 |
| 4.3 பிரதிபலிப்பின் ஊடாக மீளத்திட்டமிடல். | 05 |
| 4.4 நுட்பங்களை எதிர்கொண்டு அவற்றுக்குரிய பரிகார வழிகளை மேற்கொள்ளல். | 05 |
| மொத்தப் புள்ளி | 20 |

| | |
|---|---|
| 05. செயல்நிலை ஆய்வு அறிக்கை. | |
| 5.1 தரப்பட்ட மாதிரிக்கு அமைய அறிக்கையை எழுதுதல். | 05 |
| 5.2 கதை சொல்லுவது போன்ற பாணியில் அறிக்கைப்படுத்தல். | 05 |
| 5.3 ஆராய்ச்சியாளரின் தனிப்பட்ட மற்றும் வாண்மை விருத்தி தொழில்நுட்ப விருத்தி, மற்றும் நிறுவன விருத்தி வெளிக்கொணரப்படுத்தல். | 05 |
| 5.4 அறிக்கையின் ஒட்டுமொத்த பூரணத்துவம் | 05 |
| 5.5 குறித்த திகதியில் முன்வைத்தல். | 05 |
| மொத்தப் புள்ளி | 25 |
| 6. இரண்டாவது முன்வைப்பு. | |
| 6.1 ஆராய்வுச் செயன்முறை தொடர்பான தெளிவான விளக்கத்தை முன்வைத்தல். | 03 |
| 6.2 மதிப்பீட்டுக் குழுவினால் எடுக்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல். | 03 |
| 6.3 ஆய்வின் மூலம் நான் (ஆய்வாளர்) கற்றுக் கெண்டவை. | 03 |
| 6.4 எதிர்கால ஆய்வுகளுக்கான பிரேரணைகள் . | 03 |
| 6.5 முன்வைப்பை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக உத்திகளைப் பயன்படுத்தல். | 03 |
| மொத்தப் புள்ளி | 15 |

ஆசிரியர்கள் ஆய்வாளர்களாக உருமாற்றம் பெற வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைய அறிவு மையப் பொருளாதார அறை கூவலாகவுள்ளது. தமது ஆசிரியத் தொழில் தொடர்பான அறிவினை ஆழப்படுத்தி - அகலப்படுத்தி மேம்படுத்துகின்ற பொறுப்பும் வகைகூறலும் ஆசிரியர்களிடமே உள்ளது. ஆய்வுகளில் ஈடுபடும் ஆசிரியர்களே இனி ஆசிரியர்களாக செயலாற்ற முடியும். கல்வித்துறையில் ஆய்வுக் கலாச்சாரம் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. தனியாக ஒரு அசிரியர் ஆய்வைஆரம்பித்தாலும் அதன்செயன்முறையில் பலர் ஒருங்கிணைக்கப்படுகின்றனர். சிந்தனைக் கிளர்வு, பகிர்வு, வகுப்பறைப்பிரச்சனைகளை இனம் காணல், செவ்வை பார்த்தல் ,புதிய வரைவிலக்கணங்களை ஏற்படுத்தல், பாத்திரமேற்றல் அவதானித்தல், பதிவு செய்தல், மீள்நோக்கல், தரவு சேகரித்தல் பிரச்சினை தீர்த்தல், தரவுகளைப் பகுத்தாராய்தல், கண்டுபிடித்தல், சமர்ப்பித்தல், கூட்டு முயற்சி, சாதகமான நிலையை இனம் காணல், சாதகமற்ற நிலையை மாற்றுதல், பிரதிபலித்தல், திட்டமிடல், அறிக்கை தயாரித்தல், அனுபவங்களைப் பெறல் என பல்வேறு வகையான திறன்களையும், தேர்ச்சிகளையும், வாண்மை விருத்திகளையும் ஆய்வுகளைச் செய்யும் ஆசிரியர்கள் பெறுகின்றனர். இது கல்வித்துறையின் தர மேம்பாட்டுக்கு மிகுந்த பயனை அளிக்கின்றது. எனவே ஏனைய நாடுகளைப் போல; ஆசிரியர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள கல்வியமைச்சு நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பல்வேறு ஊக்குவிப்புக்களுக்கு வழிகாட்ட வேண்டும். பாடசாலை ஆதார வேலைத்திட்டத்தில் பாடசாலைமுகாமைத்துவக்குழு பாடசாலையை மையமாகக் கொண்டு அதன் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு ஆசிரியர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள பல்வேறு நிதி வள ஆதாரங்களை வழங்க வேண்டும். இது மாணவர்களின் கல்வி அபிவிருத்தியைப் பெருக்கல் வீதத்தில் அதிகரிக்க வழி வகுக்கும்.

**உசாத்துணை நூல்கள்:**


1) May T.I.M.1997, Social Research, Issues, methods – and Process, Philadelphia; Open University press,USA.

2) Christoph Edelhoff 1991. Action Research for Educational change. Open University Press Philadelphia, USA.

3) Louis cohen, Lawrence manion and Keith morrison, 2001 Research methods in Education. 11, New Fetter Lane, London Ec4p 4EE.

4) Jeyarasah. Saba. 2003, Action Researce in Education, Jaffna National College of Education – Kopay.

5) Kalamany. T 2011, Teacher Research as a Basis For Staff, Development A Literature Review – Lilani Amma; Harikanan printers, Jaffna.

6) B.Thanabalan 2004, Adyapana chinthana – Journal of the National college of Education, Volume – 7 ministry of Education.

7) Characteristics of constructivist Learning and Teaching http: // www. cdli. ca/ - e/murphy /e/murphy/ cle 3.htm/.

8) http://en. Wikipedia. org / wiki / Analogies

9) தரமான கற்பித்தலுக்கு செயல்நிலை ஆய்வு 2010, தேசிய கல்வி நிறுவகம், unicef.

10) தனராஜ் - தை 2005 செயல்வழி ஆய்வு ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம் கொழும்பு, சென்னை.

11) தனபாலன் - பா 2011 கல்வி நிர்வாகத்தில் விடய ஆய்வு லங்கா பதிப்பகம் FL, 1/14 டயஸ் பிளேஸ் குணசிங்கபுர கொழும்பு - 12.

12) செயல்நிலை ஆய்வு - "2011" தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குரிய அறிவுரைப்பு வழிகாட்டி. நிறுவன அபிவிருத்தித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.



பா. தனபாலன்

*இணைப்பாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

# ஆசிரிய முகாமைத்துவம் - சமகாலப் பார்வை

எல்லாத் தொழிற் துறைகளின் வெற்றிக்கும் சிறந்த முகாமைத்துவம் அடிப்படையாக அமைவது போல கல்வித்துறையின் வெற்றிக்கும் சிறந்த முகாமைத்துவமே அடிப்படையாக அமைகின்றது. பொதுத்துறை முகாமைத்துவத்திற்கும் கல்வித்துறை முகாமைத்துவத்திற்கும் இடையில் அடிப்படையில் பல வேறுபாடுகள் இருந்த போதிலும் பொதுத்துறை முகாமைத்துவத்திலே திட்டமிட்டபடி இலக்குகளை அடைந்து கொள்வது போன்று கல்வி முகாமைத்துவத்திலும் தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது . அந்த வகையில் பொதுத்துறை முகாமைத்துவத்திலே சிறந்த வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற உத்தி முறைகளைக் கல்வி முகாமையாளர்கள் அறிந்து கொள்வதுடன் அவற்றுள் கல்வித்துறைக்குப் பொருத்தமானவற்றை உள்வாங்கி கல்விசார் செயற்பாடுகளில் நடைமுறைப்படுத்தி உயர் வினைத்திறனை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. வெற்றிகரமாகச் செயற்படும் கம்பனிகள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலே உள்ளீட்டிற்கு ஏற்ப முன்கூட்டியே எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள் தீர்மானிக்கப்படுகின்றது. செயல்முறைகளின் போது எதிர்பார்க்கப்படும் வெளியீட்டை அடைவதில் குறைபாடுகள் அவதானிக்கப்படின் மாற்று உத்தி முறைகளாகக் கையாண்டு திட்டமிட்ட வெளியீட்டை அடைய முயற்சிக்கின்றனர்.



ஓர் ஆசிரியர் தனது வகிபங்கு என்ன என்பதை இவற்றினூடாக விளங்கிக் கொள்ள வேண்டும். தற்போதைய பாடசாலை மட்ட முகாமைத்துவத்திலே கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல், கல்விச் செயற்பாடுகளுக்கு நிதிகளைப் பயன்படுத்தல் தொடர்பாக பாடசாலைகள் அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டதன் நோக்கம் பாடசாலைச் செயற்பாடுகளில் விளைதிறனையும் (Effectiveness) வினைத்திறனையும் (Efficiency) அதிகரிக்கச் செய்வதற்காக எனலாம். இங்கு மிகச் சிறந்த வெளியீட்டைப் பெற்றால் மட்டும் போதாது. வெளியீட்டை உள்ளீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அடைவு வீதம் உயர்வாக இருக்க வேண்டும். இங்கு வெளியீடாகக் கருதப்படுவது பரீட்சைப் பெறுபேறுகள், இணைப்பாட விதான செயற்பாடுகள் போட்டிகளின் அடைவுகள், மாணவர் நடத்தைகள் என்பனவாகும்.

முகாமைத்துவச் செயற்பாடு

விளைதிறன் → எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளல்


விளைதிறன் → கிடைக்கும் வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறல்

P – planning – திட்டமிடல்
O - organizing – ஒழுங்கமைத்தல்
D- directing- வழிநடத்தல் /நெறிப்படுத்தல்
C - controlling- கட்டுப்படுத்தல்

பாடசாலையில் வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படினும் கிடைக்கின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும்.

வெற்றிகரமான பாடசாலை உருவாக்கத்தில் ஆசிரியரின் பங்கு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடக் கலைத்திட்டச் செயற்பாடுகள், இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள், முறையில் கலைத்திட்டச் செயற்பாடுகள் ஆகிய அனைத்திலும் ஆசிரியர் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கும்போதுதான் ஒரு பாடசாலை தனது இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்ள முடியும்.

வரை படம்




பாடசாலைகளின் எதிர்பார்க்கையானது பூரண ஆற்றல் வாய்ந்த பிரஜைகளை சமூகத்திற்கு வெளிவிடுவதாகும். அதாவது அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி, அனுபவங்கள், சமூகத்திறன்கள் ஆகியவற்றைத் தமது பாடசாலைக்கால முடிவில் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும். என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்குதான் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்கலாம். ஆசிரியர் செயற்பாடுகளில் காணப்படும் வேறுபாடுகளும் இதற்குக் காரணமாக அமைகின்றது.

**வகுப்பறைச் செயற்பாடுகளில் வினைத்திறன்**

பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகள், இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டியிருந்த போதும் அதிகளவு நேரத்தை ஆசிரியர்கள் வகுப்பறைகளிலேயே செலவிட வேண்டியிருக்கின்றது. பாடசாலைத் தலைமைத்துவத்தால் பாடத்திட்டங்கள், வளங்கள் என்பன ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவர்களைத் தேர்ச்சிமட்டத்தைப் பெற வைப்பது

ஆசிரியர்களிடமிருந்தான எதிர்பார்ப்பாகும். தற்போதைய பாடசாலை மட்ட முகாமைத்துவச் செயன்முறைகாரணமாக மாணவர்களின் தேர்ச்சி மட்ட அடைவு என்பது மிக முக்கியமாக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஆசிரியர்கள் பல்வேறு செயல் திறமைகள் தொடர்பாக தமது கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவை எழுகின்றது.

**1. பாட அடைவுமட்டத்தில் மாணவர்களின் தேர்ச்சி நிலையைப் பகுப்பாய்வு செய்தல் .**

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் பாடரீதியான தேர்ச்சி நிலைமைகளை உறுதிப்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும். தேர்ச்சி மட்டத்தை மாணவர்கள் பலர் அடையாது காணப்படின் அது கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் விருத்தியாக்கல் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. விருத்திச் செயன்முறைகள் பாடசாலைக்குப் பாடசாலை மாணவர்களின் நிலமைகளுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படலாம். செயல்நிலை ஆய்வுகள், பரிகாரக் கல்விச் செயற்பாடுகள், செயற்றிட்டங்கள், எனப் பல வழிமுறைகள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டிருக்கின்றன. எனினும் அடைவு மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள், பிரச்சினைகளுக்கான காரணங்கள், சரியாக இனங்காணப்படுவதுடன் அவசியமாக உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கான செயற்றிட்டங்கள் தீட்டப்பட்டு அவை பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த வகையில் ஆசிரியர் ஓர் ஆய்வாளன் என்ற நடிபங்கையும் அவர் மேற்கொள்ள வேண்டும். இந்தச் செயல்முறைகளின் வெற்றியில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1. பிரச்சினைகளை இனங்காணும் திறன்
2. பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறியும் திறன்
3. பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பிரயோகிக்கும் திறன்
4. ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பு
5. கட்டுப்படுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்தல்
6. புத்தாக்கத் திறன்கள்
7. பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்
8. ஆலோசனை வழங்கும் திறன்
9. ஆளுமை, தலைமைத்துவத் திறன்கள்
10. ஆசிரியர் அர்ப்பணிப்பு
11. பெற்றோருடனான தொடர்புகள்
12. தரவுகள், சேகரித்தல் , களஞ்சியப்படுத்தல் மற்றும் பயன்படுத்தும் திறன்

எனவே ஓர் ஆசிரியர் எந்த வழிமுறையை யாவது பின்பற்றி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் தேர்ச்சி மட்டம் உரிய அளவில் பேணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என தற்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு சவால் மிகுந்த பணியாகக் கூடக் காணப்படலாம். ஆனால் இதன் வெற்றி ஆசிரியரின் மனப்பூர்வமான விருப்பிலும் அர்ப்பணிப்பிலுமே தங்கியுள்ளது.

S.R. சத்தியேந்திரம் பிள்ளை,
*இணைப்பாளர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

# போதனா தலைமைத்துவம் சில மாற்றமுறும் எண்ணக்கருக்கள்

**பா**டசாலை அதிபர், முகாமையாளர் (manager), நிர்வாகி (administrater), போதனா தலைவர் ( instructional leader), கலைத்திட்டத்தின் தலைவர், (curriculum leader)எனப் பல்வேறு நடிபங்குகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடசாலையில் வகிக்கின்றனர். இப்பல் வேறு நடிபாங்குகளுக்கிடையே சமனிலை பேணவேண்டியது அதிபரின் தலையாய கடமையாகும். போதனா தலைவர் எனும் எண்ணக்கருவானது 1980களுக்கு முன்னர் தோற்றம்பெற்றஒன்றாகும். இதுவினைத்திறனான பாடசாலைகள் என்ற எண்ணக்கருவில் பெரும் செல்வாக்குப் பெற்ற ஒன்றாகும். 1990களின் முன்னரைத்தசாப்தங்களில் இவ்வெண்ணக்கரு போதனா முகாமைத்துவம் எண்ணக்கருவாக மாற்றமுற்றுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்துவக் கோட்பாடும் வசதிசெய் தலைமைத்துவம் எனும் கோட்பாடும் போதனா முகாமைத்துவத்தை முக்கியத்துவப்படுத்துகின்றன. கல்வி நியமங்களின் முக்கியத்துவம் அதிகரிப்பு, பாடசாலைகள் பொறுப்புக்கூறலுக்கான தேவைகள் காரணமாக போதனா தலைமைத்துவம் முக்கியத்துவப்படுத்துகின்றன.

போதனா தலைமைத்துவத்திலிருந்து பாடசாலை நிர்வாகி, பாடசாலை முகாமையாளர் என்பது பல்வேறு வழிகளில் வேறுபடுகின்றது. போதனா தலைமைத்துவம் என்பது தெளிவான இலக்குகளை அமைத்தல், போதனைக்குரிய வளங்களைப் பங்கீடு செய்தல், கலைத்திட்டத்தினை முகாமை செய்தல், பாடத்திட்டங்களைக் கண்காணித்தல், ஆசிரியர்களை மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகளுடன் தொடர்புபட்டது. சுருக்கமாகக் கூறின், அதிபர்களின் போதனா தலைமைத்துவம் என்பது மாணவர்களது கற்றலில் அபிவிருத்தியை மேம்படுத்துதல், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஏனையோருக்குப் பங்கீடு செய்தல், போதனா தரத்தினைமுதன்மைப்படுத்தி அதிபர்கள் செயற்படுதலைக் குறிப்பிடுகின்றது.



போதனா தலைமைத்துவத்தின் பிரதான பணியாக கற்றல் கற்பித்ல் செயன்முறையில் ஆழமான ஈடுபாடு காரணமாக; போதனா தலைமைத்துவம் என்னும் எண்ணக்கரு கற்றல் தலைமைத்துவமாக மாற்றம் பெற்றுள்ளது.

கற்றல் தலைமைத்துவம் ( leadership for learning) என்பது கற்றல் சமுதாயத்திற்குத் தலைமைதாங்குதலைக் (leading learning communities) குறிப்பிடுகின்றது. கால அடிப்படையில் பாடசாலை ஆளணியினர் ஒன்றிணைந்து தமது பணிகள் தொடர்பாக கலந்துரையாடுதல், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுதல், தமது வேலைகள் தொடர்பாக பிரதிபலிப்புக்களை மேற்கொள்ளல், மாணவர்கள் கற்றலுக்குப் பொறுப்புகளை ஏற்றல் ஆகிய செயற்பாடுகட்கு தலைமைத்துவம் வகிப்பது கற்றல் தலைமைத்துவம் ஆகும். கற்றல் சமுதாயத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் அச்சமுதாயத்தில் எழுகின்ற பிரச்சினைகட்குச் சொந்தக்காரர்கள் மட்டுமல்லாது அதனது தீர்வுகளுக்கான முகவர்களாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர்களின் ஆற்றுகைகளில் உயர் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தல், தொடர் கற்றலுக்கான கலாச்சாரத்தினை உருவாக்குதல், பாடசாலையின் வெற்றிக்கு கற்றல் சமுதாயத்தின் ஆதரவைத்திரட்டுதல், போன்றன போதனா தலைமைத்துவத்தின் பிரதானமான கடமையாக

இருப்பதுடன் வயது வந்தோர் கல்விக்கான முன்னுரிமையையும் வழங்க வேண்டும்.

போதனா தலைமைத்துவம்

- ஆலோசனைகளை வழங்குதல்
- பின்னூட்டல்களை வழங்குதல்
- வினைத்திறனான போதனைச் செயற்பாட்டு மாதிரிகளை முன்வைத்தல்
- கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்
- ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல்
- வாண்மைத்துவ விருத்திக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்
- வினைத்திறனான கற்றலுக்கு ஆலோசனை வழங்குதல்

ஆகிய பணிகளை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வினைத்திறனான பாடசாலைத் தலைமைத்துவம் என்பது கற்றல் கற்பித்தல் செயன்முறையோடு தொடர்புடைய சிறப்பான விடயங்களில் ஆழமான ஈடுபாடும், ஆசிரியர் மதிப்பீடு, நிதியிடல், பட்டியலிடல் பராமரிப்புக்கு வசதி செய்தல் ஆகிய கடமைகளுடனும் ஒன்றித்ததாகும். வினைத்திறனான போதனா தலைவர்கள், மாணவர்களது அடைவுடன் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்ற கலைத்திட்டம் மற்றும் போதனை தொடர்பான பிரச்சினைகளுடன் நேரடியாக ஆர்வத்துடன் ஈடுபடுவர். King (2002), Elmore (2000) & Diamond(2000) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வானது பாடசாலை போதனா தலைவர்களது நடிபங்கானது மேலும் விரிவடைந்து பின்வரும் முக்கிய விடயங்களில் கவனஞ் செலுத்துகின்றது.

(i) முன்னுரிமையளித்தல்: தசாப்த காலமாக ஆய்வுகள், கல்விசார் செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்ற அதிபர்களது பாடசாலையின் அடைவுகள் மேம்பாடு கண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றன. (Bartcll 1990,gotton 2000, Johnson & Asera 1999). பாடசாலையின் அதிபர் கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு முக்கியத்துவம் வழங்கும் அதேவேளையில் ஏனைய கடமைகளையும் புறத்திருத்தியச் செயற்பாடுகளையும் புறந்தள்ளாது செயற்பட வேண்டும். பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி தொடர்பான முன்னுரிமைப்பட்டியல் தயாரிப்பதில் அதிபர்கள் பூரண சுதந்திரமுடையவர்களாக இருக்க வேண்டும். போதனை அட்டவணை (Instructional Schedules) தயாரித்தல். வகுப்பறை மட்ட செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், வாண்மைத்துவ செயற்பாடுகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தல், முன்னேற்றங்களைக் கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளில் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

(ii) சீராக்கம் செய்தல்: என்பது ஒரு பரந்துபட்ட விடயமாகும் கலைத்திட்டம், போதனைச் செயற்பாடுகள், கணிப்பீட்டு நியமங்கள் என்பவற்றை எளிமையான முறையில் நேர்சீராக்கம் செய்தலைக் குறிக்கும். சீராக்கம் என்பது வினைத்திறனான முறையில் அதிபர்களினால் வழிகாட்டல்களின் மூலம் ஆசிரியர்கட்கு ஊடுகடத்தப்படுவதாகும். கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்கள், கலைத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் வினைத்திறனான உத்திகள் கணிப்பீட்டு செயன்முறைகள், போதனைச் செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் மாணவர் செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்தல் என்பன ஆசிரியர்கள் குழுக்களாக இயங்கி, கண்டறிவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

(iii) கணிப்பீடு: இது மாணவர் அடைவு தொடர்பான முக்கிய கூறாகும். கணிப்பீட்டு

நியமங்களை நிர்வகித்தல் அல்லது நடைமுறைப்படுத்தல், புள்ளியிடல், அறிக்கையிடல், கணிப்பீட்டுத் தரவுகளின் பொருத்தப்பாடு என்பவற்றினை பாடசாலைத் தலைமைத்துவம் வலியுறுத்த வேண்டும். அதிபர்கள், தொடர்ச்சியாக ஒழுங்கு முறையின்படி மாணவர்களது அடைவினைபகுப்பாய்வு செய்ய வேண்டும். இதன் மூலம்பெறப்படும் தரவுகள், பாடசாலைகலைத்திட்ட மேம்பாடு,ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள், வாண்மைத்துவ விருத்தி என்பனதொடர்பான தீர்மானங்கட்கு உதவும், மேலும் இத்தரவுகள் ஆசிரியர்கட்கான வழிகாட்டல்களாகவும் அமையும்.

(iv) கண்காணித்தல் : அதிபர்களின் கடமைகளில் கண்காணித்தல் என்பது ஒரு முக்கியமான செயற்பாடாகும். ஆசிரியர்களது வகுப்பறைச் செயற்பாடுகளும், மாணவர்களது வகுப்பறைச் செயற்பாடுகளும் அதன் விளைவுகளும் அதிபரினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். வகுப்பறைக்கு விஜயம் மேற்கொள்ளுதல், போதனைச் செயற்பாடுகளின் உறுதிப்பாடு, தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்ளல், போன்ற விடயங்களை அதிபர் கண்காணிக்க வேண்டும்.

போதனைச் செயற்பாடு மற்றும் கணிப்பீட்டுப் பிரச்சினைகள் பின்னூட்டல் செயன்முறைகள், வாண்மைத்துவ விருத்தி, ஆளுமை விருத்தி என்பன தொடர்பாக மாணவர்கள் சார்பாகவும் ஆசிரியர்கள் சார்பாகவும் அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதனூடாக மாணவர்களது அடைவினை மேம்படுத்த முடியும்.

(v) வயது வந்தோர்களுக்கான தொடர்கற்றல் கலாச்சாரத்தினைக் கட்டியெழுப்புதல் வினைத்திறனான போதனா தலைவர்கள் எனப்படுபவர்கள், போதனா செயன் முறையில் மேம்பாடு என்பது ஒரு தொடர் செயன்முறையாக நோக்குவார்கள், (Change & Kane,1983). வினைத்திறனான போதனை என்பதுஒருதிறனாகும். அது எவ்வாறாயினும் திருப்திபட முடியாததாகும். போதிய பொருத்தப்பாடான பயிற்சிகளுக்கு ஆசிரியர்களை அனுப்புதல், பங்குபற்றச் செய்வதன் மூலம்,ஆசிரியர்களது தொடர் கற்றலுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

பாடசாலை மேம்பாடு தொடர்பான முயற்சிகளில் அதிபர்கள் முக்கியமான கூறாகக் கருதப்படுகின்றனர். வகை கூறலுக்கான முக்கிய பொறுப்பு அதிபருக்கு வலியுறுத்தப்படுகின்றது. மேலும் பாடசாலை வளர்ச்சிக்கான வினைத் திறனானநிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவது மட்டுமல்ல; அவற்றின் வெற்றி தோல்விக்கான சான்றாதாரங்களையும் பாடசாலையில் ஏற்பட்ட மாற்றங்களையும் தெளிவு படுத்த வேண்டிய பொறுப்பு அதிபர்கட்கு உண்டு.

பாடசாலைத் தலைவர்கள் போதனா தலைமைத்துவத்தின் சவால்களை எதிர்கொள்வ தற்கான உளமாதிரிகை ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். போதனா தலைமைத்துவமானது, நல்லபோதனைக்கான ஒரு பொதுவான நோக்கக் கூற்றினை விருத்தி செய்தல், தொடர்புகளைக் கட்டியெழுப்புதல், போதனையில் புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதற்கான ஆளணியினரைவலுவூட்டல், ஒருவருக்கொருவர் பின்னூட்டல்களை வழங்குதல், நல்ல நடைமுறைகள் கற்பித்தல் பயிற்சிகளைப் பரிமாறுதல் ஆகியவற்றினை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

### 2.7.1 சூழலமைவு (Context)

சூழலமைவு என்பது புத்தாக்கரீதியாக, கருத்துக்களைப் பரிமாற்றம் செய்கின்ற வலிதான கூட்டுணர்வுடைய பாடசாலைச் சமூகத்தினைக் கட்டியெழுப்புகின்ற மூலங்களை அல்லது கூறுகளைக் கட்டியெழுப்புகின்ற செயற்பாட்டினைக் குறிப்பிடுகின்றது.

சூழலமைவுத் திறன்கள் என்பன

- பாடசாலைக் கலாசாரம், மாணவர் அடைவு பற்றிய தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
- பாடசாலைக் கலாசாரம், பாடசாலைத் தொடர்புகளில் செல்வாக்குச் செலுத்தும் பாடசாலை நடைமுறைகள் பற்றிப் பிரதிபலிப்புச் செய்தல்.
- பாடசாலைக் கலாசாரத்தில் மாற்றம்; மற்றும் புத்தாக்கத்தினை மேம்படுத்துவதற்கான உத்திகளைப் பிரயோகித்தல்.
- சவால்களையும் தடைகளையும் வெற்றி கொள்வதற்கான ஆற்றல்கள் மற்றும் முயற்சிகளை விருத்தி செய்தல்.
- நேர்த் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கான ஆதார நடத்தைகளை இனங்காணுதல்
- பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் மாணவர்கள் கற்பதற்கான வாய்ப்புக்களை சகல மாணவர்களும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நேர்த்தன்மையுடைய பாடசாலைக் கலாசாரத்தினை விருத்தி செய்வதற்கான தேவையை விளங்கிக் கொள்ளுதல்.
- மாணவர்களது கற்றல் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கான தகவல் முறைமையைக் கட்டியெழுப்புதல்.
- ஒவ்வொரு மாணவனினதும் தேவைகளை வெளிக்கொணரக்கூடிய வகையில் "பிரமிட் தலையீட்டு" செயன்முறையை ஒழுங்கமைக்கவும் வினைத்திறனான பரந்துபட்ட உத்திகளைப் பயன்படுத்தவும் பரீட்சயப்படுத்திக் கொள்ளுதல்.
- பாடசாலைக் கலைத்திட்டத்தினையும் ஆய்வுத் தரவுகளையும் மீளாய்வு செய்தல்.

### 2.7.2 இலக்கு (Target)

போதனா தலைமைத்துவம்தொடர்பாக, வலிதான நோக்கக்கூற்றினை தயார்படுத்துதல்,சிறப்பான நோக்கங்கள் மற்றும் போதனை மேம்பாட்டு முயற்சிகள் தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்தினரிடையே உடன்பாடுகளைக் கட்டியெழுப்புதல், மாணவர்களது அடைவினை மேம்படுத்துதலைப் பிரதான நோக்கமாகக் கொண்டது.

- போதனை மேம்பாடு தொடர்பான சிறப்பான குறிக்கோள்களை இனங்காணுதல்
- சகல போதனைச் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்தல்
- பல்வகைமையான வாண்மைத்துவக் கற்றல் செயற்பாடுகளை, நோக்கத்தினை அடையக் கூடிய வகையில் ஒழுங்குபடுத்துதல்.
- பாடசாலை மேம்பாட்டினை விரைவாக அடையக்கூடிய வகையில், மாணவரது அடைவை அதிகரிக்கக் கூடியதான இடத்தினைத் தெரிவு செய்தல்

என்பன இலக்குத் தொடர்பான திறன்களுக்குள் அடங்கும்.

### 2.7.3 பயிற்சி /நடைமுறைகள் (Practice)

பயிற்சிகள் அல்லது நடைமுறைகள் என்பது போதனைச் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் தலைவர்கள் மேற்கொள்கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள் உத்திகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்றது.

நடைமுறைகள் அல்லது பயிற்சிகள் வினைத்திறனாக அமைய வேண்டுமாயின் சூழலமைவும் தெளிவாக இருக்க வேண்டும்.

- பொருத்தமான இடங்களில் பொருத்தமான ஆசிரியர்களை நியமித்தல்
- ஆசிரியர்களது தலைமைத்துவத்தினை விருத்தி செய்வதற்கு உதவிகள் செய்தல்.
- சகல மட்டங்களிலும் போதனா தலைமைத்துவத்தினை மேற்கொள்வதற்கான தலைமைத்துவத்தினை உறுதிப்படுத்தல்,
- வினைத்திறனான வகுப்பறைச் செயற்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான திறன்களை விருத்தி செய்தல்.
- மாணவர்களது அடைவு தொடர்பான தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்
- ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு மற்றும் கொடுப்பனவுகள் வழங்கிக் கௌரவித்தல்
- ஆசிரியர்களது அவதானிப்புக்கள், கல்விச் சுற்றுலாக்கள்.
- நோக்கக்கூற்று, பணிக்கூற்று இலக்குகள் வடிவமைத்தல்

இந்த நடைமுறைகள் அல்லது பயிற்சிகள்

- முகாமைத்துவ நடைமுறைகள்
- வலுவூட்டல் நடைமுறைகள்
- நோக்கக் கூற்று நடைமுறைகள்
- கலாசார நடைமுறைகள் என நான்கு பிரதான பரப்புக்களாக வகைப்படுத்த முடியும்.

போதனா தலைவர்கள், போதனா செயற்பாடுகளை வினைத்திறனாக ஆற்றக்கூடிய வகையில் நல்ல தலைமைத்துவம், நம்பிக்கைகள், தீர்மானங்கள், உத்திகள், கொள்கைகள் என்பவற்றைக் கட்டியெழுப்ப வேண்டும். போதனா செயற்பாடுகளை மையப்படுத்தியவராகச் செயற்பட வேண்டும். கற்போன் சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல், பங்குகொள் தீர்மானமெடுத்தல் ஆகிய செயன்முறைகளோடு போதிய நேரம் செலவிட வேண்டும். சகல ஆசிரிய ஆளணியினருக்கும் தொடர் வாண்மைத்துவ விருத்திக்கு உதவுவதுடன் பாடசாலையின் பல்வேறு திட்டங்களுக்கு வளங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். கௌரவமான கலாசாரம், ஆராய்வுக் கலாசாரம் என்பவற்றினைப் பாடசாலையில் கட்டியெழுப்புவதுடன் தொடர்மேம்பாட்டிற்காக கடினமாக போதனா தலைவர்கள் உழைக்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


Bartell, C. A. (1990). Outstanding secondary principals reflect on instructional leadership. The High School Journal, 73 (2),118 -128.

Blase, Joseph,and Jo Blase. (2000): "Effective Instructional Leadership: Teachers' Perspectives on How principals Promote Teaching and Learning in Schools. Journal of Educational Administration 38,2 130- 41.EJ 606 422.

Cotton,K. (2003). Principals and student achievement. Alexandria, VA: Association for Suprvision and Curriculum Development.

Elmore, R. (2000).Bilding a new structure for school leadership.Washington, DC: The Albert Shanker Institute.

King, D. (2002). The changing shape of leadership. Educational Leadership, 59 (8),61-63.



க. பாஸ்கரன்
*விரிவுரை இணைப்பாளர்*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.*

# வகுப்பறையில் ஒழுங்குவிதிகளை இனங்காணுதலும் நடைமுறைப்படுத்தலும் சில குறிப்புக்கள்

வகுப்பறையொன்றின் சிறந்த கற்றல்-கற்பித்தலும், சிறப்பான ஒழுங்குநிலையும் ஒன்றையொன்று சார்ந்தே அமைகின்றன. அதவாது சிறப்பான ஒழுங்குநிலையிலுள்ள வகுப்பறையில் இலகுவாகக் கற்பிக்கமுடியும். சிறப்பான கற்பித்தல் இடம்பெறும் வகுப்பறைகளில் உயர்வான ஒழுக்கம் காணப்படும் என்பது இதன் விளக்கமாகும். கல்வியின் முக்கிய இலக்குகளை அடைய மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஒழுங்கான நடத்தை அவசியமாகும்.

ஒழுக்கம் பற்றி நோக்கும்போது ஒழுக்கம் என்பது பெரும்பாலும் சுயகட்டுப்பாட்டினையே குறித்து நிற்கின்றது. ஒருவர் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வதன் ஊடாக எழும் நன்னடத்தை என ஒழுக்கத்தை வரையறுக்கலாம். தனிமனித ஒழுக்கமே சமூகத்தின் ஒழுக்கத்தினைத் தீர்மானிப்பதாற் சமூகத்தோடு பொருந்தி வாழ்வதற்குரிய நன்நடத்தை ஒவ்வொருவருக்கும் அவசியமானதாகும்.

வகுப்பறையிற் காணப்படும் ஒழுக்கக் குறைபாடுகள் கல்வி அடைவுமட்டத்திற் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. மாணவர்களின் பெறுபேற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒழுக்கக் குறைபாடுகள் ஆசிரியர்களின் கற்பித்தலிலும் சோர்வினையும், விரக்தியினையும் உருவாக்குகின்றன என்பது ஆய்வுகளின் முடிபாகும். எவ்வாறாயினும் வகுப்பறைகளிற் சிறப்பான ஒழுக்கத்தை உருவாக்கி மாணவர்களின் பெறுபேற்றினை உயர்த்துவதும், கல்விக்காகும் செலவை உச்சப் பயன்மிக்கதாக மாற்றுவதும், ஆசிரியர்களினது பாரிய கடமையாகும்.

**வகுப்பறையில் ஒழுக்கம் ஏன் முக்கியமானது?**



வகுப்பறையில் ஒழுக்கம் ஏன் முக்கியமானது என நோக்கும்போது அதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

1. ஒழுக்கமுள்ள வகுப்பறை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு பாதுகாப்பான கல்விச் சூழலை ஏற்படுத்துகின்றது.
2. ஆசிரியர்கள் தேவையற்ற குழப்பங்கள், இடையூறுகள் இன்றி; பாடத்தைச் செவ்வனே நிகழ்த்தமுடியும்.
3. மாணவர்களின் கவனச் சிதறல்களின் அளவு குறைக்கப்படுவதாலே கற்றலின் அளவு அதிகரிக்கும்.
4. வகுப்பறை ஒழுக்கம் மாணவர்களின் தனிதன்மையினைப் பாதுகாக்க உதவும்.
5. வகுப்பறை ஒழுக்கம் முறையான, தனிப்பட்ட மற்றும் சமூக ஒழுக்கத்திறன்களைக் கொண்ட பிரசைகளை உருவாக்க ஏதுவாகும்.
6. எதிர்காலத்தில் உலகிற் சிறப்பான பணியாற்றுவதற்கும், சிறந்த பங்களிப் பினை வழங்குவதற்கும் ஏற்ற ஒருமைப்பாட்டையும், தன்னம்பிக்கையினையும் இன்றைய வகுப்பறையிற் பெற்றுக்கொள்ளும் ஒழுக்க பரிச்சயம் மாணவர்களுக்கு உதவும்.
7. வகுப்பறை மணித்தியாலயங்கள் ஊடாக உச்சப்பயனைப் பெறுவதற்கு வகுப்பறை ஒழுக்கம் அவசியமானதாகும்.
8. சிறப்பான ஒழுக்கச் சூழல்; ஒழுக்க முகாமைத்துவத் திறன்களையும், சுய எண்ணக்கருவாக்கத்தையும் மாணவர் களிடத்தே ஏற்படுத்துகின்றது.

9. வகுப்பறையின் பௌதிக வளங்களின் பாதுகாப்பு, பொருத்தமான பராமரிப்பு, வகுப்பறைச் சுற்றாடற் சுத்தம் என்பன வகுப்பறையின் ஒழுக்கத்தின் தன்மையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

10. ஆசிரியர்- மாணவர் உறவுநிலை, அவர்களுக்கிடையிலான இடைத்தாக்கம் பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றின் சிறப்பான போக்கிற்கு வகுப்பறையின் ஒழுங்குணர்வு மிகவும் தேவையானதாகும்.

11. சிறப்பான வகுப்பறை ஒழுக்கம் மனித உரிமைப் பாதுகாப்பு, விழுமிய உருவாக்கம், வன்முறையற்றமிருதுதிறன்கள், ஆக்கத்திறன், என்பவை உருவாக அடிப்படையாகின்றன.

**மாணவர் ஒழுக்கம் தொடர்பாக ஆசிரியர்களின் பார்வை**

வகுப்பறையில் மாணவர் ஒழுக்கம் தொடர்பாக ஆசிரியர்களிடம் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. சில ஆசிரியர்களால் வகுப்பறையில் ஒழுக்கம் எனக் கருதப்படுவை மாணவர்கள் அமைதியாக இருந்து ஆசிரியர் கூறுவதைச் செவிமடுப்பதாகும். ஆசிரியர் கூறுவதை எதிர்த்தல், ஆசிரியர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமை என்பன ஒழுக்கக்குறைபாடான செயற்பாடுகளாக இவர்களாற் கருதப்படும். இவர்கள் பெரும்பாலும் வகுப்பறைகளில் மாணவர்கள் செய்யக்கூடியவற்றை வலியுறுத்துவதை விட, வகுப்பறையிற் செய்யக்கூடாத செயற்பாடுகளையே மாணவர்களிடம் வலியுறுத்துவார்கள். அதாவது எதிர்மறைக் கட்டுப்பாட்டையே அடிப்படை வாதமாகக்கொண்டு வகுப்பறையை நிர்வாகம் செய்வார்கள்.

**1. ஒழுக்கம் என்பது மாணவர்களின் ஆளுமை விருத்தியுடன் இணைந்த விடயமாகும்**

மேலும் சில ஆசிரியர்கள் வகுப்பறை ஒழுக்கம் தொடர்பாகப் பின்வருமாறு கூறுகின்றனர். ஒழுக்கம் என்பது மாணவர்களின் ஆளுமை விருத்தியுடன் இணைந்த விடயமாகும். மாணவர்களை உடன்பாடாக நோக்கி அவர்களில் அர்த்தபூர்வமான சுய ஒழுங்கினைக் கட்டியெழுப்புவதன் ஊடாக மட்டுமே வகுப்பறையிற் பொருத்தமான ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பி, சிறப்பான கற்றலை முன்னெடுக்க முடியும் என்பதாக இவர்களது கருத்து அமைகின்றது.

**2. சுய ஒழுக்கம் விருத்தியாகும்போது வகுப்பறைகள் ஒழுங்குணர்வுடன் திகழும்**

மாணவர்களின் சுய ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பவதில் அனுபவமிக்க ஆசிரியர்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். சுய ஒழுக்கம் ஐந்து தூண்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும். அவையாவன; -

- ஏற்றுக்கொள்ளுதல்
- மனவலிமை
- கடின உழைப்பு
- நிலைத்திருத்தல்
- குறிக்கோளுடன் ஒன்றியிருத்தல்

என்பனவாகும். ஆகவே ,மனவலிமை, கடின உழைப்பு , நிலைத்திருத்தல், குறிக்கோளுடன் ஒன்றியிருத்தல் ஆகிய பண்புகளை மாணவரிடத்தே வளர்த்தெடுப்பதன் மூலம் சுய ஒழுக்கத்தை மாணவரிடத்தே உருவாக்கலாம் என்பது இவர்களது வாதமாகும். சுய ஒழுக்கம் மனக்கட்டுப்பாட்டிலிருந்து எழுவதால் மாணவர்கள் மனக்கட்டுப்பாட்டுடன் செயலாற்றுவதற்குப் பயிற்சி அளித்தல் அவசியமாகும். சுய ஒழுக்கம் விருத்தியாகும் போது வகுப்பறைகள் ஒழுங்குணர்வுடன் திகழும் என்பது இத்தகைய ஆசிரியர்களின் நம்பிக்கையாகும்.

**3. சிறப்பான ஒழுக்கத்தை வெளிப்படுத்தும் ஆசிரியர்கள்**

ஆசிரியர்கள் சிறப்பான ஒழுக்கத்தை வெளிப்படுத்தும்போது, மாணவர்களின்

ஒழுக்கம் உயர்வாகக் காணப்படும். ஆசிரியர்கள் தன்னடத்தைமூலமே மாணவர்களின் நடத்தையிற் செல்வாக்குச் செலுத்தி; மாணவர்களின் வகுப்பறைப் பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தமுடியும் என்ற பாணியில் செயலாற்றும் ஆசிரியர்கள் பலர் உள்ளனர். மாணவர்கள் ஆசிரியர்களை முன்மாதிரியாகக் கொண்டு தமது நடத்தைகளை வடிவமைக்கும்போது ஒழுக்கத்தை மாணவர் விரும்பி ஏற்றதாக அமைகின்றது.

**4. திட்டமிடாத ஆசிரியர் நடிபங்கின் விளைவு**

மாணவர்கள் வகுப்பறைகளிற் பிறழ்வான நடத்தைகளை வெளிக்காட்டுவதற்கு ஆசிரியர்களின் நடத்தைகளும் பலவேளைகளிற் காரணமாக அமைந்துவிடுகின்றது. ஆசிரியர் ஒரு வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையில் வாழும்போது மாணவர்களிலும் இலட்சிய உணர்வு மேலெழுகின்றது. மாறாக எந்தவித இலட்சிய உணர்வும், நன்னெறி போக்கும் அற்று, திட்டமிடாத நடத்தைகளின்மீது கட்டியெழுப்பப்படும் ஆசிரியர் நடிபங்கு , மாணவர்களின் ஒழுக்கத்தில் எதிரிடையான நடத்தைகளையே வரவழைக்கின்றது எனலாம்.

**5. ஆசிரியர் மாணவர் இடைத்தாக்கம்**

வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் இடைத்தாக்கமென்பது மாணவரின் ஆளுமையும், ஆசிரியரின் ஆளுமையும் இடைத்தாக்கம் புரியும் நிலையாகும். ஆசிரியர் உயரிய குறிக்கோளுடன், நன்றாகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு, மாணவர் நடத்தையிற் சிறப்பான நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன் வகுப்பறைக்குள் பிரவேசிப்பது ஆசிரிய ஆளுமையின் இலக்கணமாகும். மாணவர் கற்றலுக்கான தேவையோடு, கற்கும் விருப்பத்துடன், உரிய உபகரணங்களோடு, ஆசிரியர் மீதான மதிப்புணர்வுடன் வகுப்பறைக்குள் பிரவேசிப்பது மாணவ ஆளுமையின் இலக்கணமாகும்.

இந்நிலையில் ஆசிரியரின் ஆளுமைக்கூறுகளில் அல்லது மாணவரின் ஆளுமைக்கூறுகளில் ஏதாவது குறைபாடுகள் தோன்றுமிடத்து அங்கே நிலவும் இடைத்தாக்கம் குறைபாடுகளை உடையதாக மாற்றமடையும். குறைபாடுகளையுடைய இடைத்தாக்கம் ஆசிரியரின் ஆளுமையிலும், மாணவர்களின் ஆளுமையிலும் பொருத்தமற்ற தாக்கத்தினையே ஏற்படுத்தும். உதாரணமாக: ஆயத்தமில்லாது வகுப்பறைக்குள் நுழையும் ஆசிரியர் எதைக் கற்பிப்பது? எப்படிக் கற்பிப்பது?- என்ற குழப்பத்தில் நிற்கும்நிலை; மாணவரின் நடத்தையில் ஏற்படுத்தும் செல்வாக்கு யாது? மாறாக, கற்பதில் ஆர்வமின்றி வகுப்பறைக்கு வரும் மாணவன் காட்டும் நடத்தை ஆசிரியரின் ஆளுமைக்கு விடும் சவால்கள் எத்தனை? என நாம் சிந்திக்கலாம்.

**6. மாணவரின் வாழ்க்கையிற் பிரவேசிப்பவராக ஆசிரியர்**

ஆசிரியர்கள் தங்களது செயற்பாடுகளை வெறுமனே பாடங்களுடன் மட்டும் தன்னை மட்டுப்படுத்தினால் அவர்களால் மாணவர்களின் ஒழுக்கத்தை முகாமைத்துவஞ் செய்யமுடியாது. மாறாக; ஆசிரியர்கள் வினைத்திறனுடன் பாடத்தைக் கற்பிப்பவராக, மாணவர் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழிகாட்டுபவராக, சீரிய குறிக்கோளுடன் நன்னடத்தையை ஊக்குவிப்பவராக, மாணவரின் வாழ்க்கையிற் பிரவேசிப்பவராக இருந்தால் மாணவர்களின் ஒழுக்கவிருத்தியிற் சிறப்பாகப் பங்காற்ற முடியும்.

**7. ஒத்துணர்வுமிக்க ஆசிரியர்கள்**

ஒத்துணர்வு என்பது மாணவர்களின் நிலையிலிருந்து மாணவர்களின் பிரச்சினைகளை நோக்குவதாகும். ஒத்துணர்வுமிக்க ஆசிரியர்கள் மாணவர்களின் பிரச்சினைகளை நன்கு செவிமடுப்பவராகவும், அவர்களின்பால் அனுதாபமிக்கவராகவும் , அவர்களின் நடத்தைக்கான காரணங்களை எதிர்வுகூறி

முன்னரே நடத்தைகளைத் திருத்தியமைக்கக் கூடியவராகவும் இருப்பார். மாணவர்களின் நடத்தைக்குப் பொறுப்பேற்கக் கூடியவராகவும், ஒத்துணர்வுமிக்க ஆசிரியர் திகழ்வதால் இவரால் மாணவர்களைத் திருத்துதல் இலகுவானதாக இருக்கும்.

**ஒழுக்கத்தைக் கையாளுவதற்கான மூன்று நுட்பங்கள்**

வகுப்பறைகளில் மாணவர்களின் ஒழுக்கத்தைக் கையாளுவதற்குப்பொதுவாக மூன்று நுட்பங்கள் முன் வைக்கப்படுகின்றன. அவையாவன: -

1. தடுத்தாளும் நுட்பம்
2. ஆதரவளிக்கும் நுட்பம்
3. சீர்படுத்தும் நுட்பம்

என்பனவாகும்.

**தடுத்தாளும் நுட்பம்**

- தடுத்தாளும் நுட்பம் எனப்படுவது மாணவர்களின் ஒழுக்கமீறல்கள் ஏற்படுவதற் கான சந்தர்ப்பங்களை முன்கூட்டியே தடுக்கக்கூடியவாறான முயற்சியில் ஆசிரியர் ஈடுபடுவதைக் குறிக்கும். பொதுவாகத் தடுத்தாளும் ஒழுக்கநுட்பமானது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.
- வகுப்பறைகளிற் கலைத்திட்டம் மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளாக மாற்றியமைக்கப்படும். பாடத்தில் மாணவர்களுக்குச்சலிப்புத்தராத வகையிற் கற்றல்- கற்பித்தல் முன்னெடுக்கப்படும். மாணவர் தொடர்ச்சியாகச் சலிப்படைதல், வகுப்பறைகளில் ஒழுக்கம் குறைவடைவ தற்கான காரணியாகும். மாணவர்கள் மகிழ்ச்சியாகவும், விருப்புடனும் கற்றலில் ஈடுபடும் நிலைகளில் ஒழுக்கமிக்க வகுப்பறைகளைக் கட்டியெழுப்புவது இலகுவானதாகும்.
- மாணவர்கள் எப்பொழுதும் சுதந்திரம், விளையாட்டு, அதிகாரம், கௌரவம், பின்பற்றலுக்கான சந்தர்ப்பங்கள், தலைமைத்துவம் என்பவற்றுக்காக ஏங்கிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, அவை கிடைப்பதை உறுதிசெய்தல் ஒழுக்கவிருத்திக்கு உதவும். ஏனெனில், மாணவர்களின் தேவைகள் பூர்த்தியாக்கப்படுதல் அவர்களது நடத்தைகளில் விரும்பத்தகு மாற்றத்தை ஏற்படுத்தும்
- ஆசிரியரும், மாணவர்களும் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவுபவர்களாகவும், நன்கு புரிந்துணர்வுமிக்கவர்களாகவும் இடைத் தாக்கம் கொள்ளும்நிலையில் ஆசிரியர் மாணவர் உறவு நிலையில் உருவாகும் விருத்தி; சிறப்பான கவின்நிலை வகுப்பறை களில் நிலைபெற உதவும்.
- மாணவர்களின் திறன்கள் முழுமையாக இனங்காணப்பட்டு அவை தூண்டப்படுவது மாணவர்களின் கற்றல்மீதான ஈடுபாட்டினை அதிகரிக்கும். மாணவர்களின் பங்களிப்பு அதிகரிக்கும் நிலையில் மாணவர்களைக் கட்டுப்படுத்துவது இலகுவானது.
- வகுப்பறைகளில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையிலான தொடர் பாடல் தெளிவானதாகவும், மாணவர்கள் சரியாக விளங்கிக்கொண்டதை உறுதிப் படுத்தும் சிறப்பான பின்னூட்டல் தளத்தைக் கொண்டதாகவும் அமைதல்வேண்டும். தெளிவற்ற உரையாடல்கள், பின்னூட்டல் பெறுவதற்கு வாய்ப்பற்ற ஆசிரியர் தொடர்பாடல்கள், மாணவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவல்லன. ஆகவே, மாணவர்களுடன் பொருத்தமான தெளிவான தொடர்பாடலை ஆசிரியர் மேற்கொள்ளல் மாணவர்களின் ஒழுக்கமீறல்களைத் தடுப்பதற்கு உதவும்.

- ஆசிரியர் தனது எதிர்பார்ப்புக்கள், தான் விரும்பும் மாணவர் நடத்தைகள், தான் விரும்பாத நடத்தைக் கோலங்கள், தொடர்பாக மாணவர்களிடம் அடிக்கடி கலந்துரையாடல் வேண்டும். விரும்பத்தகாத நடத்தைகள் தொடர்பாகவும், அதன் விளைவுகள் பற்றியும் தனது கருத்துக்களை ஆசிரியர் முன்வைக்கும் அதேநிலையில் மாணவர்களும் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளித்தல் வேண்டும். மேலும், நாகரிகமான நடத்தைகள் பெற்ற வெகுமதிகள் பற்றிக் கதைகள் மூலமாகவும், அனுபவப்பகிர்வு மூலமாகவும், ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடலைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவேண்டும்.
- ஆசிரியர் முன்மாதிரியான ஒழுக்க நடத்தைகளை வெளிக்காட்டுவதன் மூலம் மாணவர்களின் ஒழுக்கமீறலுக்கு அணைபோடமுடியும்.

**ஆதரவளிக்கும் நுட்பம்**

மாணவர்கள் பதட்டமடைதல், உள நெருக்குவாரங்களை அனுபவித்தல், மனவெழுச்சி, கட்டுப்பாட்டினை இழத்தல், ஏமாற்றமடைதல், போன்ற நிலைகளில் ஒழுக்கமீறலுக்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்த முயலலாம். இவ்வாறான நிலைகளில் அவர்களின்பால் அனுதாபங் கொண்டு ஆதரவளிப்பதன்மூலம் அவர்களி டையே சுயக்கட்டுப்பாட்டினை உருவாக்குதல் ஒழுக்கவிருத்திக்கான ஆதரவளிக்கும் நுட்பம் எனலாம். ஆதரவளிக்கும் நுட்பம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

- மாணவர்களின் ஒழுக்கமீறல்கள் அரும்பும் நிலையிலேயே அவர்களது நடத்தை தொடர்பாக உடல்மொழிமூலம் ஆசிரியர் சமிஞைக்களை வழங்குதல்.
- மாணவர்கள் ஆத்திரமடையும் வேளைகளில் மாணவர்களது அருகில் சென்று ஆறுதல் அளித்தல்.
- மாணவர்களின் செயற்பாடுகளிற் பங்குபற்றி உடனடியான பின்னூட்டல்களை வழங்குதல்.
- மாணவர்களை ஆர்வமூட்டக்கூடிய வகையில் வினாக்களை முன்வைத்தல்.
- கடினமான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது அவர்களிடையே கலந்துரையாடி உதவுதல்.
- மாணவர்களுக்குச் சவாலான செயற்பாடுகளை வழங்கும்போது அவர்களால் அதனைச் செய்யமுடியுமென நம்பிக்கையூட்டுதல்.
- மாணவர்கள் குழப்பமடையும் வேளைகளில் நகைச்சுவைமூலம் மாணவர்களின் கவனத்தை மாற்றியமைத்தல். மனநிலைகளில் மாற்றத்தை உருவாக்குதல்.
- மாணவர்களிடம் காணப்படும் தேவையற்ற படங்கள், உபகரணங்கள், பொழுதுபோக்குச் சாதனங்கள் என்பவற்றை அவர்களிடமிருந்து அகற்றி; அது தொடர்பான ஒழுக்கவிதிகளை இங்கிதமாக உணர்த்துவதோடு மீண்டும் அவ்வகையான தவறுகள் இடம்பெறமாட்டாது என்ற உறுதிமொழியை மாணவரிடமிருந்து பெறல்.
- மாணவர்களின் ஒவ்வொரு பொருத்தமான நடத்தைக்கும் உடனடிப் பாராட்டுகளைக் வழங்குதல்.
- மற்றும் மாணவர்களின் ஒவ்வொரு பொருத்தமற்ற நடத்தையினதும் விளைவுகளைச் சுட்டிக்காட்டுதல் என்பனவாகும்.

**சீர்படுத்தும் நுட்பம்**

தடுத்தாளுதல், ஆதரவளித்தல் நுட்பங்களோடு ;ஆசிரியர்கள் மாணவர்களது ஒழுக்க நடத்தைகளை விருத்தியாக்குவதற்குச் சீர்ப்படுத்தல் நுட்பங்களையும் பிரயோகிக்க வேண்டியவர்களாக உள்ளனர். மாணவர்கள்

ஒழுக்கமீறல்களை வெளிக்காட்டும்போது; வன் முறைகளில் ஈடுபடும்போது, அந்நடத்தைகளைத் திருத்தியமைக்க முற்படுத்தலை; சீர்படுத்தும் நுட்பம் எனலாம். சீர்படுத்தும் நுட்பம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

- மாணவர்களின் முறையற்ற ஒழுக்கம் தொடர்பாக அவர்களுக்குத் தாமதமின்றி உடனடியாக விளக்குதல். மாணவர்களின் ஒழுக்கமீறல்கள் தொடர்பாக ஆசிரியர்கள் அசிரத்தையாக இருக்கக்கூடாது.
- மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக பெற்றோர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடலை மேற்கொள்ளல்
- வகுப்பறை ஒழுக்கவிதிகளை ஆக்கி; காட்சிப்படுத்தி ;அதனை மாணவர்கள் ஒழுங்காகக் கடைப்பிடித்தலைக் கண்காணித்தல்.
- மாணவர்கள் நடத்தைகள் தொடர்பான பதிவேட்டினைப் பராமரித்தல். அதில் எழுதப்படும் குறிப்புக்கள் தொடர்பாக மாணவர்களுக்கு உணர்த்துதல்.
- மாணவர்களின் ஒழுக்கமீறல்களுக்கான காரணங்களை இனங்காணக் கடுமையாக முயற்சித்தல்
- மாணவர்களின் நல்ல நடத்தைகளுக்கு உடனடியாக வெகுமதியளித்தல்.
- மாணவர்களால் ஏற்படுத்தப்படும் பௌதிக இழப்புகளை மாணவர்களைக் கொண்டே ஈடுசெய்தல் என்பனவாகும்.

மேற்கண்ட நுட்பங்களைவிட, ஒழுக்கம் தொடர்பாக மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலும் சிறந்ததொரு ஒழுக்கவிருத்தி நுட்பமாக அமையும். மாணவர்கள் ஒழுக்கமீறல்களை வெளிக்காட்டும்போது அதன் உடனடி விளைவுகள், அதனால் பாதிக்கப்பட்டோர், அதன் வருவிளைவுகள் பற்றி மாணவர்களை உணரச் செய்வதற்கான செயற்பாடுகள் ஒழுக்கவிருத்திப் பயிற்சியிற் கட்டாயம் உட்படுத்தப்படல் வேண்டும்.

மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக ஆசிரியர்கள் பலர் தலையிடாப் போக்கினைக் கொண்டிருத்தல் இன்று பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கமீறல்கள் அதிகரிக்கக் காரணமாகின்றது. ஆசிரியர்கள் மாணவர்களின் நன்நடத்தைகளைக் கட்டியெழுப்பவதற்கு நம்பிக்கையுடனும், பற்றுறுதியடனும், துணிவுடனும் செயலாற்றுதல் அவசியமாகும்.

**உசாத்துணை நூல்கள்:**


1. சந்தானம். எஸ். (2000). கல்வி உளவியல் சாந்தா பதிப்பகம். சென்னை.
2. சின்னத்தம்பி.மா. (2009): ஆசிரியரை விளைதிறன் மிக்கவராக்கல் சேமமடு பதிப்பகம், கொழும்பு.
3. தனராஜ்.தை .(2008): தலைமைத்துவக் கோட்பாடுகள், சேமமடு பதிப்பகம், கொழும்பு.
4. அரிந்தம் சவுத்திரி (2012) உனக்குள் இருக்கும் வைரத்தை கண்டுபிடி .ஐஐபிஎம் பிரஸ் டெல்லி
5. hpr.;rl, nlk,gsH (2010) Ntiytpjpfs, pearson nrd,id
6. Sarah Flecher (2000) Metoring in School-skogan page, london
7. Victoria Johnson (1998): Stepping forward Intermediate Techonology publication, London.
8. Hedley Beare, (2001): Creating the Future school- Rountledege,London.



க. சுவர்ணராஜா

உப பீடாதிபதி (நிதி நிர்வாகம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

# The Need for English Education with a Bilingual or Trilingual Programme

## English Language Teaching in Sri Lanka

This paper analyses critically the status of English and ELT during the British Colonial Rule and after Independence in Sri Lanka. The importance of English in Sri Lanka after globalisation and the attitude of the students towards learning English due to political and national reasons are also discussed with a special focus on the problems faced by students in language education.

## Status of English during the British Colonial Rule

English was introduced as a subject to the Island of Sri Lanka with the advent of the British Colonial rule in the latter part of the 18th century and was subsequently introduced as the medium of education in the early part of the nineteenth century. Raheem and Ratwatte (2004) remarks

The central event in the establishment of English in Sri Lanka was the recommendations of the Colebrook- Cameron Commission of Inquiry (1830-2). This commission was intended to investigate the strengthening of the administration of the colony, and with this end in view Colebrooke made a strong plea, "Education should be held out to the natives so that they may in time qualify themselves for holding some of the higher appointments" (quoted in Education in Ceylon,1969.p.93)

The colebrook Commission recommended English as the medium of education in 1829 (Perera, 1969) . However, in 1867, the Morgan committee stated that elementary education could well be imparted through the mother tongues of the children (Jayasuriya, 1978). At the beginning of the twentieth century, there were three kinds of educational systems in the country;

1. English education in English medium schools.
2. The vernacular schools used the national language /s as the medium of instruction.
3. Anglo-vernacular schools used national language/s as the medium of instruciton during the early years of the schooling (Jayasuriya,1978.p.426)

The literacy rate gradually increased. English was taught in the primary classes and it was made compulsory in the classes, 6,7 and 8. Mother tongue education was gradually allowed at the time of Independence along with the English medium. However, at the University level English was the medium of education.

## English Language Education after Independence

At the time of independece, in 1948, English was the medium of instruction in most of the leading schools and at the university level in Sri Lanka. There were moves to change the medium of instruction from English to the mother tongue of the learners at school level before it was done at university level. J.E .Jayasuriya describes the situation of the medium of instruction from 1944 to 1953 as follows:

As from October 1945,the primary school medium became Sinhalese or Tamil with no option of an English medium. In post-primary classes the medium could be a national language or English at the option of the school, and where a school desired to use English, it meant that students whose primary education had been in a national language had to swich over to the English medium (Jayasuriya,1968 p.73)

The Government continued to introduce the national language/s as the medium of instruction in the pre.H.S.C. class and H.S.C.class except for science, maths and Western languages.This situation had to face problems, like shortage of effcient teachers to teach in national languages. Therefore, an option to switch over to the English medium was given at Prep. S.S.C. for practical reasons. However the Minister of Education declared in a notification in 1952 to impart education at the top level in the national languages only (Jayasuriya,1968, p.77)

The Report of the committee of Inquiry into the Teaching of English in Ceylon schools (1960) recommmended that English should be compulsorily taught as a subject to all,up to and including Eighth Standard and that thereafter it should be optional (Sessional paper No.5, 1960,p.24) .However, there were oppositions to make English compulsory below Fifth standard for the reason that the child should be adequately adjusted both, emotionally and mentally, to his immediate environment, with ease and competence in the first language being satisfactorily established and with sufficient maturity to recognize broad ideas and concepts. After that, teaching of English could be introduced as optional subject form grade.5. The National Education Commission reports;

We are also strongly opposed the introduction of English earlier than grade 5 in any school as it would create unnecessary distinction between schools (Sessional Paper1, 1962,p.5)

By 1960,the University of Ceylon commenced teaching arts subjects in the national languages when the first batch of mother tongue (swabasha) medium students entered the university ((Sessional paper 1, 1962.p.11) However, the teachings of medicine, engineering, law and similar professional studies were continued in the English medium in the university.

Thus, the role, of English as a medium of instruction has been reduced, especially as a subject in schools and in the university except for science courses.Even though the science students have been able to complete their studies in English their communicative ability has always been quite low.

## The Imporance of English in Sri Lanka

The political climate which pushed the country into a nationalistic fervour could not continue with the same stand due to the economic situation in the international plane. The country has to adopt itself to the international demands with regard to trade, business, education and science. With globalisation knocking at the door of everybody in every state an international language had to be accommodated. In fact, it is a well-known fact that the citizens of a hird world country must be well versed in an international language to communicate with the world.

In 1977, the country opened its doors to open economy and it meant accommodating the international community for business and other purposes.This resulted in the development of the private sector and it needed the services of an international language. In the Sri Lankan context. it was inevitably English by virtue of the colonial rule by the British from 1796 to 1948.Since English was somewhat familiar to the people of Sri Lanka the govement encouraged people to study English.Subsequently, the students in schools were motivated to learn English. The Education Reforms Committee of 1979 endorsed the situation as follows;

" In the context of the rapid growth of knowledge in modern times and the speed with which this knowledge is communicated, it is not possible for students pursuing studies at higher level to achieve and maintain proper academic standards without the first hand knowledge of an international language. For us in Sri Lanka English is the obvious choice (1982,p.163).

Therefore, the educational system of the country had to give due importance to English from the early eighties and the educationists had to search for better methods to teach English in an efficient manner for communicative purposes. The Curriculum Development Centre of the Ministry of Education tried to introduce the Communicative Approach in the teaching of English in 1984.As a first step it produced a set of textbooks to be used in the classes form Grade 3 to 10 with the communicative approach. Earlier, in the seventies, the textbooks had been based on the oral situational approach with pattern practice and drills.

## Methods Adopted in the ELT in Schools

At the beginning of the British period, the American Missionaries used the grammar-Translation method (Vigna Raja,1944). This method was continued even after English became a second language in schools (Perera,1944). The Direct Method was introduced in Sri Lanka in the early 1960s. The Report of the committee of Inquiry into the teaching of English in 1960 states;

The Committee believes that the language should be introduced in meaningful units.The Direct Method was favoured.Structures should be graded and wordlists should be prepared to suit conditions in Celyon. Translation is to be used only for the purpose of explanation. It is not necessary to teach grammer at all in the earlier three stages. There is plentiful literature available on the methods of teaching English as a second language (Sessional paper No.5,1960, p.24)

Nevertheless, it was refused by Prof. Doric de Souza whose words, as appeared in the Report say; "Without linguistic background the Direct Method is not successful"(1960, p.47). The book designers of the sixties shifted the emphasis on teaching from literature to language skills. The Lanerolle's report recommended the Graded structural - Oral-Situational Approach which was widely used at that time in the world to be adopted in the Sri Lankan schools (Lanerolle, 1973,p .58) In the late sixties there was an attempt to make use of the Bilingual Method advocated by C.J. Dodson and a a modified bilingual method called " Reconstruction Method"designed by D.Walatara, a Sri Lanka. (Walatara, 1974,20). In 1968, it was withdrawn and in

1970 Transformational Generative Method was introduced at University level. Having seen that all these methods were not very successful in producing communicatively efficient students,the Misistry of Education introduced the Communicative Approch in 1984 (Perera, 1994, p.74). The set of books produced on the basis of commuincative Approch were expected to meet the demands of speech.They introduced more dialogues, role plays, reading comprehension pieces and poems, extracts from novels and stories selected from literature, The Chief Editor of the series titled 'English Every Day' had this to say:

The textbook refeed to is English Every Day, which since 1988-89 has completely replaced a structurally-based course, and is now used throughout Sri Lankan schools (Mosback, 1990, p.18).

The set of books tried to integrate the other subjects like science, social studies and others and taught Grammmar in action with more real life situations. It also gave up the mechanical type of drilling proposed by the Structural- Oral -Situational Approach and introduced role plays for developing communication skills. Howerver, these books and methodology did not produce the required proficienty and competency in using the language.

Although the communicative approach has been in vogue during the last twenty five years in Sri Lanka and there have been revisions of syllabuses and methodological innovations they were not successful. Therefore, another set of books entitled 'The World through English' was produced in the late nineties to cater to the demands of the modern Sri Lankan society incorporating texts related to local and global situtions with a view to promote oral and written skills. That is to develop fluency as well as accuarcy (From an interview with Director, NATE). However, the Sri Lankan society still faces the lack of English proficiency widely.

## Current status of English

In 2002, the Sri Lankan Government introduced English to all Sri Lankans who go to schools from Grade one onwards, year (class) one students started with Oral English - Conversational English.The students have a chance to study it up to Advanced levels. The Ministry of Education has made it a point to revise the curriculum from time to time in order to include the current trends in the series. In the 2010th , it has included many cultural and literary aspects in all these books from Grade three to Advanced Level General English.Most of the students in Sri Lanka follow regional medium instruction (Tamil / Sinhala) in schools. They learn English as a second language, which is only one of their subjects from class 3 onwards.

## Linguistic Human Right and Empowerment of the Minority

Having discussed the background of English education in Sri Lanka one has to keep in mind the reasons for the deterioration of standards of English after independence. In 1956 the cry for Sinhala only led to the Tamils to asking for their linguistic rights. Thus, the resistance for 'Sinhala' only' by the Tamils guided them to go againtst the English language.Historically, education in Sri Lanka was imparted in English, a kind of total immersion programme in English medium

schools till the sixties. Then the country has seen that national languages have occupied the place of English. In fact, the people have been able to enjoy their linguistic human rights but lost the link language English for communication.This situation affected the relationship between the communities as there has been no medium for them to communicate with each other and developed hatred for each other . Both the commumities (Sinhalese and Tamils) have empowered themselves with the language weapons which led to the misunderstanding of each other and met in a civil war. Had there been a strong policy to promote English education along with the mother tongue education, the story of the country would have been different. Skutnabb-Kangas and Phillipson (1994) points out that Linguistic rights should be considered as basic human rights. They further comment;

Linguistic majorities, speakers of a dominant language, usually enjoy all those linguistic human rights which can be seen as fundamental, regardless of how they are defined.Most linguistic minorities in the world do not enjoy these rights. (Skutnabb- Kangas & Phillipson, 1994.3). As the Tamil language was not regarded as the one of the official languages till 1987, there has been a war between the Tamils and the government forces in Sri Lanka. The myth that monolinguialism is good for economic growth and myth that minority rights are a threat to the nation state subscribe to the 'Sinhala only' policy of the goverment. As there has been resistance to learn other languages other than Tamil the students have to be educated by empowering them with mother tongue education.Cummins(1986) argues the case for empoweing the minorities in the American contexts. It is in a way true for the Sri Lankan population as well. It is good for better development. However, it could have been better for mutual understonding and concern for the two communities to maintain their affairs in their mother tongues for better development . Howere, it could have been better for mutual nderstaniding and concern for each other had the English education been continued with a bilingual or trilingual programme accommodating the Sinhala / Tamil as the third language as is done in India. Therefore, the present scenario with the need for English education a new educational programme has to be implemented with the stress on the teaching of English at the Universities.

**Dr. Kandiah Shriganeshan**
*Senior Lecturer,*
*English Language Teaching Centre,*
*University of Jaffna*

# கற்றலை வலிமைப்படுத்தும் வாசிப்பு



### அறிமுகம்

கற்றல் என்பது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருப்பது. இது பல்வேறு காரணிகளாலே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்கின்றது. கற்றலுக்குப் பல்வேறு தூண்டிகளும், புலனியக்கச் செயற்பாடுகளும் காரணமாக அமைகின்றன. கற்றலுக்கு வாய்ப்பளிக்கும், வசதி செய்துகொடுக்கும் சாதனங்களும்,வழிமுறைகளும் அன்றுதொட்டு இன்றுவரைபல்கிப்பெருகிக் காணப்படுகின்றன. இவற்றில் முதன்மையானதும், கற்றலை அன்றுதொட்டு இன்றுவரை விரிவுபடுத்தி வலிமையாக்கிக் கொண்டிருப்பதும் வாசிப்பே ஆகும். வாசிப்புக் கலாசாரம் விரிவடையத் தொடங்கியபோது கற்றலுக்கான வாயில்களும் அதிகளவிலே திறந்துவிடப்பட்டது, வரலாறாகும். இது நூல்கள், சஞ்சிகைகளின் பெருக்கம், பத்திரிகைத்துறையின் பரிணாம வளர்ச்சி என்பவற்றோடு தொடர்புபடுத்தி நோக்கத்தக்கது. இன்னும் எழுத்து வடிவிலான சாதனங்களின் பெருக்கம் கற்றவர்கள்/ அறிவார்ந்த சமுதாய உருவாக்கத்துக்குக் காரணமாயின. இது கற்றற் பரிமாணத்திற்கு வாசிப்பை அடிப்படையாக்கியுள்ளது.

"வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது", "கண்டது கற்கப் பண்டிதனாவான்" "வாசி யோசி" என்றவாறெல்லாம் எம்மத்தியில் வாசிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. எமது மரபுசார்ந்த கல்விமுறை, வாசிப்பை அடிப்படையாகக் கொண்டிருந்ததையும் அதன்மூலம் நெட்டுருப்பண்ணுதல் முதன்மை பெற்றிருந்ததையும் அறிகின்றோம். இன்றும் பல்வேறு நவீன கற்றல் முறைகள் உருவானபோதும் வாசிப்பு என்ற உத்தி அவற்றுள் விரவியே கிடக்கிறது .மிகப்பிந்திய சிந்தனையாக இன்று நடைமுறையில் உள்ள 5E கற்பித்தல் முறையில் மாணவர் மையக் கற்பித்தலை ஊக்குவிப்பதற்கு வாசிப்பு முக்கியத்துவம்பெற்றிருப்பதை அனுபவ ரீதியாக உணர்கின்றோம். ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில் வாசிப்பு ஈடுபாட்டை ஊக்குவிப்பது இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

### வாசிப்பு

வாசிப்பு, மொழியின் வரிவடிவத்தைப் பார்த்து ஒலிவடிவத்தைப் புரிந்து தொடர்பு படுத்திப் பொருள்கொள்ளும் செயற்பாடாகும். ஒலிவடிவத்தைப் பொறுத்தவரையிற் சில ஒலிகளை மாணவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவோ, உச்சரிக்கவோ முடியாத நிலை இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாணவர்கள் வரிவடிவத்தைக்கொண்டு சொற்களின்பொருளைத் தெளிவுபெறுகின்றனர். இது மொழிப்பரிச்சயம், வாக்கியங்களின் பூரணத்துவம், ஒருதகவலை அல்லது செய்தியைத் தொடர்ந்து வாசித்துக்கொண்டு செல்லுதல் என்பவற்றால் இடம் பெறுகின்றது.

வாசிப்பு உரத்த வாசிப்பாகவும் மௌன வாசிப்பாகவும் இடம்பெறுகின்றது. வாசித்துப் பழகுவதற்கும், மாணவர்களின் வாசிப்பை நேரடியாக ஆசிரியர் வழிப்படுத்துவதற்கும். கவனக்கலைப்பான்களுக்குட்படாமல் ஒன்றிப்பதற்கும்; நெட்டுருப்பண்ணுவதற்கும் உரத்தவாசிப்பு நன்று. சில சமயங்களிற் பிறர் கேட்கவும், கலந்துரையாடவும்,உரத்த வாசிப்பே அவசியமாகின்றது. மௌனவாசிப்பு சுயகற்றலை ஊக்குவிக்கின்றது. தேடல், திரட்டல், ஒழுங்குபடுத்தல், ஒப்புநோக்கல், சீர்தூக்கிப் பார்த்தல், நயத்தல் என்பன மௌனவாசிப்பின் போது இடம்பெறுகின்றது. சந்தர்ப்பத்தைப் பொறுத்து வாசிக்கும் நிலைமைகளை மூன்று வகையாக நோக்கலாம்.

1. வரிகளை வாசித்தல்

2. வரிகளுக்கு இடையில் வாசித்தல்

3. வரிகளுக்கு அப்பால் வாசித்தல்

வரிகளை வாசிக்கும் பழக்கம் ஒரு விடயத்தை முழுமையாகத் தெளிவாக அறிந்துகொள்ளும் பொருட்டு வாசிப்பதாகும். ஒரு பாட விடயத்தை முதன்முறையாக வாசிக்கும்போது அதனைத் தெளிவாக அறியவேண்டிய தேவை ஏற்படும் அல்லது குறிப்பான ஒரு பக்கத்தில் இருக்கின்ற விடயத்தை முழுமையாகப்பெற்றுக்கொள்ளும் தேவை ஏற்படும். இவ்வேளை இடம்பெறும் வாசிப்பு "வரிகளை வாசித்தலாகும்.

ஒரு தகவலை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அறிதல், பத்திரிகை வாசித்தல் என்பவற்றின் போது வரிகளுக்கு இடையில் வாசிப்பு இடம்பெறுகின்றது. விரைவாகத் தகவலைப் பெறுவதற்கு இம்முறை உதவுகின்றது.

வாசிப்பின் தகவல் நிரறபடுத்தும் சிந்தனைசார், செயற்பாடு, வரிகளுக்கு அப்பால் வாசித்தலாகும். படிமங்கள், குறியீடுகள், ஏனைய அணிகள் என்பவற்றைப் புரிந்து கொள்ளவதும்; எழுத்தாளனது நோக்கத்தைப்புரிந்து கொள்வதும்; அதனுடன் தொடர்புபட்ட வகையிற் சுயசிந்தனையையும், புறத்தகவல்களையும், சம்பவங்களையும் இணைத்துக்கொள்வதும் இங்கு இடம்பெறுகின்றது. நயத்தல், விமர்சித்தல், கற்பனை உலகிற் சஞ்சரித்தல் என்பன; வரிகளுக்கு அப்பால் வாசித்தல் என்பதில் இடம்பெறுகின்றது. அதாவது ஒரு எழுத்தாளன் சொல்லாமல் விட்டுச்சென்ற ஆனால், அறிந்துகொள்வதற்கும் என்று புறநிலையிற் பொதிந்துவைத்துள்ளவற்றை வாசகன் அறிந்துகொள்ளல் வரிகளுக்கு அப்பால் வாசித்தலாகும். செய்யுள்களிற் பெரும்பாலும் இவற்றை நோக்கலாம் (வரிகளுக்கப்பால் வாசித்தலிலே சிலவேளைகளிற் சில இடங்களை அழுத்தமாக வாசிக்க வேண்டியதால் வரிகளுக்கு அழுத்தம் கொடுக்க நேரிடும்.)

இடைநிலைமட்ட வகுப்புகளில் உசாவும் திறன், ஆய்வுநோக்கு, விமர்சித்தல், பகுத்தாராய்தல், குறிப்பெடுத்துக்கொள்ளல், பொருள்கொள்ளல், நயத்தல், மொழிநடையை விருத்திசெய்தல், இலக்கண அமைப்பை விளங்குதல், ஒப்பிட்டு நோக்குதல், அறிவைக் களஞ்சியப்படுத்தல் என்பவற்றுக்காக வாசிப்பு இடம்பெறுகின்றது. இதனை வகுப்பறை, நூலகம், வீடு, மூன்று இடங்களிலும் விருத்தி செய்துகொள்ளலாம். வாசிப்புக்கான நாட்டம், ஊக்குவிப்பு, வசதி வாய்ப்பு என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

**வாசிப்பின்மூலம் நடத்தை மாற்றம்:**

வாசிப்பின்மூலம் ஏற்படும் நடத்தை மாற்றத்தை இங்கு கற்றல் என நோக்கலாம். மனித ஆளுமை விருத்தியில் அடிப்படையாக அமைவது சிந்தனை. அறிவு விருத்தி, சிந்தனை மூலமே ஏற்படுகின்றது. இதற்கு வாசிப்பு வாய்ப்பளிக்கின்றது. மாணவர்களின் உயர்உளத் தொழிற்பாட்டிற்கு இட்டுச்செல்வதாக வாசிப்பு அமைகின்றது. கவனித்தல், கற்றல் ஞாபகப்படுத்தல், சிந்தித்தல், பகுத்தல், தொகுத்தல், ஒப்புநோக்குதல் ஆகிய அகத் தொழிற்பாடுகள் இங்கு நிகழ்கின்றன. இவற்றை வாசிப்பு ஏற்படுத்தித் தருகின்றது.

வாசித்தல் ⟶ விளங்கிக்கொள்ளல் ⟶ கிரகித்தல் ⟶ பகுத்தல்


சிந்தித்தல் ⟶ சீர்தூக்குதல் ⟶ நியாயித்தல் ⟶ துலங்கல்

(ஆதாரம்; தமிழ் மொழிகற்பித்தல் முறைகள் பகுதி I தே.க.நி)

வாசிக்கும்போது ஒருவரிடம் கருத்துக்களை உள்வாங்கி எண்ணக்கருவாக்கம் செய்யும் நிகழ்வு ஏற்படுகின்றது. சில விடயங்களை வாசிக்கும்போது அதனோடு தொடர்புபட்ட வகையில் மனவெழுச்சிகளும் இணைக்கப்படு கின்றன. இதனால் ; மனவெழுச்சிச்சமநிலை, நயத்தல் போன்றன உருவாகி; சிந்தனைக்கிளறல் ஏற்படும். கற்பனை உலகிற் சஞ்சரித்தல், அருட்டுணர்வு ஏற்படுதல், போல உணர்வு (Real senstive feeling) என்பனவும் நிகழ்கின்றன. சிறந்த படிமங்களை (கட்புலப்படிவம்)

(கட்புலனாகாப்படிமம் ) விளங்கிக்கொள்ள லும், உருவாக்கிக்கொள்ளலும், அதன்வழி ஆழ்சிந்தனைத்திறனும்; மொழியின் புலமையும் ஒருவரிடம் விருத்திபெறுகின்றது. " எண்ணியது எண்ணியாங்கு" சொல்லமுடியாமை சுருக்கமாகச் சொல்லமுடியாமை; இடக்கரடக்கலாகக் கூறமுடியாமை என்பவற்றுக்குத் தீர்வாகவும் இது அமைகின்றது. மேலும், அறிகைச் செயன்முறையிலே திரிபும் வழுவும் இன்றிச் சரியான முறையிலே உள்வாங்கி வளம்மிக்க மனநலவிருத்திக்கு வாசிப்பு வழி செய்கின்றது.

வாசிக்கும்போது ஒருவர் குறிப்பிட்ட விடயத்தோடு தனது அனுபவங்களையும்; தான் பெற்றுள்ள தகவல்கள், விடயங்களையும் இணைக்கின்றார். இதன்போது அவரது அறிகை அமைப்பிலே மாற்றம் திகழ்கின்றது. அதாவது, விளக்கமற்ற பொறிமுறைத் தன்மையுடைய கற்றல் (மனனம் செய்தல்) விளக்கத்துடனான கற்றலாக மாறி; நீண்டகால ஞாபகத்துக்கு வாய்ப்பளிக்கிறது. ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய தகவல்கள், தரவுகள், இடைநிலைவகுப்பு, உயர்வகுப்பு மாணவர்களுக்கு அதிகமாகும். வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதன்மூலம் இதனை இலகுவாக்கலாம். வாசிக்கும்போது கவனம் ஒரு நிலைப்படுத்தப்படும் சந்தர்ப்பம் அதிகமாகும். இங்கு : கண், மனம், நா, மூன்றும் ஒன்றிணைகிறது. ஏனைய சாதனங்களில் இவை ஒன்றிணையும் போதும் சிந்தனையை இடையிடையே குழப்பும் வாய்ப்புக்கள் காணப்படுவதால் ஒன்றிணைந்த தொடர்புத்தன்மை குறைவடைகிறது . எனவே, வாசிப்பு ஏனைய சாதனங்கள் யாவற்றையும் விட ; கற்றலை வலிதாக்குகின்றது. அறிகைசார் செயன்முறையிலே புலக்காட்சி வழியாக செயற்படு ஞாபகத்தைத் தூண்டி அறிவைக் களஞ்சியப்படுத்தும் செயன்முறையை வாசிப்பு உருவாக்குகின்றது. இதன்படி ஒருவரிடம் தகவல்கள் நிரற்படுத்தப்பட்டு; தேவையான போது மீளப்பெறப்படுகிறது.



வாசிப்பு உள இயக்கத்தோடு உடலியக்கத்திற்கும் உரியது. மொழியோடு சேர்ந்து மெய்ப்பாட்டு உணர்வுகள் வெளிப்படுவதைக் காண்கிறோம். உடலசைவுகள் ; உறுப்புக்களின் தொழிற்பாடுகள் என்பனவும் இங்கு இடம்பெறுகின்றன. வரிவடிவங்களின்மீது கண்களை நகர்த்திச் செல்லல், எழுத்தொலிகளை உச்சரிக்கும்போது நாவசைதல், இதழசைதல், கீழ்த்தாடை அசைதல் என்பன இங்கு குறிப்பிடத்தக்கன. (மௌனவாசிப்பில் கண்ணகர்ச்சி , மெய்ப்பாடுகள் என்பவற்றுக்கே அதிக இடமுண்டு)

ஆரம்பநிலைவாசிப்பில் இருந்து உயர்நிலை வாசிப்பு நிலைக்கு ஒருவர் இட்டுச் செல்லப்படும்போது, அவரிடம் தகவற்பரிமாற்றம் அதிகரிக்கிறது. எண்ணக்கருவாக்கம் மேம்படுகிறது. சமூகவியல், விழுமியங்கள், கலாசாரங்கள், பண்பாடுகள், மனிதமாண்புகள் பற்றிய சிறந்த கருத்துருவாக்கம் ஏற்படுகிறது. இத்தோடு மூளையின் உறுதிப்பாடு பேணப்பட்டு ; ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் சக்தி மேம்பாடுடையதாக அமைகின்றது (மூளைக்கலங்கள் அழிவடையும் தன்மை குறைவு)

**வாசிப்பை ஊக்குவித்தல்;**

- வாசிப்புக்கான சாதனங்களை (நூல்கள், பத்திரிகைகள் போன்றன) அதிகரித்து ; அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல். நூலகப் பயன்பாடு, வகுப்பறை நூலகம் போன்றவற்றை இதற்காக ஏற்பாடு செய்தல்.
- சிறிய நூல்களில் இருந்து பெரிய நூல்களின் வாசிப்புக்கு இட்டுச் செல்லல். இதற்கு எளிமையான, கவர்ச்சியான மொழிநடையுள்ள நூல்களை முதலில் வழங்கி; அவ்வாறே பெரிய நூல்களையும், உயரியமொழி நடையுள்ள நூல்களையும் வழங்கவேண்டும்.
- சுயகற்றற் செயற்பாட்டுக்காக, செயற்பாட்டு அட்டைகளைத் தயாரித்து வழங்குதல், போட்டோ பிரதிகள், பத்திரிகைத் துண்டங்களை வழங்குதல்.
- பாடத்தோடு தொடர்புடைய விடயங்களை மாணவர்களைக் குழுக்களாக அமர்த்தி உரத்து வாசிக்கவிடுதல்
- வயது, தேவை என்பவற்றைக் கருத்திற் கொண்டு பொருத்தமான வாசிப்பு நூல்களை, சாதனங்களை வழங்குதல்.
- பாத்திரமேற்று வாசிக்கவும், உரையாடல் களை வாசிக்கவும் ஊக்குவித்து; வசதி செய்து கொடுத்தல். இதன்போது மெய்ப்பாடு, குறியீடுகளை அனுசரித்தல். தொனி வேறுபடுத்தல், ஒலிவேறுபாடுகளை விளங்கி ; பொருள்புலப்படல், உணர்ச்சிகள் தொடர்புபடுத்தல் என்பவற்றை அவதானிக் கலாம்.
- வினாக்களை வழங்கி விடை கூற அல்லது எழுதச் செய்வதன் மூலமும், ஒரு விடயத்தை வாசித்து மையப்பொருளைக் கூறச் செய்வதன்மூலமும், சுருக்கம் எழுதச்செய்வதன்மூலமும் வாசிப்பு ஆர்வத்தை மேம்படுத்தலாம்.
- ஆசிரியர், தான் வாசித்தவற்றை மாணவர்களுக்குக் கூறி அவர்களையும் வாசிக்கத்தூண்டலாம்.

**முடிவுரை**

வாசிப்பு என்பது, கற்றலிற் பிரதான பங்காற்றுகிறது. நல்ல வாசிப்பு; கல்வியின் பண்புசார் நோக்கங்களையும்,அறிவியலுடனும் இணைகிறது. சுயகற்றலை ஏற்படுத்தி; தனி மனித விருத்தியையும், சமூகவிருத்தியையும் ஏற்படுத்துகின்றது. மானிடப் புரட்சியும். உயர்விழுமியச்சிந்தனை ஆற்றலும், வாசிப்பின் மூலம் நிகழவல்லது, ஆர்வம், சோர்வின்மை, பயனுள்ள பொழுதுபோக்கு என்பவற்றுடன்

மாணவர்களுக்கான பரீட்சையின் வெற்றியையும் வாசிப்புத்தருகின்றது. வாசிப்பு என்பது ஒரு கலாசாரம் ,அது ஏனைய ஊடகங்களாற் பாதிப்படையக்கூடாது. குறுகிய செய்திகளையும், சுருக்கத்தகவல்களையும் சில ஊடகங்கள் வழங்கு வதன்மூலம் ஒருவரின் வாசிப்பு ஆற்றல் குன்றி ;கற்றல் இயலளவிலும் சிந்தனை, மனப்பாங்கு விருத்தியிலும் குறைவடைகின்றார், எனவே, நல்ல சிந்தனை யாளர், கூரிய பரந்த அறிவுடையோர் உருவாக வாசிப்புப்பழக்கம் இன்றியமையாதது

**உசாவியவை**


1. பேராசிரியர் சபா.ஜெயராசா: உளவியல் ஊடு தலையீடு
2. தமிழ்மொழி கற்பித்தல் முறைகள், பகுதி I: தேசியகல்விநிறுவகம், மகரகம.
3. டாக்டர் ந. சுப்புரெட்டியார்: தமிழ் பயிற்றும்முறைகள்



பொ. சத்தியநாதன்

*விரிவுரையாளர்,*

*வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.*

# கட்டுருவாக்கக் கற்றற் சூழலும் மேயரின் அணுகுமுறையும்

**1.0 அறிமுகம்:**

கலைத்திட்ட மறுசீரமைப்பிற்கு அமைவாகப் பல்வேறு கட்டுருவாக்கவாதக் கற்பித்தல் - கற்றல் அணுகுமுறைகள் பற்றிய விளக்கங்களும், முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டுள்ளன. நவீன கற்பித்தல் அணுகுமுறைகளிற் கட்டுருவாக்கம் என்பது கற்றலுக்கான ஒரு தத்துவார்த்தக் கொள்கையாகக் கருதப்படுகின்றது. பொதுவாக ஆங்கிலத்தில் Just DH It எனக் குறிப்பிடுகின்றனர். கற்பவன் புதிய விடயங்கள் தொடர்பான எண்ணக்கருவைத் தனது சுய விளக்கத்தின் அடிப்படையிற் கட்டியெழுப்புவதாகும். (CHbstructivism $ Ibdividuals ouildibg their Hwb ubderstabdibg). மாணவர்கள் புதிய கருத்துக்களை, அறிகையை, விடயங்களைத் தாமாகவே விளங்கிக்கொள்ளும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான ஓர் அணுகுமுறையாகக் கட்டுருவாக்கவாதம் கருதப்படுகின்றது. அதாவது; அவதானிப்பை அடிப்படையாகக் கொண்டு மனிதர்கள் எவ்வாறு கற்கின்றார்கள் என்ற விஞ்ஞான ரீதியிலான கற்கைக் கோட்பாடாகவும் இது கருதப்படுகின்றது. ஜீன் பிஜாயே, எலானோர் டக்வார்த், ஹாவாட் கார்டினர் போன்ற அறிஞர்கள் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடும்போது கட்டுருவாக்கவாதக் கற்றல் என்பது அறிவைக் கட்டுமை (CHbstruct) செய்யும் செயலூக்கமுள்ள நடவடிக்கையே தவிரத் தகவல்களை நெட்டுருச் செய்யும் நடவடிக்கையல்ல எனக் குறிப்பிடுகின்றார்.

கற்பவர் பொருட்களைக் கையாண்டு பெறும் அனுபவங்களினூடும்; அனுபவங்களினால் ஏற்படும் பிரதிபலிப்பு அல்லது தெறிப்பின் மூலமும் வாழ்வியல் நடத்தைகளை அறிந்து கொள்ளும் ஒரு செயன்முறையாகும். இக்கற்றற் செயற்பாடுகளிற் பிரதிபலிப்பு (Reflection), இடைவினையாற்றல் (Interacting), பிரதிபலிப்பும், பகுப்பாய்வும் (Reflection and Analysis) போன்ற செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மாணவர் எதை, எப்படி, எதன் உதவியுடன் கற்கவேண்டும் ஆசிரியர் எவ்வாறு செயற்பட வேண்டும்? ஆசிரியரின் வகிபாகப் பரிமாணங்கள் என்ன? என்பது பற்றிய அறிகை, கற்பவற்றை எவ்வாறு மதிப்பிடுதல் போன்ற செயற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது.



தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்று சக்திமிக்க தொடர்பாடற் சாதனமாகக் கல்வித்துறையில் விளங்கி; சக்திமிக்க கற்றல் கற்பித்தற் சாதனமாகக் கற்பித்தலில் நவீன அணுகுமுறைகளைப் புகுத்தியுள்ளது. மாணவர் கல்வியைப் பொறுத்தளவில் மாணவர்களுக்கான அறிவியல், பாடங்கள் சம்பந்தமான தவல்கள், விளையாட்டுக்கள், பொழுது போக்குகள், பொது அறிவு சம்பந்தமான விடயங்கள், அரசியல்கள், ஆசிரியர்களைப் பொறுத்தளவில் ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள், கல்வியியல் தொடர்பான விடயங்கள், கற்றல் - கற்பித்தல் முறையியல்கள் எனப் பலவிதமான தகவல்களைப் பல்லூடக வடிவிற் பெறக்கூடியதாகவுள்ளது. இணையத் தளங்களிற் பல்வேறு நிறுவனங்கள் தேடலகங்களை உருவாக்கித் தேவையான விடயங்களை இலகுவிற் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

நவீன கல்விக்கோட்பாடுகள், ஞாபகப் படுத்தற் கலாசாரத்திலிருந்து பிரச்சினை தீர்த்தல், பகுத்தாராய்தல், மதிப்பிடுதல் போன்ற

அறிவுமையப் பொருளாதாரத்திற்கு (kbHwledge-oased EcHbHmy) ஏற்றவகையில் நிலைமாற்றம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கற்பவர்தமக்கிடையேயும், ஆசிரியர்களுடனும் வினாக்கேட்டு, கலந்துரையாடி, சவால்களை ஏற்படுத்தி தொடர்பாடலை மேற்கொள்ளச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும். அதாவது கற்றலானது சுய செயல்முயற்சிகளிலும், சமூக இடைவினைச் செயற்பாடுகளிலுமே தங்கியுள்ளது இங்கு முக்கியமானதாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தகவல்களைப் பெரும்பாலும் அனுபவமாக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது மாணவரின் சிந்தனைக்கு இட்டுச்செல்லும்.

'erkibs (1991) என்பவர் மாணவர் பெருமளவு தகவல்களை மிக இலகுவாகவும், விரைவாகவும் கணினியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்மெனவும், வழிப்படுத்தப்பட்ட மாணவர் மையச் செயற்பாடுகள் மூலம் கற்றலில் உயர்வலுவைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிடுகின்றார். மனனம் செய்து கற்பதைவிட; அவதானித்து, சிந்தித்து, விளங்கிக் கற்பதன்மூலம் கற்றற் செயன்முறைகளை வினைத்திறனுள்ளதாக்கிக் கொள்வதற்குப் பல்லூடகப் (Multi Media) பயன்பாடு உறுதுணையாக அமைகின்றது.

கட்டுருவாக்கக் கற்றல் அனுபவங்கள் இடமாற்றப்பட வேண்டியது அவசியமாகும். பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட கற்றற் கோட்பாட்டிற் பிரச்சினையொன்றினைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களைக் கொண்டதாகக் கற்றற் செயலொழுங்குகள் அமைக்கப்படும். இது 3 படிகளினூடு நடைபெறும். 1. நிஜ அனுபவங்களினூடான விஞ்ஞான விளக்கம். 2. காரணங்காணும் நுட்பங்களை விருத்தி செய்தல். 3. சுயவழிப்படுத்தப்பட்ட கற்றல் நுட்பங்களை விருத்தி செய்தல். -இப் படிமுறைகளினூடான செயற்பாடுகளுக்கு நவீன கற்றல் - கற்பித்தல் முறைகள் உறுதுணை புரிகின்றது.

## 2.0 Mayer's கட்டுருவாத போதனாதத்துவ மாதிரி - SGI MHdel(Select, Grgabizeï abd Ibtegrate ) தெரிவு - ஒழுங்குபடுத்தல் - ஒருங்கிணைத்தல் மாதிரி.

கற்றற் சூழலானது ஆசிரியர், சக மாணவர், கற்றல் வளங்கள், கற்பித்தல் வளங்கள், தர உள்ளீடுகள் போன்றவற்றைஉள்ளடக்கியிருக்கும் கற்றல் வளங்களின் இடைவினையாற்றல்களின் அளவில்மாணவரின்கற்றல்அளவுதங்கியிருக்கும் என்பது ஆய்வுகள்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, மாணவருக்கான கற்றற் சூழல், மனித இடைத்தொடர்புகள் (ஆசிரியர், சகபாடிகள்), தொழில்நுட்பக்கருவிசார் வளங்கள், இணையம் சார் வளங்கள், (WEo Oased ResHurces) ஏனைய தர உள்ளீடுகள் போன்றன இங்கு பிரதானமாகக் கொள்ளப்படுகின்றது. அறிவு மாற்றம் அல்லது அறிவுப் பெருக்கமானது வெளிப்படுத்தல், பகிர்தல், மீள்பார்வை, பிரதிபலித்தல், மெருகூட்டுதல், மாற்றியமைத்தல், உள்வாங்குதல் போன்ற சமூக இடைவினைச் செயற்பாடுகள் மூலம் இலக்குகள் அடையப்படலாம். (RHsebshibe % Meister, 1992). கற்றல் இலக்குகளை அல்லது அதற்கு அண்மையான அறிவை அடைவதற்கான நுட்பங்களாகச் சகபாடிகளின் உதவிபெறுதல், ஒத்துழைத்துக்கற்றல், ஆசிரியர் வழிப்படுத்துதல், வினாக்கேட்டல், அமைப்பு வினாக்களை வழங்குதல், செய்துகாட்ட வழிப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் மூலம் விளைதிறனுள்ள வகையில் அறிவைக் கட்டுமானஞ்செய்வதற்கான அல்லது பிரயோகிப்பதற்கான சுயவழிப்படுத்தப்பட்ட கற்றலை வகுப்பறையில் ஏற்படுத்தலாம் (cmelH % Day,1999).

கட்டுருவாத அணுகுமுறையானது தரஉள்ளீடுகளினூடான இடைவினைகள் மூலம் அனுபவம் பெறுவதை வலியுறுத்துகின்றது.

ஆனால், சில சந்தர்ப்பங்களிற் கணினிமூலம் இவ்வாறு செய்வதற்கு முடியாமல் இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மேயரின் மாதிரி மாற்றீடு செய்யக்கூடியதாக அமையும். இம்மாதிரி நேரடியான போதனையையும், வழிகாட்டலையும், எழுத்துவடிவப் பாடக்குறிப்புகளையும், விரிவுரையையும் கொண்டபல்லூடகக்கற்றற் சூழலைஏற்படுத்தும் என Reigeluth (1999) குறிப்பிட்டுள்ளார்.

**3.0 மேயரின் SGI மாதிரியின் முக்கிய அம்சங்கள்:**

மேயரின் தெரிவு- ஒழுங்குபடுத்தல்- ஒருங்கிணைத்தல் மாதிரியானது மூன்று நிலைகளில் விளக்கப்படுகின்றது.

**3.1. கற்றல் என்பது துலங்கல் வலுவூட்டல்.**

தூண்டி-துலங்கல்கள் மூலம் இயலுமைகளை வலிதாக்கல் அல்லது நலிவாக்குதல் செயற்கிரமங்களின் அடிப்படையிற் கற்றல்-கற்பித்தற் பொறிமுறை நிகழ்கின்றது.

கற்பவரின் வகிபாகம்: ஊக்குவிப்பு-தண்டனைகளின் அடிப்படையில் அமையும்.

கற்பிப்பவரின் வகிபாகம்: ஊக்குவிப்பு-தண்டனைகளை ஒழுங்குபடுத்தி நிர்வகித்தல்.

போதனை நுட்பங்கள்: தூண்டி, துலங்கல், பின்னூட்டல், ஆய்ந்து பயிற்சிப்படுத்தல் போன்ற பொறிமுறைகளை ஒழுங்குபடுத்தி ஏற்படுத்துதல்.

கற்றல்: செயலறு (assive) நிலையில் நடைபெறும்.

மாணவர் ஞாபகப்படுத்தல் அல்லது மனனம் செய்தல். நடத்தைகள் செல்வாக்குப்பெறும்.

**3.2 கற்றல் என்பது அறிவைப் பெற்றுக்கொள்ளுதல்**

கற்பவரின் வகிபாகம்: தகவல்கள் நீண்டகால ஞாபகப்படுத்தல் அடிப்படையில் அமையும். கற்பிப்பவரின் வகிபாகம்: தகவல்களைப் புத்தகங்களில் இருந்து அல்லது விரிவுரைமூலம் வழங்குதல்.

போதனை நுட்பங்கள்: பாடப்புத்தகங்கள் மூலம் அல்லது விரிவுரைமூலம் அறிவை அல்லது தகவல்களை நேரடியாகக் கற்பவருக்கு வழங்குதல் அல்லது கடத்துதல்.

கற்றல்: செயலறு (assive) நிலையில் நடைபெறும். மாணவர் ஞாபகப்படுத்தல் அல்லது மனனம் செய்தல். நடத்தைகள் செல்வாக்குப்பெறும்.

**3.3 கற்றல் என்பது அறிவைக் கட்டுரு செய்தல்**

அறிவைக் குறுகியகால ஞாபகம்மூலம் செயலுறுநிலையிற் கட்டுருச் செய்தல் என்ற அடிப்படையிற் கற்றல் அமையும்.

கற்பவரின் வகிபாகம்: புலன்களின்மூலம் உணர்ச்சிகளை உருவாக்குபவர்.

கற்பிப்பவரின் வகிபாகம்: கற்றல் இலக்குகளை அடைவதற்கான வழிகாட்டியாகவும், கற்பதற்குத் தானே பொறுப்பு என்பதை உறுதிப்படுத்துபவராகவும் , வழிப்படுத்துபவராகவும் இருப்பார்.

போதனை நுட்பங்கள்: கற்போருக்கும் கற்றல் வளங்களுக்குமிடையே (Learning Resource) அர்த்தமுள்ள இடைவினையை உருவாக்குதல், கற்பவர்-தகவல்களைத் தெரிதல், ஒழுங்குபடுத்தல், இடைவினைப்படுத்தற்செயன்முறைக்கு வசதிப்படுத்துதல்.

கற்றல்: செயலுறு (ictive) நிலையில் கட்டுருச் செய்யப்படும். கற்பவர் பல்வேறு அறிகைத் தொழிற்பாடுகளை மேற்கொண்டு கற்றுக்கொள்ளுவார்.

மேலும் மேயர் (1999) செயல்நிலைக் கற்றலை இரண்டு வகையாக நோக்குகின்றார். 1. நடத்தைசார் செயலுறுக்கற்றல் - நேரடிப் புலன்வழி உணர்வில்லாமற் செய்வதன்மூலம் ஈடுபட்டுக்கற்றல். 2. அறிகைசார் செயலுறுக் கற்றல் - புலன் வழியினூடு சுயமாகச் சிந்தித்து, உணர்வுடன் ஈடுபட்டுக்கற்றல். அத்துடன்

பிரச்சினை தீர்த்தல் கற்றல் அணுகுமுறையில் 3 முன்-தேவைகளைக் குறிப்பிடுகின்றார்.

1. திறன்: அறிகைத் தொழிற்பாடு, தெரிதல், ஒழுங்குபடுத்தல் - தகவல்களை ஒருங்கிணைத்தல்.
2. மெற்றா திறன்: பேரறிகை அல்லது சுய-ஒழுங்குபடுத்தற் செயன்முறை, திட்டமிடல், இணைபுபடுத்தல், நெறிப்படுத்தல்.
3. விருப்புநிலை: கற்றலுக்கு ஊக்கப்படுத்தும் மனப்பாங்கு தொடர்பான காரணிகள்.

**4.0 மேயரின் SGI கோட்பாடு மாதிரியில் உள்ள அம்சங்கள்**

4.1. கோட்பாட்டு ரீதியான நோக்கு

கட்டுருவாக்கம்சார் கற்றல். அதாவது கற்பவர் செயலுறுநிலையிற் குறுங்கால ஞாபகத்தைப் பயன்படுத்திக் கற்றல் சூழமைவில் உள்ள பொருட்களுடனும், நீண்டகால ஞாபகத்தைப் பயன்படுத்திக் குறித்த விடயம் தொடர்பாக உள்ள முன்னறிவையும் பயன்படுத்தி அறிவைக் கட்டுருச் செய்தல். இது கட்டுருவாக்கம்சார் அணுகுமுறையாகக் கருதப்படுகின்றது.

4.2. போதானாத்துவ நோக்கு: பயன்தரு தகவல்களை அறிந்துகொள்ளக் கற்பவருக்கு உதவும். கற்றல் வளங்களின் பொருத்தப்பாட்டை அறிந்துகொள்ள உதவும். கற்றல் வளங்களின் மூலம் பெறப்படும் அறிவு முன்னறிவுடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் என்பதை அறிந்துகொள்ள உதவும்.

4.3. அமுலாக்கல் நோக்கு:

போதனாத்துவ கற்றல் விடயங்களை இலகுவில் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும். தெரிதல்-பாடநூலின் விடயப்பகுதி, விரிவுரையாற்றவேண்டிய விடயம், ஊடகங்களின் தெரிவு (பல்லூடகம்). கற்றல் எழுவினாக்கள்மீது தெரிதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் போன்ற முன்னறிகைத் தொழிற்பாடுகள்மீது கவனம் குவியப்படுத்தப்படுகின்றது.

4.4 கற்பித்தல் முறைகள் பற்றிய நோக்கு.

4.4-1 கற்றல் வளங்களைத் தெரிவு செய்தல்

பொருத்தமான தகவல்மீது குவியப்படுத்தல். அதாவது வெவ்வேறு விதமான வடிவங்களில் கண்ணகர்ச்சிக்கு ஏற்றவகையில் எழுத்துருக்களை வடிவமைத்தல் (தடித்த எழுத்து, நிற எழுத்து, கீழ்க்கோடு, உட்செலுத்தல், புள்ளியிடல், இலக்கமிடல் போன்ற) பொருத்தமான, தொடர்புள்ள வினாக்களை வினாவுதல், கற்பவரை வினாவத் தூண்டுதல்.

4.4-2 தொகுப்பை வழங்குதல் :

தேவையற்ற தகவல்களை வழங்குவதைக் குறைத்தல்.

4.4-3 கற்றல் வளங்களை ஒழுங்குபடுத்தல்.

கற்றற் சூழமைவைப் பொருத்தமாக, தர்க்கரீதியிற் சிந்திக்கக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்த உதவுதல். விடயங்களை ஒப்பிடுதல், வகைப்படுத்தல், அட்டவணைப் படுத்தல், பொதுமைப்படுத்தல் போன்ற செயன்முறைகளினூடு தொகுத்தல். பொருத்த மான தலைப்பிடல், கலைச்சொற்களைக் குறிப்பிடுதல், வரைபுகளாக, படவுருக்களாக விடயங்களைத் தொகுத்தல்.

4.4-5 கற்றல் வளங்களை ஒருங்கிணைத்தல்.

விடயங்களைத் தலைப்பிட்டுப் படவுருக்களாக வெளிப்படுத்தல், அசையும் படங்களை வழங்குதல். விரிவாக்குதல், உதாரணங்கள்மூலம் தெளிவுபடுத்தல், விரிவாக்க வினாக்களையும், நுட்பங்களையும் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இங்கு முக்கியமானதாகும்.

விளைதிறனுள்ள கற்றல் - கற்பித்தலுக்கான முறையியல்களையும் நுட்பங்களையும் விருத்தி செய்வதில் அழுத்தம் கொடுப்பதில் மேயரின் அணுகுமுறை முன்னிலை வகிக்கின்றது. கல்வி

நோக்கங்களை வினைத்திறன் உள்ள வகையில் உண்மையாக்குவதற்கு வேண்டிய கற்றற்சூழலை ஒழுங்கமைப்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்கும், கற்றல் விளைவுகளை அளவிடுவதற்கும், வடிவமைப்பதற்கும் வேண்டிய வழிமுறைகளைத் தருகின்றது. கற்றற் சூழலமைவிற் சாதனங்களின் தெரிவுமுறைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி; கற்றலுக்கு உள்ளீடு, வெளியீடு, செயற்கிரமத்தின் உருவாக்கம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஹிலாட் ஜேஸன் (Cillard Jasion) தகவல்களை ஊடுகடத்தல், பங்கேற்கும் முறைகளைக் கைக்கொள்ளல், குறித்த திறன்களின் பயிற்சிக்கு உதவுதல், பின்னூட்டல் வழங்குவதில்ற் பங்களிப்புச் செய்தல் போன்ற செயற்கிரமங்களிற் கற்பிப்பவரின் பங்களிப்பை வலியுறுத்துகின்றார். அதிக மாணவர்களால் அடையப்படக் கூடியதான தேவையைக் கொண்டிருத்தல், கற்றற் சாதனங்களின் வீச்சை அதிகரித்துக் கொள்வதற்கு அவர்களால் இயலக்கூடியதாய் இருத்தல். சுதந்திரமான கற்றலுக்கான சிறந்த வாய்ப்பினை விரும்புதல். ஆகக்குறைந்த வரையறுக்கப்பட்ட மாணவர்களின் துலங்கல்களையாவது அனுமதித்தல் போன்ற விடயங்களில் மேயரின் அணுகுமுறை குவியப்படுத்தப்படுகின்றது.

### 5.0 முடிவுரை :

Biggs (1999) என்பவரது ஆய்வின்படி வெவ்வேறு வகையான கற்றல் உதவிகளையும், உத்திகளையும், கற்றற் செயற்பாடுகளையும், சுயகற்றற் செயற்பாடுகளையும் மாணவர் தாமாகச் செயற்படுத்தக் கூடிய வகையில் வழங்குவதற்குத் திட்டமிடுவதன்மூலம் வினைத்திறனுள்ள கற்றல் விளைவுகளை எதிர்பார்க்கலாம். கற்றல் பற்றி Cerribgtion % Gliver ஆகியோர் (2002) குறிப்பிடுகையிற் கற்றற் சூழலானது கற்பவருக்குப் பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகளையும், உண்மைக்குக் கிட்டிய அனுபவங்களை அல்லது உண்மை அனுவங்களைப் பெறக்கூடியதாக அமைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார்.

மாணவர்களது கல்வித் தேவையையும், பண்புகளையும் அடையாளம் காண்பதும்; ஆய்வுசெய்தலும். குறிப்பான வகுப்பறை நோக்கங்களைவரையறுத்தலும்நடத்தைவடிவில் அவற்றை விதந்துரைத்தலும். பொருத்தமான தொடரொழுங்கில் அறிவுறுத்தலுக்கான உள்ளடக்கங்களைப் பகுத்தாராய்தலும், ஒழுங்கமைத்தலும். கிடைக்கக்கூடிய கற்றல் - கற்பித்தல் வளங்களையும், சாதனங்களையும் அடையாளங்காணல். உபதொகுதிகளான மாணவர்கள், ஆசிரியர்கள், கற்றல்-கற்பித்தற் சாதனம், அறிவுறுத்தலின் உள்ளடக்கம், முறையியல் என்பவற்றுக்கிடையிலான இடைவினைத் தொடர்பின் போக்கினை அடையாளம் காணல், மாணவரது நடத்தை மாற்றங்களின் அல்லது மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் வகுப்பறைக் கற்பித்தலின் வினைத்திறனை மதிப்பிடுதல் போன்ற செயற்கிரமங்கள் கற்பவர், கற்பிப்பவர்களுக்கிடையிலான வினையாற்றலை அதிகரிக்கச் செய்ய மேயரின் மாதிரியின்மூலம் வெளிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

### துணை நின்றவை:

Aharwal.J.C (2000), Essential of Educational Techmology
Kumar.K.L (2008), Educational Technology
paramanantham.P (2008)/ Constructivism
Moe-Teaching-Learning Methods (2009) Traineers manual
Mayer, S.H (1999)/ Designing instruction for constructivist learning. Volume - II p. 141-160. Mahwah, NJ: Lawrence Erloaum Associates.
Reigeluth, C.M. (1999) (Ed.), Instructional - design theories and modeld : An newparadigm of instructional theory, Volume II.

சுப்பிரமணியம் பரமானந்தம்
*ஆசிரிய கல்வியியலாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.*

# விழுமியம் ஒரு பன்முகப்பார்வை

விழுமியம் என்பது value என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழ் வடிவம் ஆகும். value என்பது தமிழில் பெறுமானம், பெறுமதி. மதிப்பு என்ற அர்த்தங்களில் நோக்கப்படுகின்றது.

விழுமியம் என்பது பற்றி அறிஞர்கள் பல்வேறு கோணங்களில் விளக்கம் கொடுத்துள்ளனர் sitram (சிற்றம்) என்பவர் மனிதனின் செல்நெறியைக் காட்டும் வெளிச்சம் என்கின்றார். prosser (புறோசர்) என்பவர் கலாசாரத்தின் அடிப்படை அம்சமே விழுமியம் எனக்குறிப்பிடுகின்றார். சோக்கிரட்டீஸ் விழுமியங்களை ஒழுக்கத்துடன் இணைத்து அதுவே அறிவு என்கின்றார் (virtue is knowledge) சேர். ஐசாக்நியூட்டன் சமூகமரபு என்பது நாகரிகஏணி. எனது முன்னோரைக் காட்டிலும்; நான் அதிக தொலைவு காண முடிந்தமைக்குக் காரணம் அவர்களின் தோள் மீது நின்று நான்பார்த்ததே காரணம் என்கின்றார். தோள் என்பது சமூகமரபும் விழுமியமும் இணைந்தது எனலாம் எனக் குறிப்பிடுகின்றார்.

மனித விழுமியங்கள் பிரதானமாக இரண்டு வகைப்படும்

*அடிப்படை விழுமியங்கள் (Basic values)

*சார்பு விழுமியங்கள் (Relative values)

அடிப்படை விழுமியங்களுள் ஆன்மீக ஒழுக்க விழுமியங்கள் உள்ளடக்கப்படுகின்றது. சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அகிம்சை என்பவையே அவையாகும்.

சார்பு விழுமியங்கள்: - இது ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்கின்ற சமுதாய, கலாசார, பொருளாதார வரம்புகளுக்கு உட்பட்டவையாக வாழ்வதற்காகப் பின்பற்றி வருபவையாகும்.

**விழுமியம் சார் கல்வி:**

கல்வி என்பதன் ஆங்கிலப்பதம் Education என்பதாகும். இதன் மூலச்சொல் லத்தீன் மொழியிலுள்ள Educare என்பதாகும். அதாவது இது ஒருவரின் குணப்பண்பு விருத்தியைக் குறிப்பதாகும். இந்தியக்கல்விசீர்திருத்தம்பற்றி சமர்ப்பித்த இராதாகிருஸ்ணன் ஆணைக்குழு கல்வியின் நோக்கம் பற்றிக் குறிப்பிடும்போது "விஞ்ஞான ரீதியாகவும் ஆராய்ச்சிபூர்வமாகவும் வாழ்வின் விழுமியங்களை வழங்குவதும் கல்வியின் நோக்கமாகும் எனக் குறிப்பிட்டுள்ளது. மேலும் ஐக்கிய அமெரிக்காவில் உருவாக்கப் பட்ட காங்னேஜ் ஆணைக்குழு அறிவியலையும் விழுமிய வளர்ச்சியையும் கல்வியின் முக்கிய பணியாகக் குறிப்பிடுகின்றது. எமது நாட்டிலும் கல்விமூலம் அறிவு, திறன், மனப்பாங்கு விழுமியம் வளர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. மேலும் ஒரு சமூகத்தினுடைய விழுமியங்களை நிர்ணயிப்பதும் நெறிப்படுத்துவதும், மாற்றியமைப்பதும், கல்வியினாலும் சமயத்தினாலும் செய்யப்படுகின்ற விடயம் ஆகும். எனவே ஒரு சமூகத்தின் விழுமியங்களை நிர்ணையிக்கும் காரணியாக அமைவது கல்வியும் சமயமும் ஆகும்.



விழுமியங்கள் தத்துவரீதியாக பல்வேறு வகையாக வகுக்கப்படக் கூடியவை. இருப்பினும் நடைமுறையில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு அற்றவை என்று கூறமுடியாது. ஒருவகை விழுமியம் மற்றவகையுடன் தொடர்பு கொண்டிருப்பதோடு ஒன்று மற்றையதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே தனிநபர் விழுமியம் என்பது தனிநபர் வளர்ச்சிபெற உயர்ச்சி பெறத் துணைநிற்கின்றது. இவை உண்மை, நேர்மை, சுத்தம், அர்ப்பணம் ஆகிய குணப்பண்புகள் பற்றியதாக அமைகின்றது.

சமூக விழுமியம் என்பது ஒருசமூகத்தின் ஒருமைப்பாட்டிற்கும் விருத்திக்கும் வழிகாட்டியாகவும் நெறிப்படுத்துவாதகவும் அமைகின்ற விழுமியங்கள் ஆகும். அவை சமூக ஒற்றுமை, சமூகநலன் பற்றிய உணர்வு , நீதிக்கான செயற்பாடு, பொறுப்புணர்வுடன் செயல் ஆற்றல் என்பன சமூகவிழுமியங்களுள் சிலவாகும். ஆன்மீக விழுமியங்கள் இறைவன் பற்றிய கடமையும் தொடர்பும் குறித்து நிற்பவையாக உள்ளன.

**மாணவர்கள் மத்தியில் அருகிவரும் விழுமியச் செயற்பாடுகள்:**

இன்றைய இளம் சந்ததியினரிடம் விழுமியம் அற்றதன் காரணமாகவே தற்கொலை, களவு கற்பழிப்பு, பொய், மோசடி இடம்பெறுகின்றது. இவர்களிடம் குறைந்து வரும் விழுமியங்களை மூன்று வகையாக நோக்கலாம்.

- சமூக விழுமியம்
- ஆன்மீக விழுமியம்
- தனிநபர் விழுமியம்

அருகிவரும் சமூக விழுமியம்:

- பெரியோர் முதியோர் மதிக்கப்படாமை
- பொறுப்பின்மை
- கடமை உணர்வு இன்மை
- பிறர் கருத்துக்கு மதிப்பழிக்காமை
- குடும்ப வாழ்வின் முக்கியத்துவம் உணரப்படாமை
- தமிழ், கலை, கலாசாரத்தைக் குறைவாக மதிப்பிடும் தன்மை
- மாணவர்களிடம் மேலோங்கும் நவ நாகரிகப் போக்கு
- வரட்டுக் கௌரவம்
- போன்றவையைக் குறிப்பிடலாம்.

ல் அருகி வரும் ஆன்மீக விழுமியம்: -

- பிறரன்பு குறைவு
- பொறுமையின்மை
- நன்றியின்மை
- பிறநலனில் அக்கறையின்மை
- சமயவாழ்விலும் சமய விடயங்களிலும் ஈடுபாடு காட்டாமை

அருகிவரும் தனிநபரிடம் காணப்படும் விழுமியம்: -

- ஒழுக்கமின்மை
- நேர்மையின்மை
- சந்தேக மனநிலை
- ஆய்வுகளில் ஈடுபடுவதற்கு ஆர்வமில்லாமை
- புதிய நுட்பங்களைத் தேடியறியும் நாட்டமின்மை

போன்றவை அருகி வருவதைக் காணமுடிகிறது. எனவே மாணவர்களிடம் விழுமியத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று பார்க்கும்பொழுது வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டின் மூலமும், கற்பித்தலை மேற்கொள்கின்ற ஆசிரியர்கள் மூலமும் இணைபாடவிதான செயற்பாடுகள் ஊடாகவும் கல்வி வழிகாட்டல் ஆலோசனை மூலமும் விருத்தி செய்யமுடியும்.

**ஆசிரியரும் விழுமியமும்:-**

ஆசிரியன் ஒருவன் தன்னை நல்லாசிரியனாக சமூகத்திற்கான மாற்று முகவராக உருவாக்கிக்கொள்வதனால் தன்னை ஒரு விழுமியபுருஷராக ஆக்கிக்கொள்ளமுடிகின்றது. அப்போதுதான் அவர் மாணவர்களை நன்னெறிப்படுத்துவதற்குரிய தகுதியைப் பெற்றுக்கொள்கின்றார். இதன் அடிப்படையில் ஆசிரியர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய விழுமியப்பண்புகளாவன.

- புலம்சார் அறிவுத்தேடல்
- வாழ்நாள்முழுவதும் கற்றல்
- சிந்தனை, சொல், செயல் யாவும் மாணவர்கள் நலன்கருதியதாதல்
- மாணவர்களோடு அன்னியோன்னிய உறவு
- ஒழுக்கம் நிறைந்தவராக இருத்தல்
- தாய், தந்தை நடிபங்குகளை ஏற்றல்
- அன்புடன் கூடிய கண்டிப்பு
- முன்மாதிரியாக இருத்தல்

**விழுமியக் கல்வி மேம்பாட்டில் பாடசாலையின் பங்கு:-**

விழுமியக் கல்வியைப் பாடசாலை என்ற நிறுவனம் அளிக்க வேண்டியது அவசியம் ஆகும். பண்டைய குரு - சிஷ்யமுறைக்கல்வியில் ஒழுக்கம், குருபக்தி இருந்தது. ஆனால் இன்று மாறிவரும் உலகிற்கு ஏற்ப மாணவர்களும் மாற்றம் பெற்றுவருவது தவிர்க்க முடியாத விடயம் ஆனாலும்; அவர்களிடம் தீயபழக்கங்களைத் தவிர்த்து சமத்துவம், சகோதரத்துவம் ஜனநாயகம் நாட்டின் முன்னேற்றம் அர்ப்பணிப்பு பிறர் உரிமைகளை மதித்தல் போன்ற சிறந்த விழுமியங்களை பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்த வரையில் எழுத்தறிவு வீதம், பாடசாலைக் கல்வி வீதம் அதிகரித்துள்ள போதும் பண்புசார் விருத்தி எதிர்பார்த்தளவு ஏற்படவில்லை என கல்வியமைச்சின் ஆய்வு ஒன்று வெளிப்படுத்திநிற்கின்றது. அதற்கான காரணத்தை நோக்கும் பொழுது நமது நாட்டுக்கல்வி முறையானது பரீட்சையை மையமாகக் கொண்டு பரீட்சையில் தோர்ச்சியைக் கருத்தில்கொள்ளாது அறிவை அளப்பதினால் திறமைசாலிகள் மீது மாத்திரம் கவனம் செலுத்தும் போது அநேகர் புறம் தள்ளப்படுகின்றனர் இதனால் போட்டித்தன்மைகளும், ஏற்றத் தாழ்வுகளும் ஒழுக்கச் சீர்கேடுகளும் உண்டாகின்றது. இந்நிலைமை பாடசாலைகளில் விழுமியக்குறைவை வெளிக்காட்டுகின்றது. யுனெஸ்கோவின் ஆய்வு ஒன்றின் மூலம் பண்பாட்டுக் கல்வி விருத்தியின்மையைச் சுட்டிக் காட்டி பண்புநல மனப்பாங்கு கட்டியெழுப்பபட வேண்டியதை வலியுறுத்துகின்றது.

எனவே பிள்ளை பூரணமனிதனாக வளர அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி, போசாக்கு விருத்தி, அன்பு வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி இடம்பெறவேண்டும். இவை அனைத்தும் விழுமியங்களுடன் தொடர்புடையன. இந்த ஐந்து வளர்ச்சியும் ஏற்படும் பொழுது ஆளுமை மிக்க பூரண மனிதன் உருவாகின்றான் எனவே பாடசாலை விழுமிய மேம்பாட்டில் தமது கவனக்குவிப்பைச் செலுத்தி நல்மாணவர்களை உருவாக்கி சமூகத்திற்கும் நாட்டிற்கும், தேசத்திற்கும் கையளிப்பு செய்ய வேண்டும்.

**உசாவியவை:-**


சந்தானம். எஸ். கல்வியின் தத்துவ சமுக அடிப்படைகள் 1987 ஏசியன் அச்சகம் - சென்னை

பிலேந்திரன். ஞா. விழுமியக் கல்வி 1996 கிறிஸ்தவமன்றம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி

குமாரசுவாமி. சோ. மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் 2000 ராஜிவெளியீடு - இலங்கை

கோபாலகிருஸ்ணஐயர். ப. மனித மேம்பாட்டில் கல்விசார் விழுமியங்கள். கல்வியியலாளன் 2003 வெளியீடு I

இராசநாயகம். ஜெ. பாடசாலைகளில் இணைபாடவிதானச் செயற்பாடுகளினூடாக மனித விழுமிய மேம்பாடுகளைக் கற்பித்தல். கல்வியியலாளன் வெளியீடு I

ஆனந்தராசா. மு. விழுமியக் கல்வியும் சமூக ஏற்பிதமும் சொக்கன் நினைவுப் பேருரை - 2006 யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

**திருமதி ஞானசக்தி. கணேசநாதன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

# மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலில் நிழல் பொம்மலாட்ட அரங்கு

முன்பள்ளி வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரை மகிழ்ச்சிகரமான கற்றல் - கற்பித்தல் சாதனமாக பொம்மலாட்ட அரங்கு பயன்படுத்தப்படுகின்றது. குழந்தைகள் மத்தியில் மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தும் பொம்மலாட்டத்தின் மூலம் சிக்கல் நிறைந்த சில கொள்கைகளை மாணவர் மனதில் தெளிவாகப் பதிய வைக்க இதனைப் பயன்படுத்தலாம். இன்று தொலைக்காட்சி நிகழ்வுகளிலும் சினிமாப் படங்களிலும் கூட பொம்மலாட்ட அரங்கு சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

முன்பள்ளிப் பராயத்தில் பார்த்தல், கேட்டல், உணர்தல் போன்ற விருத்திகள் ஏற்படுகின்றன. பேச்சில் வியக்கத்தக்க விருத்தி ஏற்படுகின்றது. ஏனைய மொழிகளையும் இலகுவாக உள்வாங்கக் கூடிய திறன்கள் நன்கு விருத்தியடைகின்றது. இவ்வளர்ச்சிகளை மனங்கொண்டு அனைத்துத் திறன்களையும் ஒருங்கிணைத்து விருத்தி செய்ய பொம்மலாட்டம் சிறந்த ஒரு கற்பித்தல் ஊடகம் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும் அத்துடன் புத்தாக்கம், பின்னூட்டல், மீள்வலியுறுத்தல் ஆகியன பொம்மலாட்டத்தின் உள்ளார்ந்த பண்புகளாகும்.


கற்றல் - கற்பித்தலுக்கு உதவும் பொம்மலாட்ட அரங்க வகைகள் பின்வருமாறு அமைகின்றன.

1) விரற் பொம்மை
2) கையுறைப் பொம்மை
3) வெட்டுருப் பொம்மை
4) தண்டுப் பொம்மை
5) அரங்குப் பொம்மை
6) நூற் பொம்மை
7) நிழற் பொம்மை எனப் பலவகைப் படுகின்றன.




ஒரு ஆசிரியரால் கற்றல் - கற்பித்தல் முயற்சியின் போது வகுப்பறையில் மிக இலகுவாக பயன்படுத்தக்கூடியதாக நிழற் பொம்மலாட்ட அரங்கு அமைகின்றது. வெள்ளைத் திரையினூடாக இவ்வகைப் பொம்மைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. தொலைக்காட்சிப் பெட்டிகளில் கறுப்பு வெள்ளைப் படத்தைப் பார்ப்பது போன்ற உணர்வு மாணவர்களுக்கு ஏற்படுகின்றது. தொலைக்காட்சி நிகழ்வுகளில் அதிக நாட்டம் உள்ள மாணவர்களுக்கு இவ்வகை அமைப்பைக் கொண்ட பொம்மலாட்ட அரங்கு மிகவும் ஈர்க்கும் தன்மை கொண்டதாக அமையும். மேற்கூறிய ஏனைய பொம்மலாட்டங்களில் வர்ணக் கவர்ச்சியைக் காண்கின்ற போதும் நிழற் பொம்மலாட்ட அரங்கின் மூலம் உயிர்த்துடிப்பையும் கலையம்சத்தையும் காணமுடியும். பொதுவாக வெட்டுருப் பொம்மைகளையே நிழற் பொம்மைகளாகப் பயன்படுத்த முடியும்.

தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றின் வெள்ளைத் திரை அமைப்பின் வெள்ளைத் துணி ஒன்றினை 4 புறமும் தொய்வற்ற நிலையில் இறுக்கமாக இழுத்துக் கட்ட வேண்டும். கட்டப்படும் துணி காரிக்கன் துணியாக அமைவது சிறப்பானது. செவ்வக வடிவச் சட்டகமான வெள்ளைத் துணியின் நான்கு பக்கங்களையும் சுற்றி வேறு ஒரு நிறத்திலான துணியைக் கட்ட வேண்டும்.



நிழற் பொம்மையின் திரை அமைப்பு பெரும்பாலும் வகுப்றையில் இயற்கையாகக் கிடைக்கும் சூரிய ஒளியைப் பயன்படுத்துவதாக அமைவது சிறப்பு. அதாவது திரையின் பின்பாக உள்ள ஆற்றுகைப் பகுதியிலிருந்து பார்வையாளர் அல்லது மாணவர் பகுதியை நோக்கி இயற்கை ஒளி பாயக்கூடிய வகையில் நிழற் பொம்மை அரங்கை அமைப்பது சாலச் சிறந்தது.



சூரிய ஒளியின் மூலம் ஆற்றுகைப்படுத்த முடியாத இருளான வகுப்பறையாயின் திரைக்குப் பின் ஆற்றுகை நிகழ்விடத்திலிருந்து மின்சார ஒளியை அல்லது டோர்ச் லைட் ஒளியைப் பயன்படுத்துவதன் மூலம் நிழற் பொம்மைகளைத் துல்லியமாக மாணவர்களுக்குக் காண்பிக்கலாம்.




வசதியான, வகுப்பறைகளில் நிழற்பொம்மலாட்ட அரங்கினை நிரந்தரமாகவே அமைத்துக்கொள்ளலாம். அதிக செலவில்லாமலே கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளலாம். முன்பள்ளி மற்றும் ஆரம்ப வகுப்பறைகளுக்கு இவை மிகுந்த பயனளிக்கும்.





நிழற்பொம்மை அரங்கு அமைப்பிற்கு அடுத்ததாக ஆற்றுகையாளர்களாகிய நிழற்பொம்மைகளை ஆக்குவது தொடர்பாக நோக்கலாம். எழுத்துக்கள், விலங்குகள், பறவைகள், மரங்கள், மனித உருவங்கள், போக்குவரத்துச்சாதனங்கள், கடல்வாழ் உயிரினங்கள் என்பவற்றை வரைந்து அல்லது, ஏற்கனவே உள்ள உருவங்களைப் பிரதி செய்து,

உருவங்களை மட்டும் வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.




உருவங்கள் தடித்த மட்டைகளில் (Box board) அமைய வேண்டும். எழுது தாள்களில் வரைந்து பின் தடித்த மட்டைகளில் ஒட்டலாம். அல்லது நேராகவே தடித்த மட்டைகளில் உருவங்களை வரைந்து வெட்டி எடுத்துக் கொள்ளலாம். கத்தரிக்கோலுடன் கடதாசிக்கத்தியையும் பயன்படுத்துவது வெட்டி எடுக்க இலகுவாக அமையும்.

ஆக்கப்பட்ட வெட்டுரு பொம்மைகளை முழுமையாகவும் சில உருவங்களைப் பகுதியாகவும் பிரித்து உரியவாறு இணைத்தும் ஆக்கலாம். பகுதியாக்கப்பட்ட உருவங்கள் அசைந்து செல்வதாக, ஒடிச் செல்வதாக அதாவது தலையை ஆட்டிக் கொண்டும், இறக்கைகளை அடித்துப் பறந்தும் செல்வதாகவும் அமைக்க முடியும். உடற்பகுதிகளை இணைப்பதற்கு கூறடி piece pin ஆணிகளைப் பயன்படுத்தலாம்.




இது போலவே எழுத்துக்கள் (மும்மொழிகளிலும்) அறிமுகத்தினை இவ்வரங்கினூடாகச் சிறப்பாக செயற்படுத்த முடியும். அரவு (h) சுழிகள் ( p,P,e) ஒற்றைக் கொம்பு (b) இரட்டைக் கொம்பு (n) சங்கிலிக் கொம்பு (i) புள்ளி (.) என்பனவற்றைச் சேர்ப்பதனால் எழுத்துக்களின் ஒசை, கருத்துக்கள் வேறுபடுவதனையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதுடன் அவர்கள் மனதில் நன்கு நிலை நிறுத்த இச்செயற்பாடுகள் மிகுந்த பயனளிக்கும்.




நிழற்பொம்மை அரங்கின் பாத்திரங்களான எழுத்துக்கள் பறவை, விலங்கு, மனித உருவங்கள் போன்றன அமைத்து முடிந்தவுடன் அவற்றைக் காட்சிப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டும். திரையுடன் இணையும் நிழற்பொம்மைகளின்முன்பகுதிக்குஇருபக்கமும் கறுப்பு நிறமுடைய தடித்த தாளை ஒட்டுதல் வேண்டும். இத்தாள் கறுப்பு கிறேப்பேப்பர் எனவும் அழைக்கப்படும். வெள்ளைத்திரையினூடாகக் கறுப்பு நிறம் துல்லியமாகப் புலப்படும். எனும் காரணத்தினாலேயே கறுப்புத்தாள் ஒட்டப்படுகின்றது.

உருவின் ஆற்றுகையாளரை நோக்கிய பகுதியிலேயே தடி, கம்பியினை இணைத்தல் வேண்டும். ஒவ்வொரு உருவிற்கும் ஒவ்வொரு தடியைஇணைப்பதைவிட உருக்களின்பின்பகுதியில் தடியினைச் செலுத்தக்கூடிய நிரந்தரமான இரும்பினை அமைத்தல் எடுத்துச் செல்வதற்கும்,


கொண்டு வருவதற்கும் இலகுவாக அமைந்து விடும்.



உருவங்களுடன் இணைக்கும் தடியானது செவ்வகக், கனவுரு வடிவில் அமைவது மிகப் பொருத்தமானது. இதனைச் சாதாரணமாகத் தச்சுவேலைத்தலத்தில் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம். 2உஅ அகலம் 1/2 உஅ தடிப்புடைய தடிகள் வேலைத்தலத்தின் பயன்பாடின்றி விறகுத் தேவைகளுக்காக அப்புறப்படுத்தப்பட்டிருக்கும். இத்தடிகள் உருவங்களை அசைய விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

நிழற்பொம்மை அரங்கிற்கான பொம்மைகள் தயாரான நிலையில் ஆற்றுகைக்களத்தில் அவற்றின் செயற்பாடுகளை நோக்குவோம். தடியுடன் இணைக்கப்பட்ட பொம்மைகளை அரங்கின் வெள்ளைத்துணியுடன் அழுத்திப் பிடிக்க வேண்டும். ஆற்றுவோர் தம்மைக் காட்டிக் கொள்ளாதவாறு திரைக்குப்பின்னால் கீழ்ப்பகுதியில் மறைந்து கொள்ள வேண்டும். இயற்கை ஒளிக்குப் பதிலாக மின்சார ஒளியைப் பாய்ச்சுகின்றபோது திரைச்சீலையுடன் அழுத்திப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை.

உருவங்கள் அசைந்து செல்லும் வேளைகளில் தடியை அசைத்துக் கொண்டும் இறகில் அல்லது தலையுடன் இணைக்கப்பட்ட கம்பியை மேலும்



கீழும் ஆட்டியவாறும் நிகழ்த்திக்காட்டலாம். ஒரு திசையில் சென்று உருவம் திரும்பி வருவதாக இருப்பின், உருவத்தினை எதிர்ப்பக்கம் திருப்பி அசைத்துச் செல்லலாம். இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியரால் ஆக்கப்பட்ட எழுத்துருவை அல்லது மாணவர்களின் சுயமான வெளிப்பாட்டை உரத்தகுரலில் பாத்திரப்பொருத்தத்துக்கு ஏற்றவாறு உணர்வுபூர்வமாகக் கதைக்க வேண்டும். இரு உருவத்தினை ஒருவர் அசைக்கும் சந்தர்ப்பத்தில தொனி வேறுபாடுகளைக் கையாளுதல் பொருத்தமானதாக அமையும். இச்சந்தர்ப்பத்தில் மாணவர்களைச் சுயமாகச்செயற்பட வைத்தல் எதிர்பார்க்கும் இலக்கினை நிறைவு செய்யும்.

இவ்வுருவங்கள்மூலம் ஆடல் - பாடல் நிகழ்வுகளையும் ஆற்றலாம். இசைக்கு ஏற்றவாறு கைகால் அசைத்தல், தலையை ஆட்டுதல், இறகுகளை அடித்துப் பறத்தல் என மாணவர்களின் இரசனை உணர்வைத் தூண்டலாம். பாட்டி வடை சுட்ட கதை, தாகமுள்ள காகம், சிங்கமும் முயலும் எனப் பலவகைக் கதைகளை நிகழ்த்திக்காட்டலாம். மாணவர்களிடம் விருப்பமான உருவங்களை எடுத்துச் சென்று உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு சுயமாக நடியுங்கள் என்று வழிப்படுத்துவதன்மூலம் அவர்கள் ஆற்றல்களை அறிந்து கொள்ளலாம்; வழிப்படுத்திக் கொள்ளலாம்.

**நிழற் பொம்மலாட்ட அரங்கின் நன்மைகள்**

பொம்மைகளைச் செய்வது மிகவும் இலகுவானது. குறைந்த செலவில் உருவங்களை ஆக்கிக் கொள்ள முடியும். இடத்திற்கு இடம் நகர்த்துவதற்கு இலகுவானது. உருவங்களை ஒரு கோவையில் ( குடைந) கொண்டு செல்ல முடியும். மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து வகுப்பறையிலே உருவங்களை ஆக்கமுடியும்.

பயம், முன்வராமை போன்ற இயல்புகளுடைய மாணவர்களை இவ்வரங்கில் ஈடுபடுத்துவதன்மூலம் தன்னம்பிக்கையுடன் செயலாற்றும் ஆற்றல்களைப் பெற்றுக்கொள்வர். நிழற்பொம்மை அரங்கின் பிற்பகுதி ஆற்றுகை செய்யும் மாணவர்கள் மாத்திரமே இணைந்து கொள்வர். யாருடையதலையீடுமின்றிச்சுயமாகச் செயலாற்றும் சந்தர்ப்பமும் அதன்பின்னர் பார்வையாளர்களாகிய ஆசிரியர் ஊக்குவிப்பும் அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியும் நம்பிக்கையும் கொடுக்கும். அடுத்த கட்டமாக அவ்வகை மாணவர்களின் கைதட்டல் மாணவர்கள் ஏனைய மாணவர்களைப் போன்று தாமும் கற்றல் சூழ்நிலைக்கு இயல்பாக ஈர்க்கப்படுவர்.

மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு இவ்வரங்கானது பெரியதொரு வரப்பிரசாதமாக அமையும். எழுத்துக்களின் அறிமுகமானது திரைப்படத்தைப் பார்த்து ரசிக்கும் பாங்கில் நிகழ்த்துகின்றபோதும், ஆடல் பாடல்களுடன் நகர்த்திச் செல்கின்றபோதும் மாணவர்கள் மனதில் மிக எளிதாகப் பதியவைக்கமுடியும். அனைத்துப்பாடப்பரப்பினையும் இவ்வரங்கினூடாகக் கற்பிக்கமுடியும். இவ்வகையில் மகிழ்ச்சிகர மான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு நிழற்பொம்மலாட்ட அரங்கானது மிகுந்த பயனைக் கொடுக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**க. இ. கமலநாதன்**
*விரிவுரையாளர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*
*கோப்பாய்.*

# Action Rearch – Guidelines to Form Research Questions

Good teachers and educational leaders do not rely only on traditional ways to solve problems, the advice of others, or even the recommendations of experts. Good teachers and educational leaders conduct their own investigations to identify and solve problems and analyze

information about their classrooms and schools, in the process they also further develop their own professional competence. Action Research is one such powerful tool for professional development and high –quality teaching.

**Good teachers ask themselves**

Are my students learning?

Are my methods of teaching effective?

What difference does my teaching make in developing the knowledge and skills of my students?

Ongoing assessment of teaching practice is essential to ensure that instruction is effective. Examination of your teaching and its effectiveness helps you know how to proceed with subsequent teaching and learning. Action Research is one powerful method to help teachers know that their practices are having the desired results. Increasingly diverse classroom settings require an increasing diversity of instruction targeted to the specific needs of the students in that classroom. By examining classroom instruction for effectiveness, validating what is effective, and eliminating what is not effective, Action Research enables educators to refine their instruction to meet diverse student needs .The goal of this article is to address the needs if educators new to the benefits and processes of Action Research by providing step - by step guidelines for implementing Action Research projects for the purpose of examining and refining literacy practices to improve student performance. The goal of Action Research is positive change in everyday practice in one's own classroom, school or district. It is largely about encouraging teachers to be continuous learners and proactive 'actors' in their own classrooms. Action Research is also about incorporating reflection into the daily teaching routine – the willingness to critically examine one's teaching in order to improve or enhance it so that teachers become empowered to make informed decisions about what to change and what not to change.



**Action Research helps teachers to:**

- Link prior knowledge to new information.
- Learn from experience (even Failures).
- Ask questions and systematically find answers.

Action Research is helpful in improving the professional experience of teachers, head teachers, and administrators. It gives every educator a chance to improve the practices in classroom and school, which ultimately will improve the quality of teaching and learning. It leads towards positive quality improvement in the education system.

The process for Action Research will be unpacked to help educators clearly understand Action Research and the skills needed to conduct it. In addition, as you examine the principles of Action Research at your own pace, interactive exercises will allow you to practice the basic processes for implementing Action Research.

## *What is Action Research?*

Action Research is known by many names, including participatory research, collaborative inquiry, emancipator research, action learning, and contextual action research, but put simply, Action Research is "learning by doing" –a group of people identifying a problem, and doing something to resolve it, evaluating their efforts, and if not satisfied, trying again. Action Research is examining one's own practices through collaborative inquiry, reflection, and dialogue.

If You think of research as a process of steps used to collect and analyze information in order to increase our understanding of a topic or issue, then you would think of Action (change) + Research (investigation) as investigating a problem or situation in order to make change happen. When something goes wrong with your lessons, what do you do? If you think about what you are doing and make a change, you are doing Action Research!

**In summary:**

- In Action Research, educators examine and assess their work and consider ways of working differently.
- Action Research is problem- posing as well as problem solving.
- Action Research is not just about hypothesizing and collecting data. It aims at changing situations: not just interpreting them.
- Action Research focuses on teacher's and administrators' day - to – day concerns.

Good teachers are those who are also good students- lifelong learners who seek to improve their knowledge and practice throughout their careers .Research adds to our knowledge by addressing gaps and expanding what we know. Research improves practice by helping educators gain new ideas for their teaching, gain new insights into their approaches, and connect with other educators. Research allows people to weigh different perspectives on issues and make informed decisions. Action Research provides a means of focusing instruction on issues directly related to the classroom or school. It positions educators as learners who want to narrow the gap between their practice and their vision of quality education. The research itself and implementing the resulting information provide a form of professional development directly related to and supportive of teachers' and students' educational needs. This has a great potential for creating long- lasting school change.

Action Research is based on the following assumptions:

- Teachers and administrators work best on problems they have identified for themselves;
- Teachers and administrators become more effective when encouraged to examine and

assess their own work and then consider ways of working differently;

- Teachers and administrators help each other by working collaboratively; Working with colleagues helps teachers and administrators in their professional development.

**What do YOU as a professional gain from Action Research?**

- better knowledge about how to help students learn in schools;
- a way to evaluate the effectiveness of innovative strategies; a more professional stance;
- more enjoyment in your work life
- an ability to know whether what you are doing helps students or not;
- better communication among educational professionals in your school.

**Action Research in My Classroom**

You can think of Action Research as a way for teachers to collect valid information about their own classrooms and use this information to make informed choices about theaching strategies and learning activities. Teachers can then share the information with students in order to gain their ideas and internal commitment to specified learning activities and procedures. Action Research is used in real situations, rather than in contrived, experimental studies since its primary focus is on solving real problems. It is used when circumstances require flexibility, the involvement of the people in the research, or when change must take place quickly or holistically.

Action Research is appropriate when researching classroom – specific concerns. For example:

- A teacher wants to know if a particular practice increases motivation for students.
- A teacher wants to explore the value of multi – ability grouping for low achievers.
- A teacher wants to determine if a new approach to discipline decreases behavior problems.
- A teacher wants to identify the cause for a specific learning problem for one or more students and how to address barriers to learning.

Action Research can be accomplished on a small and efficient scale. Considerations for whether a project is better suited to individual or collaborative research include:

- the research issue and scale
- the information needed
- the resources needed
- the work involved
- the time investment needed
- the people who might benefit from the action and findings

**The Action Research process**

The Action Research process, a cycle that has four steps: plan, act, observe, and reflect. The central question is "How can I help my students improve the quality of their learning?" This can be broken down into these specific questions:

1. What is my concern in my practice?
2. What am I going to do about it?

3. What evidence will let me make a judgment about what I did?

4. How will I validate any claims about what I have done?

**Use the following guidelines to help you narrow your focus:**

- Write down some problem statements of concern about your practice:
- Articulate examples of practice – based concerns that YOU might be able to do something about in a reasonable amount of time.
- Try to specify what it is about the concern that you wish to change. This could be identified as changes in the language used, changes in the activities, changes in social relationships, etc.
- Describe the problem. Why is it a personal concern to you?
- What instructional / organizational / supervision changes will make?
- What can YOU do about the problem? To find out, talk to colleagues, read, ask students, etc.
- What CONTROL do you have to solve the problem?

Here are some examples of problems that have been addressed through Action Research:

- Students can't read.
- Students don't see the purpose of practice.
- Teachers don't know how to tell if their students are learning.
- Students do not bear a shared responsibility for learning.
- Student attitudes toward reading are not good.
- Struggling readers need a system of formative evaluation.
- Students are not completing their homework.
- Students new to the language of instruction need to increase their knowledge of academic language.

Once you have determined a concern that you can address and make a legitimate change in your classroom, write down your concern / problem in the form of a research question. State what you'll expect to see if the plan works as a research question.

For example:

- If I change my instruction like this ........................ will students........................?
- If I change my teaching to do this ...................... will students do.....................?
- If I try this.................. then will children show / demonstrate improvements on the concern / problem?

In order for your action plan to resolve the problem, the question must be valid and doable. To ensure that the question meets these criteria, you may ask yourself clarifying questions such as these:

1. What are some areas of interest I want to improve?

Example: I am concerned that my students have trouble comprehending expository text.

2. Why do I want to research this problem?

   Example: Students are unable to read their textbooks and comprehend the information independently.

3. What are some potential solutions?

   Example: Consult / hire a coach. Find an expert within the school to come to my class.

   Explicitly teach and model how to read expository text.

4. Which of these possible solutions can I investigate over an eight – week period?

   Example: Explicitly teach and model how to read expository text.

5. What kinds of evidence do I have or can I find as a baseline?

   Example: Research journals, observations, tests, worksheets, informal reading assessments

6. Formulate a research question.

   Example: Does reading comprehension on expository text improve as a result of providing explicit small group instruction for 40 – minute period two times per week?

## CONTROILLING OUTCOMES

Is my question do – able? Focused? Can I control the outcome?

Example:

1. Research question: "Why aren't parents interested in their children's education?"
2. What's the real problem? Why would we want parents interested in their children's education?
3. Problem: students do not read independently outside of school.
4. a) Plan: Can I solve the problem the way the question is stated? Do I have the control to make it happen? NO

   b) Design a plan to answer the real problem: Assign a more advanced student to help a struggling reading student after school.
5. Restate the research question: "If I assign a more advanced student to read with a struggling student who needs more practice in reading, will the struggling student improve his or her reading ability?"

## CONTROLLING TIME

Is my question do – able in a reasonable period of time?

1. What is your research question?
2. What problem about student's learning does this question intend to solve?
3. Can you solve the problem the way you've stated the question? What would your action plan be?

What control do you have to make the plan happen?

4. If NO, what's another way to take action and solve the problem that you CAN control?

5. Restate it as a research question, for example:

   "If I ........... (take this action) ................, then will students (demonstrate improvement on the problem)?"

**Example: How to Form a Research Question**

1. Identify the problem.

   (Talk it over with critical friends.)

   Problem: Students don't actively engage in reading independently

2. Why is the problem happening?

   (The "why" determines the action plan.)

   List several possibilities:

   a) Lack of knowledge

   b) Lack of resources

   c) Poor study habits

   d) Not motivated (rather play football)

   e) Lack of support in reading at home

   Choose the one that represents your best guess and is one YOU can do something about in a reasonable period of time.

3. Brainstorm possible actions.

   List several possibilities:

   a) Call the parents every day.

   b) Let students read on a computer or Reader.

   c) Set up a learning contract.

   d) Provide alternative reading materials.

   Choose the one YOU can do something about in a reasonable period of time and you guess might work.

4. Write your research question.

   If I make a contract that I will reward students for independent reading, will the amount of time they spend reading increase?

**Examples of Classroom Action Research Using Various Teaching Strategies**

Here is a review of multiple teaching strategies that shows how Action Research can be used to monitor student learning using multiple strategies in various situations.

**Addressing Differences in Learning Styles**

***Different Kinds of Feedback***

Problem: A teacher noticed that students were not trying to improve their work.

Research Question : If I change the kind of feedback I usually give students from negative to positive and direct them to different ways they could revise their work, would they make more effort to improve?

***Freedom to Choose***

Problem: A teacher complained that students were not showing interest in reading.

Research Question: If I permit students to choose what they'd like to read, would their interest improve?

*Reducing Anxiety*

Problem: Some students were exhibiting anxiety and mistrust while going through lessons.

Research Question: If I change my teaching to put a lesson outline and plan on the board before I begin the lesson, would it lessen student's anxiety?

*Shy Students*

Problem: The teacher noticed that some students were very shy and did not want to participate in class lessons.

Research Question: If I change the structure of discussion methods, will these students participate more?

*Motivating Learning*

Problem: A teacher noticed that students were not very motivated to engage in the study of history.

Research Question: Would using personal anecdotes or current real world examples about the concepts they were studying (such as conflicts and conflict resolution) make the lesson more valuable to students?

*Using Contracts*

Problem: One student is not completing reading assigned for homework.

Research Question: Would using a contract with the student raise the rate of homework completion?

*Classroom Structure*

Problem: The teacher had difficulty in getting students engaged in classroom discussion.

Research Question: Would changing the seating arrangement encourage more students to participate in discussions

**References:**

Corey, S.M. (1953). Action Research to Improve School Practices. New York: Teachers College press.

Fueyo, v., & Koorland, M.A. (1997). "Teacher as Researcher: A Synonym for Professionalism."

Journal of Teacher Education 48 (5), 336 – 344.

Grundy, S. (1995). Action Research as Professional Development. Perth, Australia: Arts Accord

Affiliation of Arts Educators.

Henry, C. and S. Kemmis. (1985). "A Point – by - point Guide to Action Research for Teachers." The Australian Administrator. 6 (4).

Hubbard, R. S. , & Power, B. M. (1999). Living the Questions: A Guids for Teacher - Researchers. Portland, Maine: Stenhouse.


Mills, G. E. (2003). Action Research: A Guide for the Teacher Researcher. Upper Saddle River, NJ: Merrill Prentice Hall.

Stringer, E.T. (1996). Action Research: A Handbook for Practitioners. Thousand Oaks, CA: Sage.

**Mr. Pirabaharan**

*Lecture, Jaffna NCOE*

# How to improve study Skills




Now a days, students in Secondary and Tertiary level are facing difficulties in studying. The following facts and description will be helpful and useful to meet the needs of the students. These Study Tips include:

1. Good Study Habits
2. Preparing for Exams
3. Ten Traps of Studying

**Study Habits**

1. Decide what to study (reasonable task) and how long or how many (chapters, pages, problems, etc.). Set and stick to deadlines.
2. Do difficult tasks first. For procrastination, start off with an easy, interesting aspect of the project.
3. Have special places to study. Take into consideration lighting, temperature, and availability of materials.
4. Study 50 minutes, and then take a 10 minute break. Stretch, relax, have an energy snack.



5. Allow longer, "massed" time periods for organizing relationships and concepts, outlining, and writing papers. Use shorter, "spaced" time intervals for rote memorization, review, and self-testing. Use odd moments for recall/review.
6. If you get tired or bored, switch task/activity, subject, or environment. Stop studying when you are no longer being productive.
7. Do rote memory tasks and review, especially details, just before you fall asleep.
8. Study with a friend. Quiz each other, compare notes and predicted test questions.

Preparing for Exams

1. When the Exam is Announced:

  - o Find out what the exam will or won't cover.
  - o Find out what kind of exam it will be: objective, short essay, long essay, or a combination.

2. Exam Study:

  - o Prepare summary sheets for large amounts of lecture and textbook notes.
  - o Spend several nights before an exam making a final review of notes.
  - o Stress the following areas in your review:

1. Points emphasized in class or in the text;
2. Areas the professor has advised for study:
3. Questions in study guides, past quizzes, and reviews at the end of textbook chapters.

3. Preparation by Type of Exam:

  - o Objective exams: Study as if it were an essay exam.
  - o Stress specifics:
    - Definitions of key terms and examples;
    - Lists of items;
    - For True/False, write some false statements.
    - Essay Exams:
    - Stress concepts.
    - List probable questions.
    - Prepare a good outline answer and practice it.
    - Problem Exams:
    - Memorize formulas if needed.
    - Practice problems.
    - Ten Traps of Studying

**1.'I Don't Know Where To Begin"**

Take Control. Make a list of all the things you have to do. Break your workload down into manageable chunks. Prioritize! Schedule your time realistically. Don't skip classes near an exam -- you may miss a review session. Use that hour in between cla sses to review notes. Interrupt study time with planned study breaks. Begin studying early, with an hour or two per day, and slowly build as the exam approaches.

**2. "I've Got So Much To Study And So Little Time"**

Preview. Survey your syllabus, reading material, and notes. Identify the most important topics emphasized, and areas still not understood. Previewing saves time, especially with non-fiction reading, by helping you organize and focus in on the main topi cs. Adapt this method to your own style and study material, but remember, previewing is not an effective substitute for reading.

**3. "This Stuff is So Dry, I Can't Even Stay Awake Reading It"**

Attack! Get actively involved with the text as you read. Ask yourself, "What is important to remember about this section?" Take notes or underline key concepts. Discuss the material with others in your class. Study together. Stay on the offensive, especially with material that you don't find interesting, rather than reading passively and missing important points.

**4. "I Read It. I Understand It. But I Just Can't Get It To Sink In"**

Elaborate. We remember best the things that are most meaningful to us. As you are reading, try to elaborate upon new information with your own examples. Try to integrate what you're studying with what you already know. You will be able to remember new material better if you can link it to something that's already meaningful to you. Some techniques include:

- Chunking: An effective way to simplify and make information more meaningful. For example, suppose you wanted to remember the colors in the visible spectrum (Red, Orange, Yellow, Green, Blue, Indigo, Violet); you would have to memorize seven "chunks" of information in order. But if you take the first letter of each color, you can spell the name "Roy G. Biv", and reduce the information the three "chunks".
- Mnemonics: Any memory-assisting technique that helps us to associate new information with something familiar. For example, to remember a formula or equation, we may use letters of the alphabet to represent certain numbers. Then we can change an abs tract formula into a more meaningful word or phrase, so we'll be able to remember it better. Sound-alike associations can be very effective, too, especially while trying to learn a new language. The key is to create your own links, then you won't forget them.

**5. "I Guess I Understand It"**

Test yourself. Make up questions about key sections in notes or reading. Keep in mind what the professor has stressed in the course. Examine the relationships between concepts and sections. Often, simply by changing section headings you can generate m any effective questions. For example, a section entitled "Bystander Apathy" might be changed into questions such as: "What is bystander apathy?", "What are the causes of bystander apathy?", and "What are some examples of bystander apathy?"

**6. "There's Too Much To Remember"**

Organize. Information is recalled better if it is represented in an organized framework that will make retrieval more systematic. There are many techniques that can help you organize new information, including:

- Write chapter outlines or summaries; emphasize relationships between sections.
- Group information into categories or hierarchies, where possible.
- Information Mapping. Draw up a matrix to organize and interrelate material. For example, if you were trying to understand the causes of World War I, you could make a chart listing all the major countries involved across the top, and then list the im portant issues and events down the side. Next, in the boxes in between, you could describe the impact each issue had on each country to help you understand these complex historical developments.

**7. "I Knew It A Minute Ago"**

Review. After reading a section, try to recall the information contained in it. Try answering the questions you made up for that section. If you cannot recall enough, re-read portions you had trouble remembering. The more time

you spend studying, the more you tend to recall. Even after the point where information can be pe rfectly recalled, further study makes the material less likely to be forgotten entirely. In other words, you can't overstudy. However, how you organize and integrate new information is still more important than how much time you spend studying.

### 8. "But I Like To Study In Bed"

Context. Recall is better when study context (physical location, as well as mental, emotional, and physical state) are similar to the test context. The greater the similarity between the study setting and the test setting, the greater the likelihood that material studied will be recalled during the test.


### 9. "Cramming Before A Test Helps Keep It Fresh In My Mind"

Spacing: Start studying now. Keep studying as you go along. Begin with an hour or two a day about one week before the exam, and then increase study time as the exam approaches. Recall increases as study time gets spread out over time.

### 10. "I'm going to Stay Up All Night 'til I Get This"

Avoid Mental Exhaustion. Take short breaks often when studying. Before a test, have a rested mind. When you take a study break, and just before you go to sleep at night, don't think about academics. Relax and unwind, mentally and physically. Otherwis e, your break won't refresh you and you'll find yourself lying awake at night. It's more important than ever to take care of yourself before an exam! Eat well, sleep, and get enough exercise.

When we consider the above facts in relation to the study skills, it is obvious to follow up the model of the teaching-Learning Process . The following concept map can be helpful to understand the success of the study skills.




**Mr.S.Muguntthan,**
*Lecturer, Jaffna National College of Education.*

# தற்காலத்தில் பல்கலைக்கழகங்களின் கற்றல் போக்கு

இலங்கையைப் பொறுத்த வரையில் உயர் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் விளங்குகின்றன. பல்கலைக்கழகங்களில் அரச மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளு ம் அரச தனியார் கல்லூரிகளும் காணப்படுகின்றன. மேற்படி கல்லூரிகளில் பல்கலைக்கழகங்களினூடாகவும் வழங்கப்படும். கல்வியின் தன்மை ஆரம்ப காலத்தில் மரபு ரீதியாக கல்வியை வழங்கி வந்த உயர்கல்வி நிறுவனங்கள் இன்று 21ம் நூற்றாண்டிற்கு பொருத்தமான அறிவுசார் உலகிற்கு உதவக்கூடிய தரமான கல்வியை வழங்க வேண்டும். எனும் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்நிலையில் இந்நிறுவனங்கள் தமது கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டியவையாகக் காணப்படுகின்றன.

தமது மாணவர்களின் ஆங்கில அறிவுடன் தகவல் தொழிநுட்ப அறிவை வளர்ப்பதுடன் சர்வதேச தொழில் சந்தை எதிர்பார்க்கும் தரமுடைய மாணவர்களைவளர்த்து எடுக்க வேண்டிய கட்டாயத்தில் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் காணப்படுகின்றன.

இலங்கையிலும் ஒரு சில வெளிநாடுகளிலும் உயர்கல்வி வளர்ச்சியடைந்து வருகின்ற போதும் அவற்றின் தரம் வீழ்ச்சியடைந்து வருவதாக பலராலும் குறை கூறப்படுகின்றது. அதாவது கலைப்பாடத்தை பாடமாக்கி ஒப்புவிக்கும் முறையில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இலங்கையில் பட்டதாரிகள் சர்வதேச நிறுவனங்களினால் எதிர்பார்க்கப்படும் தகுதியை உடையவர்களாக இல்லை எனும் நிலையில் பின்வரும் விடயங்களில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தமது மாணவர்களை தகுதியும் தரமும் உடையவர்களாக ஆக்க வேண்டியுள்ளது.



- ஆங்கில மொழித் தேர்ச்சி
- தகவல் தொழில்நுட்ப தேர்ச்சி
- சிறந்த தொடர் பாடற் தேர்ச்சி
- தலைமை தாங்கும் தேர்ச்சி
- குழுவாகப் பணியாற்றும் திறன்
- பிரச்சினை தீர்க்கும் திறன்
- புத்தாக்கச் சிந்தனை
- சவால்களை எதிர் கொள்ளும் ஆற்றல்
- நவீனத்தை உள்வாங்கி ஏற்கும் மனப்பாங்கு
- ஆராட்சித்திறன் பெற்றிருத்தல்
- மென் திறன்

உலகமயமாதலின் உச்சநிலையில் இருக்கும் உலகில், தற்போது அறிவு என்பது வியாபார நோக்கில் பரிமாற்றப்படும் பண்டமாக நோக்கப்படுகின்றது. இதற்கு சர்வதேச அங்கீகாரம் தேவையெனில் அடிப்படை ஆங்கில அறிவு அவசியமாகின்றது. இலங்கை பல்கலைக்கழகங்களில் சுய மொழியில் கற்கும் மாணவர்களிடம் ஆங்கிலத்தில் புலமை அவசியமாக வேண்டப்படுகிறது. கலைத்துறைப் பாடங்களைக் கற்போரில் கூடுதலான வீதத்தினர் சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சி இல்லாதவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் தொடர்பாடல் தகவல் தொழில் நுட்பத்துறையிலும் உயர்ந்த தகுதியை வளர்க்க வேண்டியவர்களாக உள்ளனர். தங்களின் வசதிக்கு ஏற்ப விரிவுரைகளிற்கு சமூகமளித்து கற்றவற்றையும், பிறரிடம் இருந்து பெற்ற குறிப்புக்களையும் மனப்பாடம் செய்து இறுதிப் பரீட்சையை எழுதிப் பட்டம்

பெறும் நிலையில் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

இன்று தனியார் நிறுவனங்களினால் எதிர்பார்க்கப்படும் தொழில்தகுதியை இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் செயன்முறை அனுபவமாக பெறுவதற்கு உரிய பாட அமைப்பு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் காணப்படவில்லை. அத்துடன் குழுவாக செயலாற்றுதல், புதிய கருத்துக்களை ஏற்றல், மென்மையான தொடர்பாடல் திறன், என்பனவும் இன்று பட்டதாரிகளிடம் எதிர்பார்க்கப்படுகின்ற அவசியமான திறன்களாகக் காணப்படுகின்றன.

மேற்படி மாணவர்களின் கற்றல் தகுதியின்மையாகக் காணப்படுவதற்கு பல்வேறு காரணங்களைக் கூறமுடியும். அரசாங்கமே பல்கலைக்கழகங்களைக் கூடுதலாக இலங்கையில் நடத்தி வருகின்றது. எனவே அரச பல்கலைக்கழகங்களை நவீன மயப்படுத்தாமையினால் இங்கு நவீன செய்முறையுடனும் தேவையான பௌதீக வளங்களின் உதவியுடன் அனுபவத்துடன் தொழிற் கல்வியை வழங்க அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை இதற்கு பாரிய நிதி தேவைப்படும் எனும் நிலையில் மொறட்டுவ போன்ற ஓரிரு பல்கலைக்கழகங்களை மட்டும் செயல்முறையுடைய நவீன மாற்றங்கள் அரசு செய்துள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகக் கல்வியின் தரம் உயர்நிலை அடையாமைக்கு விரிவுரையாளர்களின் கல்வித் தரத்தில் காணப்படும் போதாமையும் காரணமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள விரிவுரையாளர்கள் தொழில்துறைக்கு தேவையான திறன்களை கொண்டிருப்பதில்லை. அத்துடன் வேலை உலகுடன் தொடர்பு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். கல்வி அறிவைப் பொறுத்த மட்டில் 40% மானவர்கள் மட்டுமே கலாநிதிப் பட்டத்தை பெற்று ஆராய்ச்சித் துறையில் அனுபவம் பெற்றுள்ளனர். இதைவிட 27% மானவர்கள் முதல் பட்டத்துடனேயே விரிவுரையாளர்களாக இருக்கின்றார்கள். இதன் தாக்கமே பல்கலைக்கழக மாணவர்களில் கல்வித்தரக் குறைவிற்கு மற்றுமோர் காரணம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறுகின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்கள் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் கல்வியின் தரத்தை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள நிலையில் தற்போது இவ்வாறான குறைபாடுகளைக் குறைத்து தரமேம்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் நடைமுறைகள் பல்கலைக்கழகங்களில் பின்பற்றப்படுகின்றன.

1) பாடநெறி இறுதிப் பரீட்சைகளை அரையாண்டு ரீதியாக பிரித்து நடாத்தி மாணவர்களின் கற்றல் சுமையைக் குறைத்து ஈடுபாட்டை ஏற்படுத்துதல்.
2) மாணவர் வரவை குறிப்பிட்ட வீதத்திற்கு கட்டாயமாக்குதல்
3) பரீட்சைக்கு மட்டும் புள்ளி வழங்காமல் தலைமைத்துவப் பண்பு, ஒழுக்கம், குழுச் செயலாற்றல், என்பவற்றை வளர்க்கும் நோக்கில் தனி, குழு ஒப்படைகளை வழங்கி அவற்றிற்கு 30 புள்ளிகளும் பரீட்சைக்கு 70 புள்ளிகளும் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
4) ஆங்கிலப் பாடத்தை விரிவுபடுத்தி கட்டாயமாக்கப்பட்டுள்ளது
5) பாடத் தெரிவுகளிலும் நெகிழ்வுத் தன்மை பின்பற்றப்பட்டுள்ளது. அதாவது ஆண்டுக்கு ஆண்டு பாடத் தெரிவை மாற்றியமைக்கும் வசதியை வழங்கியுள்ளது.

6) ஆராய்ச்சி என்பது மாணவர் மட்டத்திலும் விரிவுரையாளர்கள் மட்டத்திலும் அவசியமாக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள்குறிப்பிட்டகால இடைவெளிக்குப் பின்னர் தமது ஆராய்ச்சி மற்றும் கல்வித் தகுதியை புதுப்பிக்க வேண்டிய திட்டங்கள் உள்ளடங்கப்பட்டுள்ளது. மாணவர்களின் அறிவு விரிவாக்கத்திற்கு ஆராட்சி மிக அவசியமாகக் காணப்படுவதனால் உலகில் சிலபல்கலைக்கழகங்கள்கற்பித்தலைவிடுத்து ஆராட்சிக்காகவே நிறுவப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் அமையும்போது மாணவர்களின் தரம் அதிகரிக்கும் சர்வதேச தரநிர்ணயத்தின் பரிசீலனையில் தகுதியுடைய பட்டதாரிகள் வெளியேற்றப்படுவர். இதனால் தொழிலுக்காகக் காத்திருக்கும் கலைப்பட்டதாரிகள் காத்திருக்கும் நிலை ஏற்படாது.

மேற்கூறிய செயற்பாடுகளை இலங்கை அரசு தனித்துச் செய்ய பொருளாதாரப் பிரச்சினை காணப்படுவதனால் அவ்வாறான செலவைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் இலங்கை இல்லாமையால் இலங்கையானது தனியார் பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைந்து சில ஒப்பந்த அடிப்படையில் செயற்படும்போது அரச பல்கலைக்கழகங்களில் கற்றற் தரத்தை மேம்படுத்தக்கூடிய நிலை உருவாகும் அத்துடன் விரிவுரையாளர்களும் போதிய கல்வி மற்றும் ஆராய்ச்சியில் உயர் தகுதியை பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் இதனால் அரசபல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் தரம் அதிகரிக்கும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களினதும், கல்லூரிகளினதும் கற்றலின் தரத்தை மேம்படுத்தல்தொடர்பாக இதுவரைகூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையைத் தொகுத்து நோக்கும்போது இலங்கைப்பல்கலைக்கழகங்கள் தமது பட்டங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளன. அறிவுப் பொருளாதாரத்தில் உலக ரீதியில் கேள்வி உடைய பட்டதாரிகளையும் தொழில் உலகு எதிர்பார்க்கும் பாடவிடயத்துடன் ஆராய்ச்சி, புத்தாக்கம், மென்திறன், ஆங்கில மொழித்திறன், தகவல் தொழில்நுட்பத் திறன், குழுவாகச்செயற்படல், தலைமைத்துவப்பண்பு, என்பவற்றில் திறனுடையவர்களை உருவாக்குவதோடு இதற்கான ஆரம்ப முயற்சிகளை செய்துள்ள நிலையில் மேலும் தமது கட்டமைப்புக்களைத் தனியார் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஓர் ஒழுங்கமைப்பில் வினைத்திறனுடன் செயலாற்றுவதன் மூலம் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி வழங்கும் பணியில் தொடர்ந்து நீடிப்பதுடன் தரத்தையும் காப்பாற்ற முடியும் என்பது திண்ணம்.

**திருமதி ஜானகி தர்மஜீலன்**
*விரிவுரையாளர்*
*யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி*
*கோப்பாய்.*

# இலங்கையில் சிறுவர் உரிமையும், சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்

## 01 அறிமுகம்

### 1.1 மனித உரிமை

இயல்பான சுதந்திரத்தோடு வாழவும், தான் இசைந்து வாழும் சமுதாயத்திற்கான கடமைகளை முழுமையாகச் செய்ய மனிதன் முற்படும் வேளைகளில் விளையும் உரிமைகள் மறுக்கப்படும்போதோ, அல்லது அளிக்கப்பட்டு வந்த உரிமைகள் தடை செய்யப்பட்டாலோ மனிதன் தனது சமுதாயத்தின்மீது கேள்விகளைத் தொடுக்கின்றான். இத்தகைய உரிமைகள் மனித உரிமை எனப்படும்.

### சிறுவர் உரிமை

1.2 சிறுவர்கள் மனிதப் பிறவிகள் என்ற வகையில், மனித உரிமைகள் அனைத்தும் சிறுவர்களுக்கும் உரித்தானதாகும். சிறுவர் உரிமைகளிலிருந்தே மனித உரிமைகள் தோற்றம் பெற்றன. சிறுவர் உரிமைகள் என்றால் சிறுவர்களுக்குச் சிறப்பான வாழ்க்கை வழங்குவதற்கு அவசியமான நிபந்தனைகளே சிறுவர் உரிமைகளாகும். அதாவது சமூகத்தில் சிறுவர்களுக்கு உரித்தாக வேண்டிய வரப்பிரசாதங்கள் சிறுவர் உரிமைகளாகும். பிரத்தியோகமான முறையில் சிறுவர்களுக்கேயுரியவை என்று சர்வதேச ரீதியாக ஐக்கிய நாடுகள் தாபனம் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் சிறுவர் உரிமைகளாகும்

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் நோக்கின், சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், உரிமை மீறல்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்றது. சிறுவர்களுக்கு எதிராக துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்புணர்ச்சி, சிறுவர் தொழிலும் வேலைப்பளுவும், சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களில் இணைத்துக்கொள்ளுதல், கடத்தல் மோசடிகள், உளரீதியாகப் பாதிப்புக்குள்ளாகுதல் எனப் பல்வேறு வடிவங்களில் மிகக் கொடூரமான சம்பவங்கள் நடந்தவண்ணமே இருக்கின்றன. இத்தகைய நிலைமையில் இரண்டாம் உலகப் போரின் பின்னணியுடன் தோன்றிய ஐக்கிய நாடுகள்சபைசிறுவர்உரிமைகளைப்பாதுகாக்கப் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தது.



சிறுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களில் 1989 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனம், ஒக்ரோபர் 1ஆம் திகதியைச் சிறுவர் உரிமைகள் தினமாகவும், யூன் 12ஆம் திகதியைச் சிறுவர் தொழிலாளர்களுக்கெதிரான தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக எழுத்துருவிற் பல்வேறு பிரகடனங்களும், சட்டங்களும் ஆவணப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அன்றாடம் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களின் போக்கு அதிகரித்து வருகின்றது. உலகின் எல்லாப் பாகங்களிலும் இருபது கோடிக்கும் ( 200 மில்லியன் ) அதிகமான சிறுவர்கள் வேலை செய்து வருகின்றனர். இதிற் பலர் முழுநாள் உழைப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அவர்களின் போதுமான கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம், உடல்நலம், அடிப்படைச் சுதந்திரம் என்பன இழக்கப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தளவில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசகட்டமைப்பிற் பல்வேறு காப்பீடுகள் காணப்படுகின்ற அதேவேளை; தேசிய சர்வதேசரீதியில் செயற்படும் அமைப்புக்களும் சிறுவர் உரிமைகள் பலவற்றைப் பாதுகாக்கும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையிலே சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களாகக் கொலைச் சம்பவங்கள், கடத்தல்கள், சிறுவர்களை வேலைக்கமர்த்தல், பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள், பிள்ளை, தாய் பிரச்சினை போன்றவை அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ள அதேநேரம் மலையகப் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மேலும் நகர்ப்புறங்களில் வாழும் செல்வந்தர்களின் பிள்ளைகள் தனிப்பட்ட குரோதங்களுக்காகவும், பணத்திற்காகவும் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

**1.3 சிறுவர் உறுப்புரைகள்**

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை இலங்கை அரசு 1991ஆம் ஆண்டு உறுதிப்படுத்தியது. இந்தச் சமவாயம் சிறுவர்கள் சிறப்பான மதிப்புக்குரியவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்கள் பெற வேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை வரைமுறைப்படுத்தியது. இச் சமவாயத்தில் 54 உறுப்புரைகள் காணப்படுகின்றன.

சமவாயத்தில் உள்ள உறுப்புரைகளில் 1 தொடக்கம் 41 வரையானவை அடிப்படை உரிமைகளை விளக்குகின்றன. 42 தொடக்கம் 45 வரையான உறுப்புரைகள், இச் சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தை 5 வருடங்களுக்கு ஒரு முறை ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடும் பொறுப்புப் பற்றியன. 46 தொடக்கம் 54 வரையான உறுப்புரைகள் அரசுகள் சமவாயத்திற்கு தம்மை அர்ப்பணிக்கும் விடயத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை விளக்குகின்றன.

**1.4 சிறுவர் தொழிலாளர்கள்**

1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சட்டத்தின் படியும், திருத்தப்பட்ட 1984ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தின் படியும் 18 வயதிற்குட்பட்ட இளம் சிறுவர்களை வேலைக்கமர்த்துவது குற்றமாகக் கருதப்படுகிறது.

சிறுவர் தொழிலாளர் உருவாவதற்கான காரணங்களை ஆராயும்போது சிறுவர் தொழிலாளர்களுடன் தொடர்புடைய முதன்மையானதும் மிக முக்கியமானதுமான காரணி வறுமையாகும். சிறுவர் தொழிலாளர்களின் தோற்றத்திற்கு அச் சிறுவர்களின் சமூகப் பொருளாதாரப் பின்னணியும், அவர்கள் வாழும் சூழலுமே காரணமாக அமைகின்றன. அத்தோடு மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்களின் கீழ்மட்ட உழைப்பு அவர்களை வறுமை நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இதன் காரணமாக பெருந் தொகையான சிறுவர்கள் வீடுகளிலும், கட்டிட நிர்மாணப்பணிகளிலும், கடைகளிலும் கல்லுடைக்கும் நிலையங்களிலும் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதனால் அவர்களின் கல்வி சம்பந்தமான உரிமைகள், பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் போன்ற பல உரிமைகள் மீறப்படுகின்றன.

கல்வி கற்பதோடு விளையாடிக்கொண்டிருக்க வேண்டிய சிறுவர்கள் தொழில்களில் ஈடுபடுத்தப்படும்போது அவர்களின் உடல், உள வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அவர்கள் ஊனமுற்றவர்களாக அல்லது மனவளர்ச்சி குன்றியவர்களாக மாற்றமடைகின்றனர். இவ்வாறானவர்கள் தொடர்ந்து வாழ்ந்தாலும் அது குடும்பத்துக்கும் சமூகத்திற்கும் சுமையாக அமையலாம். இவை காரணமாக சிறுவர் தொழிற்செயற்பாடுகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அப் பிள்ளைகளின் வாழ்க்கையில் தாழ்வான சமநிலையைத் தோற்றுவிக்கும். இதன் காரணமாக கல்வியறிவற்ற உடல் உள ரீதியாக பலவீனமானதோர் எதிர்காலச் சமுதாயம் தோன்ற வாய்ப்பேற்படும்.

சிறுவர் தொழிலாளர் பிரச்சினைகளுக்கும் அதனோடு தொடர்புபட்ட வறுமைப் பிரச்சினைக்கும் மிக முக்கியமான இன்னொரு காரணியாக அமைவது போதைப்பொருள் பாவனையாகும். குறிப்பாக மலையகத்தில் உள்ள அனேகமானோர் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். இதன் காரணமாக அவர்களின் வருமானத்தில் மூன்றிலொரு பங்கு மதுவிற்குச் செலவாகின்றது. இது போன்ற நடவடிக்கைகளினால் வருமானப் பற்றாக்குறை ஏற்படுவதால் சிறுவர்களை வேலைக்கமர்த்த வேண்டிய நிர்ப்பந்த நிலை தோன்றுகின்றது. இதனால் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடும்போது மலையகத்தில் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய சிறுவர்களை வேலைக்கு அனுப்புதல் அதிகமாகக் காணப்படுகின்றது.

பெற்றோர்களால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமைக்கான இன்னொரு முக்கிய காரணம் போதிய பாடசாலைகள் அண்மையில் இல்லாமையும், தூர இடங்களுக்கு அனுப்புவதற்கான செலவைத் தாங்க முடியாமையுமாகும். குறிப்பாக மலையகத் தோட்டப்புறப் பிள்ளைகளினால் பாடசாலைக்குச் செல்வதற்கான ஏற்ற நிலைமைகள் சரியாக இருப்பதில்லை. இதனால் அவர்கள் உரிய நேரத்தில் உரிய கல்வித்தகைமையை அடையமுடியாதுள்ளது. இந்நிலைமைகள் மாற்றப்படவேண்டிய அவசரமும், அவசியமும் உடனடித் தேவைகளாக உள்ளன. அத்தோடு பெற்றோரும் தம் பிள்ளைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சட்டத்திற்கமைவாக 14 வயதிற்குக் குறைந்த எந்தச் சிறுவர்களையும் வேலைக்கமர்த்த முடியாது. இந்த வயதெல்லையானது நாட்டுக்குநாடு சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் 12 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களை வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். 12 தொடக்கம் 14 வரையான சிறுவர்களை பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் 2 மணித்தியாலங்கள் சிறிய வேலையில் ஈடுபடுத்தலாம். 14 தொடக்கம் 16 வயதுக்குட்பட்டவர்களை கடுமையான வேலைகளில் ஈடுபடுத்த முடியாது. மேலே குறிப்பிட்ட வரையறைகளை மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கெதிராகச் சட்டங்கள் பல இருந்தாலும் அவை பொதுவாகச் செயலிழந்தனவாகவே காணப்படுகின்றன.

## 02. கல்வியும் சிறுவர் உரிமையும்

### 2.1 கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள்

மனிதர்களின் சிறந்த வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாகக் கல்வி காணப்படுகின்றது. இக்கல்வியின் முக்கியத்துவம் பற்றி உலகின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள அறிஞர்கள் காலத்திற்குக்காலம் பல

சிந்தனைக் கருத்துக்களைக் கூறியுள்ளனர். அறிஞர்களால்கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் முழுவதையும் ஆராய்ந்து பார்க்கும்போது கல்வி என்பது ஓர் ஆய்வு என்ற முடிவுக்கு வரலாம். ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் அறிந்து கொள்ளத் துணை நிற்பது கல்வி ஆகும். தான்வாழும் சமூகத்தையும் அதன் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் ஆராய்ந்து உணரவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் கல்வி பயன்படுகின்றது. சமுதாயம் காணவிளைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்வியின் பயனாகும்.

**2.2 இலங்கையிற் கல்வி**

எல்லோருக்கும் கல்வி என்பது இன்று பரவலாகப் பேசப்படும் ஒரு விடயமாகவுள்ளது. எல்லோருக்கும் ஆரம்பக்கல்வி, எல்லோருக்கும் இடைநிலைக்கல்வி என்ற நிலைகளினூடாக இக்குறிக்கோளை அடைவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையில் எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கில் எல்லோருக்கும் எல்லா மட்டங்களிலும் கல்வியைப் பெறுவதற்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென நாட்டின் அரசியலமைப்பின் 27வது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 10,500 ஐத் தாண்டியுள்ளது. இதில் 20.3 % உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளாகும். மொத்தப் பாடசாலைகளில் 40% ஆனவை 1முதல் 5 வரையான வகுப்புக்களை உடையவை. இவற்றில் ஏறத்தாழ மூன்றில் ஒருபகுதி மாணவர்கள் கல்வி கற்கின்றனர் . இலங்கையில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 180,000 ஐ அண்மித்துள்ளது. மாணவர்களின் எண்ணிக்கை 42 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. அண்ணளவாக 7 இலட்சம் மாணவர்கள் பாடசாலையை எட்டிப் பார்ப்பதில்லை. பாடசாலை செல்வோரில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை ஏறக்குறைய 19 இலட்சம் பேர் வரை கல்வி கற்கின்றனர். 6 முதல் 11 வரையான வகுப்புகளில் ஏறக்குறைய 12 இலட்சம் மாணவர்களே கல்வியைத் தொடர்கின்றனர். 12 தொடக்கம் 13ஆம் வகுப்புவரை ஏறக்குறைய 2இலட்சம் மாணவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர். 97% மாணவர்களுக்கு உயர்கல்வி மறுக்கப்படுகின்ற நிலையில் எமது நாட்டின் கல்விக் கொள்கை இருப்பது இவற்றிலிருந்து புலனாகின்றது.

எமது சமூக பொருளாதார வாழ்வுடன் தொடர்பற்ற கல்வி வகுப்பறைகளில் திணிக்கப்படும் போது மாணவர்கள் திணறுகின்றார்கள். இந்தத் திணிப்பு அதிகாரம், அடக்குமுறை, பணிவு என்ற வடிவில் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. மாணவனில்இயல்பாகக் காணப்படும் அறிவதில் உள்ள ஆர்வத்திற்குப் புறம்பாகப் பலவந்தப்படுத்தி மூளையில் புகுத்த முயற்சிக்கும் போது ஏற்படும் பாதிப்பு தவிர்க்க முடியாதது. இக்கல்வி முறையினாலும் கூடப் பெரும் தொகையான சிறுவர்கள் இலங்கையில் இடைவிலகுகின்றனர்.

**2.3 மனித உரிமையில் கல்வி**

கல்வி மனிதனது ஆளுமை விருத்தியில் முழுமையாக வியாபித்துள்ளது. உலகில் 774 மில்லியன் வளர்ந்தவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். எழுத வாசிக்கத் தெரியாததால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வறுமையில் சிக்குண்டு தமது வாழ்க்கையினைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் ஆகும். அத்துடன் 75 மில்லியன் பிள்ளைகளுக்கு ஒருபோதும் பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைப்பதில்லை.

ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் பிரகடனப்படி, மனித உரிமைகளின் உறுப்புரை 26(1), 26(2) இல் ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமை, ஆரம்பக் கல்வியின் அவசியம் என்பன வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஐக்கியநாடுகள் சிறுவர் உரிமைகள் சாசனம், 18வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்றும், உறுப்புரை 28 இல், சிறுவர்களின் கல்விகற்பதற்கான உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் 5 தொடக்கம் 14 வயதிற்கு இடைப்பட்டோருக்குக் கட்டாயக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் மாணவ இடைவிலகல் அதிகமாகக் காணப்படுகின்றது.

### 2.4 சிறுவர் கல்வி உரிமை

சிறுவர்களின் கல்வி பெறுவதற்கான உரிமை பற்றி சரத்து 28, சரத்து 29, என்பவற்றில் கூறப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் சமவாயத்தினால் வெளியிடப்பட்ட 32ஆம் சரத்தில், "தம் ஆரோக்கியம் மற்றும் கல்வி வளர்ச்சி என்பவற்றின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாய் அமையக்கூடிய வேலைகளில் இருந்து பாதுகாப்புப்பெறும் உரிமை பிள்ளைகளிற்கு உண்டு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் கல்விக் கொள்கையில், 14 வயதிற்குட்பட்ட சகலருக்கும் கட்டாயக்கல்வி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதும் குற்றமென்று சட்டவிதியில் உள்ளது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்று சொல்லப்படுகின்றது. சிறுவர் உரிமைகள் பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்ற போதிலும்கூட இன்றும் பல காரணங்களால் சிறுவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய கல்வியும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. பாடசாலையை விட்டு இடைவிலகுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இவற்றைத்தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பல்வேறு அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்ற போதிலும் சில காரணங்களால் மாணவர் இடைவிலகும் வீதம் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்ததாகத் தெரியவில்லை.

## 03. இலங்கையில் மாணவ இடைவிலகல்

### 3.1 இடைவிலகல்

பாடசாலையில் சேரும் பிள்ளைகள் முழுமையான கல்வியைப் பெறாது இடைநடுவில் பாடசாலையை விட்டு விலகுதல் இடைவிலகல் எனப்படும். இவ்வாறான இடைவிலகல் ஒரு கல்விசார் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் தேவையான கல்வியைப் பெறாதிருப்பது எமது நாட்டின் வளத்தை வீண்விரயம் செய்யும் செயலாக இருக்கின்றது. அத்துடன் வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் விடுவதுடன் இளம்வயதில் பெறவேண்டிய அனுபவங்களையும் இழக்கின்றனர். பாடசாலையை விட்டு இடைவிலகும் சிறுவர்களை, சமூகத்தில் காணப்படும் தீயசக்திகள் கவர்வதற்கான சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது. மாணவ இடைவிலகலினால் அரசும் பெற்றோரும் செலவிடும் முதலிற்கு சரியான விளைவு கிடைப்பதில்லை. மேலும்பாடசாலையைவிட்டு இடைவிலகியோருக்கான சரியான விளைவு கிடைப்பதில்லை. மேலும் பாடசாலையை விட்டு விலகியோருக்கான "பிள்ளைப்பருவக் கல்வியை மீண்டும் புனரமைத்தல்" எனும் புதிய பிரச்சினையை இடைவிலகல் அரசுக்குத் தோற்றுவிக்கின்றது. பாடசாலையிலிருந்து மாணவர்கள் இடையில் விலகிச்செல்வதற்கான

காரணங்களை ஆராய வேண்டியது அவசியமானதும் முக்கியமானதுமாகும். அவ்வாறு இனங்காணப்பட்ட முக்கிய காரணங்கள் பின்வருமாறு.

1. பொருளாதாரப் பிரச்சினை காரணமாகத் தேவைகளைநிறைவேற்ற முடியாமலிருத்தல்.
2. ஏதாவதொரு தொழிலுக்குச் செல்ல வேண்டிய அவசியமிருத்தல்.
3. பெற்றோர்களின் தொழிலுக்கு உதவ வேண்டியிருத்தல்.
4. உடல், உள ரீதியாக நோயுற்றிருத்தல்.
5. பிறவிக் குறைபாடு.
6. வீட்டிற்கும், பாடசாலைக்கும் இடையிலான தூரம்.
7. பிள்ளைகளுக்குப் பாடசாலை மீது வெறுப்பேற்படல்.
8. பெற்றோருக்குப் பாடசாலை மீது நம்பிக்கை இல்லாதிருத்தல்.
9. சில வேளைகளில் பாடங்களிலோ அல்லது ஆசிரியர் மீதோ வெறுப்படைந்து பாடசாலையை விட்டு வெளியேறல்.
10. ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாகப் பாடசாலையிலிருந்து வெளியேறல்.
11. பாலியல் குற்றவாளியாக இருப்பதனால் பாடசாலையிலிருந்து வெளியேறல்.
12. சமவயதுப் பிரிவினரிடையே உள்ள செல்வாக்குக் காரணமாகக் கல்வி மீது வெறுப்படைதல்.
13. பெற்றோர்களின் கவனயீனம்.
14. பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றமை.
15. இளம் வயதில் திருமணம் செய்தல்.
16. அதிபர், ஆசிரியர்களின் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகம்.
17. பாடசாலைகளில் இறுக்கமான நிர்வாகம்.
18. சூழலின் தாக்கம்.
19. வெளிநாட்டு மோகம்.
20. சிறு குழந்தைகளைப் பராமரித்தல்.
21. பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை.
22. பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையே தொடர்பு குறைவாகக் காணப்படல்.
23. முன்பள்ளிக் கல்வி குறைவாகவும் ஒழுங்கற்றும் இருத்தல்.
24. ஆசிரியர் வளப் பற்றாக்குறை.
25. மாணவர்களின் வரவின்மை.
26. கல்விக்கான செலவு உயர்வடைதல்.
27. கற்றவர்களிடையே தொழிலின்மை.

மேற்படி காரணங்களால் மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகுவதைக் குறைக்கும் முகமாக அரசால் கட்டாயக்கல்வி ஒழுங்குவிதிகள் பல வகுக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரம் பின்வருமாறு.

**3.2 கட்டாயக் கல்வி ஒழுங்குவிதிகள்**

**(ஆலோசனைகள்)**

1) பாடசாலைகளில் அல்லது வாழ்க்கைத் தொழில்சார் கல்வி நிறுவனங்களில் அல்லது மாற்று நடவடிக்கையாக 2005 இல் முறைசாராப் படிப்பறிவு நிலையங்களில் 5 - 16 வயதுவரை கட்டாய வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு 1997ஆம்ஆண்டுகட்டாயபாடசாலைவரவுப் பிரமானங்கள் திருத்தப்படல் வேண்டும். அதாவது, 5 -16 வயதுக்கிடையிலான சகல பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி

வழங்கப்பட வேண்டும்.

2) திருத்தப்பட்ட பிரேரணைகளை அமுலாக்குவதில் மாகாணக்கல்வி அதிகாரியின் வகிபங்கினை விரிவுபடுத்தல் அவசியம். அதாவது, கட்டாயக் கல்விச் சட்டத்தையும் அது தொடர்பான ஏனைய ஒழுங்கு விதிகளையும் வலயம் மற்றும் கோட்டத்தினூடாக அமுல்படுத்தும் பொறுப்பு மாகாணசபைக்கு வழங்கப்பட வேண்டும்.

3) பிரமாணங்களை அமுல்படுத்துவதைக் கண்காணிக்கும் முழுமையான பொறுப்பு மத்திய அமைச்சின் விசேட அலகிற்கு அல்லது முறைசாராக் கல்விப் பிரிவிற்கு வழங்கப்படுதல் வேண்டும். அதாவது, 5 -16 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளின் பாடசாலைக்கான கட்டாய வரவு தொடர்பான சட்டமும் ஒழுங்கு விதிகளும் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பு மத்திய அமைச்சுக்கும் மாகாண அமைச்சுகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

4) உள்ளூர் மட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர், கிராமஉத்தியோகத்தரின் உதவியுடன் பாடசாலையில் சேர்ந்து கொள்ளாத பிள்ளைகளை இனங்காணல், பாடசாலைக்குச் செல்லாமைக்கான காரணங்களைத் தீர்மானித்தல், ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையிலோ, மாறும் காலப்பகுதியில் வாழ்க்கைத் தொழில் நிகழ்ச்சித் திட்டத்திலோ, முறைசாரா நிலையங்களிலோ சேர்ந்திருப்பதை உறுதிப்படுத்தல் முதலியவற்றை நிறைவு செய்தல் வேண்டும். முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தப் பெற்றோருக்கும் அதிபர்களுக்கும் ஊக்குவிப்புக்கள் அளிப்பது பயனுடையதாகும்.

5) ஒவ்வோர் கிராம அதிகாரி மட்டத்திலும் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கீழ் பாடசாலை வரவுக் குழு (School Attendance Committee)ஸ்தாபிக்கப்பட வேண்டும். இக்குழுவில் ஆலோசகர்கள், குடும்ப சுகாதாரப் பணிப்பாளர், தொழில் உத்தியோகத்தர்கள், பிள்ளை சீர்திருத்த மற்றும் பராமரிப்பு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள், அங்கத்தவர்களாக நியமிக்கப்படல் வேண்டும். அதாவது, பாடசாலை வரவுக் குழுக்கள் வலயக்கல்விப் பணிப்பாளரின்கீழ் கிராம அலுவலர் அலகு மட்டத்தில் மீளமைக்கப்படல் வேண்டும்.

6) கோட்ட மட்டத்தில் கோட்ட வரவுக் குழு (Divisional Attendance Committee) அமைக்கப்பட்டு அது பாடசாலைவரவைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

7) பாடசாலை வரவுக் கண்காணிப்புக் குழுக்கள் வலய மட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளரின்கீழ் மீள வெவ்வேறு இடங்களில் அமைக்கப்படல் வேண்டும்.

8) மூன்றாம் நிலைக்கல்வியும் பயிற்சியும் அமைச்சின் கீழுள்ள வாழ்க்கைத் தொழில்சார் நிலையங்களின் கொள்திறன், வாழ்க்கைத் தொழில் கல்விக்கான மாற்றுக்கல்வி வாய்ப்புக்களை வழங்கக் கூடியவாறு பலப்படுத்தப்படல் அவசியம்.

9) தற்போது கல்வித் தேவைகள் புறக்கணிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள இலகுவில் பாதிக்கப்படக் கூடிய பின்வரும் குழுவினரிடம் கட்டாயக் கல்விப் பிரமாணங்களை அமுல்படுத்த விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படல் அவசியம்.

   i. தோட்டப்புறப் பிள்ளைகள்.

   ii. குறைபாடுடைய பிள்ளைகள்.

iii. வீட்டு வேலை உட்பட தொழில் செய்யும் பிள்ளைகள்.

iv. வெளிநாடு சென்றுள்ள பெண் தொழிலாளரின் பிள்ளைகள்.

v. வீதியோரச் சிறுவர்கள்.

vi. சிறுவர் இல்லங்களிலும் வெளியிலும் உள்ள அனாதைகள், கைவிடப்பட்டோர், ஒன்றுக்கும் வழியற்ற சிறுவர்கள்.

vii. தடுப்புக்காவல் இல்லங்கள், தடுப்பு வைப்பு நிலையங்கள், சான்றிதழ் படுத்தப்பட்ட பாடசாலைகள் என்பவற்றில் உள்ள பிள்ளைகள்.

10) இப் பிரமாணங்கள் அமுலாவதைக் கண்காணிப்பதற்கு உதவும் முகமாக அமைச்சின் திட்டமிடல் பிரிவு, வலயக் கல்வித் திட்டமிடல் பிரிவுகளும் பாடசாலைக்கு வெளியேயுள்ள பிள்ளைகள் ஒவ்வொரு தரத்திலும் இடைவிலகியோர் பற்றிய தரவுகளை வருடாவருடம் பிரசுரித்தல் வேண்டும்.

மாணவர்களின் வரவின்மை காலப்போக்கில் அவர்களைப் பாடசாலையில் இருந்து நீங்கிச் செல்வதற்கு வழிவகுக்கும். தொடர்ச்சியாகப் பாடசாலைக்கு வருகைதராத மாணவனுக்குப் பாடங்களை உரிய முறையில் கற்கமுடியாதுபோவதனால் அவன் பாடசாலையில் இருந்து விலகிவிடுகின்றான். வரவின்மையானது பாடசாலையின் ஒழுக்கக்கட்டுப்பாட்டைச் சீர்குலைப்பதுடன் வகுப்பறைக் கற்பித்தலையும் சீர் குலைக்கின்றது. மேலும் இது பரீட்சைகளிலும் மதிப்பீடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாகத் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி கணிப்பீடு செய்வதற்கு வரவின்மை பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மாணவர்களின் வரவு குறைவடைவதனால் பாடசாலையில் முகாமைத்துவப் பிரச்சினைகளும் ஏற்படும். வெற்றிகரமான முகாமைத்துவத்திற்கு மாணவர்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானவை.

### 3.3 மாணவர் இடைவிலகல் - யாழ்ப்பாணமாவட்டம் (Dropout in Jaffna District)

போருக்குப் பின்னரான யாழ். மாவட்ட இடைவிலகலை எடுத்து நோக்குமிடத்து 2010, 2011ஆம் ஆண்டுகளைவிட, 2012ஆம் ஆண்டில் மாணவ இடைவிலகல் மும்மடங்காகியுள்ளதை மேலுள்ள அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது. இதனை அண்மைய காலத்துப் பத்திரிகைச் செய்திகளும் உறுதிப்படுத்துவனவாக உள்ளது. மேலும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக யாழ். மாவட்ட இடைவிலகலை எடுத்து நோக்கும்போது அது பின்வருமாறு காணப்படுகின்றது.

### 3.4 இடைவிலகலைக் குறைக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

- பெற்றோருக்குப் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல்.
- கல்வியின் அவசியத்தையும் அதன் நன்மைகளையும் எடுத்துக்கூறும் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.
- பிள்ளைநேயப் பாடசாலை முறைமையை நடைமுறைப்படுத்தல்.
- மாணவர்களின் பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்தல்.
- பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உளநெருக்கீட்டைத் தீர்த்தல்.

### 04 முடிவுரை

இலங்கையினைப் பொறுத்தவரையில் சிறுவர்களின் உரிமை மீறல்களும் அதனை

அடிப்படையாகக் கொண்டு பாடசாலை இடைவிலகல்களும் காலாகாலமாக இடம்பெற்றுவருவது கண்கூடு. இம் மாணவர்களின் நலன் கருதி இப்பிரச்சினையில் அதிக கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. பெற்றோர்கள் மத்தியில் முதலில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். பாடசாலையை விட்டு இடைவிலகுவோருக்கு முறைசாராக் கல்வியை வழங்க வேண்டும். மாணவர்களின் கவனத்தை கல்வியின் பால் ஈர்க்கும் பொருட்டு கிராமங்கள் தோறும் நூலகம், விளையாட்டு மைதானம் என்பவற்றை அமைக்க வேண்டும். மனிதர்களின் சிறந்த வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒன்றாகக் கல்வி காணப்படுகின்றது. கல்வி பற்றியும் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் உலகின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள அறிஞர்கள் காலத்துக்குக் காலம் பல சிந்தனைக் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த உலகிலுள்ள அனைத்து நாடுகளும் இதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றன. எனவே சிறுவர்களின் முக்கியஉரிமையான கல்விஉரிமையை வழங்குவதில் எவ்வித பாரபட்சமும் காட்டாது அனைத்துச் சிறுவர்களுக்கும் சமனான கல்வியை வழங்குவது அவசியமாகும்.

**A. Gugan**

*Teacher Educator*

*J/National College of Education*

# யோகநாதம்

## இயல் நான்கு

## கடவுள் தந்த வரம்
## கை நழுவிப்போகிறது....

கோப்பாய் பெருவெளியில்
மலர்ந்த மலர்
கண்டி வரை சென்று
மணம் வீசியது
ஈற்றில் இளைப்பாற
வந்தது தன் இருப்பிடம்
மூன்றாண்டு அருகிருந்து
அதன் சுகந்தத்தை நுகர்ந்தவன்
ஐந்து வருடம் தூர நின்று
அவ் அழகை ரசித்தவன்
ஆகவே! யோகத்தைப் பாடும்
யோகம் எனக்கிருக்கு.
தலை மகனிற்கு விடைகொடுத்து
நிலை தடுமாறி நின்றோம்.
உன் கரம் பற்றியதால்
கரையேறி மகிழ்ந்தோம்
இன்று நீயும் விடைபெற்றால்,.....?
அகிலத்தை ஆளும்
ஆசான்களின் ஆசானே!
நீ ஆளுமையின் மறுவடிவம்
ஆழ்ந்த அறிவு,
நல்லாசிரியனுக்கு அவசியம்
இதைப் போதித்தவன் நீ
நடையைப் பார்த்து
இவன் நல்லவனா? கெட்டவனா?
உடையைப் பார்த்து
ஒழுக்கம் சொல்வாய்
நகைச் சுவைப் பாணியில்

உன் நாகரிகமான கண்டிப்பு
அது தான் உனக்குள்ளிருந்த ஆளுமை.
விசாலமானது உன் அறிவு
கலையைப் பற்றியும் கதைப்பாய்,
கவுன் சிலிங்கும் கொடுப்பாய்
தூண்டவும் செய்தாய்
எம்மைத் துலங்கவும் செய்தாய்,
அன்றாட வாழ்வுக்குள்ளே!
ஆயிரம் அர்த்தங்கள் சொல்வாய்
பாதைமுடி பஞ்சம் வந்தபோது,
அதையும் ஒரு பாடமாக்கினாய்
விறகும் கொத்த வேண்டும்,
வெங்காயமும் உரிக்க வேண்டும்.
உள்ள வளத்தை சிக்கனமாய்
உபயோகிக்க வேண்டும்.
கடல் கடந்து நாம்
சென்ற போது,
அருகிருந்து ஆறுதலளித்த,
அன்பு நீ.
உள்ளகப் பயிற்சியாளர்களை,
உளவியலால் தாக்குவாய்,
எங்கே? எப்போ? எப்படி?
ஆனால் வகுப்பறைக்கு
வந்திடுவாய்
தர உள்ளீடு தொட்டு,
தலை முடி அலங்காரம் வரை
நூறு கேள்வி கேட்பாய்,
விடையில்லாது முனகும் போது,

விரிவுரையாளரையும் கண்டிப்பாய்
வித்தக விநாயகனின் பக்தனே!
வேதனைகள் வந்த போதும்
நீ வீழ்ந்து விடவில்லை.
சாதனைகள் ஆக்கி நின்றாய்
கல்விச் சாலையில்
ஓர் சோலை தந்தாய்
கலை நயமாய் சிலைகள் வைத்தாய்
போக்கு வரத்துக்கு பேருந்து தந்தாய்
பெருமெடுப்பில் பட்டமளிப்பு
விழாவும் செய்தாய்.

சில சிறப்பை விரும்பாத,
பெரு விருட்சமே!
உனக்கொரு விழா, எடுக்கிறோம்.
அதற்கொரு மலர்,
மகிழ்வுடன் கண்டு
மனதார வாழ்த்துகிறோம்.
வயது உனக்கு ஓய்வு தந்தது
உன் பணிக்கு என்றும் ஓய்வில்லை
கல்விக்காக என்றும் வாழ்வாய்.
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

- சண்முகநாதன் கஜேந்திரன்

# 'மாமனிதர்க்கு மாணவனின் இதயத்தில் இருந்து.....'

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்கு. ஆனால் மண்ணிலே தோன்றுகின்ற ஒருசிலரால் மட்டுமே புகழோடு வாழமுடிகிறது. ஏனெனில் அவர்கள் நல்வர்களாக வாழ்வதால் புகழடைகிறார்கள். அந்தவகையில் யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக சாதனை பல படைத்த சரித்திர நாயகன்பற்றி அவர்களால் விதைக்கப்பட்ட ஆசிரியன் ஒரு சில வார்த்தைகளைப் பகிர்கின்றேன்.

பலரது பெயர்கள் பலருக்கு சிறப்பாக அமைவதில்லை; ஒரு சிலருக்கு மட்டுமே பெயரும் பெயருக்கேற்ற குணமும் ஒருங்கே அமைந்து விடுகின்றது. எனது அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய பீடாதிபதி அவர்கள் பெயரைக் கேட்டாலே அவரின் பெருமை புகழ் தெரிந்து விடும். உலகில் உள்ள யோகங்கள் அனைத்தயும் தன்னுள்ளே கொண்டு அவற்றுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் நல்ல மனிதர் திருமிகு S.K. யோகநாதன் அவர்கள். பெயருக்குள்ளே மட்டுமல்ல, தன் அழகான தோற்றம், மற்றவர்களை பேசினால்க் கூட கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்ற அவரது பேச்சு உண்மையாகவே கடவுளின் கொடை என்றே வர்ணிக்க முடிகிறது.

"நல்லார் ஒருவர் உளரேல்
அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்பதற்கு இணங்க இப்படிப்பட்ட ஒரு சில பண்பாளர்கள் வாழ்வதாலேதான் இவ் உலகம் இன்னும் வாழ்கிறது. என நினைக்கத் தோன்றுகிறது. கடவுளின் மறு அவதாரங்களைக் கதைகளில் பார்த்திருக்கிறோம் ஆனால் ஒரு சிலர் மட்டுமே அவ்வாறு வாழ்ந்துவிட்டுச் செல்கின்றனர். நான் கொஞ்சம் அதிகமாக அலம்பி விட்டேன் என்று பலர் நினைக்கக் கூடும்; ஆனால் அதுவே நிதர்சனமான உண்மை.



ஏனெனில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் படித்த காலத்தில் மதிப்புக்குரிய S.K. யோகநாதன் ஐயா அவர்கள் அங்கு உப பீடாதிபதியாக இருந்தார். பொதுவாக மாணவரிடத்தே மதிப்பும், அன்புள்ளமும் கொண்ட இவர் குணத்தை இவரின் மனத்தைப் புரிந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். 2001ஆம் ஆண்டவில் யாழ்ப்பாணம் - கொழும்பு பாதை திறக்கப்படாது இருந்தவேளை, மாணவர்கள் வவுனியாவில் இருந்து யாழ். வருவதற்குப் பெரும் தொகை பணத்தினை செலவழிக்க வேண்டி இருந்தது. அந்த நேரம் கல்லூரிக்கு விடுமுறை வந்த போது நானும் எனது நண்பர்கள் சிலரும் வரமுடியாத சூழ் நிலையில் பீடாதிபதியிடம் விடுதியில் தங்க அனுமதி கேட்டபோது உடனடியாக வெளியேறுமாறு பணிக்கப்பட்டோம். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை. தெய்வம் மனித வாழ்விலே தான் காட்சி தரும் என்பதை அனுபவத்தின் மூலமே புரிந்து கொள்ள முடியும். நாங்கள் செய்வதறியாது வவுனியாவிலும் யாருமற்ற நிலையில் என்ன செய்வது என கண்ணீர் விடும் போது "ஏண்டா நிக்கிறாய் போகாம ...." என்று ஒரு குரல் sir போக காசில்லை பீடாதிபதி நிற்க விடமாட்டாராம் ஆ....... சரி சரி எல்லோரும் என்ர விடுதிக்கு வாங்கோ....... மனித உறவில் வாழும் தெய்வங்கள் என்று புகழாமல் எவ்வாறு கூறுவது. காலத்தால் செய்த உதவி சிறிதெனிலும் ஞாலத்தில் மாணப் பெரிதல்லவா. தனது விடுதிக்கு அருகில் இருந்த ஏனைய

விரிவுரையாளர் ஒருவரின் விடுதியை வாங்கித் தந்ததோடு அரிசி, பருப்பு, கருவாடு என்று தன் வீட்டில் உள்ள பொருட்களைத் தந்து வடிவா சாப்பிடுங்கடா ஏதாவது தேவையெண்டா கேளுங்க. யாருக்கு இவ்வாறு மனம் வரும். எனது உயிரினும் மேலான ஆசானிடம் கற்கவேண்டியது நிறைய உள்ளது. காருண்யம் கொண்ட இதயம்; அவரது பேச்சைக் கூட; கேட்பதற்கு நாங்கள் ஆவலாக இருப்போம். அவர் வகுப்பிற்குள் வந்து விட்டால் மட்டுமல்ல மேடையில் ஏறிப் பேசத் தொடங்கினால் கூட கேட்டுக்கொண்டே இருக்கலாம். நேரம் போவது கூட தெரியாது. இது எனக்கு ஏற்பட்ட அனுபவம் மட்டுமல்ல யாரைக் கேட்டாலும் கூறுவார்கள்.

இப்படிப்பட்ட உத்தமர் ஓய்வுபெற்றுச் செல்வது கல்லூரிக்கு மட்டுமல்ல கல்விச் சமூகத்திற்கும் இழப்பாக அமைகின்றது. நல்ல மனிதர்கள் மனங்களில் சரித்திரமாக இடம் பிடிக்கின்றனர். சாதனை பல செய்து சரித்திரம் படைத்து இன்று ஓய்வினைப் பெற்று மணிவிழா காணுகின்ற என் குருநாதன் யோகநாதன் ஐயா நூறாண்டுகள் நோய்நொடி இன்றி, பெரும் புகளோடு வாழ வேண்டுமென கண தெய்வமது சிறப்புப்பெற்றிட என் கண்கண்ட தெய்வங்களை சிரம் தாழ்த்தி கரம் கூப்பி நிற்கின்றேன்.

நன்றி

ஆசிரியர்
ப. சசிகுமார் B.A
*ய./ தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி*

# தெளிந்த அனுபவமும் செயல் திறனும் மிக்க பீடாதிபதி

*மக்கள் பண்பில் மா மேதையாய்*
*மனித நேயம் மலர்ந்திடும் தென்றலாய்*
*மாண்பு உறவே மட்டற்ற மகிழ்வே*
*மனிதம் சாத்திடும் மாங்கான புகழே!*

*தன் உடமையாகக் கல்லூரிச் சொத்துக்களை*
*அல்லும் பகலும் ஓய்வின்றிக் காத்து*
*உடன் பிறந்த உறவுகள் போலவே*
*உறவு தீட்டிடும் உத்தமத்தின் விருட்சமே....*

*அகிலம் கண்ட அருட் புதல்வனாய்*
*அறிவுத் தேடலுக்கு ஆன வழிகாட்டியாய்*
*ஆக்க ஊக்கம் அள்ளித் தெளித்து*
*ஆசிரியம் வளர்த்த ஆக்கமாமே உம்பணி.*

*தெளிந்த அனுபவம் தேறிய புகழிடம்*
*தேடி வருகுமே தெளிந்த புகழ் உம்மிடம்*
*உம் பணி உயர் பணி யாகிட*
*கல்விக் கதிரோனாய் நாமம் கொண்டீரே!*

*காலத்தினால் அழியாத உம் சேவை*
*கல்லில் எழுத்தாய் காலத்தின் நெஞ்சங்களில்*
*கவி பாடி வாழ்த்துகின்றேன்.....*
*கல்விக் கதிரோனே காலமெல்லாம் நீடு வாழ்வீர்*
*வாழ்கவே வாழ்க நீவீர்*
*வளரவே "நீடு நாளாய்"*

**அ.தனுராஜ்**
*நாடகமும் அரங்கியலும்*
*உள்ளகப்பயிற்சி ஆசிரியர்.*

# A message from 'Melting Pot'

This could be one of the golden moments in mylife to write niece of note forthe diamond jubilee of our President whose experience overcame my age. My fingers numb at times as a written paper can never be equal to our hearts.

As a universal truth, time grasps you in the name of 'retirement' in the journey of life. It is awesome to get out of that rat race, but we were amazed that you learned how to get along with less cheese. You set the highest standards for yourself and others; showing honor, pride and time for moving on, living out the memories and dreams you earned in the past. It's absolutel fortunate voyage for us as you are the beacon forour crew and our relationship bloomed like and like a colorful joy. Out loneliness turned to hope and life was filled with quenched our thirst of ambition.

On behalf of the seeds and sap.................. education, I pray the almighty to keep you safe and well.

**E.Gowrisan,**
*9th Batch,*
*JNCOE.*



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது அணி மாணவ ஆசிரியராக ஆசிரிய முன்சேவைப் பயிற்சியினைப் பின்பற்றிய வேளையில் இன்று மணி விழாக் காணுகின்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்து ஓய்வு பெறும் உயர்திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களிடம் சிறந்த ஆசிரிய வகிபங்குகளை கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எங்களது ஆரம்பக்கல்வி பயிற்சிநெறிக்குரிய பொறுப்பு விரிவுரையாளரான மணி விழா நாயகரிடம் பல பயிற்சி அனுபவங்களை உள்வாங்க முடிந்தது. இன்றைய நாளில் ஆசிரிய கல்வித்துறையில் ஒரு பதவிநிலை அலுவலராக உயர்வடைவதற்கான அடித்தளத்தை இட்டு வழிகாட்டிய பெருமை, வழிகாட்டற், பண்புகளும் உயர்திரு. எஸ். கே. யோகநாதன் அவர்களையும் சாரும்.

இப்பொழுது நான் சேவை செய்கின்ற வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றில் முகிழ்நிலை ஆசிரியராக இருந்த காலத்திலிருந்து உயர்திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்களது விரிவுரை செயற்பாடுகள், மாணவ ஆசிரியர்களினது நடத்தைகள், இந்துசமய வழிப்படுத்தல்கள், ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் கற்பித்தல் பயிற்சிக் காலத்தில் மேற்கொண்ட மேற்பார்வை செயற்பாடுகள் என்பவற்றில் பொருத்தமான உத்திகளைப் பின்பற்றி சிறந்ததொரு ஆசிரிய கல்வியியலாளராக உயர்த்தியுள்ளார். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கிடைத்த படிமுறை அனுபவங்களைத் தனது மனதில் உள்வாங்கி இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைச் சிறந்த முறையில் வழிகாட்டிய மணி விழா நாயகனையும், அவர் தம் குடும்பத்தினரையும் எல்லா வளங்களும் அடைந்து ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துவதுடன், மணி விழா நாயகனின் வழிப்படுத்தல்கள் எனது சேவைக்காலத்திலும் பிரகாசிப்பதை எண்ணி நிறைவடைந்து கொள்கின்றேன்.

**திருமதி. சுபிதா ஹரிஹரசக்தி** (SLTES III)
*ஆசிரிய கல்வியியலாளர்,*
*வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,*
*வவுனியா.*



எனது மதிப்பிற்குரிய பேராசான் உயர்திரு S.K. யோகநாதன் அவர்கள் தனது சேவையை ஆசிரியராக ஆரம்பித்து ஆசிரியர்களை உருவாக்குகின்ற கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்து மணிவிழாக் காணும் இவ்வேளையில் அவரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடமையில் பற்றும்/ கல்விக்கான முழு அர்ப்பணிப்பும் மற்றவர் மனங்களைப் புண்படுத்தாத செயலும் கொண்டு அன்பிலும் பண்பிலும் சிறந்த ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து ஓய்வு பெறுகின்ற இவ்வேளையில் இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி நர்மதா பரமேஸ்வரன்** (SLEAS),
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம் ,
துணுக்காய்.



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்ற காலப் பகுதிகளை மீட்டிப்பார்ப்பதுடன். அங்கு ஒப்பற்ற ஆசானாகவும் இணையற்ற வழிகாட்டியாகவும் இருந்து சேவையாற்றிய உயர்திரு S.K யோகநாதன் அவர்களை மனக்கண் முன் நிறுத்திப்பார்க்கின்றேன்.

ஆரம்பக்கல்வி பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்காக கல்லூரியின் இரண்டாவது அணியில் இணைந்து கொண்ட நான், வெற்றிகரமாக நிறைவுசெய்து இன்றைய கல்வி நிர்வாக சேவையில் ஓர் உறுப்பினராக இணைந்து சேவையாற்றுவதற்கு வழிகாட்டியவர் இவரேயாவார். அன்பும் கண்டிப்பும் அரவணைப்பும் ஆலோசனையும் அவருக்கு கை வந்த கலை. கிண்டலால் கிழுகிழுப்பூட்டி இளைஞர்களின் மனநிலையறிந்து நல்வழிகாட்டி அவர்களை இமயத்திற்கு உயர்த்துவதில் அவருக்கு நிகர் அவரே ஆவார்.

இவர் விரிவுரையாளராக இருந்த காலம் எங்கள் வாழ்வில் பொற்காலமாகும். பரிவும் பாசமும் கொண்டு நல் ஆசான்களையும், அதிபர்களையும், அதிகாரிகளையும் நாட்டின் பல பாகங்களிலும் உருவாக்கிய மானிடத்தின் மாண்புமிகு மைந்தனே; யாழ் .தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதியாக இருந்து ஓய்வு பெறும் இவ்வேளையில் உங்களை மீட்டிப்பார்ப்பதற்கு எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையினை இட்டு பேருவகை அடைகின்றேன். என்றும் உங்கள் வாழ்வில் வசந்தமும் நித்தியமும் இணைந்திருக்க எல்லாம்வல்ல இறைவன் துணைபுரியட்டும்.

**திரு.செ. மகேந்திரகுமார். (SLEAS)**
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்*
*வலயக் கல்வி அலுவலகம்*
*திருக்கோவில்.*



கல்லூரிக்குள் கலகக்காரர்களாகச் சேர்ந்தோம். போர்ச்சூழலால் குடும்பத்திலிருந்து பிரிந்து தொடர்புகளில்லாமல் தனித்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம். தினசரி சிறு விடயங்களுக்காகக் கலகம் புரிந்தோம். கலகமடக்க கல்லூரி நிர்வாகம். பதட்டமேயில்லாத ஒரு தனிமனிதனை அனுப்பியது. அந்த மனிதனுக்கு கலகங்களை அடக்கும் மந்திரம் தெரிந்திருந்தது.

எல்லா விரிவுரையாளர்களும் கற்பித்தார்கள். ஆனால் அந்த சிரேஷ்ட விரிவுரையாளர் பாடம் நடாத்தியது அபூர்வம். எனினும் அதிகாலை தொடக்கம் இரவு வரை எங்களுடனேயே உடனிருந்தார். ஒரு கேலிப்பார்வை, கிண்டலாக சிலசொற்களால் எங்கள் நெளிவுகளை நேராக்கினார். அவரால் தான் எங்களில் பலர் சீராக உடை உடுத்தவும், சப்பாத்து அணியவும் தொடங்கினோம். உணவு மேசையின் நாகரிகமறிந்தோம்.

கல்லூரி எனும் கூட்டுக்குள்ளே மயிர்கொட்டிப் புழுக்களாக சென்ற நாம் ஒரு மாயத்தால் வண்ணத்துப்பூச்சிகளாக வெளியே வந்தோம். ஆம், வவுனியா கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியே வந்த மூன்றாம் அணி ஆசிரியர்கள் நாடெங்கிலும் கற்பிக்கிறோம். இன்றும் எங்களுக்கென்று ஒரு நற்பெயருள்ளது. அன்று மயிர்க்கொட்டிகளை வண்ணத்துப் பூச்சிகளாக்கிய மந்திரக்காரர் எங்கள் ஆசான் திரு. S.K. யோகநாதன் அவர்களே.

செ. பிரணவநாதன் (SLAS)
*யாழ். மாநகர ஆணையாளர்.*



கலகலப்பான பேச்சு, சிரித்தமுகம் எல்லோரையும் கவர்ந்திழுக்கும்தோற்றம்உடையஎனதுசிரேஷ்டவிரிவுரையாளர் S.K. யோகநாதன் சேர் அவர்களது நினைவுகளை ஒருகணம் மீட்டிப் பார்க்கின்றேன்.

பல இன்னல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியராகப் பயிற்சி பெற்ற போது பலதரப்பட்ட நிலைகளில் நின்று சேர் எமக்கு வழிகாட்டினார்.

எம்மைப்பட்டைதீட்டும்பொற்கொல்லராகயோகநாதன்சேர் விளங்கினார். நான் ஆசிரியராகவும் தற்போது நிர்வாகியாகவும் திகழ்வதற்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி எனக்குப் பல வழிகளில் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

பேரன்புமிக்க எனது ஆசான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியாக இருந்து ஓய்வுபெறும் இவ்வேளையில் அவர் மேலும் பலகாலம் நலத்துடன் வாழ இறைவன் நல்லருள் புரிவாராக.

திரு. குமாரசிங்கம் குணநாதன் (SLAS)
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
திருகோணமலை.



Though Teacher's services are always immeasurable,

I find Our Sir as a man of,

Self Confidence - which helps to overcome the six basic fears with every person is cursed .

Initiatives & Leadership - which shows how to become a leader instead of a follower in chosen field of endeavor.

Enthusiasm - which enables anyone saturate all with whom you come in contact with interest in you and your ideas enables.

Self- control- which is the "balance wheel" with which you control your enthusiasm and direct it where you wish it to carry you.

Imagination- which stimulates one's mind so that new ideas are created to attain the chief aim of one's life.

And Cooperation- which teaches the values of team work.


**Miss Lathanki Ambigaipalan SLEAS**
*Deputy Director of Education.*
*Vavuniya South, Zonal Education Office.*
*Vavuniya.*



நான் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 5ஆம் அணியில் ஆசிரியர் பயிலுநராகப் பயின்றேன். இக்காலப் பகுதியில் பெருமதிப்பிற்குரிய திரு. S.K . யோகநாதன் ஐயா அவர்கள் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவர் தனது கல்விப்பணியோடு ஆசிரியர் பயிலுநர்களின் சகல விடயங்களிலும் அக்கறை கொண்டு அவர்களை வளர்த்தவர். தினமும் காலை உடற்பயிற்சிக்கு வருகை தந்து உடற்திறனை வளர்த்து பாட வேளையில் உளத்திறனை வளர்த்துக் கொள்வதோடு மட்டுமல்லாது தினமும் இரவில் சாப்பாட்டு மண்டபம் வந்து பயிலுநர்களின் உணவு சம்பந்தமான குறை நிறைகளைக் கேட்டறிந்து பல அறிவுரைகளையும் கூறி "Good night" சொல்லி விடுதிக்கு அனுப்புவார்.

இவர் சிறந்த ஒரு ஆசானாகவும் சிறந்த ஒரு நிர்வாகியாகவும் சிறந்த ஒரு பெற்றாராகவும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் தன்னை அர்ப்பணித்து எம்மை வளர்த்தவர். இவரின் சேவையைப் பின்பற்றியே நாமும் எமது சேவையினைத் தொடர்ந்து செல்கின்றோம்.

**திரு.சின்னையா சுபாஸ்கரன்**

*(பகுதி நேர உடற்கல்வி விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)*

*ஆசிரியர்,*

*மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை.*



காலத்தின் கட்டாயம் நேரத்தின் நிர்ப்பந்தம் எம் வாழ்க்கையில் எம்மைச் சிகரமாய் உயர்த்தி விட்ட உள்ளங்களை உயிர் உள்ளவரை மறக்க முடியாது. அவ்வாறு மறக்க முடியாதவர்களில் ஒருவர்தான் யோகநாதன் சேர். கல்லூரி வாழ்வில் நாம் முகம்கொடுத்த சவால்களை மிகவும் சாதுரியமாகவும் சாந்த முகத்துடனும் அவர் கையாண்ட விதம் இன்றைக்கும் அவர் மீதான மதிப்புக் குறையாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

அவர் ஒரு யதார்த்தவாதியாகவும் மற்றவர்களைப் புரிந்து நடப்பதில் மிகவும் முன்மாதிரியாகவும் எம்மத்தியில் இருந்து பிழைகளைப் பகிரங்கமாகவும், சமயோசிதமாகவும் சுட்டிக்காட்டுவதன் மூலம் ஆசிரியமாணவர் மத்தியில் பல சிறந்த நடத்தை மாற்றங்களைக் கொண்டுவந்தார். இன்று நாம் தேசியரீதியில் பல்லின சமூகத்தின் மத்தியில் வேலை செய்வதற்குத் தேவையான திறன்களை கல்லூரிக் காலத்தில் பெறுவதற்குக் காரணமானவர்களில்

யோகநாதன் சேரின் பாத்திரம் மிகப்பெரியது என்பதில் மாற்றுக் கருத்துக்கிடையாது. அவர் மென்மேலும் சமூகத்திற்கு வழிகாட்ட இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.


**யூ. எல். உவைஸ்**

*உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*

*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,*

*கல்வி அமைச்சு.*

*'இசுருபாய''*

*பத்தரமுல்ல.*

திரு. S.K.யோகநாதன் ஐயாவைப் பற்றிப் பலவிடயங்களைக் கதைகதையாகச் சொல்லலாம். பக்கம்பக்கமாக எழுதலாம். இந்த நூற்றாண்டில் அவரின் சேவையை நினைவு கூர்ந்து அவருக்கு மணிவிழா எடுப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அவரைப் பற்றி என் மனத்திரையில் ஓடும் சில நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுண்டு. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 2000-2002 கல்வியாண்டில் இவரின் பன்முக குணாதிசையங்களைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்தது பாக்கியமே. தான் தவறு எனக் கருதும் விடயங்களை காரசாரமாகக் கண்டித்து விடுவதில் வல்லவர். தான் நம்பிய கொள்கையில் இறுக்கிப் பிடித்து எவருக்கும் பயப்படாது அவற்றைப் பின்பற்றிய ஒரு கொள்கைவாதி. பழைமையை நினைவுகூரும் பண்பாளர். வாய்ச்சொல்லால் கோபத்தில் பேசுவார். ஆனால் அவற்றைத் தனது வாழ்வில் சாதிக்கமாட்டாத உள்ளம் படைத்த உத்தமர்.

தனது தொழில் மகத்துவம், தொழில் தர்மம், சிறந்த தலைமைத்துவம் என்பவற்றால் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதியாக உயர்வு பெற்றவர்

திரு. S.K.யோகநாதன் ஐயா கல்வியியற் கல்லூரியில் இருந்த அறிவின் முகவரிகளில் ஒருவர். அவற்றில் இடப்பட்ட காற் புள்ளிகளில் ஒன்றாய் அமைந்த பேறு எம் வாழ்வில் கிடைத்தது என் பாக்கியமே. வாழ்வில் முந்தியிருக்கச் செய்யவே வகுப்பறையில் என்னைக் காணும் போதேல்லாம் பலவாறு வசைபாடி திட்டித்தீர்த்தவர். கட்டுறுப் பயில்வுதனை என்னிடம் கட்டுப்பாட்டுடன் நடாத்திப் பார்த்தவர். அப்புறம் தான் தெரிந்தது; அறிவிற்குப் புரிந்தது. அத்தனையும் அன்பின் வெளிப்பாடு.

ஆயிரம் பள்ளிகள் கட்டுவதும்; அரைக்கோடி மக்களுக்கு உணவளிப்பதும் ; அதனாலே கிடைக்கும் அத்தனை புண்ணியங்களும் உங்கள் - அன்பு அதட்டலில். வேர்கள் கண்ணில் தெரிவதில்லை ; விழுதுகளை நம்பி அவை வாழ்வதில்லை; வேர்கள் தாங்கள், விழுதுகள் நாங்கள். ஒரு முறை பிறந்திட வேண்டும் உங்களுக்கு முன்னால்... ஒரு நாள் வாழ்ந்திட வேண்டும் உங்களுக்கு ஆசானாய்.

**திரு. பொன். ஜெயரூபன்.**
*செயற்றிட்ட அதிகாரி (இந்துசமயம்)*
*தேசிய கல்வி நிறுவகம். மஹரகம.*



வவுனியாதேசியகல்வியியற்கல்லூரியின் உபபீடாதிபதியாக விளங்கிய S.K யோகநாதன் ஆசான் எமது ஆசிரியத்துவப் பயிற்சிக் காலத் தவவாழ்வில் எமக்கேற்ற நற்சூழலை வழங்கிய ஒப்பற்ற தபோவனமாவார். அவதானிப்பின் மூலம் ஒவ்வொரு மாணவரையும் அணுவணுவாக இனங்கண்டு நெறிப்படுத்தியதுடன் பக்கவிளைவுகள் அற்ற தீர்மானங்களை முடிவாக நிறைவேற்றுவதில் வல்லவர்.

இந்து மன்றத்தின் போசகராக விளங்கிய பெருந்தகையின் பேச்சும் செயலும் ஆடம்பரமற்ற தோற்றமும் வாழ்க்கையும் ஈழத்துச் சித்தரான யோகர் சுவாமிகளை நினைவூட்டவே நாமும் எம் ஆசானை அன்பாய் யோகர் என்று அழைத்து மகிழ்வோம்.

ஆசானாய், நண்பனாய், அதிகாரியாய் சிறந்த நிர்வாகியாய், வழிகாட்டியாய், வாழ்ந்து எம்மையும் வாழ வைத்து அகவை அறுபதில் பீடாதிபதியாய் ஓய்வெய்தும் எம்மாசான் தன் குடும்பத்துடன் நூற்றாண்டு கண்டு வாழ இறைவனை வேண்டி இறைஞ்சுகின்றேன்.


தாயுமானவர் நிகேதன்

*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இந்துசமயம்*

*வலயக் கல்வி அலுவலகம்*

*கிளிநொச்சி.*



இன்றைய யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி முன்னைய எம் விரிவுரையாளர், மணிவிழாக் கொண்டாடுவதில் அவரிடம் பயிற்சி பெற்ற ஆசிரியை என்ற ரீதியில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இவரிடம் நான் பெற்ற பயிற்சியே இன்று எனது தொழிலை சிறப்புடன் செய்வதற்கு வழிகோலுகிறது.

தன்னலம் கருதாது சேவை மனப்பாங்குடன் தம் பணி செய்த விரிவுரையாளரை என்றும் மறக்க முடியாது. மனித சமுதாயத்தின் தனித்துவங்களை ஒவ்வொரு சந்ததிக்கும் எடுத்துச் செல்லும் அளப்பரிய சேவையை வழங்கி வரும் பல ஆசிரியர்களை இவர் உருவாக்கியுள்ளார். இவரது கல்விப்பணி இன்னும் பல பரிநாமங்களை எடுத்து தன்னிகரில்லா தரக்குறியுடன் இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து சாதனை படைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**திருமதி கௌசல்யா றோய் தயாளராஜன்**
*ஆசிரியர்.*
*கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ,(தேசிய பாடசாலை)*
*பம்பலப்பிட்டி,*
*கொழும்பு-04.*



யோகநாதன் சேர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் உப பீடாதிபதியாகக் கடமையாற்றிய காலங்களிலே அவருடைய செயற்பாடுகளை ஞாபகப்படுத்திப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். காலை 5.30 மணி என்றால் ஞாபகத்திற்கு வருவதும் இவரே, காரணம், அந்தநேரம்தான் காலை உடற்பயிற்சிக்குச் செல்ல வேண்டிய நேரம். நாங்கள் அங்கே சமுகமளிக்கின்றோமோ இல்லையோ ஆனால் S.K.Y அங்கே நிற்பார். தமது சிரமங்களைப் பாராது எமது நல்வாழ்க்கைக்காக அவர் செயற்பட்டார் என்று கூறுவது மிகையாகாது.

காலை, மதியம், இரவு உணவு வேளைகளில் கூடுதலான நேரங்களில் எங்களுடனே இருந்து உணவு பகிர்ந்து கொள்வார். இவர் வகுப்பறைக்கு வந்து விட்டால் வகுப்பறையே மகிழ்ச்சியான சூழலாக மாறிவிடும். எம்மை நல்வழிப்படுத்தும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறுவார். அவர் கூறிய ஆலோசனைகள் அறிவுரைகளை ஒரு நாளும் கோபத்துடன் கூறியது கிடையாது. இவருடைய சேவைக் காலத்தில் என்னுடைய மனதில் மட்டுமல்ல எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்த உத்தமர்.

இன்றும் வெளி மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் ஏனைய ஆசிரிய நண்பர்கள் எமது ஆசானை சந்தித்துத் தான் செல்வார்கள். காரணம் கதையைக் கேட்பதில் அவ்வளவு ஆர்வம். இவ்வாறாக தனது சேவைக்காலத்தில் ஒவ்வொருவருடைய மனங்களிலும் இடம் பிடித்து ஆற்றிய சேவைகள் அளப்பரியது.

இவ்வாறாக சிறந்த சேவைகளை ஆற்றிய இவர். எதிர் வருங் காலங்களில் சீருஞ்சிறப்புடன் மேலும் சிறப்பாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி சியாமா சகிலன்**
*ஆசிரியர்*
*யாழ் / வேம்படி உயர்தரப் பாடசாலை (தேசிய பாடசாலை)*
*யாழ்ப்பாணம்.*



மணிவிழா நாயகரான பெரும் மதிப்புக்குரிய எனது உபபீடாதிபதி அவர்கள் வெளிமாவட்ட மாணவர்களாகிய எமக்குப் பல வழிகளில் ஆலோசனையும், உதவிகளும் புரிந்து எமது உள்ளத்தில் என்றும் நீங்காத ஒருவராக நிலைத்து விட்டார்.

அவரது சிலேடை நயம் பொருந்திய வார்த்தைகள் என்றும் பசுமையானவை. அன்பும், வேண்டும்போது கண்டிப்பும் கொண்ட இவரது நடத்தைகள் இன்று நான் சிறந்த ஆசிரியராக முன்னணிப் பாடசாலையில் கற்பிப்பதற்கு வழிகாட்டியுள்ளன.

அத்தகைய பெருமகனார் நீண்ட காலம் நலத்துடன் வாழ இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி நிசாந்தி ஜீவா**
*ஆசிரியர்*
*மா/ மாத்தளை இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)*
*மாத்தளை.*



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த எம் குருவே! எம் போன்ற எத்தனை ஆசான்களை உருவாக்கினீர்கள். உண்மையிலே நீங்கள் ஒரு பிரமாணிக்கம் தான். நாம் கல்லூரியில் ஆசிரிய மாணவராய் இருந்த அந்த நாட்கள் என்றும் பசுமையானவை தான். காரணம் பண்பான தலைவன். ஆளுமையின் சிகரம், கல்வியின் கலங்கரை விளக்காய் இருந்து எம்மைக் கரைசேர்த்த உத்தமர் நீங்கள்.

" நாவெடுத்து நீங்கள் உரைத்தால்
நாம் சிரித்து மகிழ்வோம் - உங்கள்
மனிதத்துவத்தைக் கண்டதும்
பசி கூட நில்லாது ஓடிவிடும்.
வார்த்தையில் சிகரமும்
பார்வையில் நேர்மையும் கொண்ட - எம் குருவே!

எங்களிற்கு குருவாகவும், தந்தையாகவும், உற்ற நண்பனாகவும் எம்மை வழிநடத்திய சீலத்தின் உறைவாழனே! இன்று மணிவிழாக் காணும் உங்களை கல்லூரியின் 6ஆம் அணி சார்பில் வாழ்த்துவதில் நான் பெருமையடைகின்றேன்.

" பாதம் வணங்கி நின்று வாழ்த்துகின்றேன்
பாரினில் உங்கள் புகழ் என்றும் பதியப்படும்
நெடுமரம் வானோங்கி வளர்வது போல - உங்கள்
நெடும் சேவை என்றும் ஓங்கி வளரட்டும்
உளம் மகிழ்ந்து வாழ்த்தும் அன்பின்,

திரு. R.S. மயூரன்,
ஆசிரியர் , கணித பாட இணைப்பாளர்,
மன்னார் / புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி.



எமது சமுதாயத்தின் உயிர் நாடியாகத் திகழும் யாழ்ப்பாணக் கல்விக் கலாசாரத்தின் பெருமைக்குரியவர்களில் ஒருவராகத் திகழும் அன்புக்குரிய பேராசான் பீடாதிபதி அவர்களுக்கு மணிவிழா மலர் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இவரது காலத்தில் ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமையைப் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

எமக்கெல்லாம் ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகளில் வழிகாட்டியாகத் திகழ்ந்து எம்மை ஆசிரியப் பண்புக்குரிய பயிற்சியை வழங்கிய சிறப்புற சேவையாற்ற வழிகாட்டியமைக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

எந்நேரமும் புன்னகை கலந்த நகைச்சுவைப் பேச்சாற்றலால் அனைவரையும் கவர்வது மட்டுமன்றி, தனது அனுபவப் பகிர்வுகளால் எம்மை நல்வழிப்படுத்துவார். ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகளை எளிமையாகவும், உதாரணத்துடன் நகைச்சுவையுடனும் கூறி எம்மை சிந்திக்க வைப்பதுடன் பாடசாலைகளில் நாங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துரைத்து சிறந்த பயிற்சியை வழங்கியுள்ளார்.

இவரது உயரிய பண்புகளில் ஒன்று, தாமே முன்வந்து எங்களுடன் இணைந்து இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் இரவு , பகலாகி எமது ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் திறம்பட வளர்ப்பதற்கு உறுதுணையாக இருந்தவர் இவ்வாறு முகிழ்நிலை மாணவர்களையும் தனது பிள்ளைகள் போல் பொறுப்பெடுத்து வழிகாட்டியாக திகழ்ந்தது மட்டுமன்றி சகஜமாக அனைவருடனும் பழகுவதும் இவரது உயரிய பண்பாகக் காணப்படுகின்றது. இவரது அளப்பெரும் சேவையினால் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகமான சிறந்த ஆசிரியர்களை உருவாக்க முடிகின்றது.

மணிவிழாக் காணும் நாயகனின் சேவை என்றும் தொடர எல்லா நலன்களும் பெற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல "வித்தக விநாயகரின்" அருளாசியை வேண்டுகின்றேன்.

திரு. சொக்கலிங்கம் ஹரிசங்கர்
*ஆசிரியர்,*
*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தேசிய பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.*



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பண்பாட்டுப் பொக்கிஷமாய், பன்முகச்சிந்தனையாளராய், கடைசி யுத்த காலத்திலும் பல சவால்களுக்கு முகங்கொடுத்து, அன்புடன் எம்மைச்சிறந்த வார்ப்புகளாக உருவாக்கிய பெருமை, திரு. S.K. யோகநாதன் சேர் அவர்களையே சாரும். என்னுடைய திறமையை இனங்கண்டு அதனை வெளிக்கொணர சிறந்த வழிகாட்டியாக இருந்து வாண்மைத்துவமுள்ள ஆசிரியராய் திகழ ஊன்றுகோலாக இருந்தவர். ஆசிரிய பரம்பரைக்கு அரிய பொக்கிஷமாக விளங்கியவர். இவர் மேலும் கல்விசார் பணி தொட இறைவனை இறைஞ்சுகின்றேன்.


**செல்வி ச. சுபாங்கி**

*ஆசிரியர்,*

*மட்/ சிவானந்தக் கல்லூரி - (தேசிய பாடசாலை),*

*மட்டக்களப்பு.*



மணிவிழா நாயகனாகிய எனது மதிப்புக்குரிய பீடாதிபதி அவர்கள் பற்றிய பசுமை நிறைந்த நினைவுகளை மீட்டிப் பார்க்கும் போது எனது உள்ளம் பூரிக்கின்றது. பீடாதிபதியாக, விரிவுரையாளராக, விடுதிமேற்பார்வையாளராக, விளையாட்டுத்திடலில் பயிற்றுவிப்பாளராக, ஆலய அறங்காவலராக, பெற்றோராக, நண்பனாக, நல் வைத்தியராக அத்தனை பாத்திரங்கள் ஏற்று எம்மோடு அவர் பழகினார்.

பல இன்னல்கள் நிறைந்த காலத்தில் தரமான உணவுகளை எமக்கு வழங்க வேண்டும் என்பதற்காக அவர் எடுத்த முயற்சிகள் பற்பல. ஒரு தாயைப் போல அவரது செயற்பாடுகள் விளங்கின. இன்று சிறந்த ஆசிரியராக நான் விளங்குவதற்கு எமது பீடாதிபதி அவர்கள் வழங்கிய வழிகாட்டல்களே காரணமாக அமைகின்றன.

**திரு. K. தர்மகுமார்**
*ஆசிரியர்,*
*திரு/சண்முகா இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)*
*திருகோணமலை.*



மலையகத்தில் இருந்து கல்லூரிக்கு வருகைதரும் பொழுது போக்குவரத்துரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் பல இன்னல்களை அனுபவித்து, கல்லூரிக்குச் செலுத்தக்கூடிய பணம் சரி கையில் இல்லாமற் கல்லூரிக்குள் நுழைந்தபோது எங்களை எமது பீடாதிபதி எதனையும் பொருட்படுத்தாது கல்லூரிக்குள் அனுமதித்தார். அத்தருணம் கல்லூரி அனுபவம் அற்ற எங்களுக்கு ஒரு மகத்தான மனிதக்கடவுளாக அவர் திகழ்ந்தார். பின்னர் காலநிலை ஒவ்வாமையால் நோய்வாய்ப்பட்ட போது மருந்து எடுத்துக்கொடுத்து அதற்கேற்ற உணவுவகைகளுக்கு ஏற்பாடு செய்தார். ஆகையினால் இன்றும் எங்கள் மனதில் தந்தையாகத் திகழ்கிறார்.

எங்களைத் தனித்தனியே அறிந்து எங்களது பிரச்சினைகள், கஷ்டங்கள், திறமைகள் எல்லாவற்றுக்கும் ஏற்ப வழிகாட்டிய அவர் ஒரு பேரஞர் ஆவார். எப்பொழுதும் புன்னகைபூத்த முகத்துடன் பிறரையும் புன்னகைகச் செய்யும் குழந்தை மனம்கொண்ட இவர், எங்கள் உடல், உள, கல்வி அனைத்து நலத்திலும் அக்கறை கொண்டு, முகிழ்நிலை ஆசிரியராக வந்த எமக்கு, நாங்கள் நல்லாசிரியர்களாகச் செல்வதற்கு வழிகாட்டிய மாமனிதராவார். அத்துடன் சாதாரண மாணவராக வந்து இன்று மலையக மண்ணில் நல்லாசிரியராக சேவையாற்ற வழிகாட்டிய எமது பீடாதிபதி நலத்துடன் நீண்ட காலம் வாழ இறையாசியை வேண்டுகின்றேன்.

**திருமதி சுமித்ராதேவி ரசிகுமார்**
*ஆசிரியர்,*
*ப/ ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயம்,*
*பண்டாரவளை.*



யாழ். கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திரு. S. K. யோகநாதனின் பணிக்காலத்தில் நான் கல்லூரியிற் பெற்ற அனுபவங்கள் பற்பல. அவற்றில் ஒரு சிலதை நினைத்துப் பார்க்கின்றேன். அவரின் ஆற்றல்மிக்க நிர்வாகத்திறமையை அவதானித்து வியந்துள்ளேன். அத்துடன் அங்கு இருந்த அனைத்து மாணவர்களின் தாயாக, தந்தையாக இருந்து வழிநடத்தி ஓய்வுபெறப்போகும் எம் அன்புக்குரிய பீடாதிபதி மாணவர்களாகிய எம்மீது கொண்ட மிகுந்த மரியாதையும், அன்பும், மதிக்கும் பண்பும் எம்மை நெகிழவைத்தது என்றால் மிகையாகாது, மேலும் இவரின் பணிக்காலத்தில் ஏற்பட்ட ஒரு சில இடையூறுகளின்போதும், சவால்களைச் சந்தித்த போதும் உடல், உளம் சோராது பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்திற் சிறப்பாகச் செயற்பட்டார்.

கடமையிற் கருத்துடனும், கண்ணியத்துடனும் செயற்பட்ட இவரது சேவை கல்வியியற் கல்லூரியில் நிறைவடைந்தாலும் தமிழ் சமூகத்திற்குத் தொடர்ந்து கிடைக்கும் வகையில் இவருக்கு நல்ல தேகாரோக்கியத்தையும், உள நிறைவையும் இறைவன் வழங்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட்சகோதரி மரிய டவ்னி**
*புனித ஜோசப் கன்னியர் மடம்,*
*மட்டக்களப்பு.*



உயர்திரு எஸ். கே. யோகநாதன் அவர்களின் சேவைக்காலத்திற் கல்வியாண்டை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்ததை இட்டுப் பெருமையடைகின்றேன். கல்வியை மட்டும் போதிக்காமல் நற்பண்புகளையும் புகட்டிய தலைமைத்துவம் மிக்க பீடாதிபதியாக அவர் விளங்கினார்.

வெளிமாவட்ட மாணவர்களாகிய எமக்கு எவ்வித வேறுபாடுமின்றிச் சகல துறைகளிலும் வழிகாட்டியவர். கல்லூரிக்கு உள்ளேயும், வெளியேயும் எமது கலாசாரத்தை நிலைநாட்டுவதற்கு உறுதுணையாக நின்ற உத்தம புருஷராவார். அவரது சேவை சமூகத்திற்கு மென்மேலும் கிடைக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**செய்யினுள் ஆப்தீன் பாதிமா ஹனானா**
*உள்ளகப் பயிற்சி ஆசிரியை,*
*யாழ் / உரும்பிராய் இந்துக் கல்லூரி.*

This is a great privilege for us, the society of National College of Education, Jaffna. to celebrate the 60th birthday of our president Mr. S. K. Yoganathan who devoted his sincere service for 21 years.

He has got a balanced presonality to carry out different activities at the same time.

Yoganathan Sir our honourable president who eliminated the habbit of ragging from the college and shines as a social reformer. He is one of the remarkable persons in the higher education sector.

I am also a big fan of our president forhis sense of humar.

We all pray our " Viththaka Vinayakar" that our president will render his experience and skills to the society of N.C.O.E Jaffna at his retiring period too

**Mr.Thiruselvanathan Kausikan**
*2nd year,*
*Prospective Teacher*



Yoganaatham

Harikanan (Pvt.) Ltd., Jaffna.